Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 ஆவணி 12 ஞாயிற்றுக்கிழமை (28.08.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :275



கிட்டு பீரங்கிப் படையணியின் சிறப்புத் தளபதி கேணல் ராயுவின் மூன்றாம் ஆண்டு நினைவுநாளில் தலைவர் பிரபாகரன் ராயுவின் திருவுருவப் படத்திற்கு ஈகச்சுடரேற்றுகிறார்.

### திரியாய் கடற்பரப்பில் கைதுசெய்யப்பட்ட

## மணல்காடு மீனவர் இருவரும் நாளை விடுவிக்கப்படுவர்?

திருகோணமலை திரியாய் கடற்பகுதியில் வைத்துக் கடற்படையினரால் கடந்த 21ஆம் திகதி கைதுசெய்யப்பட்ட மணற்காட்டைச் சேர்ந்த இரு மீனவர்களும் நாளை விடுவிக்கப்படுவர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மணற்காட்டைச் சேர்ந்த வின்ரனிதாஸ், இராசையா ரூபன் ஆகிய இரு மீனவர்களும் கடற்றொழிலுக்குச் சென்ற சமயம் திரியாயில் வைத்துக் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டிருந்தனர். இவர்கள் இருவரும் திருமலை நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டு பொலீஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளனர்.

மணற்காட்டுப் பகுதி இராணுவ முகாமில் உள்ள இருவரது அடையாள அட்டைகளையும் சமர்ப்பிக்கும்படியும் அல்லது போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் உறுதிப்படுத்தும் கடிதம் ஒன்றைச் சமர்ப்பிக்கும்படியும் திருமலை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த ஆவணங்களைச் சமர்ப்பித்து மீனவர் இருவரையும் விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பெரும்பாலும் நாளை அவர்கள் விடுவிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ஐ-3-70-151-173)

### தமிழீழத் தேசிய தொலைக்காட்சிக்கு தமிழ்ச்செல்வன் செவ்வி:

# தேர்தல்கள், ஆட்சி மாற்றங்களால் எந்தப் பயனும் வரப்போவதில்லை!

## தமிழர்கள் தங்கள் தலைவிதியை தாமே தீர்மானிப்பதே ஒரே வழி!

கிளிநொச்சி,ஓகஸ்ட் 28

சிங்கள தேசத்தின் தேர்தல்கள், ஆட்சி அதிகார மாற்றங்கள் தமிழர்களுக்கு எந்தப் பயனையும் தரப்போவதில்லை. காலங்காலமாகத் தெற்கில் தொடர்ந்துவரும் ஆட்சி அதிகாரப் போட்டியே இப்போதும் வந்திருக்கின்றது. இதனால் சமாதான முயற்சிகள் மேலும் இழுத்தடிக்கப்படப்போகின்றன. இந்நிலையில் தமிழர்கள் முன் உள்ள ஒரே வழி அவர்கள் தங்கள் தலைவிதியைத் தாங்களே தீர்மானித்துக்கொள்வதுதான்.

தமிழீழத் தேசியத் தொலைக்காட்சிக்கு வழங்கிய விசேட செவ்வி ஒன்றில் இப்படிக் கருத்து வெளியிட்டிருக்கிறார். சு.ப.தமிழ்ச்செல்வன்.

தேர்தலுக்கான காலம் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் தேர்தலைக் காட்டி தமிழர் பிரச்சினையை மேலும் இறுக்கி நெருக்கடிக்குள்ளாக்கவே சிங்கள ஆட்சியாளர்கள் முயற்சிப்பர். பேச்சுக்கு வருவது போன்ற ஒரு தோற்றத்தைக் காட்டிவிட்டு காலத்தை இழுத்தடிக்கப் போகின்றார்கள். ஆகவே, இந்தத் தேர்தலைப் பொறுத்தவரை எங்களுக்கோ (புலிகளுக்கோ) தமிழ் மக்களுக்கோ எந்தவித அக்கறையும் இருக்கப்போவதில்லை என்றும் தமிழ்ச்செல்வன் தனது செவ்வியில் குறிப்பிட்டிருக்கின்றார்.

அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

சிறிலங்கா அரசு அவசரகாலச் சட்டத்தை

(02ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் பற்றிய வர்த்தமானி அறிவிப்பு நாளை வெளிவரும்

கொழும்பு, ஓக. 28

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை தேர்தல் ஆணையாளர் நாளை வெளியிடவுள்ளார்.

வேட்பாளர்கள் நியமனப்பத்திரம் தாக்கல் செய்வது மற்றும் தேர்தல் தொடர்பான திகதிகள் இந்த அறிவிப்பில் இடம்பெறும்

(22ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தலைக் கண்காணிக்க சர்வதேச அவதானிகள் குழு

கொழும்பு, ஓக.28

ஜனாதிபதித் தேர்தலைக் கண்காணிப்பதற்கு சர்வதேச அவதானிகளை அழைப்பது என்று தேர்தல் ஆணையாளர் முடிவு செய்திருக்கிறார்.

ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் நாடுகளில் இருந்து தேர்தல் கண்காணிப்பாளர்கள் அழைக்கப்படவுள்ளனர். இதன்படி கண்காணிப்பாளர்கள் அடங்கிய முதலாவது அணி அடுத்த வாரம் கொழும்பு வரவுள்ளது. மேலும் 100 பேர் அடங்கிய கண்காணிப்புக் குழுவினர் தேர்தலுக்கு ஒருவாரம் முன்னதாக இலங்கைக்கு வருவார்.

(22ஆம் பக்கம் பார்க்க)

## படையினர் மீது கிரனேட் வீச்சு!

திருகோணமலை,ஓக.28

திருகோணமலை பச்சனூர் பகுதியில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு 12.30 மணியளவில் ரோந்து சென்ற படையினர் மீது கிரனேட் வீசப்பட்டது. எனினும் படையினருக்கு சேதம் ஏதும் ஏற்படவில்லை. (ஐ – 3)

## ராஜபக்ஷவுக்கு கூடாத காலமாம்!

கொழும்பு, ஓக. 28

சுதந்திரக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரான மஹிந்த ராஜபக்ஷவுக்கு இப்போது காலம் சரியில்லை; இந்த வேளையில் அவர் தேர்தலில் வெற்றி பெறுவதற்கு வாய்ப்பில்லை.

- இவ்வாறு தெற்கில் உள்ள பிரபல ஜோதிடர் ஒருவர் ஆருடம் கூறியிருக்கிறாராம். ராஜ

(22ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி சீனா பயணம்

கொழும்பு, ஓக.28

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பத்து நாள் விஜயம் மேற்கொண்டு நேற்றிரவு சீனா புறப்பட்டார்.

சீனத் தலைவர்களைச் சந்தித்து இருநாட்டு உறவுகள் மற்றும் உதவிகள் குறித்து பேச்சுக்களை அவர் நடத்துவார். (ஐ-3)



தேசியத் தலைவர் வே.பிரபாகரன் பற்றிய 'பொன்னகவை' என்னும் நூல் வெளியீட்டு விழா நேற்று கிளிநொச்சியில் இடம்பெற்றது. லெப்டினன்ட் கேணல் ராஜனின் நினைவுநாளான நேற்று இந்த நூல் வெளியிடப்பட்டது. தளபதிகள் அகவணக்கம் செலுத்துவதையும் நூலின் முகப்புருவையும் புலிகளின் தளபதிகள், நூல் மற்றும் பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

## மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சிறுமி மீது பாலியல் வல்லுறவுக் குற்றச்சாட்டு

# பல்கலை விரிவுரையாளர் கைதாகி விளக்கமறியலில்

யாழ்ப்பாணம்,ஓக.28

யாழ்.பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர் ஒருவர் சிறுவர் பாலியல் துஷ்பிரயோகக் குற்றச்சாட்டின் கீழ் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கின்றார்.

தனது வீட்டில் பணிபுரிய அமர்த்தியிருந்த 16 வயதுச் சிறுமி ஒருத்தியை இந்த விரிவுரையாளர் பாலியல் ரீதியில் துன்புறுத்தியதுடன் அச்சிறுமியை பலமுறை பாலியல் வல்லுறவு புரிந்தார் என்றும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

யாழ். குற்றத்தடுப்பு பிரிவுப் பொலீஸாரால் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்ட பிரஸ்தாப விரிவுரையாளர், நேற்று யாழ். மேலதிக நீதிவான் ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார்.

அவரை அடுத்தமாதம் 6ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் பொலீஸாருக்கு உத்தரவிட்டார்.

புதுக்குடியிருப்பைச் சேர்ந்த குறிப்பிட்ட சிறுமி நஞ்சருந்தித் தற்கொலை செய்து கொள்ள முயற்சித்தபோது உறவினர்களால் காப்பாற்றப்பட்டு யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டார். சிகிச்சையின் பின் உயிர்தப்பிய சிறுமியை சிறுவர் பாதுகாப்புக் குழுவினர் சிலர் விசாரணை செய்த போது குறிப்பிட்ட விரிவுரையாளர் தன்னை பலமுறை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தினார் என்ற தகவலை சிறுமி வெளியிட்டார். பின்னர் இந்த விடயம் பொலீஸாருக்கு அறிவிக்கப்பட்டது. அதனையடுத்தே விரிவுரையாளர் கைது செய்யப்பட்டார்.

(ஐ-7)

# சமாதானத்தின் பெயரால் அளவுக்கு மீறி நோர்வே தலையிடுவதாக அனுரா சீற்றம்

கொழும்பு,ஓக.28

நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம், இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் சம்பந்தப்பட்ட இரு தரப்புக்களுக்கிடையே தகவல்களைப் பரிமாறும் வகையில் நோர்வே நாடு ஒரு 'தபாற்பெட்டி' போன்றே செயற்படுவதாக ஒரு சந்தர்ப்பத்தில் என்னிடம் தெரிவித்திருந்தார். ஆனால், சமாதான முயற்சிகளில் நோர்வே அளவுக்கு அதிகமாகத் தலையிடுகிறது. எனவே, சமாதான முயற்சிகளில் நோர்வேயின் அனுசரணை குறித்து மீளாய்வு செய்யப்படல் வேண்டும்.

புதிய வெளிவிவகார அமைச்சராகப் பதவியேற்ற பின்னர் முதன்முதலாக வெளிநாட்டுப் பயணமொன்றை மேற்கொண்டு இந்தியாவுக்குப் புறப்பட்டுச் செல்வதற்கு முன்னர் ஆங்கிலப் பத்திரிகையொன்றுக்கு அளித்த பேட்டியில் அமைச்சர் அனுரா பண்டாரநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அமைச்சர் அனுரா மேலும் தெரிவித்ததாவது:-

படுகொலை செய்யப்பட்ட முன்னாள் வெளிவிவகார அமைச்சர் கதிர்காமர் விடுதலைப் புலிகள் அமைப்புத் தொடர்பாக இறுக்கமான கடும்போக்கைக் கடைப்பிடித்துவந்தார்; இது அவருடைய தனிப்பட்ட கருத்து மட்டுமன்றி, அரசினது பொதுவான கருத்தும் ஆகும்.

விடுதலைப் புலிகள் அமைப்பினர் அரசியல் தலைவர்களை கொலைசெய்வதைத் தமது வழக்கமாகக் கொண்டுள்ளனர். அதேவேளை யுத்தநிறுத்தத்தைத் தாம் தொடர்ந்தும் முறைப்படி கடைப்பிடிப்பதாகவும் தெரிவிக்கின்றனர். அத்துடன், யுத்தநிறுத்த உடன்பாடு குறித்துப் பேச்சுக்களை நோர்வே நாட்டில் வைத்துக்கொள்ளக் கோருகின்றனர். இது வேடிக்கையான தொன்றாகும். இந்த நிலையில் பேச்சுக்களால் பலனேதும் கிட்டுமா? இது தேர்தல் சமயமானதால் அரசியல் தலைவர்களைக் கொல்வதற்கு விடுதலைப் புலிகளுக்கு இலேசாக வாய்புக் கிட்டுமெனக் கருதமுடியுமா?

தமது அரசியல் படுகொலைகளைத் தொடரவிருப்பதாக விடுதலைப் புலிகள் அமைப்பின் அரசியல்துறைப் பொறுப்பாளர் தெரிவித்ததாக வெளிவந்த ஊடகச் செய்தி உண்மையானதாக இருக்குமானால் அது பாரதூரமானதொன்றாகக் கொள்ளப்படவேண்டும். அதே சமயம், சமாதான முயற்சிகளில் நோர்வேயின் அனுசரணை குறித்தும் மீளாய்வு செய்யப்படல்வேண்டும்.

எதிர்காலத்தில் பயங்கரவாதத்தைக் கட்டுப்படுத்துவது குறித்த நடவடிக்கைகள் எவ்விதம் கையாளப்படவுள்ளதெனக் கேட்கப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர், இது விடயத்தில் முன்னர் ஜனாதிபதிப் பதவியை வகித்த சகலரது நடவடிக்கைகளும் உரிய பலன் அளிக்கவில்லை எனத் தெரிவித்ததோடு அவ்வப்போதைய அரசியல் நிலைமைகளுக்கேற்ப புதிய அணுகுமுறைகள் கையாளப்படல்வேண்டும். இது விடயத்தில் இந்தியாவின் ஆலோசனைகளையும் பெற்று நாம் செயற்படவுள்ளோம் - என்றார்.

(ஐ-205)

# தேர்தல்கள், ஆட்சிமாற்றங்களால்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எங்களுடைய தாயகப் பிரதேசங்களில் செயற்படுத்தியுள்ளதால் தமிழ் மக்கள் பெரும் நெருக்கடி நிலைமைகளைச் சந்தித்துள்ளார்கள்.

ஒரு பதற்றமான சூழ்நிலை நிலவிக்கொண்டிருக்கிறது. இந்த நிலையில் தேர்தலுக்கான அறிவித்தல் வந்திருக்கிறது. எங்களைப் பொறுத்தவரையில் இதைப்பற்றி பெரிதாக அலட்டிக்கொள்ளவில்லை.

ஏனெனில், சிங்கள தேசத்தில் அவர்களுடைய அக்கறை ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவது. இந்த ஆட்சி அதிகாரப் போட்டி அவர்களின் காலங்காலமான நடைமுறை.

இலங்கைத் தீவினுடைய தேசிய இனப்பிரச்சினை, இனச்சிக்கல், தேசிய பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதில் எந்தவித அக்கறையும் ஆட்சியாளருக்குக் கிடையாது.

தங்களுடைய அதிகாரப் போட்டிகளைத் தான் நெடுகவே அவர்கள் முன்னிலைப் படுத்தி வருகிறார்கள். அந்த அதிகாரப் போட்டியின் விளைவுதான் இப்பொழுது தேர்தல். இதை சமாதான காலத்தில் எங்கள் தேசம் கண்டிருக்கின்றது. ஆகவே, இந்தத் தேர்தலைப் பொறுத்தவரையில் எங்களுக்கு எந்தவோர் அக்கறையும் இல்லை. ஏனெனில் அரசுத் தலைவர் தேர்தலில் மாறிமாறி எவர் வந்தாலும் எங்களுடைய தேசத்தினுடைய பிரச்சினைக்கு எந்தவொரு தீர்வையும் முன்வைக்கப் போவதில்லை. இரண்டு ஆட்சி தலைமைகளும் ஒன்று ஒரு மென்போக்கு நிலைமையைக் கடைப்பிடித்தாலும் ஒன்று இறுக்கமான போக்கைக் கடைப்பிடிக்கும்.

இப்படி ஒரு தோற்றப்பாட்டில் நிலைப்பாட்டைக் காட்டினாலும் தமிழ்மக்களின் நெருக்கடிக்கோ தமிழ்மக்களின் அவலமான வாழ்க்கைக்கோ அவர்களின் அபிலாசைக்கோ அல்லது அவர்களின் தீர்வு முயற்சிக்கோ அர்ப்பணிப்புடன் செயற்படுகின்ற போக்கைக் கடைப்பிடிக்கமாட்டா என்ற விடயத்தை இந்த மூன்று வருட சமாதான காலத்தில் உணர்ந்துள்ளோம்.

ஏனெனில் ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சிக் காலத்திலேயே ஆறுசுற்றுப் பேச்சுக்கள் நடந்தன. பல இணக்கப்பாடுகள் காணப்பட்டன. யுத்தநிறுத்த அமுலாக்கத்தில் இருந்து பேச்சுக்களுடைய இணக்கப்பாட்டிலிருந்து எவ்வளவோ விடயங்களை அந்த அரசு நடைமுறைப்படுத்தவேண்டிய பொறுப்பு இருக்கின்றது.

காலம் இழுத்தடித்து ஒருவர் மீது ஒருவர் சாடி இப்படியே இழுத்தடித்துச் சென்றார்களே தவிர ஒரு தீர்வு வரவில்லை.

பின்பு சந்திரிகா அம்மையார் தான் அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்டுவந்து மேலும் பல நெருக்கடிகளை உருவாக்கி ஒரு பாரதூரமான நிலைமைக்கு இந்த சமாதான முன்னெடுப்புகள் வந்துவிட்டன.

யுத்தநிறுத்த சூழலும் நெருக்கடிக்கு வந்துவிட்டது. இந்தச் சூழலில் அவர்களிடம் இருக்கின்ற அதிகாரப் போட்டியினுடைய ஒரு முடிவாக ஒரு தேர்தலுக்கான திகதி, காலம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இனி அவர்கள் தங்களுடைய கவனம் முழுவதையும் கொண்டு யார் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவது என்பதில் முழுக் கவனத்தையும் செலுத்தவுள்ளார்கள். இந்தப் பேச்சுவார்த்தையை ஒரு பொருட்டாக மதிப்பார்களோ அல்லது ஒரு முக்கிய விடயமாக எடுப்பார்களோ என்பதை நம்பமுடியாது உள்ளது.

அதற்கு ஓர் உதாரணமாக அண்மையில் இரண்டு தினங்களுக்கு முன்பு சந்திரிகா அம்மையாரின் நெருக்கமானவரும் அந்த அரசில் முக்கிய பங்கு வகிக்கின்ற அமைச்சர் ஒரு செய்தியை வெளியிட்டிருந்தார்.

பேச்சுக்கள் என்பது போலியானது என்றும் ஒன்றுமே நடக்காது என்ற செய்தி வந்திருக்கிறது. அவர்கள் இந்தப் பேச்சுக்கு இணக்கத்தை தெரிவித்துவிட்டு இழுத்தடித்துக் கொண்டு போகின்ற போக்கைக் கடைப்பிடிக்கின்றார்கள் போலவே எங்களுக்குத் தெரிகிறது.

தேர்தல் இப்பொழுது பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. பொதுக் கட்டமைப்பில் கையெழுத்துப் போட்டுவிட்டு அதை எப்படித் தட்டிக் கழித்து சீர்குலைத்தார்களோ அதேமாதிரி பேச்சுவார்த்தைக்கு வருவது போல் ஓர் இணக்கப்பாட்டை - ஒரு தோற்றப்பாட்டை - காட்டி ஏற்கமுடியாத நிபந்தனைகளை முன்வைத்து இழுத்தடிக்கப்போகின்றது.

### தேர்தலில் தமிழருக்கு அக்கறையில்லை

அவர்கள் இப்பொழுது நல்லதொரு காரணத்தை முன்வைக்கப்போகின்றார்கள். தேர்தலைக் காட்டி தமிழ்மக்களின் பிரச்சினையை மேலும் இறுக்கமாக்கப் போகின்றார்கள். இன்னும் நெருக்கடிக்குள்ளாக்கப் போகின்றார்கள். ஆகவே, இந்தத் தேர்தலைப் பொறுத்தவரை எங்களுக்கோ மக்களுக்கோ எந்தவோர் அக்கறையும் இல்லை. ஆட்சித் தலைமைகள் மாறுவதால் மட்டும் பிரச்சினைக்குத் தீர்வு வரப்போவதில்லை. அர்ப்பணிப்புள்ள சிங்களத் தலைமை எப்பொழுதுமே உருவாக்கப் போவதில்லை.

தமிழ் மக்கள் ஒன்றைத் தெளிவாகப் புரிந்துகொள்வார்கள் என்று நினைக்கின்றேன். எங்களுடைய தலைவிதியை நாங்களே தீர்மானிக்கின்ற செயற்பாட்டுக்குள் நாங்கள் தீவிரமாக இறங்குவதைத் தவிர வேறு மாற்று வழி இருக்கும் என்று நான் நம்பவில்லை.

- இவ்வாறு தமிழ்ச்செல்வன் தெரிவித்திருக்கிறார். (ஐ)

## நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

யாழ்ப்பாணம்,ஓக.28

நல்லூர் முருகன் ஆலய பெருந்திரு விழாக் காலத்தையொட்டி இளங்கலைஞர் மன்றம் துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடத்திவரும் தெய்வீக இசையரங்கில் 19ஆம் நாளான இன்று ஞாயிற்றுக்கிழமை பொன்.ஸ்ரீவாமதேவனின் பாட்டுக் கச்சேரி இடம்பெறும்.

அணிசெய் கலைஞர்களாக, வயலின் எ.ஜெயராமன், மிருதங்கம் எஸ்.துரைராசா, கடம் ஏ.செல்வரத்தினம் ஆகியோர் பங்கேற்பர்.

(எ-204)

* * *

யாழ்ப்பாணம், ஓக.28

நல்லூர் முருகன் ஆலயப் பெருந் திருவிழாவை முன்னிட்டு நல்லூர் மேற்கு வீதி ஸ்ரீமுத்துவிநாயகர் ஆலய மண்டப அரங்கில் கானகதா வாரிதி பிரம்மஸ்ரீ சிவ.வை. நித்தியானந்த சர்மா கந்தபுராணம் தொடர் சொற்பொழிவு ஆற்றி வருகிறார்.

அதில் இன்று ஞாயிற்றுக்கிழமை 'வீரபாகு தேவர் தூது' என்னும் பொருளில் உரை நிகழ்த்துவார்.

(எ-204)

## நல்லூர் உற்சவ காலச் சிறப்பம்சம்

பத்தொன்பதாம் நாள் திருவிழா

### சிந்தனையிலே போற்றிடடி



ஊண்பொருளும் ஒழியுமடி - கிளியே!
உலகமெலாம் அழியுமடி
சேண்பொலியுந் திருவடியைக் - கிளியே!
சிந்தனையிலே போற்றிடடி
- யோகர் சுவாமிகள்.

### புண்ணியங்கள் அள்ளிநல்கும் தேனூர் நல்லூர்

தேவாதி தேவர் மகிழ்ந்துறையும் நல்லூர்
திசைகளினைக் குளிர்விக்க மலர்ந்த பொன்னூர்
பாவாலே பண்ணாலே பாசத்தாலே
பரவுவோரின் பாவ அழுக்ககற்றும் தாயூர்
சாவில்லா வாழ்வருளும் வானூர் - தர்மம்
தழைக்கவைத்து வீடருளும் தேஹூர்; நீயோர்
பூவெடுத்துப் போட தெய்வம் கண்முன் வந்து
புண்ணியங்கள் அள்ளி நல்கும் தேனூர் நல்லூர்.
- அருணன்.

### வினை நீக்க ஓடிவா!

பல்லவி
ஓடோடி வந்தேனப்பா - முருகா
உன் முகம் பார்த்தேனப்பா

அனுபல்லவி
வல்வினை நீக்குகின்ற வடிவழகா - முருகா
என்முகம் பார்த்து நீ அருள்வாயப்பாய்
(ஓடோடி)

சரணம்
செய்தவினை நானறியேன் பட்டதுயர் போதுமப்பா
செய்வினை நீக்குகின்ற வடிவேலே பாரப்பா
வேலா வேலா என்று அழைக்கின்றேன் - வேலா
வேதனை நீக்கி என்னை மீட்டருள வேண்டுமப்பா
(ஓடோடி)

மயிலேறி நீ வந்து என்வினை நீக்கிடுவாய்
வேலோடும் நீவந்து என்வினை விலக்கிடுவாய்
நல்லூரியில் நீவந்து அருள்மழை பொழிந்திடுவாய்
நல்லூர்க் கந்தனே எழுந்தருளி வாருமப்பா
(ஓடோடி)
- மலர் சின்னையா






உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி; தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# அநுராவின் எச்சரிக்கையின் அர்த்தம் எதுவோ?

தென்னிலங்கையில் ஜனாதிபதித் தேர்தலுக்கான ஆரவாரம் நேற்றுமுன்தினமே தொடங்கிவிட்டது - ஜனாதிபதித் தேர்தல் இந்த வருடத்திலேயே நடத்தப்பட வேண்டும் என்ற உயர்நீதிமன்றத் தீர்ப்பு வெளிவந்த கையோடு.

இரண்டு பெரும் கட்சிகளினதும் வேட்பாளர்களாக நிற்கப்போகும் ரணிலும் மஹிந்தவும் நாடாளுமன்றத்திற்குச் சென்றவேளைகளில் இந்த ஆரவாரம் பிரதிபலித்தது. அதாவது, தேர்தலுக்காகத் திகதி அறிவிக்கப்படுவதற்கு முன்னரே தெற்கில் தேர்தல் சூடு பற்றிக்கொண்டுவிட்டது!

அடுத்த வருடத்திலேயே ஜனாதிபதித் தேர்தல் நடத்த முடியும். அதுவரைக்கும் சந்திரிகாவே பதவியில் இருப்பார் என்று இறுமாப்புடன் கூறிவந்த அரசுத் தரப்பும் உடனடியாகவே ஒலித்தட்டை மாற்றிக்கொண்டது. நீதிமன்றத்தின் தீர்ப்புக்குத் தாம் தலைவணங்குவதாகச் சபை முதல்வர் நாடாளுமன்றத்திலேயே அறிவித்துவிட்டார்.

அதனால், இனிமேல் தென்னிலங்கை எங்கும் ஜனாதிபதித் தேர்தலே பேச்சாக இருக்கும். அத்தோடு, குடுமிப்பிடி சண்டைகளும் கட்சி மோதல்களும் மலியும்.

அரசியல் கட்சித் தலைவர்களோ, தமது கட்சியே - வேட்பாளரே - தேர்தலில் வெற்றிபெறவேண்டும் என்ற ஒரே இலக்குடன் கருமமாற்றுவதிலேயே சிந்தனையாக இருப்பர். அதற்கான புதியபுதிய உத்திகளை வகுப்பதிலும் செயற்படுவதிலுமே அவர்களின் பொழுது கரையும்.

போர்நிறுத்த ஒப்பந்தம், சமாதானச் சூழலை நிலையாக்குவது ஆகியன குறித்து நினைப்பதற்கு அவர்களுக்கு மனமும் ஏவாது; நேரமும் கிடைக்காது! வேண்டுமானால் மேற்சொன்ன இரண்டு விடயங்களையும் தமது தேர்தல் வெற்றிக்கு எவ்வாறு துரும்புச் சீட்டாகப் பயன்படுத்தலாம் - பாவிக்கலாம் - என்று மட்டும் சிந்திப்பார்கள். ஜனாதிபதி சந்திரிகாவின் பொழுதில் பெரும்பகுதியும் தேர்தலில் தமது தரப்பு வெற்றிகாண்பது குறித்த சிந்தனையிலேயே கழியும்!

பத்து வருடங்களுக்குக் கூடுதலாக, அதி உச்ச அதிகார பீடத்தில் இருந்த அவரால் நாட்டை அமைதி நிலைக்குக் கொண்டுவர முடியவில்லை. சொல் ஒன்று செயல் வேறாகவும் நோக்கம் ஒன்றும் செயல் இலக்கு வேறாகவும் நடந்துகொண்டதன் விளைவு - வினை - இது.!

ஆனால் -

தனது பழைய தவறுக்குப் பிராயச்சித்தம் செய்யவேண்டும் என்ற எண்ணம் சந்திரிகாவுக்குப் பிறக்கவில்லை என்றே கொள்ளலாம். கொலையுண்ட லக்ஷ்மன் கதிர்காமருக்குப் பதிலாகத் தமது தம்பியார் அனுரா பண்டாரநாயக்காவையே ஜனாதிபதி வெளிவிவகார அமைச்சராக நியமித்தார். பதவி ஏற்க வைத்த மூன்று நாள்களில் தம்பியாரை உத்தியோகபூர்வ விஜயமாக இந்தியாவுக்கு அனுப்பி வைத்திருக்கிறார்.

இந்தியா எமக்கு அயல்நாடு. ஆகையால், புதிய அமைச்சர் ஒருவர் - அதுவும் வெளிவிவகார அமைச்சர் - தமது முதலாவது உத்தியோகபூர்வ விஜயத்தை இந்தியாவுக்கு மேற்கொள்வதைத் தப்பு என்று எடுத்த எடுப்பில் சொல்லிவிட முடியாது. ஆனால், அனுராவின் இந்திய விஜயம் உள்நோக்கம் கொண்டது.

இப்போது நடைமுறையில் உள்ள போர்நிறுத்த ஒப்பந்தம் நோர்வேயின் அனுசரணையுடனேயே கைச்சாத்தாகியது. அரசு மாறியபோதிலும் அந்த நாட்டின் அனுசரணை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஆனால், இப்போது, நோர்வேயை அதன் பணியிலிருந்து விலக்குவதற்கான ஆயத்தங்கள் செய்யப்படுவதாகவே தோன்றுகிறது. ஜே.வி.பி., ஹெல உறுமய போன்ற பேரினவாதச் சக்திகள் நோர்வேயை அனுசரணையாளர் பதவியில் இருந்து அகற்றவேண்டும் என்று எக்காளம் போடுகின்றன. அந்நாடு விடுதலைப் புலிகளுக்குச் சார்பாக - ஆதரவாக - செயற்படுவதாகக் குற்றஞ்சாட்டுகின்றன.

ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிராகக் கருத்துத் தெரிவிக்க வேண்டும் என்பதற்காக, அரச தரப்பில் உள்ளவர்களும் நோர்வேத் தரப்புக்குரிய பணியைவிட மேலதிகமான வேலைகளைச் செய்வதாகச் சாடுகிறார்கள்.

இத்தனைக்கும் சிகரம் வைத்தாற்போல, புதிய வெளிவிவகார அமைச்சர் அனுர பண்டாரநாயக்க அந்நாட்டைக் கேலி செய்துள்ளார் - கிண்டல் அடித்திருக்கிறார்.

நோர்வேயின் பாத்திரம் "தபாற்பெட்டி"தான். ஆனால், அதற்கு அப்பாலும் அது செயற்படுகிறது என்று வெளிவிவகார அமைச்சர் அனுரா கண்டித்திருக்கிறார். அதுமட்டுமன்றி, நோர்வேயின் அனுசரணை குறித்துத் தீவிரமாகச் சிந்திக்கவேண்டியிருக்கின்றது என்றும் எச்சரிக்கைப் பாணியில் கருத்து வெளியிட்டிருக்கிறார்.

இந்தியாவுக்குப் புறப்படுவதற்கு முன்னர் அவர் இந்தக் கருத்தை வெளியிட்டதால், அங்கும் இது குறித்து ஆராய்ந்திருப்பார். அதனை முதன்மைப்படுத்தியதாகவே அநுராவின் இந்திய விஜயம் அமைந்திருக்கிறது என்றும் சந்தேகம் எழுகிறது.

அதாவது, ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வென்றால் இது விடயத்தில் அவர்களுக்கு ஒரு தலையிடி கொடுக்கும். கூட உள்நோக்கமாக இருக்கலாம் அல்லவா? இது அநுராவின் திட்டமாக இருக்காது, சகோதரி சந்திரிகாவின் சூது என்றே கொள்ளவேண்டியுள்ளது.

இத்தகைய பின்னணியில் போர் நிறுத்த ஒப்பந்த அமுல் குறித்து விடுதலைப் புலிகளுடன் நேருக்குநேர் பேசும் முயற்சிக்குச் சாத்தியம் உண்டா? அதுவும் சொல்வது ஒன்று நடப்பது இன்னொன்றாகவே இருக்கும் என்றே ஊகிக்கலாம்.

# ஊடகங்கள் - ஊடகவியலாளரைத் தாக்கி எவரும் எதனையும் சாதித்தது இல்லை!

## இதனைப் பேரினவாதிகள் புரியாதிருப்பது ஏனோ?

பத்திரிகையாளர்கள் தாக்கப்படுவதும் சுட்டுக்கொல்லப்படுவதும் இலங்கைக்கு ஒன்றும் புதிய விடயமல்ல. தமிழர்கள் வரலாற்றில் இது மிகவும் பழையது. வரலாறு என்றொன்றிருந்தால் அதில் இத்தகைய சம்பவங்கள் இருக்கத்தான் வேண்டும் என்பது அவர்களுக்கு வெளிப்படை உண்மையாகி விட்டது.

இருந்தாலும் சடந்த 10 நாள்களுக்குள் கொழும்பில் நடந்த இரு சம்பவங்கள் நாடுமுழுவதும் சர்ச்சையைக் கிளப்பி விட்டுள்ளன.

**'உதயன்'-'சுடர் ஒளி' கிளை அலுவலகம் மீது கிரனேட் வீச்சு**

கொழும்பில் தமிழர்கள் செறிந்து வாழும் பகுதி வெள்ளவத்தை. அதன் மத்திய பகுதியில் உள்ளது 'உதயன்'-'சுடர் ஒளி' பத்திரிகைகளின் கிளை அலுவலகம். காலி வீதியில் டெல்மன் வைத்திய சாலைக்கு முன்பாக, ஸபயர் ஹோட்டலின் அருகே இருக்கும் கடைத்தொகுதியின் முதலாம் மாடியில் இந்த அலுவலகம் அமைந்துள்ளது.

கடந்த 20ஆம் திகதி இந்த அலுவலம் மீது கிரனேட் தாக்குதல் நடத்தப்பட்டது. அலுவலகத்தின் கதவை தட்டிய இளைஞர் ஒருவர், மெல்ல அதைத் திறந்து கிரனேட்டை உள்ளே வீசிவிட்டுத் தப்பிச் சென்றுவிட்டார். தாக்குதல் இடம்பெற்ற போது உள்ளே இரு பெண்களும் ஓர் ஆணுமாக மூன்று ஊழியர்கள் இருந்தனர். குண்டு வெடிக்க மறந்ததால் அதிர்ஷ்டவசமாக இவர்கள் உயிர் தப்பினர். எனினும், அந்த அதிர்ச்சியில் இருந்து அவர்கள் இன்னும் முழுமையாக மீளவில்லை.




உடனடியாகச் சம்பவ இடத்திற்கு குண்டு செயலிழக்குச் செய்யும் பிரிவினர் விரைந்தனர். வெடிக்காத நிலையில் இருந்த கிரனேட்டை அங்கிருந்து அகற்றிச் சென்று கடற்கரையோரமாக வெடிக்க வைத்து அழித்தனர்.

தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்டது இலங்கையில் வழமையான பாவனையில் இல்லாத, அதேசமயம் மிகமிகப் பிந்தியதாக அறிமுகமான கிரனேட் என்று பொலீஸ் விசாரணைகள் காட்டுகின்றன. இவை யாரிடம் இப்போது புழக்கத்தில் உள்ளன? இந்தக் கேள்விக்கு விடை சொல்லப் பொலீஸார் தயாராயில்லை. ஆனாலும், பொலிஸார் இந்தச் சம்பவம் பற்றி தொடர்ந்தும் விசாரித்து வருகிறார்கள் என்று சபை முதல்வர் நிமல் ஸ்ரீபால டி சில்வா நாடாளுமன்றத்தில் கூறினார்.

எனினும், தாக்குதலாளிகள் பற்றி இதுவரைக்கும் எந்த உருப்படியான தகவல்களும் பொலிஸாரால் கண்டுபிடிக்கப்படவில்லை என்று பத்திரிகைகளின் நிர்வாக இயக்குநர் கூறுகின்றார். "இதுவரைக்கும் கொல்லப்பட்ட பத்திரிகையாளர்களின் மரணத்துக்குக் காரணமானவர்களையே இன்னும் இந்தப் பொலிஸார் கண்டுபிடிக்கவில்லை. இவர்களா இந் தச் சம்பவத்தின் சூத்திரதாரிகளைப் பிடிக்கப்போகிறார்கள்?" - என்கிறார். அவர் பேச்சில் நம்பிக்கை மருந்துக்கும் இல்லை. இலங்கைப் பொலீஸாரின் நிலைமை அப்படி.

**பத்திரிகையாளர் மீதான தாக்குதல்**

பத்திரிகை அலுவலகம் மீது நடந்த தாக்குதலின் கந்தக நெடி அடங்குவதற்குள். 'சுடர் ஒளி' பத்திரிகையின் இளம் பயிற்சிப் பத்திரிகையாளரான யதுர்ஷன் தாக்கப்பட்டார்.



கொழும்பு, கோட்டை ரயில் நிலையம் முன்பாக நடந்த ஜே.வி.பியினரின் ஆர்ப்பாட்டத்தை படம் பிடித்துக் கொண்டிருந் தார் அவர். வழமையைப் போன்றே அவர் தனது கடமையைச் செய்துகொண்டிருந்தார். வேறு பத்திரிகையாளர் சிலரும் பக்கத்தில் நின்றிருந்தனர்.

ஜே.வி.பியினர் இவரை இனங்கண்டு கொண்டனர். அருகில் நெருங்கி "நீ யார்?", "ஏன் படம் எடுக்கிறாய்?", "நீ புலி தானே?" என்று கேள்விகளை மட்டும் சரமாரியாகத் தொடுத்து விட்டுத் தாக்கத் தொடங்கினர். அவர்களின் கேள்விகளுக் குப் பதில் சொல்வதற்கு அவகாசம் இல்லாமலேயே அவர்கள் யதுர்ஷனைத் தாக்கினர். வீதியில் கீழே தள்ளி உழக்கினர். கைகளைப் பின்புறமாக முறுக்கிக் கட்டினர்.

தான் ஒரு பத்திரிகையாளர் என்று யதுர்ஷன் என்னதான் உரக்கக் கத்திய போதும், காடைத்தனம் புரிந்த அந்தக் கூட்டத்தின் காதுகளில் அது ஏறவில்லை. அதற்கிடையில் அங்கிருந்த சில ஜே.வி.பியினர் அவரது 'கமரா'வைப் பறித்துக் கொண்டனர். வேறு சிலர் அவரது 'பேர்ஸ்'ஸைப் பறித்துக்கொண்டனர். அவரது சப்பாத்துக்களைக்கூட அவர்கள் விட்டு வைக்கவில்லை.

கூட்டம் அவரைச் சூழ்ந்து கொண்டு தாக்கிய தருணத்தில் அவரது காற்சட்டையின் 'ஷிப்' திடீரென உருவப்பட்டது. அந்த நேரம் பார்த்து பொலிஸார் அந்த இடத்திற்கு வந்துவிடவே, கூட்டம் நைஸாக நழுவியது. "இவன் ஒரு புலி" எனத் தெரிவித்து பொலீஸாரிடம் அவரைக் கொடுத்து விட்டு தலைமறைவாகியது கூட்டம். அந்தச் சமயத்தில் பொலீஸார் அங்கு வந்திருக்காவிட்டால், நாடாளுமன்றத்தில் பிக்கு எம்.பிக்கு நடந்த கதை அந்த இளம் பத்திரிகையாளருக்கும் நடந்திருக்கும்.

பொலீஸாரிடமும் தான் பத்திரிகையாளர் என்று விளக்கிப் பார்த்தார் யதுர்ஷன். ஆனால் பயனில்லை. அவர் உண்மையில் புலியாக இருக்குமோ என்று பயந்த பொலீஸார் அவரது இரு கைகளையும் பின்புறமாகக் கட்டிவிட்டே தம்முடன் பொலீஸ் நிலையம் அழைத்துச் சென்றனர். ஆனால், அவரைத் தாக்கிய எவரையும் அவர்கள் கைது செய்யவில்லை. இன்றுவரைக்கும் எவரும் கைதாகவில்லை. பத்திரிகைகளில் வெளியான படங்களைக் கொண்டு சந்தேகநபர்களைக் கைது செய்துவிடுவோம் என்று மட்டும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்!

**தாக்குதல்களுக்கான காரணங்கள்**

தமிழ்த் தேசியத்துக்கு ஆதரவான வெளிப்படைப் போக்கைக் கடைப்பிடிக்கும் பத்திரிகைகள் 'உதயன்'-'சுடர் ஒளி'. சிங்களத் தேசியவாதம் பேசிக் கொண்டு பேரினவாத சக்திகளுக்கு ஆதரவாக் செயற்பட்டுவரும் தெற்கின் ஊடகப் பயங்கரவாதத்துக்கு (MediaTerrorisom) மத்தியில் தமிழர் தரப்பு நியாயத்தை பச்சையாக வெளிக்கொணரும் பணியை இந்தப் பத்திரிகைகள் செய்கின்றன. இது பேரினவாத சக்திகளுக்கு சகித்துக் கொள்ளமுடியாதது. அதுவும் தங்கள் தலைநகரில் இருந்துகொண்டு சுடர் ஒளி இவ்வாறு செயற்படுவது அவர்களை வெகுவாக உறுத்துகின்றது.

காலங்காலமாக நடந்த வரலாறுகளைப் போன்று இப்போது அதிகாரத்துக்கு வருவதற்காக ஜே.வி.பியினரும் இனவாதத்தைத்தான் தங்கள் கைகளில் ஏந்தியுள்ளனர். இதையேதான் முன்னர் எஸ்.டபிள்யூ. ஆர்.டி.பண்டாரநாயக்காவும் ஜே.ஆர். ஜெயவர்த்தனாவும் மேற்கொண்டார்கள். இப்போது இவர்கள். இந்த இரு தேசிய வாதங்களுக்கும் இடையிலான - தமிழ், சிங்கள - நேரடி மோதலாகத்தான் 'உதயன்' - 'சுடர் ஒளி'ப் பத்திரிகைகளுக்கும் ஜே.வி.பிக்கும் இடையிலான உறவைப் பார்க்க முடியும்.

தமது செய்தியறிக்கைகளையோ, பிரசுரங்களையோ ஜே.வி.பியினர் இந்தப் பத்திரிகைகளுக்கு அனுப்புவது இல்லை. தமது செய்தியாளர் மாநாடுகளுக்குக் கூட இப்பத்திரிகைகளின் செய்தியாளர்களை அழைப்பதில்லை. தொடர்பு கொண்டு கேட்டால், தமக்கு எதிரான செய்திகளைப் பிரசுரிப்பதனால் தாம் இவ்வாறு நடந்துகொள்கிறார்கள் என்று பதில் வரும். இல்லையேல் தமது கட்சியின் உயர்பீடத்தால் செய்திகள் வழங்கப்பட வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்ட ஊடகங்களின் பட்டியலில் உங்கள் பெயர் இல்லை என்று தெரிவிக்கப்படும். தப்பித் தவறி எங்காவது தகவல் அறிந்து, அவர்களின் செய்தியாளர் மாநாட்டிற்கு இப் பத்திரிகைகளின் செய்தியாளர்கள் சென்றாலும் இவ்வாறு அறிவித்தல் இன்றி இனிமேல் வரக்கூடாது என்ற மிரட்டலுடனும் தீவிர சோதனைகளுக்குப் பின்னருமே அனுமதிக்கப்படுவார்கள்.

இவையெல்லாம், இப்பத்திரிகைகள் மீது ஜே.வி.பியினர் கொண்டுள்ள காழ்ப்புணர்வுக்கு உதாரணங்கள். பத்திரிகையாளர் யதுர்ஷன் தாக்கப்பட்ட சம்பவத்தை இவற்றின் பின்னணியில் வைத்தே நோக்க வேண்டும். தான் 'சுடர் ஒளி' பத்திரிகையின் செய்தியாளர் என்பதைக் கூறியதன் பின்னரே தான் அதிகம் தாக்கப்பட்டார் என்று யதுர்ஷன் கூறுகிறார்.

சந்தேகத்தின் பேரிலேயே அவரைத் தாங்கள் பிடித்துக் கொடுத்தார்கள் என்று ஜே.வி.பியினர் இப்போது கூறுவதற்கும் அவர்கள் நடந்துகொண்ட முறைமைக்கும் எந்தவிதத் தொடர்புகளையும் காண முடியவில்லை.

**நாட்டில் ஏற்பட்ட சர்ச்சை**

**இனியவன்**

பத்தரிகை அலுவலகம் மீது நடத்தப்பட்ட தாக்குதலும் பத்திரிகையாளர் தாக்கப்பட்ட சம்பவமும் நாடு முழுவதிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. நாடாளுமன்றத்திலும் இந்த விவகாரம் ஆராயப்பட்டுள்ளது. சிங்கள, ஆங்கில ஊடகங்களும் இந்தச் சம்பவங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்துப் பிரசுரித்திருந்தன. இன்னும் சர்ச்சை தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும் ஏனைய கட்சிகளும் அமைப்புக்களும் ஏன் அரசும் கூட இந்தத் தாக்குதல்களை வன்மையாகக் கண்டித்துள்ளன.

நேற்றுமுன்தினம் கொழும்பு கோட்டையில் நூற்றுக்கணக்கான ஊடகவியலாளர்கள் கூடி ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டனர். சிங்கள, முஸ்லிம் ஊடகவியலாளர்களும் தமிழ் ஊடகவியலாளர்களுடன் இணைந்து கொண்டு ஜே.வி.பியினரின் இந்தச் செயலைக் கண்டித்தனர். பத்திரிகையாளர்கள் அரசியல் ரீதியாகப் படுகொலை செய்யப்படுவதையும் அவர்கள் கண்டித்தனர்.

வன்முறையைக் கைவிட்டு ஜனநாயக வழிக்குத் திரும்பியவர்கள் என்று தம்மைக் கூறிக்கொண்ட ஜே.வி.பியினரின் மற்றொரு முகம் பத்திரிகையாளரை அவர்கள் தாக்கியதில் இருந்து வெளியே தெரியவந்திருக்கிறது என்று அனைத்துத் தரப்புக்களிலும் இருந்து கருத்துக்கள் வெளிப்படுகின்றன.. எதிர்ப்புக்களைக் கண்டு ஜே.வி.பியினர் சற்றே ஆடிப் போயிருக்கிறார்கள். ஆனாலும் நடந்த சம்பவங்களுக்காக அவர்கள் இறங்கிவருவதற்குத் தயாராக இல்லை. பேரினவாதிகளைத் திருப்திப்படுத்தும் விதத்திலேயே அவர்கள் நடந்துகொள்கிறார்கள்.

பத்திரிகையாளர் தாக்கப்பட்டதன் பின்னணியில், விடைகாண முடியாதிருந்த 'உதயன்' - 'சுடர் ஒளி' பத்திரிகை கிளை அலுவலகங்கள் மீதான தாக்குதலின் பின்னணியிலும் ஜே.வி.பியினரின் கைவரிசை இருக்குமோ என்று சந்தேகங்கள் கிளம்ப ஆரம்பித்துவிட்டன.

விடை தெரியாத, எப்போதுமே தெரியவரவே போவதில்லை என்ற இந்தக் கேள்வி ஒன்றை மட்டும் நிச்சயமாக்குகிறது. ஊடகங்களைத் தாக்கியோ அச் சுறுத்தியோ அல்லது ஊடகவியலாளர்களைத் தாக்கியோ தமக்கு வேண்டியதைச் சாதித்து விட ஒரு பகுதியினர் துடிக்கின்றனர் என்ற உண்மைதான் அது. ஆனால், அவர்களுக்குச் சாதகமான பதில் இலங்கையின் கடந்த கால வரலாறுகளிலோ, உலக பத்திரிகை வரலாறுகளிலோ இல்லை என்பதுதான் பரிதாபம்.

## உதயவாக்கு

அன்பில் உண்மையுண்டு. அன்பின் ஆழத்தில் கட்டுப்பாடும் உறுதியும் உண்டு. -கவிதாகூர்-

## நாளை

ஆவணி 13
திங்கட்கிழமை
23.08.2005
திதி: தசமி
மாலை 03.46 வரை
நட்சத்திரம்: திருவாதிரை முழுவதும்
சுபநேரம்: 12.05 - 01.35
ராகுகாலம்: 07.35 - 09.05
(யாவும் பழைய நேரப்படி)

**செப்ரெம்பர் 01 இல் கிளிநொச்சியில் வான்முட்டும் ஓசையுடன் முழங்கட்டும் மக்கள் எழுச்சி.**

## யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்

28.08.2005 தொடக்கம் 450 கிராம் பாணின் ஆகக் கூடிய சில்லறை விலை 23/- ஆக நிர்ணயம் செய்யப் பட்டுள்ளது. இதனை வாடிக்கையாளருக்கும் பாவனை யாளருக்கும் அறியத்தருகின்றோம்.

யாழ்.மாவட்ட பேக்கரி
உரிமையாளர் சங்கம்.

(சி-44823)

## நேரடி விற்பனைப் பிரதிநிதிகள் தேவை

நீங்கள்

- மாதாந்தம் 25000/- இற்கு மேலும் உழைக்க விரும்புகிறீர்களா???
- கடின உழைப்பின் மூலம் உங்கள் தொழில்வளத்தை உருவாக்க ஆர்வமுள்ளவரா???
- O/Lதகைமை பெற்ற 20 வயதிற்குட்பட்ட ஆணா???

மேற்கூறிய வினாக்களுக்கு உங்கள் பதில் ஆம் எனில் உங்களை சிங்கப்பூரை தலைமையகமாக கொண்டியங்கும் ஒரு Electronic கம்பனி சந்திக்க விரும்புகிறது. உங்கள் முழுமையான விவரங்க ளடங்கிய விண்ணப்பத்தை (தொலைபேசி இலக்கத்துடன்) 0112-588777 இற்கு Fax செய்யவும் அல்லது mylanelectronics @lanka.ccom.lk மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

## நீங்காத நினைவுகளில் 7ஆம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு
11
11
1939



உதிர்வு
28
08
1998

அமரர்

# பொன்னையா தியாகராசா

ஓ.போ.ச. [சாலைப் பரிசோதகர்]
கிளிநொச்சி. பருத்தித்துறை சாலைகள்

அப்பா என்றோர் அருளோவியம்
அதுவே எமது உயிரோவியம்
வையத்துள்ளே நாம் வாழ
வழிகாட்டி நின்ற எம் வாழ்வோவியம்
இவ் ஓவியம் எம்வாழ்வில்
மீண்டும் வருமோ? அப்பா!

ஆயிரம் உறவுகள் எமைத்தேடி
அவனிதனில் வந்திடலாம்
ஆனால், ஆருயிர் அப்பாவே
எம்மை அன்புடன் அரவணைக்க
உங்களைப்போல் ஒரு குளிர்நிலவு
மீண்டும் எம்வாழ்வில் வருமோ? அப்பா!

செல்வங்கள் பலநாம் பெற்றிடலாம்
செளிப்புடன் இவ்வுலகில் வாழ்ந்திடலாம்
ஆனால், சேயர் எம் வாழ்வில்
அப்பா என்ற செல்வம்
மீண்டும் எம் வாழ்வில் வருமோ? அப்பா!

கருணை உள்ளம் கொண்டவரே!
கலங்கரை ஒளி விளக்கே!
எம்மை இதயத்தில் சுமந்தவரே!
இவ்வுலகில் நாம் சிரிக்க
மீண்டும் நீங்கள் வேண்டுமப்பா
எம்முடன் நீங்கள் சேர்ந்தே சிரித்திடும்
அந்த இனிய நன்நாள் எம்வாழ்வில்
மீண்டும் வருமோ? அப்பா!

அப்பா நீங்கள் பெற்றெடுத்த
பிள்ளைகள் - எம்
பெருமிதங்கள் காணுமுன்னே
பாசமறியா காலனவன்
பறித்தானே உங்கள் உயிரை?
எங்கள் மகிழ்ச்சியில் நீங்கள்
பங்கு கொள்ள எமக்கு
நீங்கள் வேண்டுமப்பா
எம்முடன் நீங்கள் இணைந்து வாழும்
அந்த இனியநாள் எம்வாழ்வில்
மீண்டும் வருமோ? அப்பா!

அன்புள்ள அப்பாவே!
அன்புடனே உங்களது
ஆன்ம சாந்திக்காய்
அனு தினமும் வேண்டுகின்றோம் - அவனியில்
உங்களன்புக் குழந்தைகள் நாம்!

சாந்தி! சாந்தி! சாந்தி!

இல.05 புறுடிமுள்வேன்,
அரியாலை,
யாழ்ப்பாணம். (39374)

உங்கள் ஆத்மசாந்திக்காய்ப் பிரார்த்திக்கும்
குடும்பத்தினர்

---

**ராஜா** யாழ்ப்பாணம்

இன்று முதல் சியாம், அஸின், பூஜா, லைலா நடித்த

## உள்ளம் கேட்குமே

காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே.)

(சி-43380)

**மனோகரா** யாழ்ப்பாணம்

விக்ரம், சதா, விவேக், பிரகாஸ்ராஜ் நடித்த

## அந்நியன்

காட்சிநேரம்: 10.30, 2.30, 6.30, 9.30. (பு.நே.)

(சி-44110)

**நாகம்ஸ்** சினிமா சுன்னாகம்



இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின அதிரடி வெளியீடாக இளம் புயல் ஜெயம் ரவி, ரேணுகா மேனன், வடிவேல் மற்றும் பலர் நடித்த

## தாஸ்

(ரீல்ஸ்) (கடைசி வாரம்)

அடுத்த வெளியீடு
**கஜனி**

காட்சிகள்: 11.00, 3.00, 7.00, 10.00 (பு.நே).

(சி-4118)

**நாதன்ஸ் சினிமா** ஆஸ்பத்திரி முன்பாக யாழ்ப்பாணம்.

சத்தியராஜ், நமிதா, வடிவேலுவின் நகைச்சுவைச் சித்திரம்

## இங்கிலீஸ்காரன்

கா.நே.: 10.30, 2.30, 6.30, 9.30. (பு.நே.)

(சி-43363)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
16
-
10
-
1979



அரக்கன் பிடியில்
07
-
09
-
2004

## நவரத்தினராஜா பிறேம்குமார்

மாதங்கள் பன்னிரண்டு ஓடி மறைந்ததையா
உன் பூ முகத்தைக் காணாமல் தினம் தினம்
ஏங்கி தவிக்கின்றோம்.
நம்பிப்போய் கயவர்கள் கையில்
அகப்பட்டாயே ஐயா!
உன் பூ முகத்தையும் உன்
உருவத்தையும் காணாது தினம் தினம்
கண்ணீர் விட்டு அழுகின்றோம்.

- மனைவி, பிள்ளை.

புதிய செம்மணி வீதி,
வேளாதோப்பு,
இருபாலை தெற்கு. (39378)(21)

## மருந்துகள் வழங்கப்பட்டன

தென்மராட்சி,ஓக.28

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் ஒரு தொகுதி மருந்துப் பொருள்களை சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு அன்பளிப்பாக வழங்கினர்.

கழகத் தலைவர் லயன் சி.சிவபால சுப்பிரமணியம் தலைமையிலான கழக நிர்வாகிகள் கடந்த 25ஆம் திகதி மருந்துப் பொருள்களை மேற்படி வைத்திய சாலையின் டாக்டர் ச.அம்பிகைபாகனிடம் கையளித்தனர்.

(203-117)

## ஆய்வுப்பட்டறை

யாழ்ப்பாணம்,ஓக.28

சேது சமுத்திர கால்வாய்த் திட்டம் தொடர்பான ஆய்வுப்பட்டறையொன்று நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். பல்கலைக் கழக நூலகக் கேட்போர்கூடத்தில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வினை யாழ்.பல்கலைக்கழகம் மற்றும் சுற்றாடல் நிறுவனம் ஆகியவற்றுடன் இணைந்து வடக்கு - கிழக்கு பொருண்மிய மதியுரையகம் நடத்துகின்றது.

(3-9)

---

## கண்ணீர் அஞ்சலி



மூத்த கல்விமானும் யாழ். இந்துக் கல்லூரியின் முன்னாள் உபஅதிபரும் எமது பாடசாலையின் பழைய மாணவரும் பேராசானுமாகிய மூதறிஞர்

### க.சிவராமலிங்கம்பிள்ளை

அவர்கள் இறைபதம் அடைந்ததையிட்டு ஆழ்ந்த துயரடைவதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

யா/புங்குடுதீவு ஸ்ரீசுப்பிரமணிய மகளிர் வித்தியாலய பழைய மாணவர் சங்கம்.

புங்குடுதீவு. (39372)

## 26 ஆவது பிறந்த நாள் நினைவும் 8 ஆம் மாத நினைவஞ்சலியும்

அன்னை மடியில்
1979
08
28



அலையின் பிடியில்
2004
12
26

# செல்வன் இராசதுரை தயாபரன்

(பகுதி நேர விரிவுரையாளர், தொழில்நுட்பக் கல்லூரி - யாழ்ப்பாணம்)

கடலன்னையே சொல் - நீ
அன்னை என்ற சொல்லின் அர்த்தம் மறந்து
ஆதிரை நாளதிலே சுனாமி எனும் பெயரில்
கோரத் தாண்டவமாடியது ஏன்?
தொழில் நுட்பங்கள் பல கற்று
சோதனைகள் பல கண்டு
தொழில் பார்க்கச் சென்றவனே!
சாதனைகள் பல புரிந்து
உத்தியோகம் பார்த்து
ஊர்புகழ வாழ்வாய் என்று எண்ணிய
அன்னையவள் மனம் துடிதுடிக்க
உடன்பிறப்புகளும் உற்றாரும் மனம் கலங்க
அகவை இருபத்தைந்திலே
மார்கழி இருபத்தாறில்
சன்ன தங்கொண்ட கடலன்னையவள்
சற்றேனும் இரங்காமல்
சதி செய்து உனை அழைத்தாளா?
அன்புச் செல்வமே - நீ
எமைவிட்டுப் பிரிந்து
நாளிரண்டு திங்கள் சென்றாலும்
நம்பமுடியாமல் தவிக்கின்றோம்
நாமிங்கு!

இயற்கையின் சீற்றத்தினால் கடலலையின் கோரப் பசிக்கு இரையான எமதன்புக்கும், பாசத்திற்குமுரிய அனைத்து உறவுகளையும் இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

காளிகோயிலடி, மல்லாகம். (சி-44797) - குடும்பத்தினர்.

---

CARITAS - HUDEC JAFFNA

# VACANCY

### 1. Children Program Assistant

To work in full partnership with the Caritas Internationals (CI) Project Advisor Children Programme in designing, managing, monitoring and evaluating projects.

**Base Station:** Jaffna

**Main Duties:**

- Assist the Program Manager in conducting coordination meetings and workshops with caregivers.
- Conducting workshops with children.
- Preparing reports of workshops and meetings with caregivers and children.
- Conduct regular visits in Children's Home to monitor the implementation of activities.
- Updating regularly the data records about the children living in the Children's Homes involved in the Program.
- Monitoring and Supervise Resource Personnel employed for specific activities within the frame of the Program.
- Conducting participatory needs assessment in the Children's Homes involved in the Program.

**Requirements:**

- Background on child care
- Experience in conducting workshop
- Knowledge in community based approach
- Good team player
- Computer literacy
- Fluency in English, spoken and written
- Willingness to travel to Kilinochchi and Mullaitivu

Caritas-Hudec recruits qualified individuals without distinction of ethnic background, religion or gender.

If you would like to be a part of a dedicated team in a humanitarian context, Please send us your CV & motivation letter including your contacts & minimal two references to the following address, latest by 1 September 2005

**Father Jeyakumar Caritas-Hudec Jaffna**
**14, Mathew's Road,**
**Deogu Street, Jaffna.** Or e-mail: hudec@sltnet.lk

PLEAE SPECIFY THE POST YOU APPLY FOR IN YOUR APPLICATION WITH CONTACT TELEPHONE NUMBERS

# பேச்சுகள் நடந்தாலும் நடைமுறைகள் சாத்தியமா?

தெற்கில் உள்ள அரசியல்வாதிகளுக்கிடையிலான அதிகாரப் போட்டியாகவே தேர்தல்கள் அமைகின்றன.

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வாகவோ அல்லது அவர்களுக்கு விடிவை அளிப்பனவாகவோ தேர்தல்கள் அமையமாட்டா?

இப்படி ஆணித்தரமான கருத்தை வெளிப்படுத்தியுள்ளனர் விடுதலைப் புலிகள்.

ஜனாதிபதித் தேர்தல் நடத்துவது தொடர்பாக நீண்ட வாரமாகத் தொடர்ந்த பிரச்சினைக்கு - சிக்கலுக்கு உயர்நீதிமன்றம் ஆப்புவைத்த பின்னர், இவ்வாண்டு ஜனாதிபதித் தேர்தல் நடக்கும் சூழலில் விடுதலைப் புலிகளின் கருத்து கவனத்தில் எடுக்கப்படவேண்டிய ஒன்று.

யுத்தநிறுத்த உடன்பாடு நெருக்கடிக்குள்ளாகி, யுத்தத்தின் விளிம்பில் நாடு தத்தளித்துக் கொண்டிருந்த சமயம், நோர்வேயின் அனுசரணையில் அரசுக்கும் - விடுதலைப் புலிகளுக் அமைந்துள்ளன. அண்மையில் அமைச்சர் ஒருவர் தெரிவித்த கருத்துப்படி, நேரடிப் பேச்சு ஊகம் என்பதும் கவனிக்கத்தக்கது.

''ஒட்டுமொத்தமாக நோக்கும் போது தெற்கில் யார் ஆட்சிக்கு வரலாம் என்ற போட்டி மட்டும் நிலவுகின்றதே தவிர, எவரும் நேரடிப் பேச்சைப் பற்றிச் சிந்திப்பதாக இல்லை.

''தற்போதுள்ள நிலையில் பேச்சுக்கான வாய்ப்புகள் குறைவு என்றுதான் கருதுகின்றேன்''

இப்படி விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கருத்து வெளியிட்டிருக்கிறார்.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு வெளியான பின் அவர் இக்கருத்தை வன்னியில் வெளியிட்டுள்ளர்.

தமிழ்ச்செல்வனின் கருத்து யதார்த்தமானது தான். கடந்த கால வரலாற்றை எடுத்து நோக்குவோமானால், தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு தலைமையில், தனக்கு நெருக்கமானவர்களான நலின் குணரத்ன லயனல் பெர்னாண்டோ, ராஜன் ஆசீர்வாதம் போன்றவர்கள் கொண்ட குழுவை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பினார்.

யாழ்ப்பாணத்தில் அமைந்திருந்த விடுதலைப் புலிகளின் அரசியல் தலைமையகத்தில் பேச்சுகள் ஒருகட்டம், இருகட்டம், மூன்று கட்டம் எனத் தொடர்ந்தன.

பேச்சுகளில் முதலில் மக்களின் இயல்புவாழ்வை சீராக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று விடுதலைப் புலிகள் வலியுறுத்தினர்.

உடனடி முடிவுகளை எடுக்கக்கூடிய அமைச்சர் மட்டத்திலான குழுவை அனுப்புங்கள் என விடுதலைப் புலிகள் கோரிக்கை விடுத்தனர்.

இயல்பு நிலையைச் சீராக்கப் பல யோசனைகளைப் புலிகள் முன்வைத்தனர். அந்த யோசனைகளுக்கு உருப்படியான பதில்களைத் தரமுடியாத நிலையில் அரசு இருந்தது.

ஆட்சிக்கு வந்தது ஐ.தே.கட்சி.

ஐ.தே.கட்சி ஆட்சிக்கு வந்ததும், ரணில் விக்கிரமசிங்க சமாதானத்தில் தனது விருப்பை வெளிப்படுத்த, நோர்வேயை அனுசரணையாளராக அழைத்தார். அவர்களது பிரசன்னத்தில் 2002ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22ஆம் திகதி யுத்தநிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்தானது.

யுத்தநிறுத்த உடன்பாட்டைக் கூட, அப்போது ஜனாதிபதியாக இருந்த சந்திரிகா குமாரதுங்கவின் ஆலோசனை இன்றி, சம்மதம் இன்றி, சர்வதேசத்தின் ஆசியுடன் அவர் ஏற்படுத்தினார். ஆனால், அவர் பிற்காலத்தில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக சர்வதேச வலைப்பின்னல் ஒன்றை ஏற்படுத்த பல நடவடிக்கைகளை எடுத்தார் என்ற குற்றச்சாட்டுகள் வெளியாகின.

யுத்தநிறுத்த உடன்பாடு நடைமுறைக்கு வந்து யுத்தம் நிறுத்தப்பட்டு, துப்பாக்கிகளுக்கு ஓய்வு கொடுக்கப்பட்டது.

யுத்தத்தை நிறுத்துவது மட்டும் நோக்கம்



கொண்டதாக இந்த உடன்பாட்டைத் தமிழ்த்தரப்புப் பார்க்கவில்லை. இந்த உடன்பாடுமூலம் தமிழ்மக்களின் இயல்புவாழ்க்கை மீளத்திரும்புவதுடன், நிரந்தரத் தீர்வு ஏற்படவேண்டும் என்று தமிழ்த்தரப்பு எதிர்பார்த்தது.

அதற்காக ஆறுசுற்றுப்பேச்சுகள் நடந்தன. அந்தப் பேச்சுகளில் பல்வேறு முடிவுகள் எட்டப்பட்டன. ஆனால், அந்த முடிவுகள் எதுவும் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

அந்த முடிவுகள் படைத்தரப்புடன் சம்பந்தப்பட்டவை. முப்படைகளின் தளகர்த்தாவாக ஜனாதிபதி இருக்கிறார். இவரின் ஆதரவு, ஒத்தாசை கிடைக்காததால், இந்த முடிவுகளை நடைமுறைப்படுத்தமுடியாத இக்கட்டுநிலை ரணில் தலைமையிலான அரசுக்கு ஏற்பட்டது.

இந்த முடிவுகளை நடைமுறைப்படுத்த வசதியாக இடைக்கால ஏற்பாடாக இடைக்காலச் சபை ஒன்றை அமைக்கும் யோசனையை அரசு முன்வைத்தது. அந்த யோசனையின் அடிப்படையில் விடுதலைப் புலிகள், தன்னாட்சி அதிகார சபை வரைபை அரசுக்குச் சமர்பித்தனர்.

இந்நிலையில், அரசுவசமிருந்த பாதுகாப்பு அமைச்சு, ஊடக அமைச்சு போன்றவற்றை ஜனாதிபதி தம்வசம் எடுத்ததால் உருவான அரசியல் நெருக்கடியில் ஐ.தே.கட்சியின் ஆட்சி வீழ்ந்தது; கைமாறியது.

பேரினவாதச் சக்திகளின் உதவியுடன் மீண்டும் ஆட்சியைப் பிடித்த ஜனாதிபதி தமிழ்மக்களுக்கு எதிரான நெருக்குவாரங்களை, நிழல் யுத்தத்தை தீவிரமாக்கினார். அதன் விளைவாக நாடு அவசரகால நிலையில், வந்து நிற்கின்றது.

நாடு இக்கட்டான நிலையில் இருக்கும் இக்காலகட்டத்தில் தனது 11 வருடகால ஜனாதிபதி ஆட்சிக்கு விடைகொடுக்கப் போகின்றார் ஜனாதிபதி சந்திரிகா.

11 வருடகால ஆட்சியில் அவர் நாட்டுக்கு ஆற்றிய சேவை பற்றிக் கூறவேண்டடிய தேவையில்லை. ஆனால், சமாதான தேவதையாக விடிவெள்ளியாக வந்த அவர், தமிழ்மக்களுக்கு எதிராக எடுத்த முடிவுகள், செயற்பாடுகள் தமிழர் வரலாற்றில் பொறிக்கப்படும் என்பது நிச்சயம். அவரால் அகதியான வர்கள், விதவையானவர்கள், அநாதரவான சிறுவர்கள் ஆகியோரின் வேதனைகளுக்கு அவர்ஒருகாலத்தில்பதில்கூறியே ஆகவேண்டும்.

அவர் ஆட்சியில் இருக்கப்போகும் அடுத்த நான்கு மாதங்களில் அதற்கு அவர் பரிகாரம் தேடி அவர்களின் வாழ்வில் ஒளிமயம் ஏற்பட நடவடிக்கை எடுப்பாரா?அதுதான் இயலுமா?

விடுதலைப் புலிகளுடன் நேரடிப் பேச்சுகளை நடத்தி யுத்தநிறுத்த உடன்படிக்கையைச் செம்மையாக நடைமுறைப்படுத்த முனைவாரா?

சமாதானத்துக்கு விடைகொடுக்கும் போர் ஒன்றை தமிழ்மக்கள் மீது திணித்து யுத்தகால நிலையை விட்டுச் செல்வாரா?

இன்று எழும் கேள்விகள் இவைதான். அடுத்து வரும் வாரங்களில் இதற்கான பதிலை எதிர் பார்த்துப் பொறுத்திருப்போம். ✱

குகா

## விடைபெறும் ஜனாதிபதி முன் உள்ள கேள்விகள்

கும் இடையில் நேரடிப் பேச்சு ஒன்றுக்கு ஏற்பாடு நடந்தது.

நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் இந்தப் பேச்சுகளை நடத்த ஏற்பாடு செய்யுமாறு விடுதலைப் புலிகளின் தலைமை நோர்வேயைக் கேட்டது.

ஆனால், நேரடிப் பேச்சுகள் இலங்கைக்குள்ளேயே நடக்கவேண்டும் என்று இலங்கை அரசு நோர்வேக்குத் தெரிவித்தது.

இந்த ஆலோசனையை ஏற்ற விடுதலைப் புலிகளின் தலைமை பேச்சை இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியிலோ யுத்த சூனியப் பிரதேசத்திலோ நடத்துவது சாத்தியமில்லை. எமது பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு கிளிநொச்சியில் பேச்சுகளை நடத்தத் தயாராகவிருக்கின்றோம் என்று நோர்வேக்கு தெரிவித்தது.

விடுதலைப் புலிகளின் இந்தப் பதிலுக்கு எந்த முடிவும் கிட்டாத நிலையில், தெற்கில் தேர்தல் சூறாவளி ஆரம்பமாகிவிட்டது.

இவ்வாண்டே ஜனாதிபதித் தேர்தல் நடக்கும் என்று உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை அடுத்து ஜனாதிபதியின் தலைமையிலான பொதுமக்கள் ஐக்கிய கூட்டமைப்பும் எதிர்க்கட்சித் தலைவர் ரணிலின் தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணியும் தேர்தலுக்குத் தயாராகிவிட்டன.

அடுத்த ஜனாதிபதி யார் என்ற பலப்பரீட்சை தெற்கில் ஆரம்பமாகிவிட்டது. தமிழர் விவகாரம், பேச்சு எல்லாம் கிடப்பில் போடப்பட்டு விடும்.

நேரடிப் பேச்சு நடக்கும் சாத்தியம் அருகிக் கொண்டு செல்கின்றது. நடந்தாலும் உருப்படியான முடிவுகள் எட்டப்படும் புறக்காரணிகள் இல்லை.

பேச்சுகள் நடந்தால் அது கீழ்வரும் புறக்காரணிகளால் பயனற்ற பேச்சாகவே அமையும் எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

✱ ஜனாதிபதி சந்திரிகா எந்தவித தீர்க்கமான முடிவையும் எடுக்கமுடியாத 'பொம்மை' ஜனாதிபதியாகவே அடுத்த மூன்று மாதங்களும் இருக்கப்போகின்றார்.

✱ போர்நிறுத்த உடன்படிக்கை படைத்தரப்புடன் சம்பந்தப்பட்டது. தீர்க்கமான முடிவு எட்டமுடியாத நிலையில் 'படைத்தரப்பை கட்டுப்படுத்தி' முடிவுகளை நடைமுறைப்படுத்த முடியாதநிலை ஜனாதிபதிக்கு ஏற்படும்.

✱ பேரினவாதிகளின் ஆதரவுடன்தான் மகிந்த ராஜபக்ஷ வெற்றிபெறமுடியும். புலிகளுடன் பேச்சுநடத்தி பேரினவாதிகளின் எதிர்ப்பை சம்பாதிக்க ஜனாதிபதி விரும்பமாட்டார்.

✱ யுத்தநிறுத்த உடன்பாடு தொடர்பாக பேச்சு ஒன்றை நடத்துவதன் மூலம் அவசரகாலச் சட்டத்துக்கு விரோதமாக முடிவுகளை எட்டமுடியாத நிலை.

✱ புலிகளுடன் பேச்சை நடத்தி சரிந்துபோன அவர்களின் சர்வதேச ஆதரவு மீளக் கிடைக்க உதவ விரும்பாமை.

மேற்கண்ட காரணங்களால் பேச்சு நடந்தாலும் அது உருப்படியானதாக - சீரானதாக - அமையப் போவதில்லை என்பதுதான் தற்போதைய கணிப்பு.

'அரசுடன் நேரடியாகப் பேசத் தயார் என அறிவித்தோம். வெளிநாட்டில் நடத்தமுடியாது என்று கூறினார்கள். கிளிநொச்சியில் பேச்சை நடத்துவோம் என்று அறிவித்தோம். அதற்கும் இன்னமும் பதில் இல்லை.

''நேரடிப் பேச்சுக் குறித்த அரசின் செயற்பாடுகள் காலத்தை இழுத்தடிப்பனவாகவே



ஒன்று காண்பதற்கான முயற்சிகள் எடுக்கப்படும்போது தெற்கில் அரசியல் குழப்பம் ஒன்று தோற்றுவிக்கப்பட்டுவந்துள்ளது. அந்தக் குழப்பத்தின் விளைவாக ஆட்சிக்கதிரைகள் மாறும். மீண்டும் பேச்சு, சமாதான முயற்சிகள் அகரவரிசையில் இருந்து ஆரம்பமாகும்.

வரலாற்றைச் சற்றுப்பின் நோக்கிப்பார்த்தால் 1977ஆம் ஆண்டுமுதல் ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் ஆட்சிக்காலம் வரையிலான காலப்பகுதி தமிழ்மக்களுக்கு ஓர் இருண்டகாலம் என்பது சகலரும் அறிந்த ஒருவிடயம்.

சாதாரண மக்களின் இயல்பு நிலையைச் சீராக்க விடுதலைப் புலிகள் முன்வைத்த மிகவும் சாதாரண கோரிக்கைகளைக்கூட சந்திரிகா அரசு ஏற்காததால், பேச்சுகள் தோல்வியில் முடிந்தன. சந்திரிகாவின் சமாதான முத்திரை கிழிந்தது.

அதன்பின் சமாதானத்துக்கான யுத்தம் என்ற பெயரில் தனது மாமனார் அநுருத்த ரத்வத்தையின் வழிகாட்டலில் தமிழ்மக்கள் மீதான பாரிய யுத்தம் ஒன்றை சந்திரிகா திணித்தார். அந்த யுத்தம்மூலம் யாழ்ப்பாணத்தை மீட்கும் போர் ஒன்றை அவர் ஆரம்பித்தார்.

அந்தப் போரின் கொடுமையால் குடாநாட்டு மக்கள் பாரிய இடப்பெயர்வு ஒன்றை சந்திக்க நேர்ந்தது. தமது உடைமைகளை, சொத்துக்களை எல்லாம் கைவிட்டு ஓரிரவில் அகதிகளாகவேண்டிய இக்கட்டு குடாநாட்டு மக்களுக்கு ஏற்படுத்தப்பட்டது.

வாழ்வா? சாவா? என்ற கேள்வியுடன் இடம்பெற்ற வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடப்பெயர்வுக்கு வழிவகுத்தவர் சந்திரிகா தான் என்பதை தமிழ்ச்சமூகம் எப்போதும் மறக்கப் போவதில்லை.

குடாநாட்டைப் பிடித்து பின்னர், தென்மராட்சியைப் பிடித்து சந்திரிகா தமது ஆக்கிரமிப்பு நோக்கத்தை எண்ணினால் எனினும் தமிழ் மக்களின் வாழ்க்கையை முன்னேற்ற அவர் எந்த வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

அதேபோல, வன்னியில் 'ஜெய சிக்குறு' என்ற நடவடிக்கையை முன்னெடுத்து வன்னியில்பெரும் பிர தேசத்தை தனது கட்டுப்பாட்டுக்

## தமிழர்களுக்கு விடிவை தேர்தல் தருமா?

1994ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் நடந்த தேர்தலில் சமாதானத் தேவதையாக வந்தார் இன்றைய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க. ஜே.ஆரின் ஆட்சியில் துவண்டுபோயிருந்த தமிழ் மக்கள் சந்திரிகாவை ஒரு விடிவெள்ளியாகப் பார்த்தனர் - சமாதானத் தேவதையாகப் பார்த்தனர்.

நல்லூரில் கந்தனுக்கு உற்சவம் நடந்து கொண்டிருந்த காலம் அது. அந்த உற்சவத்தில் 'சந்திரிகா சீப்பு', 'சந்திரிகா செருப்பு', 'சந்திரிகா காப்பு' என்று எல்லாம் கோஷமிட்டு பொருள்கள் விற்பனை செய்யப்பட்ட நிகழ்வை இன்னமும் மக்கள் மறக்கவில்லை.

தமிழ்மக்கள் மனதில் உறைந்த இருண்ட யுத்தத்துக்கு விடிவுகிட்டிவிட்டதே என்ற நோக்கில் தமிழ்மக்கள் அள்ளிப்போட்ட வாக்குகளின் பலத்துடன் 1994ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் ஆட்சியில் பிரதமராகப் பதவியேற்றார் சந்திரிகா. அவர் உடனடியாகவே விடுதலைப் புலிகளுடன் பேச்சை ஆரம்பித்து தனது சமாதானத்தின் வெளிப்பாட்டை சர்வதேசசமூகத்துக்குக்காட்டினார்.

அந்தக் கையோடு நவம்பர் மாதத்தில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு தமிழ்மக்கள் அளித்த ஆதரவுடன் ஜனாதிபதியானார்.

ஜனாதிபதியானதும் பேச்சுகளை ஆரம்பிக்க முன்வந்தார் சந்திரிகா. வெளிநாட்டு அனுசரணை ஏதும் இன்றி நேரடியாகவே புலிகளுடன் பேச்சுகளை ஆரம்பித்தார்.

தனது செயலாளர் பாலபட்டபெண்டியின்



குள் கொண்டு வந்தார் சந்திரிகா.

'சமாதானத்திற்கான யுத்தம்' என்ற முத்திரையுடன்அவர்ஆட்சிக்கு வந்து ஐந்து மாதத்தில் ஆரம்பித்தயுத் தம் தமிழ் மக்களின் வாழ்வை, இருப்பை சிதைத் தது. அவர்களின்உடைமைகளை - சொத்தைஅழித்தது.

அவற்றின் பெறுமதியை நோக்கும்போது சந்திரிகாவின் சமாதானம் இதுதானா? தமிழ்மக்களுக்கு அவர் அளித்த வெகுமதி இதுதானா? என்ற கேள்விகள் எழுகின்றன.

சந்திரிகாவின் யுத்த வெறிக்குப் பதிலடி கொடுக்கப்பட்டு வன்னியில் படைகளை விரட்டியடித்து, பலம்வாய்ந்த ஆனையிறவு முகாமை மீட்டு, தமிழீழ விடுதலைப் போராட்டம் வீறு கொண்டு நிற்கின்றது.

சந்திரிகா ஆரம்பித்துவைத்த சமாதானத்துக்கான யுத்தம் இரு தேசங்களில் படைகள் இன்று சமபலத்துடன் உருவாக வழி சமைத்தது. இரு தேசங்களின் தலைவர்களும் சம இராணுவப் பலத்துடன் பேச்சு மேசைகளில் அமர வாய்ப்பை ஏற்படுத்தியது.

மிகவும் மோசமான, கொடூரமான யுத்தம் ஒன்றைச் சந்தித்து உடைமைகள், உயிர்களை இழந்த நிலையில், அகதிகளாக மக்கள் முகாம்களில் முடங்கும் நிலையில் 2002ஆம் ஆண்டு

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

11-xxxx தொடரிலக்கமுள்ள ரொயாட்ட கொறலா கார் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:-T.P.:0777 519440 (39369)

கிளிநொச்சி, கனகபுரம் 3ஆம் பண்ணையில் நல்ல சுற்றாடலில் அமைந்த ஒரு ஏக்கர் காணி விற்பனைக்குண்டு. தேவையானால் அரை ஏக்கராகவும் பிரித்துக் கொடுக்கப்படும் (A-9 வீதியிலிருந்து 500 மீற்றருக்கும் டிப்போவிலிருந்து 100 மீற்றருக்கும் நகர எல்லைக்குள் பாடசாலைக்கு அருகிலும் அமைந்துள்ளது) தொடர்பு:25/2, முதலாம் ஒழுங்கை, பழைய பூங்கா வீதி, சுண்டிக்குழி யாழ்ப்பாணம் T.P.: 077 6569595. (39335)

## வான், கார் விற்பனைக்கு

சகல ஆவணங்களுடன் 52-xxxx (LX 30) வானும் நிழு மொடல் காரும் விற்பனைக்குண்டு. தொடர்பு: சிவா, இராமலிங் கம், முடமாவடி, திருநெல்வேலி கிழக்கு, திருநெல்வேலி.(39349)

## காணி விற்பனைக்கு

யாழ்.நகர் A-9 வீதிக்கு அண்மையாக தபால் கட்டைச் சந்தியில் அரவிந்தன் வடலி வீதி (A.V.றோட்), ஊடாக உப்புக்குளம் வீதியில் இரண்டாவது காணி 2½ பரப்பு கொண்டது. உடன் விற்பனைக்குள்ளது. தொடர்பு: க.சோமசுந்தரம். 0779005635. (39329)

கொக்குவில், பிரம்படி ஒழுங்கையில் நிலப் பரப்பு 4 குழி 14.16 விஸ்தீரணம் கொண்ட காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: 39, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். T.P.: 222 2390.(39246)

யாழில் 9 பரப்புள்ள தென்னங்காணி உடனடியாக விற்பனைக்குண்டு. கோண்டாவில் மேற்கு, அம்மன் கோயிலுக்கு அண்மையில். தொடர்புகளுக்கு: 0777 311407(சி-44761)

கொடிகாமம் சந்தைக்கு அண்மையிலுள்ள ஒழுங்கையில் கிணற்றுடன் கூடிய 11 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. விரும்பினால் பகுதி பகுதியாகப் பிரித்துக் கொடுக்கப்படும். தொடர்பு:- T.P.: 024 222 4050, 0777 582679 (சி/44809)

இல:09, சபாபதிறோட், பூநாறிமடம் கிழக்கு, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள 02 பரப்பு வெற்றுக் காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு:- T.P.: 2386699, 077 3221413 (சி/44781)

## இறைச்சிக் கோழி விற்பனைக்கு

Prima உயிர் Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம் செய்து தினமும் பெற்றுக்கொள்ளலாம். (Electronic நிறுவை) நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (சி-44491)

## கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டு முறை தடுப்பு மருந்து போடப்பட்ட Original Prima Broiler குஞ்சுகள் 44/=. பேட்டுக் குஞ்சுகள் 05.09.2005 திங்கட்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறை - நெல்லியடிக் கிளையிலும் சுட்டிபாம் - வட்டுக்கோட்டை, சந்நிதி பாம் - தொண்டைமானாறு, ஐங்கரன் களஞ்சியம் - திருநெல்வேலி, முருகன் - சாவகச்சேரி, நல்லூர் பாம் சென்ரர் - #19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர்.(39289)

## வீடு விற்பனைக்கு

நாமகள் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கில் (பொற்பதி வீதி) உள்ள புதிய வீடு 3 அறை, ஹோல், குசினி, Open Varandah, balcany (மொட்டை மாடி) உடன் கூடிய தரமான வேலைப்பாடுகள் நிறைந்த வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: ப.சிவதாஸ், நாமகள் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு. (39297)

யாழ்ப்பாணம் 344, கண்டி வீதியில் (A-9 வீதியில்) கச்சேரியிலிருந்து ½ மைல் தூரத்தில் 8 பரப்பும் 16¾ குழியும் உள்ள காணி, Big Portico with balcony above, five room, two halls, kitchen, enclosed veranah out house used as store room and tounation for garage யுடன் உள்ள வீடு உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- T.P.:2597664. (சி/44784)

பொற்பதி வீதி, செருக்கம்புல லேன், கொக்குவில் கிழக்கில் 2 பரப்புக் காணியுடன் 3 அறை, குசினி, ஹோல், Open விறாந்தை, தனிக் கிணற்றுடன் கூடிய புதிய வீடு விற்பனைக்கு உண்டு. உடன் தொடர்புகொள்ளவும். K.செந்தில், பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு (நந்தாவில் அம்மன் கோயில் முன்பாக). (39291)

உரும்பிராய்சந்தி, மருதனார்மடம் வீதியில் 100 மீற்றர் தூரத்தில் வலது ஒழுங்கையில் வீட்டுடன் இரண்டு பரப்பும் 5.5 குழியும் உடையகாணி விற்பனைக்குண்டு. பார்வை யிடும் நேரம் சனி, ஞாயிறு காலை 9.00 மணி - மாலை 4 மணி வரை. தொடர்பு: ச.சிவராஜா (இலங்கை) T.P. 021-222-5929 P.தர்ம நாதன் ஆஸ்திரேலியா) T.P. 0061298633660. (39047)

## வீடும் காணியும் விற்பனைக்கு

சாவகச்சேரி, மட்டுவில் கிழக்கு பொற்கொல்லர் வீதியில் 6½ பரப்புக் காணியில் 5 அறை, ஹோல், குளியல்அறை, கிணறு, வான் பயிர்களுடன் கூடிய வீடும் வளவும் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: க.சோமசுந்தரம். T.P.: 0779005635. (39330)

ஊரெழுப் பிள்ளையார் கோயிலுக்கு அருகில் ஆறு பரப்புடன் கூடிய புதிய வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: J.பொன்னுத்துரை, K.K.S. றோட், இணுவில் கிழக்கு. (சிமெந்து கூட்டுத்தாபனத்திற்கு அருகில்) T.P.: 077 6180694. (39333)

கட்டுடை, நவாலி வீதி, கட்டுடை பிரதான வீதி அருகில் 17 பரப்புக் காணி வீட்டுடன் வாங்க விரும்புவோர் விலையைத் தெரிவிக்கவும். கூடிய விலைக்கு வீடும் வளவும் விற்கப்படும். T.P.: 021 222 6572. யாழ்ப்பாணம். 0112388110. (39231)

## வீடு வாடகைக்கு

புறூடி லேன் கச்சேரி கிழக்கில், நவீன வசதிகளோடு அமைந்துள்ள மாடிவீடு வாடகைக்கு உண்டு. தொடர்பு: S.A தர்மலிங்கம், 24 புறூடிலேன், கச்சேரி - கிழக்கு, யாழ்ப்பாணம். (39379)

## வாடகைக்கு

திருமண, சுற்றுலா ஏனைய தேவைகளுக்கான கார் வாடகைக்குண்டு. தொடர்பு: சிவா, இராமலிங்கம், முடமாவடி, திருநெல்வேலி கிழக்கு, திருநெல்வேலி. (39350)

## மணமகள் தேவை

அமெரிக்காவில் நிரந்தர வசிப்பிடம், வயது 44, பாதுகாப்பு உத்தியோகத்தரான மணமகனுக்கு ஏழு/பன்னிரண்டு வயது வித்தியாசமுள்ள மணமகள் தேவை. நேரில் அல்லது கடிதமூலம் தொடர்புகொள்ளவும். தொடர்பு: சண்முகராஜா, மதிப்பாளர், 387, கோயில் வீதி, நல்லூர் (இராணுவ முகாமிற்கு முன்பாக). (39094)

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 73 டிசெம்பர், பூசம், 7இல் செவ்வாய், மேடத்தில் 17பாவம், 6 அடி, சிவந்த, அழகான Mobile computing Ph.D.Engineer லண்டனில் வேலை பார்க்கும் மணமகனுக்கு சிவந்த, அழகான, உயரமான, மெல்லிய, 5 வயது வித்தியாச Dental MBBS, CIMA, B.Sc. Computer பட்டதாரி மணமகள் தேவை. இறுதியாண்டு medical Students (மருத்துவ மாணவர்களும் விண்ணப்பிக்கலாம்). தொடர்பு: சிவபாதலிங்கம், 18/2, விதானையார் ஒழுங்கை, சுண்டுக்குளி. T.P.: 2367699(கொழும்பு). (39296)

யாழ்.இந்து கௌரவ குடும்பம் 1963, திருவோணம் மகரராசி, 4 இல் செவ்வாய் கிரகபாவம் 50, உயரம் 5'6'' G.C.E.O/L படித்த சுயதொழில் புரியும் குடும்பப் பாங்கான மணமகனுக்கு, தகுதியான மணப்பெண் தேவை. பணிபுரியும் மணப்பெண் விரும்பத்தக்கது. தொடர்பு:- S.K.சிவகரன், சிவாலயா 68/15 சட்டநாதர் வீதி, நல்லூர். T.P.:021 222 7844 (39353)

யாழ்.இந்து கௌரவ குடும்பம், A/L உயர்தர சித்திபெற்ற, லண்டனில் நிரந்தர வதிவுரிமை பெற்ற 1970 ஆம் ஆண்டு, பரணி நட்சத்திரம், நற்குணமுள்ள, அழகிய மணமகனுக்கு பெற்றோர் தகுந்த மணமகளைத் தேடுகின்றனர். தொடர்பு:-0776153250.(39328)

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1973 இல் பிறந்த, பூராட நட்சத்திரம், முதலாம் பாதம் கிரகபாவம் 29 உடைய சுயதொழில் புரியும் பண்ணை உரிமையாளருக்கு, ஆசிரியத் தொழில் அல்லது வேறு அரசாங்க வேலைபுரியும் மணமகளை பெற்றோர் எதிர்பார்கின்றார்கள் வி. இலக்கம்: 2682, C/o. உதயன் யாழ்ப்பாணம். (39305)

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 32 வயது, பூர நட்சத்திரம்,12 இல் செவ்வாய் 28 கிரகபாவம், கௌரவமான தொழில் பார்க்கும் மணமகனுக்கு பெற்றோர் பொருத்தமான படித்த, உத்தியோகம் பார்க்கும் மணமகளைத் தேடுகிறார்கள். முழு விவரங்களுடனும் தொடர்புகொள்ளவும். தொடர்பு: விளம்பர இல. 2685 மே/பா உதயன், யாழ்ப்பாணம். (39377)

இந்து கௌரவ குடும்பம், வயது 34 செவ்வாய்க்குற்றமற்ற, கிரகபாவம் 65, திருவோண நட்சத்திரம், அரச திணைக்களத்தில் தொழில் புரியும் தொழில் நுட்ப உத்தியோகத்தருக்கு ஏற்ற மணமகள் தேவை. பட்டதாரி ஆசிரியை விரும்பத்தக்கது. தொடர்பு: விளம்பர இல. 2686 மே/பா உதயன், யாழ்ப்பாணம். (39382)

## தவறிவிட்டது

25.08.2005 அன்று இரவு நாவாந்துறை பொலீஸ் நிலையத்திற்கும் 4ஆம் சந்தி, நாவலர் வீதிக்கும் இடையில் NOKIA கையடக்கத் தொலைபேசி தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைத்து சன்மானத்தைப் பெற்றுக்கொள்ளவும். இ.கணேசராசா, இலுப்பையடிச் சந்தி, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (39339)

சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டையைச் சேர்ந்த சோமசுந்தரம் மோகனராஜ் என்பவரது தேசிய அடையாள அட்டையும் (730651724V), விசேட அடையாள அட்டையும் 13.08. 2005 சனிக்கிழமை நல்லூர் கோவிலில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர் மேற்கூறிய முகவரியில் ஒப்படைத்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (39375)

## விற்பனைக்கு

சகல வகையான கையடக்கத் தொலைபேசிகளும் அதற்கான உதிரிப்பாகங்களும் விற்பனைக்குண்டு. உங்கள் சொந்தப் பெயர்களுக்கு சிம் காட்டும் வழங்கப்படும். பழுதுபார்த்துக் திருத்தும் சேவையும் உண்டு.

**யாழ். போன் சொப்**

10, நவீன சந்தை மேல்மாடி, ஆஸ்பத்திரி வீதி (திறீ ஸ்ரார் ஹோட்டலுக்கு முன்பாக), யாழ்ப்பாணம். (சி/44495)

## Organ/Violin Notes

சினிமாப்பாடல்களுக்கான இசைக் குறிப்புகள், கேள்விஞானம், keyboard exercise, மேற்கத்தேய இசைபற்றித் தெரிந்து கொள்வோம். ஆகிய புத்தகங்கள் விற்பனைக்குண்டு.

**சுரவீணா இசை மன்றம்,**
75, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்
T.P.: 0715055991
(நல்லூர் ஆலயத்திலிருந்து 500m தெற்கே). (39337)

## காணியுடன் பெரிய கட்டடம் விற்பனைக்கு

தொல்புரத்தில் 15 பரப்புக்காணியில் அமைந்த 8000 சதுர அடிக் கட்டடம் 9' சுற்று மதிலுடன் விற்பனைக்குண்டு. சகல வசதிகளுடன், பயன்தரு மரங்கள், பெரிய வாகனத்தரிப்பிடம் என்பன உண்டு. தொழிற்சாலைகள், ஹேட்டேல், திரு மண மண்டபம், தனியார் வைத்திய சாலை, களஞ்சிய நிலையம் போன்றவற்றுக்கும் உகந்தது. பல வீடுகளாக பிரிக்க வசதியும் உண்டு. மேல்மாடி வீடாகவும் பாவிக்கலாம். (21.45.17)

தொடர்பு:- T.P.: 077-6589400 (39352)

## தேவை

புடைவை வியாபாரத்தில் அனுபவமுள்ளவர்களும் புதிதாக பழக விரும்புபவர்களும் தேவை. நேரில் தொடர்பு கொள்ளவும். (21.45.17)

தொடர்பு:

**அபிராமி ரெக்ஸ்**

155, நவீன சந்தை, யாழ்ப்பாணம். (39381)






# ஈழத்தமிழ் மக்களின் அரசியல் வரலாற்றின் சான்றுத் தூண்களில் ஒருவர் பண்டிதர் சச்சி

✱ **கேள்வி:** 'யாழ்ப்பாணக் காவியம்' என்ற அருமையான நூலை 4 பருவங்கள், 38படலங்கள், 2ஆயிரத்துக்கும் அதிக மான செய்யுள்கள் கொண்டதாக ஆக்கி யுள்ளீர்கள். நூற் பிறப்புப் பற்றிப் பாயிரம் பாடியுமுள்ளீர்கள். இந்நூல் எழுந்த பின் னணியைப் பகிர்ந்துகெள்ளுங்கள்...?

• *பதில்:* அந்தக் காலத்திலே தமிழரசுக் கட்சியில் நான் நாயாய் உழைத்தேன். 1958 தமிழர்களுக்கு எதிராகக் கொழும் பில் இனக்கலவரம் ஏற்பட்டது. பாதிக்

என்று யாழ்ப்பாணக் காவியத்தின் பிறப்பு, பாயிரத்தில் குறிப்பிட்டுள்ளேன்.

பின்னர், பரராசசேகரன் பற்றி, யாழ்ப் பாண அரசு பற்றியெல்லாம் நான் தேடி ஆராய்ந்தேன். கொழும்பு அருங்காட்சி யக நூலகத்துக்குப் போய் பல்வேறு சான் றாதாரங்களையும் கண்டறிந்தேன். பல சரித்திர நூல்களைப் பார்வையிட்டேன். அதன்பின்னர்தான் யாழ்ப்பாணக் காவி யத்தை எழுதினேன். கி.பி 1450 முதல் 1467 வரையான பதினேழு ஆண்டுகால


பல்கலைக் கழக மாணவர்கள் இந்நூலை அதிகம் விரும்பிப் படிக்கிறார்கள். என்னி டம் நேரடியாக வந்து அவர்கள் அதிகம் பிரதிகளை வாங்கியிருக்கிறார்கள்.

✱ *கேள்வி:* தமிழில் தொல்காப்பிய அடிப்படையில் இலக்கண நூலாக்கம் செய்த நீங்கள் ஆங்கிலத்தில் **Fundamentals of Tamil Prosody** என்ற நூலை ஆக்கியுள்ளீர்கள். அதற்கான தேவைப் பாடென்ன?

• *பதில்:* இந்தியாவில் ந.கோ.கந்தசாமி,

**மும்மொழிப் புலமை மிக்கவர். தமிழிலும் ஆங்கிலத்திலும் கவிதைகள், சிறுகதைகள், கட்டுரைகள், ஆய்வு நூல்கள் எழுதியுள்ள வித்தகர். தமிழரசுக்கட்சியின் நிறுவுநர்களில் ஒருவர். அவை மட்டுமா...? சிறந்த ஓவியர், வானியல் வல்லுநர் என்று பன்முகங்களைக் கொண்ட சமகாலத்து மேதை பண்டிதர் க.சச்சிதானந்தன். தமது 86ஆவதுவயதிலும் தமக்குரிய துறைகளில் எழுதிக்கொண்டே இருக்கிறார். அவரது ஆக்கங்கள் பேணப்பட வேண்டியவை. எதிர்காலச் சந்ததியினரின் பல்துறை நலன்களுக்காக 'உதயன்' ஞாயிறு இதழுக்கு அவர் வழங்கிய சிறப்புச் செவ்வியின் முதலாவது பகுதி சென்றவாரம் வெளியானது. இரண்டாவது பகுதி இங்கு பிரசுரமாகிறது.**

**சிறப்புச் செவ்வி**
**பகுதி: இரண்டு**




கப்பட்ட பலரும் எமது பிரதேசத்துக்கு வந் தனர். அந்த நேரத்தில் எமது தமிழர் வாழும் பிரதேசத்தில் சிங்களக் குடியேற் றங்களைத் தடுத்து நிறுத்தி, அந்த இடங் களிலே தமிழர்களைக் குடியமர்த்தி விவ சாயச் செய்கையை மேற்கொள்ள வேண் டும் என்று தமிழரசுக் கட்சியினர் தீர்மானித் தனர். அப்போது வவுனியா கச்சேரியில் அரச அதிபராக இராசதுரை என்பவர் இருந் தார். தமிழர

யாழ்ப்பாண அரசின் சரித்திரம் இக் காவி யத்தில் உள்ளது.

✱ *கேள்வி:* இலங்கைக் காவியமான 'பருவப் பாலியர் படும் பாடு' என்ற பெரிய தொரு காவியநூலை ஆக்கியுள்ளீர்கள் அது பற்றிக் கூறுங்கள்?

• *பதில்:* 'பருவப் பாலியர் படும்பாடு' என்ற நூல் எனது **'Master Piece'** நான் அதில் 1950 முதல் 1992வரையான 42 வருட இலங்கையின் சரித்திரத்தைப்

எம்.சுப்பிரமணியம் ஆகியோர் திராவிட மொழிகள் தொடர்பான ஆய்வினைச் செய் துள்ளனர். அவர்களால் ஆய்வு செய்யப் பட்டு ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டுள்ள நூல்களில் சில அடிப்படைக் குறைபாடு கள் உள்ளன. **Syllable** என்பதை அசை என்று அவர்கள் கருதுகின்றனர். ஆனால் ஆங்கிலத்தின் **Syllable** என்பதும், தமிழின் அசை என்பதும் வேறானவை. அடிப்படை யான இந்தப் பிழையால் அவர்களது



## இரைச்சல் வந்த காரணம் கண்டறியச் சென்றவேளை பரராசசேகரன் அணைக்கட்டுக் கல்லைக் கண்டோம்

சுக் கட்சியைச் சேர்ந்த நாங்கள் சிலர் அவருடன் பேச்சு நடத்தினோம். அவர் எங்கள் எல்லோருக்கும் தலா பத்து ஏக்கர் காணியினை வழங்கினார். இது பற்றிய நாடாளுமன்றப் பதிவேட்டில் (ஹன்சார்ட் டில்) எனது பெயரும் பதியப்பட்டுள்ளது.

பதவியா என்ற பிரதேசத்தில் நாங்கள் காடுகளை வெட்டி விவசாயச் செய்கையை மேற்கொண்டோம். தொழிலாளர்கள் சில ரும் நானும் அங்கு தங்கி நின்றே விவசா யத்தை மேற்கொண்டோம். அங்கு அரைப் பனை உயரத்தில் ஒரு பாலைமரம் நின் றது. அதிலே மூன்று அடுக்குகள் கொண்ட தாக களிமண்ணாலும், மரந்தடிகளாலும் கொட்டிலை அமைத்திருந்தோம். மேல் அடுக்கில்தான் என்னைத் தங்கச் சொன் னார்கள். இரவு வேளைகளில் மிருகங் களிலிருந்து தப்புவதற்காகத் தீ மூட்டு வோம்.

ஒரு நாள் நாங்கள் படுத்திருந்தோம். திடீரென ஒரே இரைச்சலாக இருந்தது. ஆர்ப்பரித்து எழும் கடலின் இரைச்சல் போல அது இருந்தது. காடு நன்கு பரிச் சயமான அந்தத் தொழிலாளர்களிடம் கேட்டேன் இது என்ன சத்தமென்று? அவர்களுக்கும் புரியவில்லை. காலை எழுந் ததும் என்ன சத்தம் என்று அறிய ஆவற் பட்டேன். தொழிலாளர்களும் நானும் துவக் குகளையும் எடுத்துக்கொண்டு பற்றைகளை விலக்கி விலக்கி நடந்து நடந்து போனோம். நடந்து நடந்து ஆறு ஏழு கட்டைக்கு (மைல்) அப்பால் போய் மிதந்தோம். அப்போது எதிரில் பெரியதொரு அணைக்கட்டு எதிர்ப் பட்டது. 'பரராச சேகரன் அணைக்கட்டு' என அணையின் கீழே - கருங்கல்லில் எழு தப்பட்டிருந்தது. பத்தடி நீளமும் ஐந்தடி அகலமும் கொண்ட கருங்கற்களை குழி யும் பொழியுமாகப் பொருத்தித்தான் அந்த அணைக்கட்டு அமைக்கப்பட்டிருந் தது.

அந்தக் கற்களிலொன்று விழுந்து விட் டது. அதிலிருந்து குளத்து நீர் நீர் வீழ்ச்சி போலப் பாய்ந்துகொண்டிருந்தது. அந்தப் பேரோசையே எமக்குப் பெரும் இரைச் சலாகக் கேட்டிருக்கிறது.

அதனைத்தான்-

நீரோசை முரசாகத் தமிழோசை
நெஞ்சிலெழும்
ஓரோசை மனவோசை யாகியெனை
உந்துதலால்
பாரோசை கேட்கவெனப் பாவாகி
யாழ்ப்பாணப்
பேரோசை காவியமாய்ப் பிறந்ததுவே
செந்தமிழாய்

பாடியுள்ளேன். இதில் 'மெனிக்கா' என் றொரு பாத்திரம் வருகிறது. நான் படைத் தவற்றுள் என்மனதைக் கவர்ந்த பாத்தி ரம் அதுதான் (அழுகிறார்!) அது ஒரு சிறந்த படைப்பு. இந்தக் காலப் பகுதியில் நடைபெற்ற எல்லாச் சம்பவங்களையும், எல்லா விடயங்களையும் கவனத்திலெ டுத்து 4ஆயிரத்து 400 பாடல்களில் அத னைப் பாடியுள்ளேன்.

இந்த நூலைப் படித்தவர்களிடமிருந்து ஏராளமான கடிதங்கள் வந்துள்ளன. ஒவ் வொரு பாடல்களுக்கும் ஒவ்வொரு பவுண் கொடுக்கவேண்டும் என்றெல்லாம் எழுதி யிருக்கிறார்கள்.

### புத்தகம் நல்லதெனில் வெளியீட்டுவிழாத் தேவையில்லை

✱ *கேள்வி:* உங்களது சிறந்த படைப்பு எனக் கருதும் நூலுக்கு நீங்கள் வெளியீட்டு விழா வைக்கவில்லை ஏன்?

ஆராய்ச்சிகள் தடம் மாறிவிட்டன. தொல் காப்பியத்தின் செய்யுளியலை அடிப்படை யாக வைத்து நான் இந்த நூலை எழுதியுள் ளேன். அதுபற்றி இந்தப் பேட்டியில் விளக்கம் தருவது பொருத்தமல்ல.

மேற்கூறியவர்கள் எழுதிய பெரிய ஆங் கில நூல்களை வைத்தே கர்நாடகம், தெலுங்கு முதலான ஏனைய மொழிகளி லும் பிழையான வியாக்கியானங்கள் கொடுக்கப்படுகின்றன. எனவேதான், எல் லாப் பல்கலைக்கழகங்களுக்கும் கிடைக் கக் கூடிய வகையில் இந்த நூலை ஆங் கிலத்தில் எழுதி வெளியிட்டுள்ளேன்.

இந்த நூலுக்கு **'Hindu'** பத்திகை விமர் சனம் எழுதி இருந்தது. அதைப் படித்த ந.கோ.கந்தசாமி அண்மையில் யாழ்ப்பா ணம் வந்தபோது என்னை வந்து சந்தித் தார் எனது நூலின் பிரதிகளையும் வாங் கிச் சென்றார்.

யில் ஈடபட்டிருந்தேன். நான் சற்று விரை வாகவே வேலைகளைச் செய்தேன். அப் போது சிங்கள நண்பர்கள் 'தங்களைப் போல ஆறுதலாக எழுதுமாறும், நாள்களை இழுத்துத்தான் கொடுக்கவேண்டும் என் றும் சொன்னார்கள். நான் அதைப் பொருட் படுத்தாமல் விரைவாகவே எழுதிக் கொடுத்துவிட்டேன். 'தமிழ் மலர்' என்ற பாடநூல் முதன்முதலில் என்னாலேயே எழுதப்பட்டது. மூன்றாவது ' தமிழ் மலர்' எழுதும்போது என்னுடன் சிற்பி சிவசர வணபவனும் இணைந்து பணியாற்றி னார்.

இந்த மலரை எழுதும் போது சின்னப் பிள்ளைகளுக்கு எழுத்தும் பாட்டுமாகப் படிப்பிக்க வேண்டும் என்பதற்காக நான் சில பாடல்களை எழுதினேன். அப்போது யார் எழுதியது என்று நூலில் போடக் கூடாது எனப் பணித்திருந்தார்கள். அத னால் இப்பாடல்களை யார் எழுதியது எனத்

## எமது இன்றைய கல்வி முறை......... ஆயிரம் பீற்றல்கள் உள்ள சேவையே!

• *பதில்:* புத்தகங்கள் விற்கப்படுவதற் காகச் சிலரை அழைத்துச் செய்வதே இந்த வெளியீட்டு விழாக்கள். மேலை நாடுகளில் புத்தக வெளியீட்டு விழாக்கள் நடத்தப் படுவதில்லை. எனது புத்தகங்கள் நல்ல தென்றால் உலகம் அதனை வாங்கும். அத னால்தான் நான் வெளியீட்டு விழாவை நடத்தவில்லை.

✱ *கேள்வி:* இன்றைய வழக்குகளை யும் உள்வாங்கி தமிழுக்கான பிரயோக இலக்கண நூலாக 'மஞ்சுகாசினியம் இயங்கு தமிழியல்' என்ற நூலை எழுதியுள்ளீர் கள். அதை எழுத நேர்ந்ததேன்?

• *பதில்:* தமிழ் இலக்கணத்தைப் புதிய வகையில், எளிமையான முறையில், தொல் காப்பியம், நன்னூல் போன்றவற்றின் அடிப்படையில் எழுத வேண்டும் என்று தமிழ்நாட்டில் எட்டுபேர் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டது. அந்தக் குழு அமைக்கப்பட முன்னரே அவ்வாறான தொரு முயற்சியை நான் ஆரம்பித்து விட்டேன். எனினும், ஐந்தாறு ஆண்டுகள் கடந்த பின்னும் அப்படியொரு நூலை அவர்கள் ஆக்கவில்லை; இன்று வரை.

நான் தொல்காப்பியத்தைச் சுருக்க மாக, இக்காலப் பிள்ளைகளுக்கு விளங் கக்கூடிய வகையில் இந்நூலில் தந்துள்ளேன்.

✱ *கேள்வி:* நீங்கள் ஆங்கிலத்தில் சிறு கதைகளையும் அரசியல் நூலொன்றை யும் ஆக்கியுள்ளீர்கள் அல்லவா?

• *பதில்:* ஆம்! நான் பதினைந்து சிறு கதைகள் வரை ஆங்கிலத்தில் எழுதி யுள்ளேன். அத்தோடு தமிழரசுக் கட்சியின் வரலாற்றை செல்வநாயகத்தை மையமா கக் கொண்டு எழுதிய நூலே நீங்கள் குறிப் பிட்ட அரசியல் நூல் **Footprints of Our Fathers** என்பது அந் நூலின் பெயர்.

✱ *கேள்வி:* 'மஞ்சு மலர் கொத்து' என்ற சிறுவர் பாடல் தொகுப்பு ஒன்றையும் வெளியிட்டுள்ளீர்கள். இதனை எழுதுகின்ற விருப்பு அல்லது சந்தர்ப்பம் எவ்வாறு ஏற் பட்டது.

### கவிஞரின் பெயர் குறிப்பிடாத கவிதைகளும் நான்கு வயதுச் சிறுவனின் முகப்பு ஓவியமும்

✱ *பதில்:* 1965ஆம் ஆண்டு கலாநிதி என்.எம்.பெரேரா உயர் கல்விக்கான குழு வொன்றை அமைத்தார். அந்தக் குழுவில் என்னையும் பிரதிநிதியாக நியமித்தார். அக் குழுவினராகிய எங்களுக்கு எல்லா வசதிகளையும் அளித்து, 25சதத்துக்கு விற் கக் கூடியதாக பாலருக்கு ஒரு புத்தகம் எழு தும்படி அவர் பணித்தார். நானும், சிங்கள எழுத்தாளர்களோடு இணைந்து இப்பணி

தெரியாதிருந்தது. எனக்குப் பின்னர் பாட நூல் எழுத்தாளர்களாக இருந்தபலரும் தமது பெயர்களைப் புத்தகங்களில் போடத்

**செவ்வியும் படங்களும்: இயல்வாணன்**

தொடங்கினர். தமிழ் மலருக்கென நான் எழுதிய பாடல்களுடன் வேறு சில பாடல் களையும் இணைத்தே 'மஞ்சு மலர்க் கொத்தை' ஆக்கினேன்.

இந்த நூலில் இரண்டு விதமான சிறப் புக்கள் உள்ளன. இந்தப் பாடல்களை எப் படிப் பாடவேண்டும் என்ற ஒலிக் குறிப் புக்கள் உள்ளமை முதலாவது சிறப்பு. இது வேறு நூல்களில் இல்லை. இந்தப் பாடல்களை உடுவில் மகளிர் கல்லூரி உட்பட பல பாலர் பள்ளிகளுக்குக் கொடுத்து, இசையுடன் பாடச் செய்தேன். பியானோ வைப் பயன்படுத்தி இப்பாடல்களை இசையுடன் பாடிப் பரீட்சித்து, அந்த ஒலிக் குறிப்புக்களையே இந்நூலில் இணைத் துள்ளேன்.

(17 ஆம் பக்கம் பார்க்க)

# விழிப்பின் பதிவுகள்

உதயன் TV

## ஒஸ்லோ பேச்சு வெற்றியளிக்குமா?




போர்நிறுத்த உடன்படிக்கையை அமுல்படுத்துவது தொடர்பாக அரசாங்கம் விடுத்த பேச்சுவார்த்தைக்கான அழைப்பை விடுதலைப்புலிகள் ஏற்றுக் கொண்டுள்ளனர். இந்த பேச்சுக்கள் போர்நிறுத்த உடன்படிக்கையில் திருத்தங்களை மேற்கொள்வது குறித்து அமையும் என செய்திகள் வெளியாகியிருந்தன. எனினும் பின்னர் போர்நிறுத்த உடன்படிக்கையை முறையாக நடைமுறைப்படுத்துவது குறித்து தான் பேச்சுக்கள் இடம்பெறும் என திருத்தம் செய்யப்பட்டது. எவ்வாறெனினும் இருதரப்பும் பேச இணங்கியிருப்பது நல்ல விடயமே.

பேச்சுக்கள் நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் இடம்பெறயிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே ஒஸ்லோவில் பல சுற்றுப் பேச்சுக்கள் இடம்பெற்றன. பல முடிவுகள் எடுக்கப்பட்டன. சிரான் எனும் அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. ஆனால் அவையெல்லாம் வெறும் பேச்சாக காற்றோடு போய்விட்டன. எனவே இனிவரும் பேச்சுக்களும் எவ்வாறு அமையப்போகின்றன என்பதை காலத்தின் கையிலேயே விடவேண்டியுள்ளது.

போர்நிறுத்த உடன்படிக்கையை அமுல்படுத்துவது தொடர்பான விடயத்தைப் பார்த்தால் ஆரம்பத்திலிருந்தே அதில் பல நடைமுறைச் சிக்கல்கள் இருப்பதையும், வரைபில் சில தவறுகள் விடப்பட்டிருப்பதையும் காணமுடியும்.

போர் நிறுத்த உடன்படிக்கையின்படி பொதுமக்களுக்களின் கட்டிடங்கள், அரச கட்டிடங்கள் போன்றவற்றில் இருந்து 60 நாட்களுக்குள் ஆயுத படைகள் வெளியேற வேண்டும் என கூறப்பட்டுள்ளது. ஆனால் இன்னும் ஏராளமான பொதுமக்களதும், அரச கட்டிடங்களில் இருந்தும் படையினர் வெளியேறவில்லை என்பது கவனிக்கப்பட வேண்டும்.

அதேசமயம் பல கட்டிடங்களில் இருந்து, விலகிய படையினர் அதனைச் சுற்றி, அல்லது அதன் எல்லைக்குள்ளேயே காப்பரண்கள் அமைத்து தங்கியுள்ளமையை காணக்கூடியதாகவுள்ளது. அடுத்து போர்நிறுத்த உடன்படிக்கையின்படி மக்களுக்கான இயல்பு நிலை ஏற்படுத்தப்பட வேண்டும். அனால் போர்நிறுத்த உடன்படிக்கை ஏற்பட்டு மூன்றரை வருடங்கள் கழிந்து விட்ட போதும் இந்த இயல்பு நிலை பெரும்பாலான பிரதேசங்களில் ஏற்படுத்தப்படவில்லை. விசேடமாக உயர் பாதுகாப்பு வலயங்களைச் சேர்ந்த ஏராளமான மக்கள் இன்னும் அகதி முகாம்களிலேயே வாழ்ந்துவருகிறார்கள். தீவுப்பகுதி, யாழ் குடாநாடு, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை போன்ற பகுதிகளில் இராணுவம், கடற்படை, விமானப்படையினரால் ஆக்கிரமிக்கப்பட்ட பல கிராமங்கள் முற்றுமுழுதாக மக்கள் அற்ற உயர் பாதுகாப்பு வலயங்களாக உள்ளன. இது தொடர்பாக பல்வேறு குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டும் எவ்வித பலனும் இல்லை.

எனவே நிச்சயமாக இந்த விடயம் இம்முறை பேச்சுக்களில் முக்கிய பங்கு வகிக்கவேண்டும் என பாதிக்கப்பட்ட மக்கள் எதிர்பார்க்கிறார்கள். அதேபோல இந்த போர்நிறுத்த உடன்படிக்கையின் சர்ச்சைக்குரிய பிரச்சனையாக இருப்பது அரச படையினர், புலிகளின் நடமாட்டமாகும். குறிப்பாக புலிகளது நடமாட்டம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அவர்கள் அதிக நேரம் சோதனை சாவடிக -ளில் தடுத்து வைக்கப்படுதல், கைது செய்யப்படுதல் போன்றன இடம்பெறுகின்றன. இன்னொருபுறம் புலிகளின் கடல் வழிப் பயணங்கள் பெரும் பிரச்சனையை ஏற்படுத்தியுள்ளன. போர்நிறுத்தத்திற்கு முன்னர் கடல் வழிப்பயணங்களை தன்னிச்சயாக குறிப்பாக வடக்கு கிழக்கிற்கு இணைப்பாக பயன்படுத்திய புலிகளுக்கு இது பெரும் பாதிப்பாக அமைந்துள்ளது.

அடுத்து தற்போதுள்ள மிகப் பெரும் சிக்கலாக உள்ள படுகொலைகள், தாக்குதல்களை எடுத்துகொண்டால் இதுகுறித்த பெரும்பாலான குற்றசாட்டுகள் புலிகள் மீதே சுமத்தப்படுள்ளன என்பதை மறுப்பதற்கில்லை. அதே நேரத்தில் ஆட்கடத்தல், பணம்பெறல், சிறுவர்களை படைக்கு கொண்டுசெல்கின்றமை போன்ற செயல்களிலும் புலிகளின் தொடர்புகள் வெளிப்படையாக தென்படுகின்றன. இதற்கு அப்பால் போர்நிறுத்த உடன்படிக்கையின்படி கிழக்கிலும் ஏனைய பிரதேசங்களிலும் துணைப்படைகள், ஆயுதக்குழுக்கள் கலைக்கப்பட வேண்டும் என கூறப்பட்டுள்ளது. ஆனால் இதுவரை இந்த விடயம் நடைமுறைப்படுத்தவில்லை. எனவே இவ்வாறான சூழலில் இடம்பெறப்போகின்ற பேச்சுக்கள் இத்தகைய குறைபாடுகள் குறித்து பேசித்தீர்த்துக் கொள்ள வாய்ப்பளிக்க வேண்டும். மேலும் இந்த பேச்சுகள் வெற்றிகரமாக அமையுமானால் அவ்வ எதிர்கால சமாதான பேச்சுகளுக்கு சிறந்த அடித்தளத்தை அமைக்க கூடும்.

- என்.ஜீவேந்திரன்

### இவ்வார விழிப்பில்...

- மந்த கதியில் சுனாமி புனரமைப்பு
- செரண்டிப் நிதியும் மாணவர்களும்
- வரலாறு கூறும் மலையகதமிழர்கள்
- இளையவர்களின் கலைமுயற்சி
- கலாசார விடுதலையும் அபிவிருத்தியும்

### சிந்தனைக்கு

உண்மைகள் ஒருபோதும் உறங்குவதில்லை.
அது உறங்கவும் கூடாது.

## மதமாற்றத்தடைச்சட்ட விவகாரம் காலத்தின் தேவையா ?

இலங்கை சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்தே பேரினவாதிகளினதும், இனத்துவ சிந்தனையாளர்களினதும் கைகளில் சிக்கி சின்னாபின்னமாகிப் போயிருக்கிறது. காலத்திற்கு காலம் அரசியல் போட்டிகளும் அதிகார முரண்பாடுகளும் தலைதூக்கிய வண்ணம் இருக்கின்றன. இருக்கின்ற பிரச்சினைகளையே தீர்த்துக் கொள்ள முடியாத நிலையில் மேலும் பல பிரச்சினைகள் உடனுக்குடன் இலங்கையில் ஆரம்பித்து விடுவது வழக்கமாகி விட்டது. கடந்த ஓரிரு ஆண்டுகளாக மிகவும் அழுத்தமாக விவாதிக்கப்பட்டுவரும் மதமாற்றத்தடைச் சட்டம் தொடர்பான விவாதங்களை இதற்கொரு சிறந்த உதாரணமாக குறிப்பிடலாம். ஏற்கனவே இலங்கையில் இனவாதத்தினால் உருவான பாரிய முரண்பாடுகள் அதனைத்தொடர்ந்து வந்த பாரிய சமர்கள் இவை எல்லாவற்றிலிருந்தும் இன மத பேதமில்லாது நாட்டின் அனைத்து குடிமக்களும் பல படிப்பினைகளை பெற்றுள்ளனர். இனி ஒரு யுத்தம் வருவதையோ வன்முறைசார் அரசியல் நிலவுவதையோ மக்கள் முற்றாக மறுப்பது மாத்திரமல்லாது அவர்களால் இனிமேலும் பிறரால் திணிக்கப்படும் சவால்மிக்க வாழ்வை அனுபவிக்க முடியாக நிலையில் இருக்கின்றனர். இன வாதத்தை தமது அரசியலுக்குரிய பாதையாக பாவித்து வந்த அரசியற்கட்சிகளுடன் அதேபாணியில் போட்டியிட முடியாத, புதிதாக தோன்றிய பல அரசியற்கட்சிகளும் ஒரு சில சிவில் அமைப்புக்களும் மதம் சார் கோஷங்களின் ஊடாக தமக்கான ஆதரவினை திரட்ட எடுக்கும் முயற்சிகள் இந்த சர்ச்சையின் பின்னணியில் இருக்கின்றன. மதமாற்றம் தொடர்பான பிரச்சினை இலங்கையில் மாத்திரமல்லாது உலகின் அனைத்து நாடுகளிலும் வரலாறு நெடுகிலும் காணப்பட்ட ஒரு பிரச்சினை என்பதை நாம் முதலில் புரிந்துகொள்ள வேண்டும். நீண்ட வாதப்பிரதிவாதங்களுக்கு பின் மதச் சுதந்திரம் அதாவது தான் விரும்பும் மதம் ஒன்றினை தேர்வு செய்வதற்கான சுதந்திரம் மக்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்ற மரபு நவீன உலகஒழுங்கில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

மேற்படி மதச்சுதந்திரம் தொடர்பாக 1981ம் ஆண்டின் ஐக்கிய நாடுகள் பொதுச்சபை தீர்மானத்தின் 36ம் பிரிவும் 1993ம் ஆண்டின் 48ம் பிரிவும் மதச்சுதந்திரத்தினை வழக்குகின்றன. இதுவரை காலமும் நிலவி வந்த அல்லது தற்போது நடைமுறையிலுள்ள இலங்கையின் அரசியலமைப்பும் கூட மதச்சுதந்திரத்தினை இலங்கை வாழ் மக்களுக்கு சட்டப்படி அனுமதிக்கிறது. அண்மைக்காலங்களில் இலங்கையில் மதத்தலைவர்கள் இலங்கையின் அரசியலுக்குள் கட்சிகள் அமைத்து பிரவேசித்திருப்பது, கடந்த ஓரிரு வருடங்களில் தென்னிலங்கையில் பௌத்த கிருஸ்தவ மதக்குழுக்களுக்கு இடையில் ஏற்பட்ட சர்ச்சைகள், கிருஸ்தவ மிசனரிகள் பலவந்தமான மதமாற்றங்களை செய்து வருவதாக அல்லது ஒருவரின் ஏழ்மையை பயன்படுத்தி மதப்பிரச்சாரம் செய்ய முற்படுவதாக கூறப்படும் குற்றச்சாட்டுக்கள் போன்றவை பின்னணியாக கருதப்படுகின்றன. இலங்கையின் அரசியலில் கணிசமான அளவில் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய அழுத்தக்குழுக்களாக செயற்பட்டுவந்த பௌத்த குருக்கள் தற்போது நேரடியாகவே அரசியலில் ஈடுபட ஆரம்பித்துவிட்டனர். இவர்கள் உருவாக்கியிருக்கும் கட்சிகளும் கூட தமது மதக்கொள்கைகளை அடிப்படையாகக்கொண்ட தீர்வுகளையே இலங்கைக்கான தீர்வாக கூறிவருகின்றன. வெறுமனவே இலங்கையை பௌத்த சிங்கள தேசமாக கருதும் இவர்கள் ஏனைய மதப்பிரச்சாரங்கள் இலங்கையில் இடம் பெறுவதை மானசீகமான எதிர்க்கின்றார்கள். இதனால் இலங்கையில் நீண்டகாலமாகவே மிசனெரிகளை அமைத்து தமது மதப்பிரச்சாரங்களை மேற்கொண்டுவரும் கிருஸ்தவ மிசனெரிகளுடன் முரண்பட வேண்டிய தேவை இவர்களுக்கு ஏற்பட்டு விடுகிறது.

மேற்படி மதப்பிரச்சாரம் பல பொழுதுகளில் பலவந்தமாக மேற்கொள்ளப்படுவதாக எதிர்த்தரப்புக்கள் கருதுகின்றனர். இதனையும் விட அதிகளவில் இலங்கையில் காணப்படும் ஏழை சமூகங்களை இனம்கண்டு அவர்களின் ஏழ்மையை பயன்படுத்தி அவர்களுக்கு கல்வியில் அல்லது தொழில் முயற்சிகளில் உதவுவதன் மூலம் அவர்களை தமது மதத்திற்கு மதம்மாற்றும் முயற்சிகளும் அதிகம் மேற்கொள்ளப்படுவாக குற்றம் சாட்டுகின்றனர். எனவே இத்தகைய முரண்பட்ட போக்குகள் மதக்குழுக்களுக்கு இடையில் அடிக்கடி வன்முறைகளை உள்ளூர் மட்டங்களில் ஏற்படுத்துகின்றன. ஒரு சில நேரங்களில் நாடு தழுவிய ரீதியில் இவை வன்முறைகளாக உருவெடுக்குமோ என அஞ்சும் நிலையும் தோன்றியிருக்கிறது. இலங்கையில் மதக்குழுக்களுக்கிடையில் தோன்றும் இவ்வாறான வன்முறைகள் சமூகங்களுக்கு இடையில் இருக்கின்ற இடைவெளியை மேலும் விரிசல் அடையச்செய்து விடுகின்றன. இதுவரை காலமும் நாட்டில் நிலவி வரும் இனப்பிரச்சினையால் இன்றைய புரிந்துணர்வு காலப்பகுதியில் கூட வன்முறைகளை நிறுத்த முடியாத அளவிற்கு நாட்டின் நிலைமை எவ்வாறு மோசமடைந்துள்ளது என்பதை இந்த மதச்சர்ச்சையை தூண்டும் தரப்புக்கள் புரிந்துகொள்ள வேண்டும். எனவே இன்றைய நிலையில் மதமாற்றத்தடைச் சட்டம் கொண்டுவரப்படவேண்டும் அல்லது கொண்டுவரக்கூடாது என்ற சர்ச்சைகள் மேலும் பல புதிய சிக்கல்களை தோற்றுவிக்கக்கூடியவை என்றே நடுநிலையிலிருந்து சிந்திப்பவர்கள் தெரிவிக்கின்றனர்.

- இக்பால் அஜீட்

## பலத்த சவால்களுடன் சுனாமிப் பொதுமக்கள்

பாரிய மனித பொருளாதார அழிவுகளை ஏற்படுத்திய சுனாமி அனர்த்தம் நிகழ்ந்து எட்டு மாதங்கள் கடந்து விட்டது. சுனாமியினால் பாதிக்கப்பட்ட பகுதிகளை மீளக் கட்டியெழுப்பும் பணிகள் நாட்டின் பல பகுதிகளிலும் அரச, அரசசார்பற்ற நிறுவனங்களினால் முடுக்கி விடப்பட்டிருக்கின்றன.

ஏற்கனவே பல மாதங்கள் வாத பிரதிவாதங்களுக்கு உட்பட்டு பின்னர் கைச்சாத்திடப்பட்ட சுனாமி பொதுக் கட்டமைப்பு ஒப்பந்தம் நீதிமன்றத்தின் தடை உத்தரவினையடுத்து தடைப்பட்டுள்ளது. இந்நிலையில் சுனாமி பொதுக்கட்டமைப்பின் ஊடாகவே நிரந்தர சமாதானத்துக்கான சூழலை ஏற்படுத்த முடியும் என்று புலிகளும், அரசும் நம்பிக்கை தெரிவித்தாலும் தற்போது நிலவும் இழுபறி நிலையில் அகப்பட்டு மக்களின் புனர்வாழ்வு தொடர்ந்தும் கேள்விக்குறியாக மாறியுள்ளது. மக்களின் பிரச்சினைகள் கைவிடப்பட்ட நிலையில் இருக்க ஜனாதிபதி தேர்தலுக்கான முன் ஏற்பாடுகளில் தமது கவனத்ததை நாட்டின் பிரதான அரசிற்கட்சிகள் முடுக்கிவிட்டுள்ளன. பாரிய நிதி விரயத்துடன் சம்பந்தப்பட்ட ஜனாதிபதித்தேர்தல்கள் மற்றும் பொதுத்தேர்தல்கள் நாடு இன்றிருக்கும் நிலையில் மாறி மாறி நடைபெறுவது என்பது ஆரோக்கியமானதல்ல என்பதை இவர்கள் ஏனோ புரிந்துகொள்ள மறுக்கின்றனர். இவர்கள் இனி வரஇருக்கின்ற காலங்களில் சுனாமி மீள்கட்டமைப்பு பணிகளை தமது அரசியல் ஆதரவினை திரட்டிக்கொள்ளும் நோக்கங்களுக்காக பயன்படுத்தக்கூடும்.

அதேபோல தற்போது நடைபெறுகின்ற நிவாரபணிகளை எடுத்து நோக்கும்போது தங்களுடைய நிறுவனங்களின் பெயர்களை நிலைநாட்டிக் கொள்வதற்கு நிவாரணம் என்ற பெயரில் வெறும் கண்துடைப்பு நடவடிக்கைகளில் ஈடுபடும் சில அரச சார்பற்ற நிறுவனங்களையும் காணக்கூடியாக இருக்கின்றது. ஏனெனில் சுனாமி மீள்கட்டுமாணப்பணிகளில் பல அரச அரசசார்பற்ற நிறுவனங்கள் பல்வேறு வேலைத்திட்டங்களை மேற்கொண்டாலும் சுனாமி அனர்த்தம் இடம்பெற்று 8 மாதங்களின் பின்னரான மீள்கட்டுமாண பணி சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வியல் பிரச்சினைகளை எந்தளவுக்கு நிறைவுசெய்துள்ளது என்பது இன்று எழுந்துள்ள முக்கியமான பிரச்சினையாகும். இந்த மக்களின் தற்போதைய நிலையை நோக்கும் போது நிரந்தர மீள்குடியேற்றம் மற்றும் தொழில்வாய்ப்புக்களுக்கான சந்தர்ப்பங்கள் அற்றுக் காணப்படுவதால் முகாம்களில் நாளாந்த தமது வாழ்க்கையை வெறுமனவே ஓட்டிக்கொண்டும் நிவாரண பொருட்களை எதிர்பார்த்தும் வாழும் புதியதொரு சமூகமாக மாறி வருகின்றனர்.

ஏனெனில் சுனாமியின் காரணமாக 1,41,022 குடும்பங்களும் 4,81,540 பேரும் இடம்பெயர்ந்துள்ளனர். இது இரண்டு தசாப்த கால யுத்தத்தினால் ஏற்பட்ட பாதிப்புக்களை விட அதிகமாகும். இந்நிலையில் ஏற்கனவே யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கைத்தரம் மற்றும் நாட்டின் பொருளாதாரம் சுனாமியின் பின்னர் மேலும் சிக்கலாகியுள்ள நிலையில் அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் நிவாரணம் என்ற பெயரில் மேற்கொள்ளப்படும் இத்தகைய இழுத்தடிப்பு வேலைகளை கைவிட்டு நாட்டை மீளக் கட்டியெழுப்புவதற்கு அவசியமான திட்டங்களை வகுத்து செயற்படுவது அவசியமாகும்.

- ஏ. உசாமா

விழிப்பின் பதிவுகள் தொடர்பான மேலதிக விடயங்கள் ரூபவாஹினி 'ஐ'அலைவரிசையில் திங்கள் இரவு 7.30மணிக்கும், TNL அலைவரிசையில் செவ்வாய் இரவு 7.25 மணிக்கும் ஒளிபரப்பாகும். விழிப்பு நிகழ்ச்சி தொடர்பான உங்கள் அபிப்பிராயங்கள் வரவேற்கப்படுகின்றன. அனுப்பவேண்டிய முகவரி :- விழிப்பு, யங் ஏசியா டெலிவிஷன், இல 713, டி.பி. விஜயசிங்க மாவத்தை, பெலவத்தை, பத்தரமுல்லை.தொலைபேசி இல 0112787041-9 தொலைநகல் இல 0112787051 மின்னஞ்சல் முகவரி villippu@yatv.net இணையத்தள முகவரி www.yatv.net

# ஆழிப்பேரலை அனர்த்தம் நிகழ்ந்து எட்டு மாதங்களாகியும் எட்டப்படாத ஏதிலிகளின் இயல்பு வாழ்க்கை

ஆசிய நாடுகளை ஆழிப்பேரலை உலுக்கி எட்டு மாதங்கள் கடந்து விட்டன. கடந்த ஆண்டு டிசெம்பர் 26 ஆம் திகதி ஆசியாக் கண்டத்தின் 11 நாடுகளைக் கபளீகரம் செய்த ஆழிப்பேரலை மொத்தம் இரண்டரை இலட்சம் உயிர்களைக் காவுகொண்டது. பல கோடி ரூபா சொத்துச் சேதத்தையும் ஏற்படுத்தியது. உயிர்தப்பியவர்களுக்குப் பாரிய உளவியல் தாக்கத்தை அது ஏற்படுத்தியுள்ளது. இதிலி

## மட்டக்களப்பு மடல்

ருந்து மக்களை மீட்பதென்பது சாமானிய மான காரியமல்ல. தொடர்ச்சியான பரிகார நடைமுறை பின்பற்றப்பட வேண்டியுள்ளது.

### போர் ஒருபுறம் சுனாமி மறுபுறம்

உள்நாட்டுப் போரால் பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டிருந்த இலங்கைக்கு ஆழிப்பேரலையால் பாரிய தாக்கம் ஏற்பட்டது. சற்றும் தலைதூக்க முடியாமலிருந்த இலங்கைக்கு உலக நாடுகள் போட்டி போட்டுக் கொண்டு மனிதாபிமான அடிப்படையில் உதவியதனால் 'பழு' ஓரளவு குறைந்தது எனலாம்.

எனினும், நீண்ட கால வேலைத்திட்டங்களினூடாக நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப வேண்டிய பணி இலங்கைக்கு உள்ளது. இலங்கையில் ஆழிப்பேரலைக்கு சுமார் 30 ஆயிரம் பேர் பலியாகியுள்ளனர். இவர்களில் பெரும் பாலானோர் சிறுவர்களும் பெண்களும் ஆவர்.

### நிவாரண செயற்பாடு

### கவலைக்கிடம்

இந்நிலையில் இலங்கையில் கடந்த எட்டுமாதக்காலப்பகுதியினுள் இடம்பெற்ற ஆழிப்பேரலை நிவாரணப் பணிகளின் முன்னேற்றம் பற்றிச் சிந்தித்துப் பார்த்தால் பொருத்தமாகும்.

*- வீ.ரீ.சகாதேவராஜா*

இதுவரை 50 ஆயிரம் இடைத்தங்கல் முகாம்களை அமைத்துள்ளதாகவும் - மேலும் சுமார் 20 ஆயிரம் அமைத்தால் போதுமானதெனவும் 'தப்ரன்' எனும் தேசத்தை மீளக் கட்டியெழுப்பும் அணி கூறுகின்றது. தெற்கில் நிரந்தர வீட்டுத் தொகுதி கையளிக்கப்பட்டிருக்கிறதென்பதை ஊடகங்கள் உறுதிப் படுத்துகின்றன.

ஆனால், மோசமாகப் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கில் எங்காவது ஒரு வீடுதானும் நிரந்தரமாகக் கட்டப்பட்டு மக்களிடம் கையளிக்கப்பட்டிருக்கிறதா? என்று கேள்வி எழுப்பினால் ஏமாற்றமே மிஞ்சும். ஒரு பாடசாலைதானும் கட்டப்பட்டுள்ளதா? என்று கேட்டால் பதில் 'இல்லை' என்றே கிடைக்கும்.

இதேபோன்று மக்கள் மனங்களும் இன்றும் கட்டியெழுப்பப்படவில்லை. மன அழுத்தத்தால் அவர்கள் பாதிப்படைந்துள்ளனர். இடைத்தங்கல் முகாம்கள்தான் நிரந்தரவதிவிடமாகப் போகும் அவலநிலை அவர்கள் முன் அச்சுறுத்தலாக உள்ளது. சிறு தூவானத்திற்குக்கூட நின்று பிடிக்காத இடைத்தங்கல் முகாம்கள் எப்படி மாரியைத் தாங்கப் போகின்றன என்பது புரியாத புதிராக உள்ளது.

தாழ்நிலப் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள இடைத்தங்கல் முகாம்களில் உள்ளவர்கள் மாரிகாலத்தில் சொல்லொணா கஷ்டங்களை எதிர்நோக்க வேண்டிவரும். குளங்களையும், கால்வாய்களையும், வீதிகளையும் நிரப்பியுள்ளனர். எனவே, மழைநீர் வீட்டுக்குள்ளும் முகாம்களுக்குள்ளும் சென்று தேங்கப் போகின்றது என்ற செய்தி இப்போதைக்குக் கேலியாகப்படலாம் ஆனால், அதுதான் உண்மையாகும்.

# ஆழிப்பேரலை அவலத்தால் வாழ்வைத் தொலைத்தோர்....

### மகிழ்ச்சி தொலைந்தது...

எனது பெயர் இந்திரன் வினோதினி (வயது 16), தங்கையும் இரண்டு தம்பிமாரும் நானும் பெற்றோருடன் மிக்க மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தோம். கடந்த வருடம் ஏற்பட்ட ஆழிப்பேரலையால் எனது தந்தை இந்திரன், தாயார் பரமேஸ்வரி, ஒரே தங்கையான பவித்திரா என மூன்று உறவுகளையும் கடலிலிருந்து 50 மீற்றருக்குள் அமைந்திருந்த எமது வீட்டையும் இழந்து நானும் எனது இரண்டு தம்பிமாரும் ஆதரவற்ற நிலையில் வாழ்ந்து வருகின்றோம்.

தற்போது நானும் எனது தம்பிமாரும் அப்பாவின் அக்காவுடன் வாழ்ந்து வருகின்றோம். மாமியும் தொழில் ஏதுமின்றி மிகுந்த வறுமைக்கு மத்தியிலேயே குடும்பத்தை நடத்திச் செல்கின்றார்.

எங்களைப் பராமரித்துப் பாதுகாக்கும் மாமிக்குத் தொடர்ச்சியாக எமது சகல தேவைகளையும் பூர்த்தி செய்துகொடுக்க முடியாது. எனது தம்பிமார் இருவரையும் பாடசாலைக்கு அனுப்பவேண்டும். பெற்றோர் உயிரோடிருந்தபோது எமது தேவைகளைப் பூர்த்தி செய்தது போல் இனிமேலும் எமது தேவைகளை யார்தான் பூர்த்தி செய்யப்போகின்றார்கள்?

### கல்வி கேள்விக்குறி

எனது பெயர் தவராஜா லவன். நான் ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் அதிகமான இழப்புகளுக்கு முகங்கொடுத்துள்ளேன். எனக்கு ஓர் அக்காவும் ஒரு தம்பியும் இருக்கினறார்கள்.

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பெற்றோரை இழந்துவிட்ட நாங்கள் தற்போது தற்காலிகமாக அமைக்கப்பட்ட கொட்டகைகளில் வாழ்ந்து வருகின்றோம். பாதிக்கப்பட்ட எங்களுக்கு நிவாரணம் வழங்குவதில் பல்வேறு புறக்கணிப்புக்கள் காட்டப்படுகின்றன. தற்காலிக கொட்டகைகள் தொடர்ச்சியாக அமைக்கப்பட்டுள்ளமையினால் பாடசாலை மாணவர்களாகிய எமக்கு கல்வி கற்பதற்கு ஏற்ற சூழலாக அது காணப்படவில்லை. எமக்கு உடனடியாகப் பல்வேறு நிவாரணப் பொருள்கள் பலராலும் கொண்டு வந்து கொடுக்கப்பட்டாலும் அதனால் எமது உடனடித் தேவைகள் பூர்த்தி செய்யப்படனவே தவிர நீண்ட காலத் தேவைகளைப் பெற்றுக்கொடுப்பதில் அரசோ, சம்பந்தப்பட்டவர்களோ உரிய நடவடிக்கை எடுக்கவில்லை.

சுகாதார மற்றும் சகல அடிப்படை வசதிகளையும் இழந்து சகல வழிகளிலும் நாம் பாதிக்கப்பட்டுள்ளோம். எனவே, சிறுவர்கள் வெறுமனே பாதிக்கப்பட்டவர்களாக மாத்திரம் நோக்கப்படாது, உடலுள ரீதியாகப் பாதிக்கப்பட்டவர்கள் என்ற நிலையிலும் சிறுவர்கள் என்ற ரீதியிலும் கவனத்திற்கொள்ளப்பட வேண்டும்.

### பாதுகாப்பு இல்லை

எனது பெயர் செல்வநாயகி. ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட ஒரு விதைவைப்பெண். இருபது வருடகால யுத்தத்தினால் வடகிழக்கில் ஆயிரக்கணக்கான பெண்கள் விதவைகளாக்கப்பட்டு வாழ்ந்து வருகின்ற இச்சூழலில் மீண்டும் ஆழிப்பேரலை அனர்த்தம் பாரிய அழிவுகளை ஏற்படுத்தியுள்ளதோடு ஆயிரக்கணக்கான பிள்ளைகளை அநாதைகளாக்கியுள்ளது. ஆழிப் பேரலையின் போது இளம்பெண்கள், கர்ப்பணிப் பெண்கள், பாலூட்டும், வயது வந்த பிள்ளைகளின் தாய்மார்கள், முதியவர்கள் என பலதரத்துப் பெண்கள் விதவைகளாக்கப்பட்டுள்ளனர்.

ஆழிப்பேரலையின் பின்னர் அகதி முகாம்களிலும் அரச சார்பற்ற நிறுவனங்கள் அமைதத்துத் தந்துள்ள தற்காலிகக் கொட்டில்களிலும் வாழ்ந்து வருகின்ற என்னைப்போன்ற விதவைப் பெண்கள் பல்வேறு உடலுளப் பாதிப்புக்களுக்கு உள்ளாக்கியுள்ள அதேநேரம் வறுமை, பாலியல் துஷ்பிரயோகம், பாலியல் ரீதியான தொல்லைகள், பாதுகாப்பின்மை என சமுதாயத்தில் பல்வேறு பிரச்சினைகளுக்கும் முகங்கொடுத்து பெண்கள் என்ற அடிப்படையில் சமூகத்தில் பல்வேறு ஓரங்கட்டல்களுக்குட்பட்டு வாழ்ந்து வருகின்றோம்.

அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் விதவைப் பெண்களுக்காக நிவாரணங்களை வழங்கிய போதும் அவை தகுந்த முறையில் பாதிக்கப்பட்டவர்களுக்குக் கிடைப்பதில்லை. அரசு உலக உணவுத் ஸ்தாபனத்தின் மூலம் வழங்கி வருகின்ற உலர் உணவுத்திட்டம் கூட இம்மாதத்துடன் நிறுத்தப்படும் என்ற செய்தியும் எம்மைப் பாரிய வேதனைக்குள்ளாக்கியுள்ளது.

# மலையகத்திலிருந்து இடம்பெயர்ந்து வவுனியாவில் வசிப்போரின் அவல நிலை

வவுனியா வடக்கு, புளியங்குளம் முத்து மாரி நகர், பரசங்குளம் கிராமங்களில் வசிக்கும மக்கள் பல்வேறு இன்னல்களுக்கு முகம் கொடுத்து வாழ்ந்து வருகின்றனர்.

இவர்கள் மலையக வம்சாவழியைச் சேர்ந்தவர்கள்.

1978-1983ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் இடம்பெற்ற இனக்கலவரங்களைத் தொடர்ந்து பேரினவாதிகளாலும், சிங்களக் காடையர்களாலும் அடித்து விரட்டப்பட்டபோது இடம்பெயர்ந்து வந்து மேற்படி கிராம அரச காணிகளில் குடியேறினர்.

பொருள் பண்டங்களை இழந்து ஒருவாறு தமது வாழ்வாதரங்களை மேம்படுத்த உழைத்து வாழ்ந்த போது ஜெயசிக்குறு இராணுவ நடவடிகையால் இடம்பெயர்ந்து பல்வேறு இடங்களிலும் பெரும் சிரமங்களுடன் வாழ்ந்து வந்தனர்.

1999ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளால் ஓயாத அலைகள் நடவடிக்கை மூலம் இப்பிரதேசம் மீண்டும் மீடகப்பட்டது.

## வன்னி மடல்

பல்வேறு இடங்களிலும் வாழ்ந்த மக்கள் 2002ஆம் ஆண்டு காலப்பகுதியில் மீண்டும், தாம் குடியிருந்த காணிகளில் மீளக் குடி யேறினர்.

வசதி வாய்ப்புகள், அபிவிருத்திகள் எவையும் அற்றநிலையில் வாழ்ந்து வரும் இந்த மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தி அவர்களின் கிராமத்தை அபிவிருத்தி செய்வதற்கு எந்த நிறுவனமும் முன்வரவில்லை. இது கவலைக்குரியதாக இருக்கிறது.

அரச காணிகளில் குடியிருக்கும் இப் பிரதேச மக்களின் வீடுகள் அமைந்துள்ள காணி, இவர்களுக்குச் சொந்தமானது அல்ல எனவும், குடியிருப்பதற்கான அனுமதிப் பத்திரங்கள் இவர்களிடம் இல்லாததால் எவ்வித உதவிகளும் வழங்க முடியாதுள்ளது என உதவி வழங்கும் அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் கைவிரிக்கின்றன.

இந்தவேளை, மலையகத்தைச் சாராதவர்களுக்கு அவர்களது காணிக்குரிய அனுமதிப் பத்திரங்களை பெற்றுள்ளனர். இவர்களுக்கான காணி அனுமதிப்பத்திரங்கள் காணி அதிகாரிகளாலும், பிரதேச செயலகத்தினராலும் வழங்கப்பட்டுள்ளன.

இவர்கள் குடியிருக்கும் பிரதேசமும் உதவி வழங்கும் அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் திட்டங்களினூடாக அபிவிருத்தி செய்யப்படுகின்றன.

இவ்விடயத்தை சுட்டிக்காட்டி மீளக் குடியேறிய மலையக வம்சாவளியைச் சேர்ந்த மக்கள் தமக்கும் காணி அனுமதிப் பத்திரங்களை வழங்கி அபிவிருத்திக்கு உதவி புரியுமாறு சம்பந்தப்பட்ட அரச அதிகாரி களிடம் முறையிட்டுள்ளனர். ஆனால், இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று கூறப்படுகிறது.

கடந்த வருடம் பிரதேச செயலராக இருந்த ஐயம்பிள்ளையினால் (DRC) டானிஸ் அகதிகள் பேரவை நிறுவனத்தின் நிதியுதவியுடன் ஐம்பது குடும்பங்களை குடியேற்றுவதற்காக ஐம்பது ஏக்கர் அரசகாட்டுக் காணிகள் ஒதுக்கப்பட்டன.

கனரக வாகனங்களான புள்டோசர் மற்றும் ஜே.சி.பி. மூலம் காடுகள் அழிக்கப்பட்டு துப்புரவு செய்யப்பட்டது. ஐயம்பிள்ளை பிரதேச செயலர் பதவியிலிருந்து ஓய்வு பெற்றதன் பின்னர் அந்த ஐம்பது ஏக்கர் காணிகளும் குடியிருக்க பொருத்தமற்ற பள்ளக் காணியெனவும், அரச வனப் பாதுகாப்பிற்குரிய காணியெனவும் காரணம் காட்டி அத்திட்டத்தை அதிகாரிகள் இரத்துச் செய்துவிட்டனர் என்றும் கூறப்பட்டது.

## காண்டீபன்

மேற்படி கிராமங்களில் வசிக்கின்ற மக்கள் வவுனியா வடக்கு - பிரதேசத்திலேயே மிகவும் பின்தங்கிய நிலையில் வாழ்கின்றனர். இக்கிராமங்களில் வசிக்கின்ற மக்களின் நலனில் அரசஅதிகாரிகள் எவரும் கவனம் எடுப்பதில்லை என்பதுடன், புறக்கணிப்பு நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றனர். இக்கிராம மக்கள் தமது பிரச்சினைகளைக் கவனததிலெடுத்து ஒரு நல்ல தீர்வைப் பெற்றுத்தருமாறும் சம்பந்தப்பட்ட அனைவரிடமும் கோரிக்கை விடுக்கின்றனர். ●

# மலேரியா, டெங்கு போன்ற தொற்றுநோய்களிலிருந்து வன்னி மக்களைக் காப்பாற்ற மார்க்கமே இல்லையா?

இன்னும் ஓரிரு மாதங்களில் மாரிகாலம் ஆரம்பித்து வன்னியில் பொதுவாக மாரி காலம் தொடங்கிவிட்டால் கூடவே மலேரியா 'சீசனும்' தொடங்கிவிடும்.

வருடா வருடம் நுளம்பு பெருக்கங்களினால் ஏற்படக்கூடிய டெங்கு மலேரியா போன்ற உயிர்கொல்லி நோய்களுக்கு கணிசமான அளவு மக்கள் இரையாகி விடுவது வழமை.

கடந்த சில வருடங்களுக்கு முன்னர் வன்னியில் மலேரியா நோய் மிகவும் அதிகளவில் மக்களைப் பீடித்திருந்தது. வேறு பிரதேசங்களிலுள்ள வைத்தியசாலைகளில் மலேரியா நோய்க்குச் சிகிச்சை பெறச் சென்றால் கூட 'நீங்கள் வன்னியில் இருந்து வந்தவரா...?' என்று வைத்தியர்கள் கேட்கும் அளவிற்கு அந்த நோய் வன்னிப் பெருநிலப்பரப்பெங்கும் தனது ஆதிக்கத்தைச் செலுத்தி வந்திருக்கிறது. எனினும், தமிழீழ சுகாதார சேவையினரின் அயராத செயற்பாடுகளினால் - தடுப்பு நடவடிக்கைகளால் கடந்த ஓரிரு வருடங்களாக வன்னியில் இத்தகைய நோய்கள் ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டன.

இருந்தாலும், இன்னும் சில மாதங்களில் மழைகாலம் தொடங்குவதால் வன்னி வாழ் மக்கள் அனைவரும் டெங்கு மலேரியா நோய்களைத் தடுப்பதற்கான முன்னேற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

இந்நோய் பற்றியும், நுளம்பின் தாக்கம் பற்றியும் ஊடகங்கள் மூலம் அடிக்கடி தகவல்கள் வெளியாவதை அவதானித்திருப்பீர்கள். டெங்கு நோய் (ADEISAEGYPTI) எடிஸ் எஜிப்டி வைரஸால் என்ற நுளம்பால் பரவுகின்ற வைரஸால் இந்நோய் ஏற்படுகிறது.

இந்த நுளம்பு நோயுள்ளவரைக் கடித்து இரு வாரங்களில் நோயைப் பரப்பும் தன்மையைக் கொண்டது இதன்தன்மை நுளம்பு இறக்கும் வரை தொடரும்.

இந்த நுளம்பானது தெளிந்த சுத்தமான நீரில் மட்டும்தான் முட்டையிடும். இதற்கு அதிக நீரும் தேவை இல்லை அதன் முட்டை பொரித்து பெரிதாகி அதன் செயற்பாட்டினைக் காட்டுவதற்கு வீட்டின் அருகில் ஊற்றப்படும் நீரே போதுமானது.

இதற்கு முன் உதாரணமாக பூச்சாடியினை எடுத்துக்கொள்ளலாம். எனவே, உங்கள் வீடுகளில் நீரினைத் தேக்கி வைப்பதனை தவிர்த்துக்கொள்ளவேண்டும். அப்படி நீர் இருக்கும் இடத்தில் சிறிதளவு உப்பினை போட்டுவிடலாம்.

டெங்குநோயை பரப்பும் நுளம்பானது

**இ.தனபாலசிங்கம்**
**(ஒட்டுசுட்டான் செய்தியாளர்)**

பகலிலே தாக்கும் தன்மையைக் கொண்டது. இரவிலே எவ்வகையான பாதுகாப்பும் எமக்குப் பலனளிக்காது.

வீட்டிலேயுள்ள நீர் தங்கி நிற்கும் சிறு சிறு பாத்திரங்கள், கோப்பைகள், சிரட்டை, ரயர் இவற்றையெல்லாம் அகற்றவேண்டும் டெங்கு வைரஸில் நான்கு வகைகள் உள்ளன.

- டெங்கு முதலாவது முறை வரும் போது சாதாரண வைரஸ் காய்ச்சல் போல வந்து மாறி விடும்.
- இரண்டாவது முறை வைரஸ் தொற்றும் போது தான் அதன் சிக்கல்கள் தெரியும். முதல் மூன்று நாள்களும் சாதாரண காய்ச்சல் போல தொடங்கி உடல் வலி எடுக்கும். மூன்றாம் நான்காம் நாள்களில் காய்ச்சல் குறையத் தொடங்கும். அப்போதுதான் டெங்கின் வீரியம் வெளிப்படும்

இதன்போது எமது உடலில் நடக்கும் தாக்கங்களினால் குருதியிலிருந்து நீர் உடலுககுள் வெளியேறும். குருதித் சிறுதட்டுக் களின் எண்ணிக்கை குறையும். குருதிப் பெருக்கம் ஏற்படலாம்.

டெங்கு வயது வித்தியாசமின்றி எவரையும் தாக்கலாம். ஆனால், குழந்தைகளின் குருதியின் மொத்த அளவு குறைவானதால் குழந்தைகள் மிக மோசமாகப் பாதிக்கப்படுவர்.

எனவே, ஒவ்வொரு குடும்பத்தினரும் மிகவும டெங்கு பரவும் மாதங்களில் சிறுபிள்ளைகளை மிகவும் அவதானமாக பாதுகாப்பதுடன் காப்பாற்றிக்கொள்ளவேண்டும்.

உங்கள் பிள்ளைகளுக்கு காய்ச்சல் ஏற்பட்டால் உடனே அருகிலுள்ள வைத்தியரை நாடிச் செல்லுங்கள். வைத்திய ஆலோசனையைப் பெற்று இழப்புகளை தவிர்த்துக் கொள்ளுங்கள். தங்கள் வீடுகளை சுத்தமாக வைத்திருப்பது ஒவ்வொருவரினதும் கடமையாகும். சுற்றாடல் சுத்தமாக இருப்பதால் சுகாதாரத்தை பேணுவதுடன் எமது உயிர்களையும் காப் பாற்றிக்கொள்ளலாம்.

வன்னி மக்களின் வளமான வாழ்வை - நிம்மதியை - சீர்குலைக்கும் நுளம்புகளை அழித்து, டெங்கு, மலேரியா போன்ற கொடிய நோயகளிலிருந்து அனைவரையும் பாதுகாத்துக் கொள்ள இன்றே தயாராவோம். ■

**திருமணக் கார்** (குளிரூட்டியது)
**வாடகைக்கு**
+ திருமண வைபவங்கள் (அலங்காரத்துடன்)
+ விசேட வைபவங்கள் + சுற்றுலாக்கள்
போன்ற அனைத்துச் சேவைகளுக்கும் புத்தம் புதிய [ஆங்கில இலக்கம் கொண்ட] குளிரூட்டிய நவீன கார் சாரதியுடன் நியாயமான செலவில் உயர்ந்த சேவையுடன் வாடகைக்குக் கிடைக்கும்.

T.P.: 0777 - 903090, 077-3086939, 0777-246117, 077-6018467.
தொடர்பு: ரட்ணம், சோமசுந்தரம் பாலர் பாடசாலை, 22, சோமசுந்தரம் அவனியூ, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். (38657)

# ஊர்காவற்றுறையில் மழைநீர் சேகரிப்பு தொட்டிகள்

யாழ்ப்பாணம், ஓக.28

ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பிரிவில் மழைநீரைச் சேகரிக்கும் தொட்டிகள் நிறுவும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

முதற்கட்டமாக 10 ஆயிரம் லீற்றர் மழை நீரைத்தேக்கி வைக்கக்கூடிய 11 தொட்டிகள் நிறுவும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன - எனக் கூறப்பட்டது.

ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பணிமனை, புனித அந்தோனியார் கல்லூரி, புனித மரியாள் வித்தியாலயம், கணபதீஸ்வரம் சிவன்கோயில், சென்.ஜோசப் தேவாலயம் புனித செபஸ்தியார் தேவாலயம், கரம்பன் திருக்குடும்பக்கன்னியர் மடம், நாரந்தனை தான்தோன்றியம்மன் ஆலயம், மெலிஞ்சிமுனை இருதயராசா தேவாலயம், நாரந்தனை கர்ணந்தோட்டம் சிவசுப்பிரமணியர் ஆலயம், ஊர்காவற்றுறை புனிதமரியாள் தேவாலயம் ஆகியவற்றில் மேற்படி மழை நீர் சேகரிப்புத் தொட்டிகள் நிறுவப்பட்டு வருகின்றன.

'நொராட்' திட்டத்தின் நிதியுதவியுடன் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை இந்த மழை நீர் சேகரிப்புத்தொட்டி நிறுவும் பணியை மேற்கொண்டு வருகின்றது. (எ)

இழந்த சக்தியை மீண்டும் பெற்றிட பாவியுங்கள்
**றோயல் குளுக்கோஸ்**
100% சுத்தமானது!
உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும்போது குளுக்கோஸ் என்று கேட்காமல் றோயல் குளுக்கோஸ் தாருங்கள் என்று கேட்டு வாங்குங்கள்!
Packed By:- ROYAL INDUSTRIES COLOMBO 12 ☎:0777-277670
அனைத்துப் பார்மஸிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்


ROYAL Pure Glucose
ஏக விநியோகஸ்தர்கள்: சிவா நறுமணப்பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 021 222 2567. (C-43780)

**யாழ் .நகரில் இருந்து குறைந்த கட்டணத்தில் பொதிகள் சேவை (PARCEL SERVICE)**

வெளிநாடுகளில் வசிக்கும் உங்கள் உறவினர்கள், நண்பர்களுக்கு அனுப்பவேண்டிய உணவு, உடை, அலங்காரப் பொருள்களைக் குறைந்த கட்டணத்தில் குறுகிய காலத்தில் எம்மால் பொதி செய்து அனுப்பிவைக்கப்படும்.

கட்டணவிவரம் விமானமூலமான
ஐரோப்பிய நாடுகள் (பிரான்ஸ், ஜேர்மனி, லண்டன், சுவிஸ், பிராங்போட், இத்தாலி.) } 650/= 1kg
கனடா - 1050/=

குறிப்பு: எம் மூலமாக அனுப்பப்படும் பொருள்கள் அந்த அந்த நாட்டில் அவர்களது வீடுகளில் ஒப்படைக்கப்படும். வேறு எது விதமான மேலதிகக் கட்டணம் அறவிடப்படமாட்டாது.
தொடர்புகளுக்கு:
RAIN BOW TRAVELS & TOURS
T.P.: 0777328219, 021-222 3237.
$32^1/_2$, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
ராஜா கிறீம் ஹவுஸ் அருகில்
அபிநயா நகை மாடத்திற்கு மேல்.
(சி-44045)

**சிங்கர் நீர் பம்பியினால் முடியாதது என்றோ....... செய்ய இயலாதது என்றோ..... எவருக்கும் கூற முடியாது.**

வாங்குவதற்கு இலகு! விற்பனைக்கு பிந்திய சேவை!
பல மோடல்களில் வேண்டிய தெரிவு

**இப்பொழுது நாடு பூராவும் கிடைக்கும் அளவிற்கு.........**
ஆமாம்! நாடெங்கிலுமுள்ள சிங்கர் காட்சியறைகள், அங்கீகரிக்கப்பட்ட விற்பனை முகவர்கள் மூலம் நாட்டின் மூலைமுடுக்கெல்லாம் இது சாத்தியமாகின்றது.

**உதிரிப்பாகங்கள் வேண்டியளவிற்கு .......**
ஆமாம்! சிங்கர் பம்பிகள் இலங்கையிலேயே உற்பத்தி செய்யப்படுவதால் உதிரிப்பாகங்கள் பற்றிய அச்சமே உங்களுக்குத் தேவையில்லை. இவை தாராளமாக் கிடைக்கின்றன.

**இலகு தவணை கொடுப்பனவுத் திட்டத்தில் .....**
ஆமாம்! இலகு தவணைக் கொடுப்பனவுத் திட்டத்தில் சிங்கர் பம்பிகள் வழங்கப்படுவதனால் எத்தரத்தவரும் இதனை வாங்கிக் கொள்ள முடிகின்றது.

**தண்ணீர் பம்பிகள் என்றதும் எப்போதும் ஞாபகத்திற்கு வரவேண்டியது சிங்கர் பம்பிகள் !!!**

இப்போது ISO 9002 சர்வதேச தரச் சான்றிதழ்களுடன்

யாழ் குடாநாட்டில் இவற்றைப் பெற்றுக் கொள்ள நாடுங்கள்....
சிங்கர் காட்சியறைகள்
விற்பனை கிளைகள்
இல.1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021-222-5408
இல.150, கண்டி வீதி, சாவக்கச்சேரி. 0773-174629
அங்கீகரிக்கப்பட்ட விற்பனை முகவர்
இல.538, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 0776-679557

SINGER®
மாசற்ற மேன்மை
சிங்கர் (ஸ்ரீலங்கா) வரையறுக்கப்பட்டது
இல. 320, டாக்டர் கொல்வின் ஆர் டி.சில்வா மாவத்த, கொழும்பு. தொலை 022-421462/3, 2430301
www.singersl.com
CREATIVE SERVICES

**விமானம் மற்றும் கப்பல் மூலம்**
உள்நாட்டு வெளிநாட்டிற்கான சிறியதோ, பெரியதோ, எந்த அளவுகளிலான பொதிகள், கடிதங்களை எந்த நாட்டிற்கும் எந்தநேரமும் குறைந்த கட்டணத்தில் அனுப்பிட
மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு 20% விசேடசலுகை
லண்டனுக்கான 5 Kg பொதிக்கு 1 Kg க்கான கட்டணம் 500/=
**திருமுருகன் கொம் நெற்**
259, கே.கே.எஸ் றோட், யாழ்ப்பாணம். (Opposite All Ceylon Distributors)
Tel - 021 222 7835
Fax - 021 222 7836
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம் (பலநோக்கு கூ.ச.முன்பாக) Tel - 021 222 7560 Fax - 021 222 7310
36, செல்லப்பிள்ளையார் கட்டடம், பிரதான வீதி, நெல்லியடி, கரவெட்டி. Tel - 021 226 4252 Fax - 021 226 4253
குகன் தொலைத்தொடர்பகம் 166, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். Tel - 021 22 2027 Fax - 021 226 2993

**ஒரு வருட பூர்த்தியில்...**
யாழ். மண்ணில் லேசர் டிஜிட்டல் தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தி ஒரு வருட பூர்த்தியை விரைவில் கொண்டாடவுள்ளோம். இதனை முன்னிட்டு -
- 01-09-2005 முதல் எம்மிடம் புகைப்படச் சுருள்களை பிரதியாக்கம் செய்பவர்களுக்கு (Studio) இலவசமாக அல்பங்களைக் கட்டித் தருகின்றோம்.
- படங்களை இலவசமாக CD யில் பதிவுசெய்து தருகின்றோம்.
- மிகக் குறைந்த கட்டணத்தில் டிசைனிங்; பிரிண்டிங்
- நல்லூர் கந்தன் உற்சவத்தை முன்னிட்டு வியாபார நிறுவனங்களுக்கான 06 அடி அகலத்தில் பனர்கள், டிஜிட்டல் போட் என்பவற்றைக் குறைந்த கட்டணத்தில் செய்து தருகின்றோம்.
- உங்கள் இல்லங்களில் நடைபெறுகின்ற அனைத்து மங்களகரமான நிகழ்வுகளையும் டிஜிட்டல் வீடியோ, போட்டோவாகப் பிடித்துத் தருகின்றோம்.

**பூர்த்தி லேசர் டிஜிட்டல் கலர் லாப்**
62/16, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
கிளை: யாழ். வீதி, மானிப்பாய்.
T.P.: 2222884.
(C/44595)(38.14.15.26)

**ஈராண்டு நினைவஞ்சலி**
தோற்றம் 19 - 09 - 1931

மறைவு 21 - 08 - 2003
**பொன்னையா பாலசிங்கம்**
(ஓய்வுபெற்ற கணக்காய்வு அத்தியட்சகர்)
அன்புக்கும் பண்புக்கும் இலக்கணமாய் வாழ்ந்து - எம்மை அவனியிலே சிறப்புற வாழவைத்த அப்பாவே!
ஈராண்டென்ன பல்லாண்டுகள் சென்றாலும் மறையாது - உங்கள் நினைவலைகள் எங்கள் நெஞ்சத்தில் தந்தையே!
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
166/3, சேர்.பொன். இராமநாதன் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
(39115)(46-18-34)

# பேரினவாதிகளின் கோரமுகம் வெளிப்பட்ட மற்றுமொரு கொலைக்களம்

**1990**ஆம் ஆண்டு ஆவணி மாதம் இருபத்து நான்காம் திகதி வெள்ளிக்கிழமை மண்டைதீவு கிராம மக்கள் படுக்கையில் இருந்து விழித்துக்கொள்வதற்கு முன்பாக அதிகாலை வேளையில் இந்தக் கொடூரம் ஆரம்பமாகி இருந்தது.

இன அழிப்பு நடவடிக்கையின் உச்சத்தையும் இன வன்முறையின் பன்முகத்தன்மைகளையும் அந்த நடவடிக்கை கொண்டிருந்தது என்பதை அந்தக் காலைப்பொழுதில் அவர்கள் அறிந்திருக்கவில்லை.

மண்டைதீவின் கிழக்குக் கடலில் நிலைகொண்டு இருந்த ஸ்ரீலங்கா கடற்படைக்கு சொந்தமான தாக்குதல் கப்பல் கிழக்குக் கரைநோக்கி இருந்ததும், அடிக்கடி வேவு விமானங்களும் வான ஊர்திகளும் வட்டமடித்து நோட்டம் விடுவதும், அதிகாலையில் ஊர்காவற்றுறை வீதிக்கு மேலாக வந்து செல்லும் 'பெல்' உலங்கு வானூர்தியும் கிராமத்தவர்களிடையே பதற்ற நிலையை உருவாக்கி இருந்தன.

### முதல் நாள் தாக்குதல்

கடற்படைக்கப்பல்களில் இருந்து பீரங்கிகள் நெருப்பைக் கக்கத் தொடங்கியதும் அந்தத்தீவு முழுவதும் பீரங்கிக்குண்டுகளால் அதிர்ந்தது. கிரிக்கெட் பந்து வடிவமான உலோகக்குண்டுகள் வீடுகள், கட்டடங்கள், பாடசாலைகள், கூரைகள், பரந்த வயல்கள் வெளிகள் மேற்குப்புறமாக இருந்த பரவைக் கடல் என்று எந்தவேறுபாடும் இன்றி வெடித்துச் சிதறி அனர்த்தம் விளைவித்துக்கொண்டிருந்தன.

**மண்டைதீவுப் படுகொலை நடைபெற்று கடந்த வியாழனுடன் பதினாறு ஆண்டுகள் பூர்த்தயாகியுள்ளன. மண்டைதீவு உட்பட குடாநாட்டின அனைத்துப் பகுதிகளையும் சோகத்தில் ஆழ்த்திய இந்தப் படுகொலையின் கொடூரத்தை நினைவுகூருவதுடன், ஆவணப்படுத்துவதாகவும் இந்தக் கட்டுரை அமைகிறது.**

வீட்டிற்குள் இருந்து பதுங்கு குழியை நோக்கி ஓடிய தாயும் மகளும் உடல் சிதறிப்பலியாகினர்.

அரை மணித்தியால இடைவெளியைக் கொண்ட இந்தத் தாக்குதல் அடங்கியதும் இத்தாலியத் தயாரிப்பான 'சியாமச்சட்டி', குண்டுவீச்சு விமானங்கள் தாக்குதலை ஆரம்பித்தன.

வீட்டுக்கூரைகளை உரசிக்கொண்டு உறுமிக்கொண்டும் சென்ற விமானங்கள் சம் பேதுருவானவர் ஆலயச் சுற்றாடலை குறிவைத்துத்தாக்கின.

குண்டுகளும், ஏவுகணைகளும் இவற்றில் இருந்து சரமாரியாக ஏவப்பட்டன. நாலாம், ஐந்தாம் வட்டாரங்களில் இருந்த வீடுகள் தரைமட்டமாகிப் போயின. அயலில் இருந்த வீடுகளும் சின்னாபின்னமாக்கப்பட்டன.

மேற்கே காரைநகரிலிருந்து வந்த உலங்கு வானூர்திகள் மண்கும்பான், அல்லைப்பிட்டி கிராமங்கள் மீது 'கலிபர்' தாக்குதலை நடத்திய வண்ணம் மண்டைதீவிற்கு வந்து குண்டு மாரி பொழிந்தன.

### தரை இறக்கம்

மேற்கே கரம்பன் கரையோரப் பகுதிகளில் ஏற்கனவே இரவோடு இரவாக இலங்கைப் படையினர் தரையிறங்கி இருந்தனர். புலனாய்வுத் தகவல்கள் மற்றும் துணைப் படையினரின் உதவியுடன் தரையிறக்கப்பட்ட இவர்கள் அந்தப் பகுதிப் பாடசாலைகள் மற்றும் கட்டடங்களில் தங்கி இருந்தனர்.

### இடம்பெயரவில்லை

இந்தத் தகவல்கள் ஓகஸ்ட் 23 ஆம் திகதி மாலையில் சிறிதுசிறிதாக 'கசியத்' தொடங்கியிருந்தாலும் இந்தப் பகுதி மக்களால் உடனடியாக இடம்பெயரமுடியவில்லை. பலர் நம்பவும் இல்லை.

வேலணை - அராலி, மண்டைதீவு - குருநகர் கடல் வழிப் போக்குவரத்து மூடப்பட்டிருந்ததும் மற்றொரு காரணமாகும். ஊர்காவற்றுறை மக்கள் ஏற்கனவே இடம்பெயர்ந்திருந்ததால் தகவல் உடனடியாக கிடைக்கவில்லை.

இரண்டாவது ஈழப்போர் தொடங்கி இரண்டு மாதங்கள் கூட ஆகாத நிலையில் இப்படி ஒரு பாரிய நடவடிக்கையை எவரும் எதிர்பார்க்கவில்லை.

### கூட்டுப்படை நடவடிக்கை

வடபுல இராணுவ கட்டளைத் தளபதி டென்சில் கொப்பேகடுவ தலைமையில், கடற்படைத்தளபதி விஜய விமலவர்த்தன மற்றும் விமானப் படைத்தளபதிகள் இணைந்து 'கோட்டை படை நடவடிக்கையை' (Operation Fort) வடிவமைத்திருந்தனர்.

அப்போதைய இலங்கை ஜனாதிப்தி, பிரேமதாஸ மற்றும் பாதுகாப்பு அமைச்சர் 'ரஞ்சன் விஜயரத்தின ஆகியோரின் அனுமதியும் பெறப்பட்டு இருந்தது.

யாழ்.கோட்டையில் இருந்த படையினரை மீட்பதை பிரதான நோக்கமாக கொண்டு இருந்தாலும் இந்தத் திட்டம் செயலுருப் பெற்ற போது ஏற்பட்ட மனிதப் படுகொலைகள், பொருளாதார அழிவுகள் கொள்ளையிடல், சூறையாடல்கள், கற்பழிப்புகள், தீயிடுதல், பெறுமதியான பொருள்களை அழித்தல், கட்டடங்கள், வீடுகள், பாடசாலைகளை குண்டு வைத்துத் தகர்த்தல் என்பனவற்றை பார்க்கும் பொழுது இன அழிப்பு நடவடிக்கையின் குரூரமான முகங்களையும் இந்த நடவடிக்கை தன்னகத்தே கொண்டிருந்தது என்பதை அறிந்துகொள்ளமுடியும்.

இந்தப் படையணி கடற்படையினர் உட்பட 'கஜபாகு', 'றெஜிமென்ற', 'இராஜரட்ட றைபிள்', சிங்க றெஜிமென்ற' ஆகிய படை அணிகளைக் கொண்டிருந்தது. கஜபாகு அணியே முன்னணித் தாக்குதலுக்குப் பொறுப்பாக இருந்தது.

### பொறியில் அகப்பட்ட நிலையில் மக்கள்

கடற்படைத் தாக்குதல் நடைபெறும் நேரத்தில் வான் வெளித்தாக்குதல் இடை நிறுத்தப்படும். இந்த இடைவெளியை பயன்படுத்திய ஐயாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் குழந்தைகள், வயதானவர்களைத் தூக்கிக கொண்டு உடுத்த உடையோடு அல்லைப்பிட்டிக்கு பரவைக்கடலூடாக சென்றனர்.

வரலாறுகாணாத முதல் அவலப் பயணத்தை மண்டைதீவு மக்கள் எதிர்கொண்டனர். சீறிவந்த கடற்படையினரின் குண்டுகள் மழையாகப் பெய்து கொண்டிருந்தன.

மண்டைதீவுக் கிராமத்தின் கண்ணீரும் கவலையும், துயரமும், துன்பமும் அல்லைப்பிட்டி மணல் மண்ணோடு கலந்த வேளையில் ஓகஸ்ட் 24 ஆம் திகதி 1990 வெள்ளி பிற்பகலில்.....

இராணுவத்தினர் மண்கும்பான் பிள்ளையார் ஆலயத்திலும் தெற்கே சாட்டி பள்ளி வாசல்களுக்கு கிழக்கு வீதியிலும் நிலை கொண்டிருந்தமை தெரியவந்தது. அங்கிருந்து ஓடி வந்தவர்கள் தெரிவித்த செய்தி அது....

வடக்கு வீதியால் படை நகர்ந்த பொழுது சரவணை, புளியங்கூடல், வேலணை கிராமத்தவர்கள் புங்குடுதீவுக் கடல் ஊடாகவும் வீதியூடாகவும் புங்குடுதீவுக்குச் சென்றது போல் மண்கும்பான், அல்லைப்பிட்டி, மண்டைதீவை சேர்ந்தவர்களால் நகர முடியவில்லை.

பொறிக்கிடங்கில் அகப்பட்ட பிராணிகள் ஆனார்கள். அந்த அவல நிலையை - மன வேதனையை - பதட்டம் நிறைந்த பீதியை - அவர்கள் இலகுவில் மறந்துவிட முடியுமா? மற்றவர்களால் அதை விளங்கிக் கொள்ளவும் இயலாது.

அல்லைப்பிட்டிக் கிராமத்தின் கிழக்கே இருந்த யுவானியார் தேவாலயமும், பிலிப்பு நேரியார் ஆலய வளாகமும் வீதிகளும் அயலில் இருந்த வீடுகளும் மக்கள் வெள்ளத்தால் நிறைந்து வழிந்தன.

### மீண்டும் மண்டைதீவை நோக்கி...

அந்தக் கிராமத்தின் தேவலாயங்களிலும் அயலிலும் இடம் கிடைக்காதவர்கள் மண்டைதீவை நோக்கி இரவிரவாக, நிலாவெளிசத்தில் முன்னர் ஓடிச்சென்ற அதே பரவைக் கடல் ஊடாக திரும்ப வேண்டி ஏற்பட்டது.

இரவு நேரத்தில் கடற்படைப் படகுகளின் பீரங்கிக் குழல்கள் சூடேறி இருந்ததாலோ என்னவோ அடங்கிப் போய் இருந்தன. வானூர்திகள் ஓய்வெடுத்திருக்க வேண்டும்.

கோட்டையில் இருந்து ஏவப்பட்ட வெளிச்சக் குண்டுகள் (Para-Lights) மட்டும் அல்லைப்பிட்டிச் சந்தி மண்டைதீவின் கொவ்வைக் குழிப்பகுதியிலும் வெளிச்சம் காட்டி விட்டு வீழ்ந்து வெடித்தன.

### அல்லைப்பிட்டித் தாக்குதல்: சகடைகள் அட்டகாசம்

அடுத்த நாள் ஓகஸ்ட் மாதம் 25 ஆம் திகதி சனிக்கிழமை அதிகாலையில் தரை, கடல், வான் வழித் தாக்குதல்கள் ஆரம்பித்தன. அல்லைபிட்டி ஆலயச் சூழலில் 'சகடை' என்று எம்மவர்களால் அழைக்கப்படும் சீனத் தயாரிப்பு விமானங்கள் பீப்பாய்க் குண்டுகளை வீடுகள் மீது வீசி அட்டகாசம் புரிநதன.

அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயமும் அயலில் இருந்த வீடுகளும் இருந்த இடம் தெரியாமல் மணல் மூடிப் போயின. இந்தக் கட்டட இடுபாடுகளைக் கொண்டு அணை ஒன்று அமைக்கப்பட்டு இருந்ததை ஒரு மாதத்தின் பின்னர் இராணுவம் திரும்பிச் சென்ற பின்பு காணக்கூடியதாக இருந்தது.

வெடிக்காத நிலையில் மேல் மூடி கழன்ற ஒரு 'பீப்பாய்' குண்டும் அந்தப் பகுதியில் வீட்டு முற்றத்தில் காணப்பட்டது.

'பீப்பாய்' குண்டா? அது என்னவென்றே எமக்கு தெரியாது என்று இலங்கைப் படைத் தரப்பினர் கருத்துத் தெரிவிப்பது விநோதமானது.

அன்று மதிய வேளையில் தமது ஆயுதங்களை இயக்கியபடி யுவானியார் கோயிலை சுற்றிவளைத்தனர்.

கோயிலின் பங்குக்குரிய தந்தையர்கள் வெள்ளைக் கொடிகளை தாங்கிய வண்ணம் முழங்காலில் நின்றபடி தாக்குதல் தளபதியையும் இராணுவத்தினரையும் வரவேற்றனர்.

எங்கும் ஒரே பதற்றம், பீதி, அழுகை, குழந்தைகளின் அலறல் அனைத்தும் பீரங்கிச் சத்தத்தோடு அடங்கிப் போய் இருந்தன.

அங்கு வந்திருந்த கட்டளைத் தளபதி 'டென்சில் கொப்பேகடுவ' இராணுவத்தினருக்கு உதவி செய்வதற்கு 25 வாலிபர்கள் தேவை என்றும் தேவை முடிந்ததும் சில தினங்களில் விடுவிக்கப்படுவார்கள் என்று உத்தரவாதமளித்தார்.

பெரும்பான்மை இனத்தவர்களால் இலங்கையின் புகழ்பூத்த இராணுவத்தளபதியாகக் கருதப்படும் அவரை நம்பி, பொல்லூன்றி நோக்கி நீண்ட பொழுது மண்டைதீவு கிராமம் கிட்லரின் பீரங்கிப் படைத் தளபதி கப்டன் மார்சல் றோ மெல்லின் மின்வெட்டுத் தாக்குதல் (Ligtning and Thundering Attack) களம் போல மாறி இருந்தது.

புத்தகத்தில் படித்த 'நார்மண்டித் தாக்குதல்' கண்ணுக்குமுன்னால் நடந்து கொண்டு இருந்தது.

ஆயுதம் உட்புறமாக நீண்ட பொழுது அவலக்குரல் அதிகமாகியது. அபயம்தரும் பாவனையில் அவனது கரம் உயர்ந்தது. திடீரென மறுபுறமாக நீண்டு ஒன்பது முறை பாரிய சத்தத்துடன் வெடித்தது. எங்கும் நிசப்தம்.

### கோயில் அல்ல; மரண வீடு

மண்டைதீவு, இலங்கை இராணுவத்தால் கைப்பற்றப்பட்டது. கோயில் வீதிகள் இராணுவத் தொப்பிகளால் நிறைந்தன. கடற்கரைத் துறைமுகப் பகுதியில் இருந்து வேட்டொலி கேட்டதும் மீண்டும் வெடிச்சத்தங்கள் ஆரமபித்தன.

சிங்களம் தெரிந்தவர்கள் மொழி பெயர்ப்பாளர்களாகவும் மாறினர். தாலையாட்டிகள் தலையாட்ட கைதுகள் தொடர்ந்தன. கோயில் மரண வீடாக மாறியது.

## மண்டைதீவுப் படுகொலைகள் ஒரு மீள் பார்வை இது

வந்த அந்தப் பெருமகனிடம் எண்பதுக்கும் மேற்பட்டோர் சரண் அடைந்தனர். இராணுவம் வந்த வழி நீளம் கண்டவர்களையெல்லாம் சுட்டுக்கொன்றுள்ளதென்பதை அந்த நேரத்தில் அறிந்திருக்க வாய்ப்பில்லை.

விரும்பிப்போன இவர்களும் அழைத்துச் செல்லப்பட்டு மற்றும் பலரும் இன்னும் வீடு திரும்பவில்லை. பெரும்பாலானவர்கள் மண்டைதீவைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள். இவர்களை இவர்களது பெற்றோர்கள் தேடிக்கொண்டு இருக்கிறார்கள். ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நான்கு மாணவர்களும் இவர்களுள் அடக்கம்.

### மண்டைதீவு பிடிக்கப்பட்டது

அல்லைப்பிட்டியை கைப்பற்றிய இராணுவம் யாழ்ப்பாணம் டச்சுக் கோட்டையில் முற்றுகைக்குள்ளாகி இருக்கும் படையினரை மீட்க பண்ணை வீதியால் சென்றுவிடும் என்று நினைத்தவர்களின் நம்பிக்கை வீணாகி போய்விட்டது.

வான ஊர்த்திகள் வட்டமிட்டுத் தாக்குதல் நடத்த டாங்கிகளில் படையினர் கடலுக்கு ஊடாக நகரத் தொடங்கினர். சிவில் உடையணிந்தவர்களும் பின்னணியில் இருந்தனர்.

### பரவைக் கடலில் சிலுவை சுமந்தவர்கள்!

இராணுவத் தளபதிகளை கன்வாஸ் கட்டிலில் வைத்து, கடலூடாக காவிச் செல்லுமாறு அழைத்துச் செல்லப்பட்டவர்கள் பணிக்கப்பட்டனர்.

மிகுதியானவர்களின் தோழிலும் தலையிலும் சாப்பாட்டுக் கோப்பைகள், கொள்கலன்கள், உணவு மூடைகள், வயலஸ் கருவிகள் என்பன ஏறிக்கொண்டன.

மண்டைதீவு திருவெண்காட்டு சித்தி விநாயகர் ஆலயத்தை சுற்றிவட்டமிட்ட வானூர்த்திகள் அயற் புறங்களைத் தாக்க விமானங்கள் குண்டுகளையும் ஏவுகணைகளையும் வீச எறிகணைகள் விழுந்து வெடிக்க கடல் பீரங்கிகள் மட்டும் வாய்மூடி இருந்தன.

வெள்ளைக் கொடிகள் நாலாபுறமும் பறந்து கொண்டு இருந்த அந்த ஆலயத்தில் அடுத்த நாள்தான் கொடியேற்றம். மேளதாளமும் நாதஸ்வரமும் இணைய வேண்டிய அந்த நேரத்தில் அனைத்து ஆயுதங்களும் கோயில் மதிலையும் சுற்றுப்புறத்தையும் தாக்கிக்கொண்டிருந்தன. அந்த வெடிச்சத்தங்களை மீறி அவலம் நிறைந்த அலறல்களும் ஓலங்களும் 'அரோகரா' என்ற ஒலியும் வானைப் பிளந்தன.

### கறுத்த உருவில் காலன் தோன்றினான்

ஆஜானுபாகுவான உயரமான, கட்டுமஸ்தான வியர்வையால் நனைந்து கறுத்திருந்த உருவம் ஒன்று கோயில் முகப்பில் தோன்றியது (இவனுடைய பெயர் பியதாஸ) அவனின் தோளில் வெள்ளியால் ஆனது போல பல நெளிவுகளைக் கொண்ட மின்னித் தெறிக்கும் ஆயுதம் காணப்பட்டது. (கொமாண்டோ எறிகணை செலுத்தி போலும்)

அந்த ஆயுதம் கோயிலில் உட்பகுதியை

. ஆஸ்பத்திரி வீதி வழியாக முன்னேறிய படையினர் வேதக் கோயிலை அடைந்தனர். கோயிலுக்குள் இருந்த இளைஞர்கள் வெளியில் இழுத்து வரப்பட்டு வீதியில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டனர். செம்மண்தோட்ட வெளி யுத்தகளமாக மாறி இரத்தத்தால் சிவந்திருந்தது.

பதுங்கு குழிகளில் இருந்தவர்கள் முன்னேறி வந்த இராணுவத்தினரால் அதற்குள் வைத்தே சுட்டுக்கொல்லப்பட்டனர். முதியவர்கள், இளையவர்கள், சிறுமிகள், சிறுவர்கள், ஆசிரியர்கள், பெண்கள் என வேறுபாடு எதுவுமின்றி மண்டைதீவு பிணக்காடாகியது.

### ஐம்பத்தாறு சடலங்கள் ஒரே கிணற்றினுள் அடக்கம்

ஐம்பத்தாறுக்கும் மேற்பட்டவர்களின் சடலங்கள் வரிசையாக அடுக்கி வைக்கப்பட்டு படமெடுக்கப்பட்ட பின் ஒரே கிணற்றில் போட்டுமூடப்பட்டன.

எஞ்சியமக்கள் மூன்று நாள்களாக விநாயகர் ஆலயத்தில் அடைக்கப்பட்டு இருந்தனர். உணவு, தண்ணீர் ஏதும் வழங்கப் படவில்லை.

கை.பேரின்பநாயகம்

இரவுபகலாக மண்டைதீவு வீடுகள் கொள்ளையடிக்கப்பட்டதுடன் அனைத்துப் பொருளகளும் உடுபுடைவைகளும் எடுத்து வீசப்பட்டன. படையினரின் கழுத்தில் தாலிக்கொடிகளும் கைகளில் வெட்டப்பட்ட காப்புகளும் மின்னிக்கொண்டிருந்தன. கிராமம் முழுவதுமே சூறையாடப்பட்டன.

### பாடசாலைகளே தஞ்சமளித்தன! பனம்பழங்களே உயிரைக்காத்தன!!

மூன்று நாள்களின் பின்னர் மண்கும்பானுக்கு செல்லுமாறு மக்கள் பணிக்கப்பட்டனர். சொந்த வீடுகளுக்குச் செல்ல அனுமதிக்கப்படவில்லை. வழி எங்கும் மரண அச்சுறுத்தல். அல்லைப்பிட்டியை அடைந்ததும் அங்கிருந்தவர்களும் உடன் சேர்த்துத் துரத்தப்பட்டனர்.

சாட்டிக் கடற்கரைப் பகுதியும் மசூதிகளும் கோயில்களும் பாடசாலைகளும் தங்குமிடங்களாகின. சுகாதாரக் கேடுகளின் மத்தியில் பனம் பழங்களே பலரது உயிரை பிடித்து வைத்திருந்தன.

இந்த நேரத்தில் அகதிகளாகிவிட்ட இவர்கள் திரும்பி வந்த பொழுது மண்டைதீவு அல்லைப்பிட்டிக் கிராமங்கள் சுடுகாடுகளாக மாறி இருந்தன.

மண்டைதீவுத் தோட்டக் கிணறுகள் மூடப்பட்டு இருந்தன. அவை புதைகுழிகள் என்பது உடனடியாகத் தெரியவரல்லை.

இந்தக் தாக்குதலின் கொடூரம் இதுவரை முழுமையாக வெளிக்கொண்டு வரப்படவில்லை காணாமல் போனவர்களின் கதி என்ன வாயிற்று? நானூறுக்கு மேற்பட்டவர்கள் எங்குள்ளனர்? புதைகுழிகள் இன்னும் தோண்டப்படாதது ஏன்? என்பது இந்தக் கிராமத்தவர்களுக்கு புரியவில்லை.

*

வலிகாமம் தென் மேற்கு
பிரதேச செயலக
கலாசார விழா
2005




தலைவர்
திருமதி ரூபினி வரதலிங்கம்
(பிரதேச செயலர், சண்டிலிப்பாய்)
இடம்:
மானிப்பாய் பிரதேச சபை கலாசார மண்டபம்
காலம்:
இன்று 28.08.2005- ஞாயிற்றுக்கிழமை
பி.ப.2 மணி முதல் இரவு 9 மணி வரை

இரண்டாம் நாள் நிகழ்வுகள்
28.08.2005 (ஞாயிற்றுக்கிழமை)
பி.ப.2 மணி முதல் இரவு 9 மணி வரை

**கலையரசு சொர்ணலிங்கம் அரங்கு**

தலைவர்: திருமதி ரூ.வரதலிங்கம்
(பிரதேச செயலர், சண்டிலிப்பாய்)
பிரதமவிருந்தினர்: மேதகு க.கணேஷ்
(அரச அதிபர், யாழ்ப்பாணம்)

சிறப்பு விருந்தினர்கள்
திரு.நா.வேதநாயகன்
(மேலதிக அரச அதிபர், கிளிநொச்சி)
திருமதி க.சிவசிதம்பரம்
(முன்னாள் செயலாளர், மாகாண பொது நிர்வாக அமைச்சு, திருகோணமலை)
திரு.க.தனபாலசிங்கம்
(கோட்டக்கல்விப் பணிப்பாளர், சண்டிலிப்பாய்)
திரு.இ.வசந்தசேனன்
(சட்டத்தரணியும் சமூகசேவையாளரும்- மானிப்பாய்)
திருமதி சூ.ஜெயவீரசிங்கம்
(அதிபர், மானிப்பாய் மகளிர் கல்லூரி)
திரு.சி.வெ.தமிழ்மறவன்
(பொறுப்பாளர், தமிழீழ விடுதலைப் புலிகள், அரசியல்துறை, மானிப்பாய்)
திரு.ச.செல்வராசா
(முன்னாள் உதவிப் பிரதேச செயலர், சண்டிலிப்பாய்)
திரு.வீ.சுப்பிரமணியம்
(தலைவர், ப.நோ.கூ.சங்கம், பண்டத்தரிப்பு)

**நிகழ்வுகள்**

- மங்கள விளக்கேற்றல்
- மங்கள இசை
  நடராசசுந்தரம் குழுவினர், சுதுமலை
- வரவேற்பு நடனம்
  வடலியடைப்பு இந்துமாமன்ற மாணவிகள்
- தமிழ்த் தாய் வாழ்த்து
  யா/சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி மாணவர்கள்
- வரவேற்புரை - திருமதி இ.பத்மராணி
  (கலாசார உத்தியோகத்தர்)
- ஆசியுரை சிவஸ்ரீ த.சி.பாலசண்முகக் குருக்கள்
  (சீரணி நாகம்பாள் தேவஸ்தானம்)
  வண.பிதா ஜேம்ஸ் சிங்கராயர்
  (புனித கென்றியரசர் கல்லூரி- இளவாலை)
- *தலைமையுரை:*
- *சிறப்பு விருந்தினர் உரை:*
- *பிரதமவிருந்தினர் உரை:*
- *நினைவுரை:* ' கலையரசு சொர்ணலிங்கம்'
  இரா.துரைராசா
  (கிராம அலுவலர், மாதகல் கிழக்கு)
- தனிநடனம்:யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி மாணவன்
- பொம்மைநடனம்:யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி மாணவிகள்
- குழு இசை:யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி மாணவிகள்
- பாம்பு நடனம்: ] திருமதி சோபனா குணச்
- தனி நடனம்: ] செல்வனின் மாணவிகள்
- கலைஞர் கௌரவிப்பு:
  நெறிப்படுத்துநர்:திரு.மு.பாலசிங்கம்
  *(உதவித்திட்டமிடல் பணிப்பாளர்)*
- *பரிசில் வழங்கல்*
  *தொகுத்து வழங்குபவர்:* திரு.ந.குகபரன்
  *(கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்)*
- *நாடகம்:*'மண்ணில் நல்ல வண்ணம்'
  *( யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி மாணவர்கள்)*
  *எழுத்துருவாக்கம்:* திரு.க.ஸ்ரீகந்தவேள்
- *கூத்து:* 'காத்தவராயன்'
  (யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி மாணவர்கள்)
- கூத்துருவ நாடகம்: 'கோல் ஈனும் கோற்றம்'
  *(யா/திருமறைக் கலா மன்றம்)*
- புத்தாக்க நடனம்: *இளவாலை திருமறைக் கலா மன்றம்*
- நகைச்சுவை நாடகம்: 'ஆனந்தம் ஆரம்பம்'
  (சண்டிலிப்பாய் பிரதேச கலாசார பேரவை
- *கருவுருவாக்கம்:* திரு.ந.நாகராசா *(கிராம அலுவலர்)*
- *நெறியாள்கை :* திரு.இரா.துரைராசா *(கிராம அலுவலர்)*
- *நன்றியுரை:* திரு.ந.கஜிந்திரராசா *(சமுர்த்தி முகாமையாளர்)*

நிகழ்வுகளுக்கான பின்னணி இசை
**மாதகல் வளர்மதி கலாலயம்**
**அனைவரையும் அன்புடன்**
**அழைக்கின்றோம்.**

*பிரதேச செயலகம்,*
*வலி .தென் மேற்கு,*
*சண்டிலிப்பாய்.* (39311) (39-46-14-45)

**கலாசாரப் பேரவையும்**
**வலி .தென் மேற்கு பிரதேச**
**செயலக சமூகமும்.**



**இசைக் கருவிகள்**



சகலவிதமான
இசைக்கருவிகளையும்
அவற்றின்
உதிரிப்பாகங்களையும்
மொத்தமாகவும்
சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ளலாம்.
அவற்றை
உத்தரவாதத்துடன்
திருத்திக் கொள்ள
நாடுங்கள்




SUNBEAM

**சாயி சங்கீதா**

**UG53,** பீபள்ஸ் பார்க்
. கேஸ்வேர்க் வீதி, கொழும்பு-11
தொலைபேசி: **2384222 2445102**
பக்ஸ்: **2445102**



**ஆங்கிலம் கற்க வேண்டும் என்ற ஆசையா? இதோ?**

**இலகுவாக ஆங்கிலம் கற்க சிறந்த வழி**
**E.L.I. யின் தபால் மூலம் பாடநெறிகள்**

**அழகிய குடை, டீசேட்டை இலவசமாக பெறுங்கள்**



* பாடநெறியைத் தொடரும் உங்களுக்கு இலவச குடை ஒன்று
* தொலைபேசி பதிவை உள்ளடக்கிய கீடெக் ஒன்று
இலவச 30 day's Easy Way English புத்தகம்
என்பன அனைத்து மாணவர்களுக்கும் இலவசமாக வழங்கப்படும்

மேலதிக விபரங்களுக்கு 5.00 பெறுமதியான 3 முத்திரைகள் அனுப்பி பெறலாம்.

**THE ENGLISH LANGUAGE INSTITUTE**
**P.O. BOX 83, KANDY. Tel: 0777-220002, 802849**



S-Lon என்றால் PVC குழாய்கள்
ஆனால் எல்லா PVC குழாய்களும் S-Lon அல்ல.

## தரமுயர்ந்த எஸ்-லோன் குழாய்களையே கேட்டு வாங்குங்கள்




Rediffusion DYR

**எஸ்-லோன் இலச்சினை பொறிக்கப்பட்டுள்ளதை**
**நிச்சயப்படுத்த தவறாதீர்கள்**

பரம்பரை பரம்பரையாக மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக விளங்கும் எஸ்-லோன் பி.வி.சி. குழாய்களும் அவற்றிற்கான பொருத்துக்கள். பீலிகள் முதலிய யாவும் சகல அளவுகளிலும் கிடைக்கின்றன. எனவே, நீங்கள் தரக்குறைவான பொருட்களை வாங்கி ஏமாற வேண்டிய அவசியமே கிடையாது.

உங்களுக்கு நீர்க்குழாய்கள், பொருத்துக்கள். பீலிகள் தேவைப்படும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் எஸ்-லோனை நாடுங்கள்.

S-Lon
என்றும் முன்னணியில்

S-Lon இல்லம்
நிம்மதியான வாழ்வுக்கு

எஸ்-லோன் லங்கா (பிறைவேட்) லிமிட்டட், 7, பிறேபுருக் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 4792630-4 .'.பெக்ஸ்: 5352741

# அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்தி தமிழ் ஊடகங்களை அடக்க அரசு முயற்சி

## மகேஸ்வரன் நாடாளுமன்றில் காட்டம்



கொழும்பு,ஓக.28 அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்தித் தமிழர்களையும் தமிழ் ஊடகங்களையும் அடக்கி ஒடுக்க அரசு முற்படுகிறது. 'சுடர் ஒளி' பத்திரிகை மீதுள்ள காழ்ப்புணர்ச்சி காரணமாகச் செய்தியாளர் மீது ஜே.வி.பியினர் அடாவடித்தனம் புரிகின்றனர். இதை ஒருபோதும் அனுமதிக்கமுடியாது - என்கிறார் ஐ.தே.க. எம்.பி. மகேஸ்வரன்.

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் மத்திய போக்குவரத்துச் சபை சட்டமூலம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே மகேஸ்வரன் எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

அவர் இது பற்றி மேலும் கூறியதாவது:-

தமிழ்த்தேசியம் பற்றிப் பேசுபவர்களைத் தாக்கி அழிக்க முயற்சி எடுக்கப்படுகிறது. ஆனால், தமிழர் போராட்டத்துக்கு எதிராகச் செய்திகளை வெளியிடும் நிறுவனங்களுக்கு எதிராகத் தமிழர்கள் ஒருபோதும் அடாவடித்தனம் புரியவில்லை.

'உதயன்' பத்திரிகை சுமார் இருபது வருட வரலாற்றைக் கொண்டது. கொழும்பிலிருந்து வெளிவரும் 'சுடர்ஒளி' பத்திரிகை ஐந்து வருடங்களாக வெளிவருகிறது. மேற்படி பத்திரிகை அலுவலகத்துக்கும் அதன் செய்தியாளர்களுக்கும் தொடர்ந்தும் அச் சுறுத்தல் விடுக்கப்பட்டு வருகிறது. சிங்கள ஊடகங்களுக்கு இப்படி அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருந்தால் இந்த நாடாளுமன்றில் அதை ஒரு பூதாகரமான விடயமாக ஆக்கியிருப்பார்கள். இப்படியான பாரபட்சம் இடம்பெறுவதை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இந்தத் தாக்குதல்களில் சம்பந்தப்பட்டவர்களைக் கைதுசெய்து சட்டத்தின் முன்நிறுத்தவேண்டும். உயர் நீதிமன்றம் ஜனாதிபதித் தேர்தல் விடயத்தில் வழங்கிய தீர்ப்பு ஜனநாயகத்துக்குக் கிடைத்த வெற்றியாகும். இது ஐ.தே.கவுக்குக் கிடைத்த மாபெரும் வெற்றி. ரணிலை நூறு வீதமான தமிழர்கள் ஆதரிக்கிறார்கள். இன்னும் 60 நாள்களில் ஜனாதிபதி தனது வீட்டுக்கு நடையைக் கட்டிவிடுவார். தனது பதவிக்காலம் முடிவுறும் சமயத்தில் பத்தரமுல்ல பகுதியில் ஒன்றரை ஏக்கர் காணியொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு அவர் முயற்சி செய்துள்ளார். அமைச்சரவையில் உள்ள அமைச்சர்களும் இவ் விடயத்தில் சம்பந்தப்பட்டுள்ளனர் - என்றார். (எ-க)

# அடாவடிச் செயலுக்கு இடமளிக்க முடியாது

## - செல்வம் அடைக்கலநாதன்

'சுடர்ஒளி' பத்திரிகையாளர் தமிழர் என்ற ஒரே காரணத்தால் ஜே.வி.பியினரால் நையப்புடைக்கப்பட்டார். இந்த அடாவடிச் செயலுக்கு இடமளிக்க முடியாது.

விடுதலைப் போராளிக்கு உள்ள சமமான சகல கௌரவமும் பேனையைப் பிடித்திருக்கும் ஊடகவியலாளனுக்கும் உண்டு. உயிரைப் பணயம் வைத்து செய்திசேகரிக்கும் அவர்கள் போற்றப்படவேண்டியவர்கள்.

'சுடர்ஒளி' மற்றும் 'உதயன்' பத்திரிகைகள் மீது விடுக்கப்படும் அச்சுறுத்தல்களைத் தமிழர் கூட்டமைப்பு வன்மையாகக் கண்டிக்கிறது. ஒரு நாட்டின் அரசியல் எதிர்காலத்தையே நிர்ணயிப்பவன் பத்திரிகையாளன் என்பதை யாராலும் மறுக்கமுடியாது.

எமது மக்கள் சுதந்திரத்தை இழந்து வாழ்க்கையைத் தொலைத்தவர்கள். தமிழர்களை அடித்து அடாவடித்தனம் செய்து அடிமைப்படுத்தலாம் என்று யாரும் கருதினால் அது வேடிக்கையானது - என்றார்.

# ஜே. வி. பி. பகிரங்கமாக மன்னிப்புக் கோரவேண்டும்

## சிவாஜிலிங்கம் வலியுறுத்து



'சுடர்ஒளி' பத்திரிகையாளர் மீது ஜே.வி.பி.யினர் மேற்கொண்ட காடைத் தனத்துக்காக அவர்கள் பகிரங்கமாக மன்னிப்புக் கோரவேண்டும். இதுபோன்ற அடாவடித்தனங்களுக்குத் தொடர்ந்து இட மளிக்க முடியாது என்று ஜே.வி.பியினருக்குக் கடுமையான எச்சரிக்கையொன்றை விடுத்தார் தமிழர் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம்.

நேற்று முன்தினம் நாடாளுமன்றில் 'சுடர்ஒளி'யின் பத்திரிகையாளர் ஜே. வி.பியினரின் ஆர்ப்பாட்டத்தின்போது தாக்கப்பட்டதற்குக் கண்டனம் தெரிவித்து யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தினால் கொண்டுவரப்பட்ட சபை ஒத்தி வைப்பு வேளை விவாதத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த சிவாஜிலிங்கம் ஜே.வி.பி.யினரைக் கடுமையாகச் சாடினார். அப்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜே.வி.பியினர் தாம் செய்த படுமோசமான நடவடிக்கையை மூடி மறைப்பதற்காகக் கடும் பிரயத்தனத்தை மேற்கொண் டுள்ளனர்.

இவர்களின் அடாவடித் தனங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும். இனரீதியான செயற்பாட்டை எம்மால் ஒருபோதும் அனுமதிக்க முடியாது - என்றார் அவர். (எ-க)




# இனவாதிகளாக செயற்படுவதை ஜே.வி.பி. உடன் நிறுத்தவேண்டும்

## சுரேஸ் பிரேமச்சந்திரன்



தமிழர்களைப் புலிகள் என்ற சந்தேகத்துடன் நோக்குவதைவிட்டுவிட்டு பிரச்சினைக்குத் தீர்வுகாண ஜே.வி.பி. முன்வரவேண்டும். இனவாதிகளாகச் செயற்படுவதன் மூலம் அழிவுக்கு அவர்களே அத்திவாரமிடுகிறார்கள்.

'சுடர் ஒளி' பத்திரிகையின் செய்தியாளர் காட்டுமிராண்டித் தனமாகத் தாக்கப்பட்டுள்ளார். அவரது கமராவும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. அதன் பின்னர் அவர் பொலீஸாரிடம் கையளிக்கப்ட்டிருக்கிறார். இதுவொரு பாரதூரமான செயலாகும்.

அவசரகாலச் சட்டம் என்பது அனைத்து தமிழர்களையும் புலிகள் எனக் கருதி கைதுசெய்வதற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரம். கடந்த 36 வருடங்களில் மூன்று வருடங்கள் மட்டுமே இந்த நாட்டில் அவசரகாலச் சட்டம் நடைமுறையில் இல்லாமல் இருந்தது.

புலிகளுடன் மீண்டும் பேச்சை ஆரம்பிப்பதற்கு இந்த அவசரகாலச் சட்டம் பெரும் தடையாகவே இருக்கும். அவசரகாலச் சட்டம் நடைமுறையில் இருக்கும்போது பேச்சுகள் எப்படி ஆரம்பமாகும்.

கொழும்பிலிருந்து கைதுசெய்யப்பட்ட இருபது தமிழர்களையும் புலிகள் என்று பிரபல ஆங்கில நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது. அவசரகாலச் சட்டம் நடைமுறையில் இருக்கும்போது தமிழர்கள் எல்லோரும் புலிகளாகவே தெரிவார்கள் - என்றார் அவர்.

# பொலீஸ் அதிகாரங்களைத் தமது கைகளில் எடுக்க ஜே.வி.பியினருக்கு இடமளிக்கக்கூடாது

## இராதாகிருஷ்ணன் சபையில் கண்டனம்

ஜே.வி.பியினர் தமது தவறை உணர்ந்து கொண்டதாலேயே சபையில் வந்து நல்வர்கள் போன்று பாசாங்கு செய்கின்றனர். அவசரகாலச் சட்டத்தையும், பொலீஸ் அதிகாரங்களையும் ஜே.வி.பியினர் கையில் எடுத்துக்கொள்ள இடமளிக்கக் கூடாது.

இப்படி மலையக மக்கள் முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் பெ.இராதாகிருஷ்ணன் சபையில் கண்டனம் தெரிவித்தார்.

'சுடர்ஒளி' பத்திரிகையாளரை தாம் தாக்கவில்லை என்று ஜே.வி.பியினர் இங்கு கூறுகின்றனர். அது தவறு. தாக்கப்பட்ட பத்திரிகையாளர் யதுர்ஷனை உடனடியாகச் சென்று பார்த்தேன். அவர் பொலீஸ் நிலையத்தில் பேசுவதற்குக் கூடச் சிரமப்பட்டார். மிகவும் மோசமாக தாக்கப்பட்டிருந்தார். அதுதான் உண்மை. இதை மறைக்க முடியாது. அவசரகாலச் சட்டம் இன்று தமிழர்களுக்கு எதிராகவே பயன்படுத்தப்படுகின்றது.

நோர்வூட் பிரதேசத்தில் துப்பாக்கிகளும், ரவைகளும் கண்டெடுக்கப்பட்டதாகக் கூறி ஹற்றன், பொகவந்தலாவை, நோர்வூட், மஸ்கெலியா போன்ற பகுதிகளில் பொலீஸாரும் படையினரும் தேடுதல் நடத்தி தமிழ் மக்களைத் துன்புறுத்துகின்றனர்.

அதேபோன்று, கொழும்பில் ஆடைத் தொழிற்சாலையில் பணிபுரிந்த 21மலையக யுவதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களிடம் எல்லாவிதமான ஆவணங்களும், அடையாள அட்டைகளும் இருக்கின்றன. அப்படி இருந்தும் எந்தவிதமான காரணமும் இன்றி அவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

ஜே.வி.பியினர் தாம் விட்ட தவறுகளை உணரவேண்டுடும். அவசரகாலச் சட்டத்தின் கீழ் 60 ஆயிரம் இளைஞர்கள் கொல்லப்பட்டனர் என அவர்களே கூறுகின்றனர்.

அவசரகாலச் சட்டத்தின் கொடுமைகளை அனுபவபூர்வமாக உணர்ந்தவர்கள். எனவே, அவசரகாலச் சட்டத்தை நீக்குவதற்கு ஜே.வி.பியினரும் குரல் எழுப்பவேண்டும்-என இராதாகிருஷ்ணன் எம்.பி.கூறினார். (எ-க)

# 'சுடர் ஒளி' அலுவலகம் மீதான தாக்குதல் பொலீஸாரின் விசாரணை தொடர்கிறது

## பிரதி அமைச்சர் ஜயரத்ன ஹேரத்

வெள்ளவத்தையில் அமைந்துள்ள 'சுடர்ஒளி' -'உதயன்' பத்திரிகை அலுவலகத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட குண்டு வீச்சுத் தாக்குதல் தொடர்பாகப் பொலீஸார் தொடர்ந்தும் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். இச் சம்பவம் தொடர்பாக இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை எனப் பிரதி அமைச்சர் ஜயரத்ன ஹேரத் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்

விவாதத்திற்குப் பதில் அளித்துப் பேசும்போதே பிரதி அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார். பிரதி அமைச்சர் தொடர்ந்து பதில் அளிக்கும் போது கூறியதாவது:

'சுடர் ஒளி' பத்திரிகையாளர் எனக் கூறப்படும் யதுர்ஷன் கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தின் முன் ஜே.வி.பி.யினர் நடத்திய ஆர்ப்பாட்டத்தின்போது சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவருடைய நடமாட்டத்தை அவதானித்த ஜே.வி.பியினர் அவர் மீது சந்தேகம் கொண்டு, அவரைப் பிடித்து பொலீஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். தான் ஒரு பத்திரிகையாளன் என்பதை உறுதிப்படுத்துவதற்கான ஆதாரங்கள் எதுவும் யதுர்ஷனிடம் இருக்கவில்லை. எனவே, மேல் விசாரணைக்காக கோட்டைப் பொலீஸார் இவரைத் தடுத்து வைத்திருந்தனர். கைது செய்யப்பட்ட அதேதினம் இரவு 'சுடர் ஒளி' நிறுவனத்தைச் சேர்ந்த இரண்டு செய்தியாளர்கள் கோட்டை பொலீஸ் நிலையத்திற்குச் சென்று கைது செய்யப்பட்டுள்ள யதுர்ஷன் தமது நிறுவனத்தைச் சேர்ந்தவர் என்பதை உறுதிப்படுத்தியுள்ளனர். மறுநாள் யதுர்ஷன் கோட்டை நீதிவான் முன்னிலையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

அதேவேளை, குருநாகல் மாவத்தகமையில் கைது செய்யப்பட்டிருக்கும் சுப்பிரமணியம் ரமேஷிடம் இருந்து ஆறு தமிழ் இளைஞர்களின் கடவுச் சீட்டுகளும், தமிழீழ விடுதலைப் புலிகளின் அடையாள அட்டையும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவர் குருநாகல் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு மேல் விசாரணைகளுக்காகத் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார் என்று கூறிய பிரதி அமைச்சர் இந்தச் சபையில் பேசிய தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் அவசரகாலச் சட்டத்தை நீக்கவேண்டும் என்பதையே வலியுறுத்தினர். இதனை ஏற்க முடியாது.

முன்னாள் அமைச்சர் கதிர்காமரின் கொலை தொடர்பாக உண்மையான குற்றவாளியைக் கண்டுபிடிப்பதற்காகவே அவசரகாலச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இது அவசியம். அவ்சர காலச் சட்டத்தின் மூலம் தனிப்பட்ட முறையில் தமிழர்கள் பழிவாங்கப்படமாட்டார்கள்- என்றார்.

# அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் காட்டுமிராண்டித்தனம் அம்பலமாகிவிட்டது

## அரியநேந்திரன் சாடுகிறார்

'சுடர்ஒளி' பத்திரிகையாளர் யதுர்ஷன் தாக்கப்பட்டது அவர் ஒரு பத்திரிகையாளர் என்பதைவிட, ஒரு தமிழன் என்பதனாலேயே என்பது உறுதியாகின்றது. இதுவரை காலமும் செய்தியாளர்களையும் இனந்தெரியாதவர்கள் தான் தாக்கினர். கொலை செய்தனர் என்று கூறப்பட்டது.

ஆனால், அங்கீகரிக்கப்பட்ட ஓர் அரசியல் கட்சியான ஜே.வி.பி இப்போது பத்திரிகையாளர் ஒருவரைக் காட்டுமிராண்டித் தனமாகத் தாக்கி துன்புறுத்தியுள்ளது என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

'சுடர்ஒளி' செய்தியாளர் யதுர்ஷன் ஜே.வி.பியினரால் தாக்கப்படுவதற்குச் சில தினங்களின் முன் வெள்ளவத்தையில் உள்ள 'சுடர்ஒளி' 'உதயன்' அலுவலகம் தாக்கப்பட்டுள்ளது. அந்த அலுவலகம் மீது குண்டு வீசப்பட்டதற்கும், யதுர்ஷன் தாக்கப்பட்டதற்கும் தொடர்புகள் உண்டு என்று நான் கருதுகிறேன். எனவே வெள்ளவத்தை அலுவலகம் மீது குண்டு வீசியதற்கும் ஜே.வி.பியினரே பொறுப்பேற்க வேண்டும்.

இன்று அவசரகாலச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டவுடன் கிழக்கு மாகாணத்தில் ஈழநாதம் பத்திரிகை தடைசெய்யப்பட்டுள்ளது.

இந்த அரசாங்கம் ஜனநாயக உரிமை, பத்திரிகைச் சுதந்திரம் என்பன தொடர்பாகப் பெரிதாகப் பேசுகின்றது. ஆனால் அரச ஊடகமான இலங்கை ஒலிபரப்பு கூட்டுத் தாபனத்தின் மூலம் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குப் பகிரங்கமாகவே கொலை அச்சுறுத்தல் விடப்படுகிறது. அதற்கு அரசாங்கமும் ஆதரவு தருகின்றது.

அண்மைக்காலங்களில் தொடர்ச்சியாக பல பத்திரிகையாளர்கள் கொலைசெய்யப்பட்டுள்ளனர். தாக்குதல்களுக்கு இலக்காகியுள்ளனர். ஆனால் இதுவரை எந்தவொரு ஊடகவியலாளர்களுக்கும் அரசாங்கம் நஷ்ட ஈடுகளை வழங்கியது இல்லை.

இந்த அரசாங்கம் அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்தி தமிழர்களைச் சித்திரைவதை செய்கின்றது. அதேவேளை, ஜே.யவி.பியினர் தமிழ் ஊடகவியாலாளர்களை தாக்குகின்றனர்.

தமிழ் மக்களும், தமிழ் ஊடகவியலாளர்களும் தாக்கப்படும் போது தான் தமிழ்த் தேசியம் மேலும் மேலும் வளரும் என்பது உறுதி -என சந்திரநேரு எம்.பி ஜறிகார்.

# ஊடகவியலாளரின் உயிருக்கு அச்சுறுத்தல் ஜனாதிபதி மௌனம் சாதிப்பது ஏன்?

## டாக்டர் ஜயலத் ஜயவர்தன



தேசியப் பாதுகாப்புக்கும், ஊடகவியலாளர்களின் உயிர்களுக்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ள இந்த வேளையில் பாதுகாப்பு அமைச்சரான ஜனாதிபதியும், ஜனாதிபதி வேட்பாளர் மஹிந்த ராஜபக் ஷவும் மௌனம் சாதிப்பது ஏன்?


இப்படிக் கேள்வி எழுப்பினார் ஐ.தே. க.நாடாளுமன்ற உறுப்பினரான டாக்டர் ஜயலத் ஜயவர்தன.


'சுடர்ஒளி' பத்திரிகையாளர் தாக்கப்பட்டுள்ளார். அவருடைய உடைமைகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. இது சுதந்திர ஊடகவியலாளர்களுக்கு ஏற்பட்டுள்ள பொதுவான அச்சுறுத்தலாக அமைந்துள்ளது.

தேசியப் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்று கூறியே ஜனாதி பதி எங்களிடமிருந்து மூன்று அமைச்சுகளைத் தட்டிப்பறித்தார். அதன்பின்னரும் தேசிய பாதுகாப்பிற்கு பங்கம் ஏற்பட்டுள்ளது என்று கூறிக்கொண்டே அவசரகாலச் சட்டத்தை ஜனாதிபதி பிரகடனப் படுத்தியுள்ளார்.

ஆனால்,இப்பொழுதுதான் கொலைகள் அதிகரித்துள்ளன. இதற்கான பொறுப்புகளை ஜனாதிபதியே ஏற்க வேண்டும். ஜே.வி.பியினர் இந்த நாட்டில் மீண்டும் ஓர் இனக்கலவரத்தை ஏற்படுத்த முனைகின்றனர்.

சமாதானம் என்று கூறிக்கொண்டே தமிழர்கள் மீது தாக்குதல்களை நடத்துவதை நானும் ஒரு சிங்கள குடிமகன் என்ற வகையில் வன்மையாகக் கண்டிக்கிறேன். சமாதானம் பேச்சில் மட்டும் இருக்கக்கூடாது, செயலிலும் இருக்கவேண்டும் என்றார் டாக்டர் ஜயலத் ஜயவர்தன.





எமது ஸ்தாபனத்தில் தற்பொழுது உங்களுக்குத் தேவையான
மருத்துவ உதவி உபகரணப் பொருட்கள்
யாவும் கிடைக்கும்.




*Wheel Chair*
*Commode Wheel Chair*
*Commode Chair*
*Walking Frames*
*Walking Sticks*
*Crutches ETC, ETC.*

**THE ABOVE HEALTH CARE PRODUCTS ARE**
**Now Available At**

# CITY MEDICALS

487, Hospital Road, Jaffna.


# ஓராண்டு நினைவஞ்சலி



அமரர்
பொன்னுத்துரை
நேசகுமார் (NESA)

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 07-06-1979 | 28-08-2004 |

உடுப்பிட்டி வீரபத்திரர் கோயிலடியைப் பிறப்பிடமாகவும்
கனடா ரொரன்ரோவை வதிவிடமாகவும் கொண்ட

**அமரர் பொன்னுத்துரை நேசகுமார்**
(NESA)


நேசமுடன் எம் மடியில் தவழ்ந்த நேசா!
பார்விட்டு பன்னிரண்டு மாதம் ஐயா!
உன் காந்த விழிப் பார்வைகள்
எம்மிதயத்தில் நிற்குதையா!
மலரே நீ காயாவாய் கனியாவாய்
எனும் எங்கள் க்னவுகளை நனவாக்கி
மொட்டாகக் கருகி நீ எங்கு போனாய்?
நிதமும் உனைத்தேடும் இதயத்தால்
உமது ஆத்மசாந்திக்காய் அன்றாடம்
துதிசெய்வோம்.

குப்பிளான்.

தகவல்:
சித்தப்பா குடும்பம்
வே.செல்வராசா

(39363)(42.14.)

# எங்கள் குருநாதருக்கு எமது கண்ணீர் அஞ்சலி



தோற்றம்
16
09
1925

மறைவு
25
08
2005

அமரர்
## கணபதிப்பிள்ளை சிவராமலிங்கம்பிள்ளை
(முன்னாள் பிரதி அதிபர், யாழ். இந்துக் கல்லூரி)

யாழ். இந்துவின் ஒப்பற்ற மைந்தா
பின்வந்த இந்து மைந்தர் எம்மை
ஆளுமை மிக்கவராக்கிட மிகு அர்ப்பணிப்புடன்
நற்பணி செய்த எம் ஐயாவே!
இந்து அன்னையின் எழுச்சிக்காய் உங்கள்
வாழ்வைச் செலவிட்ட செம்மல் நீங்கள்
நின்அன்பு கருணைதனை நாம்நினையாக் கணமில்லை
உன்தன் தெய்வீக வசீகரம் என்றென்றும் எம்மனதிருக்கும்!
எங்களை அறிவுக் கிளைகளாக்கி ஆனந்தம் அடைந்தீர்கள்
மாண்புற்று மணம்பரப்பும் யாழ். இந்து வரலாற்றில்
மின்னிடும் உங்களது பொன் முத்திரையும் பதிந்திடும்!
எந்நேரமும் எவர்க்கும் இனியவராய் விளங்கிய எம் குருவே
ஏற்றிடுவீர் எமது நெஞ்சு நெகிழ் அஞ்சலியை

(C/44831) (52)

**யாழ். இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம்**
**ஐக்கிய இராச்சியம்**

JAFFNA HINDU COLLEGE OLD BOY'S ASSOCIATION
UNITED KINGDOM

## மனமுவந்து வாழ்த்துகின்றோம்

மக்கள் வங்கியின் பிராந்திய முகாமையாளராகப் பதவி உயர்வுபெற்றுள்ள

உயர்திரு.

**துரைசிங்கம் ரகு**



அவர்களை மேலும் பல பதவி உயர்வுகள் பெற்று நம்நாட்டிற்கும் மக்களுக்கும் பல சேவைகளைப் புரிய வேண்டுமென வாழ்த்துகின்றோம்.

(26-14-17)

**ராசி சில்க்ஸ்**
70, 71A, நவீனசந்தை (உட்புறம்),
யாழ்ப்பாணம். 021 - 222 - 5571.

**பசன் ஏசியா**
117/A, W.A. De silva mawatha,
Wellawatte, Colombo - 06.
0112 366505.

**நல்லி சில்க்ஸ்**
121/1, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
021 - 222 - 5578.

(சி-44821)



## மனமுவந்து வாழ்த்துகின்றோம்

மக்கள் வங்கியின் பிராந்திய முகாமையாளராகப் பதவி உயர்வுபெற்றுள்ள

உயர்திரு.

**துரைசிங்கம் ரகு**



அவர்களை மேலும் பல பதவி உயர்வுகள் பெற்று நம்நாட்டிற்கும் மக்களுக்கும் பல சேவைகளைப் புரிய வேண்டுமென வாழ்த்துகின்றோம்.

**மகாராசி சில்க்ஸ்**
59, நவீன சந்தை உட்புறம்,
யாழ்ப்பாணம். 021 222 8399.

(சி-44880)(26-14-17)


# கேள்வி அறிவித்தல்

## வலயக் கல்வி அலுவலகம் - வலிகாமம்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கான கேள்வி வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளரினால் 2005ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 8ஆம் திகதி ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்றையதினமே மு.ப. 10.30 மணிக்குத் திறக்கப்படும். அச்சமயம் விரும்பும் கேள்விதாரர் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி சமுகமளிக்கலாம்.

| தொ. இல. | பாடசாலையின் பெயரும் வேலை விபரமும் | மீளளிக்கப் படாத வைப்புப்பணம் | மீளளிக்கப்படும் வைப்புப் பணம் | இக்ராட் இல. |
|---|---|---|---|---|
| 01 | யா/ புன்னாலைக் கட்டுவன் ஆ.த.க.பாட. 2 மாடி வகுப்பறைக் கட்டடம் நிர்மாணித்தல். | 250/- | 4250/- | எம்.9 |

01.(அ)மேற்படி வேலைக்கு இக்ராட் (ICTAD) நிறுவனத்தின் 09 உம் அதற்கு மேற்பட்ட தரத்திற்கும் பதிவுசெய்து கொண்டவர்கள் விண்ணப்பிக்கத் தகுதிபெற்றவர்களாவர்.

(ஆ) பாடசாலை அபிவிருத்திச் சங்கம் தங்களால் இவ்வேலையைச் செய்துமுடிக்க முடியுமானால் தங்கள் பாடசாலைக்குரிய கேள்விப்பத்திரங்களைப் பெற்று விண்ணப்பிக்கலாம். பாடசாலை அபிவிருத்திச் சங்கத்திற்கு முதலாம் பந்தி (அ) இல் குறிப்பிட்ட சுட்டிட்டமும் மீளளிக்கக்கூடிய/ மீளளிக்கமுடியாத வைப்புப்பணமும் விதிவிலக்களிக்கப்பட்டுள்ளது.

02. கேள்விப்பத்திரங்களில் பெறுமதி சேர்வரி (VAT) 15% சேர்க்கப்பட்ட கேள்வித்தொகை பெறுமதி சேர்வரி (VAT) 15% சேர் சேர்க்கப்படாத கேள்வித்தொகை என்பன தனித்தனியாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

03.மேற்படி வேலைக்கான கேள்விப்பணத்தை வலிகாமம் கல்வி வலயத்தில் வலயக் கல்விப் பணிப்பாளரின் வங்கிக் கணக்கில் வைப்புச் செய்து அல்லது இக்காரியாலயத்தில் நேரடியாகச் செலுத்தி 2005-08-29ஆம் திகதியிலிருந்து 2005-09-07 ஆம் திகதி நண்பகல் 12மணி வரை வலிகாமம் கல்வி அலுவலகப் பாடசாலை வேலைகள் கிளையில் பொறியியலாளரிடம் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

04. விண்ணப்பங்கள் யாவும் இரு பிரதிகளில் பூர்த்தி செய்து மூலப் பிரதியும் எம்மால் வழங்கப்படும் ஒப்பந்த நிபந்தனைப் படிவமும் கையொப்பம், இறப்பர் முத்திரை என்பன இடப்பட்டு அவற்றினையும் கேள்விப்பத்திர இணைப்பிரதியினையும் தனித்தனி இரு கடித உறைகளில் இட்டு, கடித உறையின் இடப்புற மேற்பக்கத்தில் வேலையின் விவரம் எழுதப்படல் வேண்டும். தனித்தனியே கடித உறைகளில் போடப்பட்ட இரு பிரதிகளையும் பிறிதொரு கடித உறையிலிட்டு, ஒட்டப்பட்டு, ஒப்பந்தகாரரின் முத்திரை இடப்பட்டு, மருதனார்மடத்திலுள்ள வலிகாமம் வலயக் கல்வி அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியில் 2005 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 08ஆம் திகதி மு.ப. 10 மணிக்கு முன்னர் இடப்படல் வேண்டும். மேற்குறிப்பிட்ட காலத்திற்குப் பிந்திய கேள்விப் பத்திரங்கள் எக்காரணங்கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

05.தெரிவுசெய்யப்பட்ட கேள்விதாரர் தெரிவுசெய்யப்படும் திகதியிலிருந்து 03 மாத காலத்திற்குள் அனைத்து வேலைகளையும் பூர்த்திசெய்து கையளிக்கவேண்டும். எதுவித காலதாமதங்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. சரியாக நிரப்பப்படாத, பிழைகள் கூடிய, தெளிவற்ற கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

06.கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பார்வையிடுவதுடன், மேலதிக விவரங்களையும் பாடசாலை வேலைகள் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

திரு.ப.விக்னேஸ்வரன்,
வலயக்கல்விப் பணிப்பாளர்,
வலயக்கல்வி அலுவலகம்,
வலிகாமம்.

மருதனார்மடம்,
சுன்னாகம்.
2005-08-26.

(C/44816)(26-14-17)


## பணிப்பெண் தேவை

யாழ்.நகரில் பிரபல நிறுவனம் ஒன்றுக்குப் பணிப்பெண் தேவை. விரும்புவோர் நேரில் வரவும். சம்பளம் பேசித் தீர்த்துக் கொள்ளலாம்.

**40, கண்டி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் முன்பாக)


UNIVERSITY OF JAFFNA, SRILANKA

# VACANCY

University of Jaffna will entertain applications from suitably qualified persons up to 29.09.2005 for the following post.

POST: MACHINE MINDER (DESK TOP PUBLISHING)

QUALIFICATIONS:

a) G.C.E. (Ordinary level) Examination in six subjects at not more then two sittings with Sinhala/Tamil/ English Language or Literature and Arithmetic/ Commercial Arithmetic/ mathematics and who have Successfully Followed the three years' Printing course at a Technical Institute and not less than eight years' experience in the relevant field in a large Printing Establishments.

*OR*

b) Pass in the 8th Standard or higher examination and not less than 12 years' experience in the relevant field in a large Printing Establishments.

SALARY

Rs. 10,210/- p.m. (Basic) (up to 31.12.2005)

Rs. 10960-3x110, 7x155, 7x185 - 13,670/- p.m. (Effective from 01.01.2006)

*Other allowances approved by University Grants Commission also be paid*

AGE: Not more than 45 years.

SELECTION: Practical test and Interview.

Application forms and other details may be Obtained from the office of the Senior Assistant Registrar/Establishments, either in person or by post, on a payment of Rs. 20/- per form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/ Postal Order drawn in favour of the *Bursar, University of Jaffana* together with a *self - addressed stamped envelope* 23x10 c.m. in size.

Applications sent on Specified Forms will only be accepted.

Applicants from the University System/Government Departments/ Corporations and Statutory Board should channel their applications through the Heads of respective institutions. Age limit is not applicable to those who are in service.

Applications which do not provide required information or those which do not confirm to other requirements and late applications will be erjected without intimation.

REGISTRAR
2005.08.2 5

(C/44815)


## மதுரை மீனாட்சி அம்மன்



அருள்வாக்கும் ஜோதிடமும்

K.V. கோவிந்தசுவாமி & ஸ்ரீ லட்சுமி

இந்தியாவிலிருந்து கணவன், மனைவி இருவரும் வருகைதந்துள்ளார்கள். இவர்கள் கைரேகை மூலம் நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப்போகின்றவை மற்றும் தொழில், வியாபாரம், விவாகப் பொருத்தம், கல்வி, வெளிநாடு செல்லும் வாய்ப்பு, நோய் போன்றவற்றிக்குப் பரிகாரம் கூறுவார்கள். ஒருமுறை சந்தித்துப் பாருங்கள்.(காலை 9 மணியிலிருந்து இரவு 8 மணி வரை)

தொடர்பு:- 50, Navalar Road, Jaffna. (Near Manohara Theartre Back side).
T.P:- 0776446525. (39294)(54-34-18)



## தேவை

Ms Office, தமிழ் Typing தெரிந்த பெண் வரவேற்பாளர் தேவை. தகைமைச் சான்றிதழ்களுடன் கீழ்க்குறிப்பிட்ட நாளில் நேரில் வரவும்.

1) 29.08.2005 திங்கட்கிழமை காலை 10-12 இற்கு இடையில்
2) 31.08.2005 புதன்கிழமை காலை 10-12 இற்கு இடையிலும்

**ACS** கணனி கற்கை நிறுவனம்,
மானிப்பாய் வீதி, கோப்பாய் சந்தி.

-இயக்குநர்.

(சி-44810)(21.17.14)


## சக்தி TV, சக்தி FM இன் 7வது பிறந்தநாள் கொண்டாட்டம் 2005

யாழ். மாவட்டத்திற்கான மாபெரும் சைக்கிள் ஓட்டப்போட்டி

### போட்டி நிபந்தனைகள்:

- ✓ போட்டியானது ஆண்/பெண் இருபாலாருக்குமானதாகும்.
- ✓ மேற்படி போட்டிகளில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த வீர/வீராங்கனைகள் மாத்திரமே பங்குபற்ற முடியும்.
- ✓ 15 வயதிற்கு மேற்பட்டோர் மாத்திரமே கலந்துகொள்ளமுடியும்.
- ✓ இவ்விண்ணப்பப்படிவத்துடன் கட்டாயமாக உறுதிப்படுத்தப்பட்ட தேசிய அடையாள அட்டை நகல் பிரதி ஒன்றையும் இணைத்து 05.09.2005 க்கு முன்னதாக கிடைக்கக்கூடிய வாறு பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**சக்தி TV, சக்தி FM சைக்கிள் ஓட்டப்போட்டி**
**C/o உதயன்**
**361, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

### விண்ணப்பப்படிவம்

முழுப்பெயர் :..............................
2. விலாசம் :..............................
3. பிறந்த திகதி :..............................
4. தொலைபேசி இல :..............................
5. தேசிய அ.அட்டை இல :..............................
6. பால் :..............................

மேற்கூறப்பட்ட நிபந்தனைகளுக்கமையவும், நடுவர்களின் தீர்ப்புகளிற்கும் ஏற்பாட்டாளர்களின் நிபந்தனைகளுக்கு அமையவும் இப் போட்டியில் கலந்துகொள்கிறேன் என்பதை இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

.......... ..........
திகதி கையொப்பம்

# இந்திய அணியின் எதிர்காலம்...?

**தொடர்** தோல்விகள், முன்னணி நட்சத்திரங்கள் உபாதைகளுக்குள்ளாகியிருக்கின்றமை ஆகிய காரணங்களால் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருக்கிறது இந்திய கிரிக்கெட் அணி.

விழுந்து கிடக்கும் அணியைத் தூக்கி நிமிர்த்தி மீண்டும் பழைய நிலைக்குத் கொண்டு வருவதற்கெனப் புதிதாகப் பதவியேற்றுள்ள பயிற்றுவிப்பாளர் சப்பலுக்கும் என்ன செய்வதென்று தெரியாத இக்கட்டான நிலை. போதாக்குறைவாக அணியின் ஒழுக்க விதிகளைக் கடைப்பிடிக்க மறுக்கும் முன்னணி வீரர்கள். இத்தனைக்கும் மத்தியில் இந்திய அணியின் கிரிக்கெட் பயணம், படுமோசமான நிலைக்குச் சென்றுகொண்டிருக்கிறதெனக் கிரிக்கெட் ரசிகர்களும், விற்பன்னர்களும் அடிக்கடி வெளிப்படையாகவே ஆதங்கப்பட்டுக் கொள்கிறார்கள்.

அண்மையில் இலங்கையில் 'இந்தியன் ஒவில்' கிண்ணத்துக்கான ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டி நடைபெற்றது. இந்தியா, இலங்கை, தென்னாபிரிக்க அணிகள் இதில் மோதின.

இந்தப் போட்டியில் இலங்கை அணியுடன் முதல் இரு ஆட்டங்களிலும் தோல்வியடைந்த இந்திய அணி, இறுதிப் போட்டியிலும் இலங்கை அணியின் வலுவான - நிதானமான ஆட்டத்தினால் 'இந்தியன் ஒவில்' கிண்ணத்தைக் கோட்டைவிட்டது.

இரு அணிகளுக்கும் புதிய பயிற்றுவிப்பாளர்கள். இந்திய அணியின் பயிற்றுவிப்பாளராக ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் வீரர் கிரேக் சப்பல் பதவியேற்ற பின்னர் அந்த அணி பங்கேற்கும் முதலாவது சர்வதேச ஒருநாள் போட்டி இது. கிரேக் சப்பலுக்கு ஆரம்பமே தோல்வியில் முடிந்தது. இதேவேளை, இலங்கை அணியைப் பொறுத்தவரையில் புதிய பயிற்சியாளராக ஆஸ்திரேலியரான ரொம்மோடி பதவியேற்றபின்னர் கிடைத்த முதல்வெற்றி. மோடிக்கு ஆரம்பமே வெற்றி தான். இரு அணிகளினதும் பயிற்றுவிப்பாளர்களும் ஆஸ்திரேலியர்களாக இருந்தமையால் இந்தப்போட்டி ஆவுஸ்திரேலியர்களுக்கிடையிலான போட்டியாகவே கருதப்பட்டது.

இப்போது முத்தரப்பு ஒருநாள் போட்டி சிம்பாவேயில் நடக்கிறது. இந்தியா, சிம்பாவே, நியூசிலாந்து அணிகள் இதில் பங்கேற்கின்றன. இதன் முதல் ஆட்டத்தில் பங்களாதேஷுக்கு எதிராக ஓட்ட மழை பொழிந்தது நியூசிலாந்து.

இரண்டாவது போட்டி நேற்றுமுன்தினம் சிம்பாவேயின் புலவாவோ நகரில் நடந்தது. நாணயச் சுழற்சியில் வென்ற நியூசிலாந்து அணி துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. 13 ஓவர்களில் 5 விக்கெட் இழப்புக்கு 36 ஓட்டங்கள் என்ற பரிதாப நிலையில் இருந்த நியூசிலாந்து பின்னர் 43 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 215 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்குத் துடுப்பெடுத் தாடியது இந்திய அணி. ஆயினும் மூன்றாவது ஓவரின் இரண்டாவது பந்தில் முதல் ஆளாக வெளியேறினார் இந்திய அணித் தலைவர் செளரவ் கங்குலி. இதனையடுத்து வேணுகோபால், ராகுல் ராவிட், முகமட் கைவ், வீரேந்தர் சேவாக் என முன்னணி வீரர்கள் அனைவரும் அடுத்தடுத்து வெளியேறினார்கள். இந்த வேளையில் இந்திய அணியின் அறிமுகவீரர் ஜெய்பிரகாஷ் யாதவ்- இர்பான் பதான் இணைந்து 144

## தொடர் தோல்விகள்; மீள்வதற்கு வழி என்ன?

பந்துகளில் 118 ஓட்டங்களைக் குவித்தனர். அறிமுகவீரர் யாதவ் தனது முதலாவது அரைச் சதத்தைப் பூர்த்திசெய்தார். இதன் மூலம் இந்திய அணி நியூசிலாந்து அணியிடம் கௌரவமாகத் தோற்றது.

இப்போதே தரவரிசைப் பட்டியலில் 7ஆவது இடத்தில் இருக்கும் இந்திய அணி மேலும் கீழிறங்கும் ஆபத்தான நிலையில் உள்ளதென்பதே தற்போதைய எதிர்பார்ப்பு.

**மீண்டும் கங்குலியா?**

இந்த நிலையில் இந்திய அணியின் தலைவராக மீண்டும் கங்குலி தெரிவானமைக்கு இந்திய அணியின் முன்னாள் தலைவரான கபில்தேவ் கடுமையாக எதிர்ப்புத் தெரிவித்துள்ளார். இந்திய அணியின் வெற்றிகளில் கங்குலியின் பங்களிப்பு மிகக் குறைவானதே. ஆரம்ப வீரராக அல்லது மூன்றாவது வீரராகக் களமிறங்கும் கங்குலி களத்துக்குச்சென்றவுடனேயே அரங்குக்குத் திரும்பிவிடுகிறார். அவரின் மோசமான விளையாட்டை அங்கீகரிக்கும் வகையில்தான் தேர்வாளர்கள் மீண்டும் அவரை அணித்



தலைவராகத் தேர்வு செய்துள்ளனர். திடீரெனத் தலைவரை மாற்றுவது அணி வீரர்களிடையே கசப்புணர்வை ஏற்படுத்தும் என்றார் அவர்.

**சச்சினால் சர்ச்சை**

இந்திய அணியின் நம்பிக்கை நட்சத்திரம் சச்சின் டெண்டுல்கர் இடது முழங்கையில் ஏற்பட்ட காயம் காரணமாக மிக நீண்ட காலமாக அணியில் இடம்பெறவில்லை. தற்போது காயம் குணமாகி வருகிறது. கடந்த சில தினங்களுக்கு முன்னர் அவர் பயிற்சியையும் ஆரம்பித்துவிட்டார்.

ஒக்ரோபரில் உலகலெவன் அணி ஆஸ்திரேலியாவுடன் ஒரு ரெஸ்ட், 3 ஒருநாள் போட்டிகளில் ஆடவுள்ளது. இதற்கான உலகலெவன் அணி அண்மையில் அறிவிக்கப்பட்டது. டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளுக்கான அணியில் பாகிஸ்தான் அணித் தலைவர் இன்ஸமாம் உல்ஹக் சேர்க்கப்படவில்லை. ஆயினும் சச்சின் டெண்டுல்கர் சேர்க்கப்பட்டுள்ளார். இதனை இன்சமாம் கடுமையாக ஆட்சேபித்துள்ளார். பாக். கிரிக்கெட் சபையும் தனது அதிருப்தியை வெளியிட்டுள்ளது. உலக லெவன் அணியில் இன்ஸமாம் சேர்க்கப்படாதது எவ்வளவு அதிர்ச்சியானதோ, அந்தளவுக்கு சச்சின் சேர்க்கப்பட்டதும் அதிர்ச்சியான விடயமே எனப் பாகிஸ்தான் அணியின் முன்னாள் தலைவர் ஜாகிர் அப்பாஸ் தெரிவித்துள்ளார்.

**தேவா**

பல்வேறு பிரச்சினைகளுக்குள் சிக்கியிருக்கும் இந்தியக் கிரிக்கெட் அணி மீண்டும் எப்போது ஓர் உறுதியான - பலமான அணியாகப் பிரகாசிக்கப் போகிறது என்பதே இன்று எழுந்துள்ள கேள்வி. ✱

# ஈழத் தமிழ் மக்களின் அரசியல்...

(07 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மற்றது, இந் நூலுக்கான படங்கள். இந்தப் பாடல்களைப் படித்துவிட்டு குழந்தைகள் என்ன நினைக்கிறார்கள் என்று அறிவது பொருத்தமெனக் கருதினேன். இந்தப் பாடல்களைப் பள்ளிகளில் கொடுத்து, அப்பாடல்கள் பற்றிய படங்களை வரையுமாறு ஆரம்ப வகுப்பு மாணவர்களைக் கேட்டேன். அவர்களும் ஆர்வத்தோடு நிறைய வரைந்து தந்தனர். அவற்றில் இரண்டு பாடல்களுக்கு வரையப்பட்ட மாணவர்கள் சிலரது படங்களை இணைத்திருக்கிறேன். ஒவ்வொரு மாணவனும் வித்தியாசமாகப் பார்க்கும் நிலையை இப்படங்களிலே காணலாம். நூலின் முகப்பு அட்டைப்படத்தை வரைந்தவர் 4 வயதுப் பிள்ளை எனது பாடல்களைப் படித்து இரசித்து தமது மனநிலைக்கேற்ப சிறுவர்கள் வரைந்ததைப் போட்டிருக்கிறேன்.

✱ *கேள்வி:* இப்போது என்ன எழுதிக் கொண்டிருக்கிறீர்கள்?

● பதில்: எடுத்த மலர்களும் தொடுத்த மாலையும் என்றொரு நூலை அச்சிட்டுக் கொண்டிருக்கிறேன். இதிலே 'எடுத்த மலர்கள்' என்பது நான் முன்பு எழுதிய கவிதைகளில் சிலவற்றைத் தேர்ந்தெடுத்துத் தொகுத்தது. 'தொடுத்த மாலை' என்பது 1995ஆம் ஆண்டு இடம்பெயர்வையும், அதன் பின்னரான வாழ்க்கைச் சம்பவங்களையும் எடுத்து விளக்கும் வகையிலான பாடல்களைக் கொண்டது. இடம்பெயர்வின் பின்னரான நமது பாடுகளை இது சொல்கிறது.

✱ *கேள்வி:* நீங்கள் ஒரு கல்வி உளவியல் விரிவுரையாளராக, பலாலி ஆசிரிய கலாசாலையின் உப அதிபராக இருந்துள்ளீர்கள். உளவியலில் முதுமானிப் பட்டம் பெற்றுள்ளீர்கள். நீண்டகாலம் கல்விப் புலத்தில் இயங்கியவர். அந்த வகையில் நமது கல்விமுறை தொடர்பில் உங்களது அவதானிப்பு என்ன?

● *பதில்:* நமது கல்விமுறை பற்றிச் சொல்வதென்றால் அது ஆயிரம் பீத்தல்கள் (ஓட்டைகள்) உள்ள சேலை என்றுதான் சொல்லாம் அதிலே எங்கே ஓட்டையை அடைப்பதென்பதுதான் பிரச்சினை. ஏனெனில் கல்வியின் எல்லா அம்சங்களிலும் குறைகள் உள்ளன. இதில் எது பிழை. எதைச் சீர்செய்யலாம் எனக் கண்டறிவது கடினம். கிராமத்தில் சொல்லுவார்கள் 'ஆச்சி சமைச்ச மயிருக்கை ரண்டு கீரையும் கிடக்குது' என்று பிழைகள் குறைகள் நிறைய இருக்கின்றன. நல்ல விசயங்களும் இரண்டொன்று உள்ளன.

கல்விமுறை பற்றிப் பேசுவதென்றால் அதற்குத் தனியாக ஒரு செவ்வியே தரலாம். இப்போதெல்லாம் புலமைப் பரிசில் பரீட்சை, இந்தப் பரீட்சை அந்தப் பரீட்சையிலை என்ன குறைவு? அதை எப்படி நிவர்த்திப்பது? என்றெல்லாம் உங்களது பத்திரிகைகளிலெல்லாம் செய்திகள், பேட்டிகள் வெளிவருகின்றன.

**Arm Chair Education** என்று சொல்வார்கள். சார்மனைக் கதிரையில் இருந்துகொண்டு கல்வியைத் திட்டமிடுவதே இங்கு நடக்கிறது. அப்படிக் கல்வியைத் திட்டமிடமுடியாது. வகுப்புக்களுக்குள் நுழைந்து, பிரயோக ரீதியாகக் கற்பித்தலை மேற்கொண்டு, பிள்ளைகளின் நிலையை அறிந்து இந்தக் கல்வி உருவாக்கப்படவில்லை. கல்விக்கொள்கையை வகுப்போர், கல்வி அதிகாரிகள் எனப்படுவோர் ஒரு நாளாவது வகுப்பறைக் கற்பித்தலைச் செய்திருப்பார்களா என்பது சந்தேகமே. வகுப்பறையில் என்ன நடக்கிறது என்பதைத் தெரியாமல், சார்மனைக் கதிரையில் அமர்ந்திருப்பவர்களே இப்போது கல்வியைப் பற்றி நிறையக் கதைத்துக் கொண்டிருக்கிறார்கள். எப்படிக் கறிசமைக்கிறது என யாரும் சொல்லலாம். ஆனால், "சமைத்தல்லோ காட்ட வேணும்".

கிரிக்கெற் விளையாட்டிலும் **Armchir Creeketers** என்று இருக்கிறார்கள். அவர்கள் ஒரு நாளும் கிரிக்கெட் மட்டையைத் தொடாதவர்கள். ஆனால், கிரிக்கெட் பற்றிக் கதைத்து ஆலாபனை செய்வார்கள். அவர்களைப் போலத்தான் இந்தக் கல்வி அதிகாரிகளும்.

கல்வி பற்றிப் பிரசங்கம் நிகழ்த்துகிறார்கள். சுவாரஸ்யமாய், பொழுது போக்காய் கதைக்கின்றார்கள். அண்மையில் கோப்பாயில் மூன்று நாள் கல்விக் கருத்தரங்கொன்று நடைபெற்றது. எல்லோரும் கூடி முஸ்பாத்தியாக , சுவையாகக் கதைத்தார்கள். மாணவர்களின் பிரச்சினைகள், கல்வியில் கொண்டுவரக் கூடிய மாற்றங்கள் பற்றியெல்லாம் ஆக்க பூர்வமாக கதைக்க வேண்டியுள்ளது. ஆனால் அங்கே அப்படிக் கதைக்கப்படவில்லை. சும்மா அது இப்பிடி இது அப்படி எனக் கூறிக் கொண்டே நேரம் கழிக்கப்பட்டது.

**மன அழுத்தங்களில் இருந்து விடுபட ஓவியங்கள் வரைகின்றேன்**

✱ *கேள்வி:* நீங்கள் ஓர் ஓவியரும் கூட ஓவியம் வரையும் ஆர்வம் எவ்வாறு ஏற்பட்டது?

● *பதில்:* நான் ஹாட்லிக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த காலம். ஆங்கில இலக்கியம் படித்துக்கொண்டிருந்தேன். அப்போது பாலத்தின் மீது அமர்ந்துகொண்டு ஒரு காலை உயர்த்தியபடி ஒருவன் மீன் பிடித்துக் கொண்டிருக்கும் படத்தை வரைந்திருந்தேன். எங்கள் பாடசாலையின் ஓவிய ஆசிரியராக எஸ்.ஆர்.கனகசபை இருந்தார். அவர் அந்தப் படத்தைப் பார்த்து விட்டு **Very Good** எனக் குறிப்பு இட்டு, என்னை அழைத்தார். நீர் ஒரு சிறந்த ஓவியர்' எனப் பாராட்டினார். ஓவிய நுணுக்கங்களைக் கற்பித்தார். ஓவியம் வரையும் போது ஒரே கோடாக இழுக்க வேண்டும். பிறகு திருத்தங்கள் செய்யலாம் என்றும் அவர் கூறினார். அவரது குறிப்புக்களை உள்வாங்கிப் பல ஓவியங்களை வரைந்துள்ளேன்.

ஓய்வு நேரங்களிலும், மனம் பாரமாக இருக்கின்றவேளைகளிலும் நான் ஓவியத்தையே வரைவேன். நான் 1985ஆம் ஆண்டிலிருந்து இடம்பெயர்ந்துஒவ்வோர் இடங்களாகத் திரிந்து அல்லற்பட்டிருக்கிறேன். இவ்வாறு ஏற்பட்டதனால் நான் மன அழுத்தங்களோடுதான் வாழவேண்டியுள்ளது. ஆனால், அதற்காக யோசித்துத் துன்பப்பட்டுக் கொண்டிருக்க முடியாது. மன அழுத்தங்களிலிருந்து விடுபடுவதற்காகவே நான் ஓவியங்களை வரைகிறேன். எனது ஓவியத்தின் அடிப்படை இதுதான்.

நான் வெளிப்பாட்டுச் சித்திரங்களையெல்லாம் வரைந்திருக்கிறேன். கடற்கரையில் போய் அமர்ந்திருந்து கடற்கரைக் காட்சிகளை வரைந்திருக்கிறேன். இவையெல்லாம் எனது மன ஆறுதலுக்காகவே. இவற்றை நான் பத்திரிகைகளுக்கோ வேறெங்கேனுமோ கொடுப்பதில்லை.

✱ *கேள்வி:* அடுத்தது உங்களது அரசியல் பக்கம் தமிழ்த் தேசிய அரசியலின் ஆரம்ப கர்த்தாக்களுள் ஒருவராக நீங்களும் இருந்துள்ளீர்கள். உங்களது ஆரம்பகால அரசியற் செயற்பாடுகளைக் கூறுங்கள்?

● *பதில்:* எனது அரசியல் ஈடுபாட்டைச் சொல்வதென்றால் அது நீண்ட கதையாகிவிடும். 1937ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரையான தமிழர்களின் அரசியல் வரலாற்றுக்கு நானொரு சான்றுத் தூணாக இருக்கிறேன் என்று சுருக்கமாகச் சொல்லலாம். 1947ஆம் ஆண்டு அரசியல் யாப்பை உருவாக்கிய சோல்பரி குழுவினர் யாழ்ப்பாணம் வந்த போது நான் ஹாட்லிக் கல்லூரியில் மாணவர் ஒன்றியத் தலைவராக இருந்தேன். நான் ஆங்கிலம் நன்கு பேசக் கூடியவனாக இருந்ததால் எமதுகல்லூரி ஆசிரியரான வோல்ரன் என்பவர் என்னை அழைத்துச் சென்று சோல்பரி குழுவினரைச் சந்திக்க வைத்தார். **Rest House** இல் நான் சோல்பரி, பிரடெரிக், பரோஸ் ஆகிய மூவரையும் சந்தித்துக் கதைத்தேன். இது பற்றி இந்து மகளிர் கல்லூரிச் சஞ்சிகையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியை ஆரம்பித்த கர்த்தாக்களுள் நானும் ஒருவன். செல்வநாயகந்தான் தமிழரசுக் கட்சி என்று பெயரை வைத்தவர். கொழும்பு காலி முகத்திடலில் நாகநாதனின் மருந்தகத்திலிருந்து நாங்கள் காரில் வந்துகொண்டிருந்த போதுதான் தந்தை செல்வநாயகம் இப்பெயரைத் தெரிவு செய்தார்.

தந்தை செல்வா அறங்காவற் குழுவினர் அண்மையில் பல்கலைக்கழகத்தில் எனக்கு விருது தந்தபோது கூறினார்கள் '' தந்தை செல்வா சச்சி இல்லாமல் வெளிக்கிடமாட்டார்'' என்று. தந்தை செல்வாவுக்கு ஒரு வகையில் நான் ஆலோசகராகவும் இருந்துள்ளேன்.

முதல் முதல் காலி முகத்திடலில் சத்தியாக்கிரகம் செய்யவேண்டுமென்று செல்வநாயகத்தைத் தூண்டி, அதைச் செய்வித்தவர்கள் நானும் பொட்டா நடராசாவுந்தான். அதேபோல காங்கேசன்துறையிலிருந்து திருமலை யாத்திரையை ஆரம்பித்ததும் நானே கச்சேரி முன்பாக நடந்த சத்தியாக்கிரகத்தில் ஆள்களைச் சேர்த்து வந்து, அதிலே அமர்ந்து அடிவாங்கியவர்களில் நானும் ஒருவன். நாகநாதனுக்குப் பொலீஸார் அடித்த 'பற்றன்' தடி முறிந்தது, ஜீப்பை மறித்து நாகநாதன் கழுத்தைக் கொடுத்தது..... இதுகளையெல்லாம் நேரிலை கண்டு அனுபவிச்சவன். அதுகளை விடுங்கோ. அமிர்தலிங்கம் எவ்வளவோ காலத்துக்குப் பின்னர்தான் கட்சியிலை சேர்ந்தவர். பழைய தமிழரசுக் கட்சிக்காரர்களில் கந்தையா, அருணாசலம், அரசரத்தினம் போன்ற சிலர்தான் இன்றுள்ளனர்.

**சோதிடம் ஒரு விஞ்ஞானமன்று**

✱ *கேள்வி:* இறுதியாக , நீங்கள் ஒரு வானியல் வல்லுநர். வான சாஸ்திரம், சோதிடம் இரண்டுக்கும் இடையிலான ஒருமைப்பாடென்ன?

● *பதில்:* வானசாஸ்திரம் ஒரு விஞ்ஞானக் கணிப்பு. சோதிடம் அதை வைத்துக் கொண்டு பலவிதமான பலன்களைச் சொல்வது. சோதிடத்தை ஒரு விஞ்ஞானமென்று சொல்லமுடியாது. ஓர் அறிவும் இல்லாதவன் எழுந்தமானத்தில் பலன்கள் சொல்லும் நிலை சோதிடத்தில் உள்ளது. வானியல் முற்றிலும் விஞ்ஞான அடிப்படையிலான கணிப்பே.

சோதிடம் பற்றிச் சொல்லும் போது தந்தை செல்வநாயகம் சொன்ன ஒரு கதைதான் ஞாபகத்துக்கு வருகிறது.

கிரேக்க தேசத்திலே தம்மில் அரசனாக வருவது யார் என்று அறிவதற்காக இரண்டு சகோதரர்கள் ஒரு சோதிடரிடம் போனார்களாம். அந்தச் சோதிடன் ' உங்களில் யார் தாயை முதலில் முத்தமிடுகிறாரோ அவர் தான் அரசன்' என்று சொன்னானாம். உடனே இருவரும் போட்டி போட்டுக்கொண்டு தாயை முத்தமிட ஓடினார்கள். போகும் வழியில் ஒருவன் தடக்கி நிலத்தில் வீழ்ந்து விட்டான். மற்றவன் ஓடிச் சென்று முதலில் தாயை முத்தமிட்டான். அவன்தான் அரசனென்று எல்லோரும் நம்பினார்கள். ஆனால், தடக்கி விழுந்தவன்தான் அரசனாக வந்தான். உடனே மற்றவன் சோதிடனிடம் சென்று கேட்ட போது சோதிடன் சொன்னானாம் இந்தப் பூமித்தாயை அவன் முதலில் முத்தமிட்டான் அதனால்தான் அரசனானான்' என்று!

நான் இப்போது 'வேத வானியல்' என்றொரு நூலைஎழுதிக் கொண்டிருக்கிறேன். மேலைத்தேச வானிலையைப் போல எமக்கென்றொரு கீழைத்தேச வானியல் இருக்கிறது. அது பற்றிய விளக்கங்களை இந்நூலில் நான் குறிப்பிட்டுக்காட்டவுள்ளேன்.

(முற்றும்)

German Technical Cooperation

## ஸ்ரீலங்கா – ஜேர்மன் அபிவிருத்தி கூட்டுறவகம்

## பணிநிலைக்கான வெற்றிடங்கள்

ஜேர்மன் தொழில்நுட்ப கூட்டுறவகத்தின் **(GTZ)** உதவியுடன் வடபகுதி புனரமைப்புத் திட்டம் ஸ்ரீலங்காவின் வடபகுதியில் பணியாற்றுகின்றது. வட பகுதி புனரமைப்பு திட்டம் (**NRP**) அதன் நிகர் இணை பங்காளரான அரச நிறுவனங்களுடன் மாவட்ட, பிரதேச, சமூக மட்டங்களில் அபிவிருத்தி தொடர்பான திட்டமிடல்களில் பிரதேச மட்டத்திலும், தேசிய மட்டத்திலும் துணைபுரிகின்றது. வடபகுதி புனரமைப்புத் திட்டம் தற்போது பிரதேசவாரியாக தந்திரோபாயம் மிக்க திட்டமொன்றை அதனது பல்வேறு பிரதேசங்களில் நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்களை ஒருங்கிணைத்துச் செயற்படுத்தும் நோக்குடன் திட்டமிட்டுக் கொண்டிருக்கின்றது. இவை வட பகுதியில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்கள் - கிழக்குப் பகுதியில் திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்கள் ஆகும்.

ஜீ. ரீ. இசற் தகுந்தவர்களிடமிருந்து பின்வரும் பணி நிலைக்கான விண்ணப்பங்களைக் கோருகின்றது.

**சமூக அபிவிருத்தி இணைப்பாளர் (1 பதவி)**

விண்ணப்பதாரி சமூகத்தினரதும், பங்காளரினதும் இணைந்த அபிவிருத்தி செயற்பாடுகளை ஊக்குவிப்பவராகவும், அவற்றை பலப்படுத்துபவராகவும், சமூக அபிவிருத்தி நடவடிக்கைகளில் பங்களிப்புடனான அணுகு முறையை செயற்படுத்துபவராகவும் இருத்தல் வேண்டும்.

பணிநிலையின் பிரதான கடமைகள்:

* சமூகமட்ட வாழ்வாதார செயற்றிட்டங்களை முகாமை செய்தல், உருவாக்குதல், முன்னேற்றல், இணைந்து செயற்படுத்தி, திட்டத்தை நடைமுறைப்படுத்தல்.
* சமூக அபிவிருத்தியை பங்களிப்புடனான கற்றல், படிமுறைகளூடாக நடைமுறைப்படுத்த ஊக்குவித்தல். அத்துடன் நின்று நிலைக்கக் கூடிய வாழ்வாதார முறைகளை கைக்கொள்ளல்.
* சமூக அபிவிருத்திக்கான தந்திரோபாயங்களுக்கு அமைவாக உள்ளீடுகளை வழங்கல்.
* களநிலை கண்காணிப்பு மற்றும் பங்காளர் சமூக செயற்றிட்டங்களை மேற்பார்வையுடனான கண்காணிப்பு செய்வதற்கு உகந்ததாக களநிலைகளைப் பார்வையிடல் அத்துடன் தேவைக்கு ஏற்ற ஆதரவினை ஏனைய ஊழியருக்கு வழங்கல்.
* மாதாந்த முன்னேற்ற அறிக்கைகளைத் தயாரிப்பதுடன், ஆய்வுகளை மேற்கொண்டு பரிந்துரைகளை வழங்கல்.

தேர்வுத் தகைமைகள்

* சமூக அபிவிருத்தித் துறை, நிறுவன அபிவிருத்தித் துறையில் இடர் உதவி நிலையில் இருந்து அபிவிருத்தி மேம்பாட்டு வளர்ச்சி நிலைக்கு நிறுவனத்தை மாற்றுதல் ஆகிய துறைகளில் சிறப்புத் தேர்ச்சி அல்லது மேற் கூறிய ஏதாவது ஒரு துறையில் சிறப்புச் தேர்ச்சி.
* இத்தகைய பணிநிலைகளில் 5 வருடங்கள் அல்லது அதற்கு கூடிய முன் அனுபவம். அத்துடன் பங்களிப்புடன் சேவையாற்றும் திறன்.
* பல்நோக்கு இலக்குகளை எய்தக் கூடிய வேலைத்திட்டத்தை வடிவமைக்கவும், வெளிப்படுத்தவும், முகாமை செய்யக் கூடிய திறன்.
* ஆங்கிலம், தமிழ் (சிங்கள மொழி அறிவு பெற்றிருப்பின் மேலதிக தகமையாக கருதப்படும்) மொழிகளில் பேச்சுத்திறன், எழுத்தாற்றல் திறன், சிறந்த அறிக்கைகள் தயாரிக்கும் தேர்ச்சியும், தொடர்பாடல் திறன்.

**சமூக அபிவிருத்தி ஊக்குவிப்பாளர்கள் (11 பதவிகள்)**

பணிநிலையின் பிரதான கடமைகள்:

* சமூகத்தின் சுய அபிவிருத்திக்கான நடைமுறைப்படுத்தக் கூடிய தந்திரோபாயங்கள் அடங்கிய நிலைத்து நிற்கக் கூடிய செயற்றிடங்களை வடிவமைத்தல்.
* சமூக அபிவிருத்தியை பங்களிப்புடனான கற்றல், படிமுறைகளூடாக நடைமுறைப்படுத்த ஊக்குவித்தல். அத்துடன் நிலைத்து நிற்கக் கூடிய வாழ்வாதார முறைகளை கைக்கொள்ளல்.
* சமூக தலைமைத்துவத்தை அபிவிருத்தி செய்தல், தொடர்பாடல்களை ஊக்குவித்தல், பங்காளர் செயற்பாடுகளை பலப்படுத்தல், முரண்பாடுகளைத் தீர்த்தல், வெளிநிலை (புற) தகவல்களையும், வளங்களையும் சமூகத்தினர் அடைந்து கொள்ள தேவையான இணைப்புச் செயற்பாடுகளை மேற்கொள்ளல். சமூக மட்ட நிகழ்வுகளையும் செயற்பாடுகளையும் ஊக்குவித்தல்.

தேர்வுத் தகைமைகள்

* சமூக அபிவிருத்தி துறையில் அல்லது சமூக சேவைத் துறையில் சிறப்புத் தேர்ச்சி அல்லது இவற்றிற்கு இணையான வேறு தகமைகள்.
* இத்தகைய பணிநிலைகளில் 2 அல்லது 3 வருடங்கள் முன் அனுபவம். அத்துடன் பங்களிப்புடன் சேவையாற்றும் திறன்.
* ஊக்குவிப்பாளர் துணையூக்கம் மிக்கவராகவும், செயற்றிறன் உள்ளவராகவும் தலைமைத்துவத்தைப் பகிரக் கூடியவராகவும் திட்டத்துடன் பூரண ஈடுபாட்டினைக் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.
* ஆங்கிலம், தமிழ் (சிங்கள மொழி அறிவு பெற்றிருப்பின் மேலதிக தகமையாக கருதப்படும்) மொழிகளில் பேச்சுத்திறன், எழுத்தாற்றல் திறன், தொடர்பாடல் திறன் போன்றவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**தகமையும், தகுதியும் வாய்ந்த பெண்பாலார் மேற்படி பணிநிலைகளுக்கு விண்ணப்பிக்க ஊக்குவிக்கப்படுகின்றனர்.**

சேவையாற்றும் இடங்கள் வடக்கு கிழக்கு மாகாணம்

சுருக்கத் தேர்வுப் பட்டியலில் தேர்வு செய்யப்படுவோரே தொடர்பு கொள்ளப்படுவர்.

மேற்படி பணிநிலைகளில் ஆர்வமுடையோர் தங்களது சுய விபரக்கோவையுடன் தொடர்பு கொள்ளப்பட வேண்டிய தகவல்களையும் கீழ்க் காணும் முகவரி / மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டப்படுகின்றீர்கள்.

விண்ணப்பதாரர்கள் தாம் விண்ணப்பிக்கும் பணிநிலையையும், சேவை செய்ய விரும்பும் இடத்தையும் குறிப்பிட்டு விண்ணப்பிக்கவும். விண்ணப்பங்கள் 07.09.2005ம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

**விண்ணப்பங்கள் வந்து சேரவேண்டிய முகவரி:**
**மனிதவள இணைப்பாளர்,**
**ஜீ. ரீ. இசற். அலுவலகம்,**
**இல. 6 ஜாவத்த அவென்யு,**
**கொழும்பு - 05**
**gtz-hrsrilanka@gtz.de**

German Technical Cooperation

## SRI LANKAN – GERMAN DEVELOPMENT COOPERATION

## VACANCIES

The German Technical Cooperation (**GTZ**) assisted Northern Rehabilitation Project (**NRP**) working in the North of Sri Lanka in conjunction with its government counterparts at district, divisional and community level, provides support at regional and national level particularly in development planning. NRP is currently planning a more strategic regional approach generating synergies between supported projects operational in the North (Jaffna, Killinochchi and Mullaitivu), and the East (Trincomalee, and Batticaloa).

**GTZ** seeks to recruit suitably qualified individuals for the positions of:

### Community Development Coordinator (1 post)

The incumbent will be responsible for facilitating community and counterpart collaborative development processes, strengthening counterparts and communities and providing assistance to community development through participatory approaches.

**Main tasks to be performed:**

* Manage, develop, promote, coordinate and implement community-based livelihood development projects and activities;
* Facilitate community development through Participatory Learning and Action, and Sustainable Livelihood Approaches;
* Provide inputs in terms of guidelines and strategy for community development;
* Conduct field visits to partner and community projects to monitor project advancement and provide appropriate support to staff;
* Prepare monthly progress reports and offer analysis and recommendations.

**Selection criteria:**

* Specialization in either community development and/or organizational development in relief to development setting;
* 5 or more years of experience in a similar position; experience of working collaboratively;
* Demonstrated ability to devise and manage a work programme to achieve multiple objectives;
* Fluency in English, and Tamil (knowledge of Sinhala advantageous) verbally and in writing; excellent report writing and communication skills.

### Community Development Facilitators (11 posts)

**Main tasks to be performed:**

* Assists the community to formulate and implement strategies, Programmes, and projects for sustainable community self-development;
* Facilitate community development through Participatory Learning and Action, and Sustainable Livelihood Approaches;
* Develop community leadership, facilitate communication, strengthen collaborations, resolve conflicts, link communities with outside sources of information and resources, facilitate local events and activities.

**Selection criteria:**

* Specialization in either community development or social work or equivaler
* 2-3 years of experience in a similar position; experience of working collaboratively;
* Ideally the facilitator should be inspirational, talented, able to share leadership, and committed to the Programme;
* Fluency in English, and Tamil (knowledge of Sinhala advantageous) verbally and in writing; good communication skills.

**Qualified and eligible female candidates are strongly encouraged to apply.**

Duty station will be in the North / East. Only short listed candidates will be contacted.

Interested candidates should submit their applications and CV along with contact details marked **Application for the post of Community Development Coordinator or Application for the post of Community Development Facilitator** *indicating preferred work location* addressed to the Human Resource Coordinator, GTZ-Office, 6, Jawatte Avenue, Colombo 5, or e-mail to gtz-hrsrilanka@gtz.de no later than 07th September 2005.

# இஸ்ரேலியர் வெளியேற்றம்: பலஸ்தீன அதிபர் மகிழ்ச்சி; ஷெரோனுக்குப் பாராட்டு




காஸாப் பகுதியை அடுத்தமாதம் அமைதியான முறையில் பலஸ்தீனர்களிடம் கையளிப்பதற்கான திட்டங்கள் தீட்டப்படுவதாக அறிவிக்கப்பட்டிருக்கும் அதேவேளை, ஜெருசலேம் பகுதியில் பலஸ்தீனருக்கும் இஸ்ரேலியருக்குமிடையில் வன்முறை வெடித்திருப்பதாகச் செய்திகள் வந்துள்ளன.

மேற்குக் கரையில் இஸ்ரேலியப் படையினர் நான்கு பலஸ்தீனியர்களைக் கொன்றுள்ளனர். அவர்களில் ஒருவர் இஸ்லாமிய ஜிஹாத் தலைவர் றிப்பி அமாரா என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜெருசலேமில் பலஸ்தீனியர் ஒருவர் தீவிர யூத பழைமைவாதி ஒருவரைக் குத்திக் கொன்றுள்ளார்.

றன.

வட அமெரிக்காவிலுள்ள முஸ்லிம் அறிஞர்களும் புத்திஜீவிகளும் இவ்வாறான அறிக்கையொன்றை அண்மையில் விடுத்துள்ளனர்.

முஸ்லிம் இளைஞர்கள் பயங்கரவாதத்தில் இறங்குவார்களானால் அவர்கள் இறைவனுக்கு எதிராகப் பாவம் செய்பவர்களாவார்கள் என்று அவர்கள் அறிவித்துள்ளனர். தற்கொலைக் குண்டுத்தாக்குதல்கள் இஸ்லாத்தில் ''ஹராம்'' தடுக்கப்பட்டவை. அவ்வாறான காட்டுமிராண்டித்தனமான செயல்களில் ஈடுபடுபவர்கள் குற்றவாளிகளேயன்றி தியாகிகள் ஆகமாட்டார்கள் என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

தீவிரவாதத்திற்கோ பயங்கரவாதத்திற்கோ இஸ்லாத்தில் நியாயம் கற்பிக்க இடமே இல்லை. பொதுமக்களை இலக்கு வைத்து மேற்கொள்ளப்படும் எல்லாவிதப் பயங்கரவாதச் செயல்களும் இஸ்லாத்தின் 'ஹராம்' என்றே கருதப்படும் என்று அவர்கள் தெரிவித்துள்ளனர். வட அமெரிக்காவிலுள்ள 120 முஸ்லிம் குழுக்களும் தலைவர்களும் சேர்ந்து வெளியிட்டுள்ள இந்த அறிக்கையில் மேலும் பயங்கரவாதம் அல்லது வன்செயலில் ஈடுபடும் நபர்களுடன் அல்லது குழுக்களுடன் ஒரு முஸ்லிம் இணைந்து கொள்வது 'ஹராம்' ஆகும். எல்லா மக்களையும் பாதுகாப்பதற்கான சட்ட அமுலாக்கல் அதிகாரிகளுடன் ஒத்

துத் தெரிவித்தார். அதேவேளை, அமெரிக்க அதிபர் இஸ்ரேலியப் பிரதமரின் துணிச்சலைப் பாராட்டிச் செய்தி அனுப்பியுள்ளார்.


இஸ்ரேலியப் படைகள் மேற்குக்கரைக் குடியேற்றங்களுக்குள் நுழைந்தபொழுது மேற்குக்கரைவாசிகள் தடுப்புவேலிகளுக்குத் தீயிட்டுக்கொளுத்தியும் கூழ் முட்டைகளை எறிந்தும் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

பெண்களில் பலர் அழுது குளறியபடி 'உங்களுக்கு வெட்கமில்லையா என்று படையினரைப் பார்த்துக் கூச்சலிட்டனர். எங்கள் வாழ்வை நாசமாக்கிவிட்டீர்கள். ஆனால் நாங்கள் மீண்டும் இங்குவருவோம்' என்று கூறினார்கள்.

சனூர் பகுதியில் குடியேற்றவாசிகள் அமைத்திருந்த உலோகத் தடுப்புகளை படையினர் வெட்டிக்கொண்டு உள்ளே புகுந்தனர். முன்னர் பிரிட்டிஷ் படைகளால் அமைக்கப்பட்டிருந்த அரண்களில் ஒளித்திருந்த குடியேற்ற வாசிகளையும் அவர்கள் அகற்றி அப்புறப்படுத்தினர்.

கட்டடக் கூரைகளில் ஏறிக்கொண்டவர்களையெல்லாம் படையினர் கிரேன்களை பயன்படுத்திக் கீழே இறக்கினார்கள். மதத் தலைவர்கள் முன்வந்து பேச்சு நடத்தியமையினால் வன்முறைகள் பெரிதாக இடம்பெறவில்லையென்று படைகளின் தளபதி ஜெனரல் டான் ஹாலூட்ஸ் கூறினார்.

ஹோமேஷ் பகுதியில் படையினர் தடுப்பு



செல்லும்வரை நாம் ஓய்வுகொள்ளப்போவதில்லை என்று கூறினார்.

உங்கள் உடல்களைக் காயப்படுத்திய குண்டுகளும், உங்கள் உடல்களில் இன்னும் இருந்துவரும் காயங்களும் கௌரவச் சின்னங்கள். நீங்கள் செய்த தியாகங்களுக்கான பிரதிபலன்களில் ஒரு பகுதியை நாம் இன்று திரும்பப் பெறுகின்றோம். இஸ்ரேலியர் விலகிச்செல்வதற்கான பெருமையெல்லாம் உங்களுக்கும், தாயகத்திற்காகத் தங்கள் உயிர்களைத் தியாகம் செய்த வீரர்களுக்கும் உரியதாகும் என்று அப்பாஸ் அங்கவீனர்களான பலஸ்தீனர்களிடம் கூறினார்.

# ஜெருசலேம் நகரில் வன்முறை; ஜிஹாத் தலைவர் கொலை

### பெண்கள் போர்க்கொடி

பாகிஸ்தானில் பெண்களை அடக்கி ஆளும் ஆண் வர்க்கத்துக்கு எதிரான பெண்களின் செயற்பாடுகள் முன்னரைவிட இப்பொழுது தீவிரமடைந்திருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன. பொதுப் பணிகளில் ஈடுபடுவது, உள்ளூர் தேர்தல்களில் போட்டியிடுவது போன்ற பெண்களின் நடவடிக்கைகளை ஆண்களின் அமைப்புகளும் சமயத் தலைவர்களும் எதிர்த்து வந்துள்ளனர். ஆனால், இப்படியான தடைவிதிப்புகளைப் பாகிஸ்தான் பெண் அமைப்புகள் இப்பொழுது எதிர்க்கத் தொடங்கியுள்ளன. இதற்குப் பின்வரும் சம்பவத்தை உதாரணமாகக் காட்டலாம்.

பேஷாவரிலுள்ள ராஸியா சுல்தான்

# அமைதியைத் தொடர்ந்து முன்னெடுக்க இரண்டு தலைவர்களும் உறுதி

என்ற பெண்ணின் வீட்டிற்கு ஒருநாள் இரவில் வந்த இரு ஆண்கள் அவரை உள்ளூர் தேர்தலில் போட்டியிடவேண்டாம் எனக் கேட்டுக்கொண்டனர். அதனால் அவர் தனது போட்டியிடும் எண்ணத்தை மேலும் உறுதிப்படுத்திக்கொண்டார்.

பாகிஸ்தானின் வடமேல் எல்லை மாகாணத்தில் துணிகரமாக ஆண்களின் கெடுபிடிகளையும் பெண்கள் மீதான சட்டவிரோதத் தடைகளையும் எதிர்த்துப்போராடும் ஆயிரக் கணக்கான பெண்களைக் கொண்ட அமைப்பின் உறுப்பினர் இந்த ரஸியா சுல்தான்.

'அவர்கள் இரவில் வந்து தேர்தலில் போட்டியிட வேண்டாம் என்று வற்புறுத்தினார்கள். அப்படியானால் நான் போட்டியிடலாகாதென்று அதிபர் முஷாரப்பிடமிருந்து ஒரு கடிதம் கொண்டு வாருங்கள். இல்லையென்றால் என்னை யாரும் தடுக்கமுடியாது என்று கூறிவிட்டேன்' என்றார் ரஸியா.

இருந்தாலும் ஆண்களால் தனக்கு ஆபத்து வரலாம் என்று கருதி அவர் இராணுவ பாதுகாப்புக் கோரியுள்ளார்.

***

### இறைவனுக்கு எதிரான பாவம்

பிரிட்டனில் இஸ்லாமியத் தீவிரவாதிகள் நடத்திய தற்கொலைக் குண்டுத்தாக்குதல்களையடுத்து உலகெங்கிலுமுள்ள தீவிரவாதத்துக்கெதிரான இஸ்லாமிய அமைப்புகள் யாவும் இம்மாதிரி செயற்பாடுகளைக் கண்டித்து அறிக்கை விட்டுவருவதுடன் சில நாடுகளில் உள்ள முஸ்லிம் மதத் தலைவர்கள் பயங்கரவாதத்துக்குகெதிரான ''பத்வா'' (கட்டளை)களையும் வெளியிட்டு வருகின்

துழைக்கவேண்டியது சமூக மற்றும் சமயக் கடமையாகும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

மத்தியக்கிழக்கில் நிரந்தரமான அமைதிக்கு வழிவகுக்கும் நடவடிக்கைகளில் ஒன்றாகக்கருதப்படும் ஆக்கிரமித்த இடங்களிலிருந்து இஸ்ரேலியர் விலகிச் செல்லும் செயற்பாடு ஒருவாறு முடிவுக்கு வந்துள்ளது - முடிவுக்கு வந்துள்ளது என்பதைவிட முடிவுக்கு வருகின்றது என்று கூறுவதே பொருத்தமாகும்.

இப்பொழுது காஸாப் பகுதியிலிருந்து மட்டுமே குடியேற்றவாசிகள் முற்றாக வெளியேறியுள்ளனர். மேற்குக்கரைப் பகுதியிலிருந்து குடியேற்ற வாசிகளை வெளியேற்றுவதற்கான நடவடிக்கைகளில் இஸ்ரேலியப் படையினர் இறங்கியிருப்பதாகத் தகவல்

கள் வருகின்றன.

காஸாப் பகுதியிலிருந்து யூதக் குடியேற்றவாசிகளை அகற்றியகையோடு இஸ்ரேலியப் படைகள் கடந்த செவ்வாயன்று மேற்குக் கரையின் வடபகுதியில் கடும் எதிர்ப்பாளர்கள் வதியும் பகுதிகளில் புகுந்து நடவடிக்கைகளில் இறங்கியுள்ளனர். ஹோமேஷ் மற்றும் சனூர் பகுதியில் குடியிருப்பவர்கள் கடவுளால் இப்பகுதி தங்களுக்கு அருளப்பட்டவையெனக் கூறி அங்கிருந்து அசைய மறுத்துவருகிறார்கள். ஆனால், பலஸ்தீனர்களோவெனில் தமது எதிர்கால பலஸ்தீன நாட்டின் முக்கிய பகுதியாக இப்பகுதியிருக்கப் போவதாகக் கூறி வருகின்றார்கள்.

இப்பகுதிகளிலிருந்து வெளியேற விடாப்பிடியாக மறுத்துவரும் குடியேற்ற வாசிகளை அகற்றவும் அவர்களின் கட்டடங்களைத் தகர்க்கவும் படையினர் புல்டோசர்களையும் கிரேன்களையும் பயன்படுத்திக் கடுமையாக நடந்துகொள்கிறார்கள். குடியேற்ற வாசிகளின் எதிர்ப்பு மிக மோசமாகவிருக்கக்கூடும் என்று எதிர்பார்க்கப்பட்ட போதிலும் அந்த அளவுக்கு அத்துமீறிப் போகவில்லை என்று அவதானிகள் கூறுகின்றனர்.

### அப்பாஸ் ரெலிபோனில் பாராட்டு

காஸாப் பகுதியிலிருந்து இஸ்ரேலியர் வெற்றிகரமாக வெளியேற்றபட்டிருப்பதற்காகப் பலஸ்தீன அதிபர் மாஹ்மூத் அப்பாஸ் இஸ்ரேலிய பிரதம ஏரியல் ஷெரோனுக்கும் இஸ்ரேலிய அதிபர் மெஸ்ஷே கார்சாபிளக்குக்கும் ரெலிபோனில் பாராட்

வேலிகள் எரிக்கப்பட்ட நிலையில் முட்கம்பிகளுக்கூடாக நுழைந்துசென்று அங்கு மறைந்திருந்தவர்களை அப்புறப்படுத்தினார்கள்.

### ஷெரோன் - அப்பாஸ் விரைவில் சந்திப்பு

காஸாப் பகுதியிலிருந்து இஸ்ரேலியர் விலகியதையும் மேற்குக்கரையிலிருந்து குடியேறிகள் அகற்றப்படுவதையும் அடுத்து பலஸ்தீன தலைவர் மஹ்மூத் அப்பாஸும் இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷெரோனும் தொலைபேசியில் உரையாடியபோது அமைதி முயற்சியின் அடுத்தகட்ட நகர்வு பற்றி ஆலோசித்துள்ளார்கள்.

விரைவில் இருதலைவர்களும் சந்திப்பதற்கு இணங்கியிருந்தபோதிலும் அதற்கான திகதி குறிக்கப்படவில்லையென்றும் தகவல்கள் வெளியாகின.

தொலைபேசி உரையாடலின்போது ஷெரோனின் செயற்பாடுகளைத் துணிச்சலும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது மான நடவடிக்கை என அப்பாஸ் பாராட்டியுள்ளார்.

இருதரப்பு மக்களுக்கிடையிலும் ஒரு புதிய பக்கம் திறக்கப்பட்டுள்ளது. இந்த இருதரப்பு மக்களது அமைதிக்காகவும் இருபிரதேச எதிர்கால நன்மைக்காகவும் இருதலைவர்களும் பாடுபடவேண்டும் என்று அப்பாஸ் வலியுறுத்தியுள்ளார்.

காஸாப் பகுதியில் 21குடியிருப்புகளும் காலி செய்யப்பட்டுவிட்டதாக அறிவிக்கப்பட்டதையடுத்து அப்பாஸ் - ஷெரோன் தொலைபேசி உரையாடல் 5 நிமிடங்களுக்கு நடைபெற்றது. கடந்த ஜூன் 21 ஆம் திகதி இருதலைவர்களும் சந்தித்துப் பேசியதையடுத்து நடைபெற்றுள்ள இருதரப்பு உரையாடலாகும் இது.

அமைதியைத் தோற்றுவிப்பதில் ஒரு தரப்புப் பங்காளியான தாம் அர்ப்பணிப்புடன் செயற்படப்போவதாக அப்பாஸ் தெரிவித்திருக்கிறார்.


இதேவேளை, இவ்விருதலைவர்களும் அமைதித்தீர்வு ''றோட்மாப்'' திட்டத்தின்படி இரு தரப்பு மக்களின் வாழ்க்கை நிலைகளை மேம்டுத்துவது பற்றியும் தமது உரையாடலின்போது ஆலோசித்தனர் என இஸ்ரேலியத் தரப்புப் பேச்சாளர் ஒருவர் தகவல் வெளியிட்டார்.

காஸா நகரில் யுத்தத்தில் காயமடைந்த பலஸ்தீன அங்கவீனர்கள் 400 பேர் அடங்கிய கூட்டமொன்றில் பேசிய அப்பாஸ் இஸ்ரேலியக் குடியிருப்புகளிலிருந்து அவர்கள் விலகிச் செல்வதற்கான ஆரம்பம் மட்டுமே இது. நாம் எமது கண்களை மூடிக் கொண்டிருக்கப்போவதில்லை. எமது முழு நிலப் பகுதியிலிருந்தும் அவர்கள் விலகிச்

### ஈராக் அரசமைப்புத் தயார்?

ஈராக்கிற்கான புதிய அரசியல் யாப்பு பெரும்பாலும் முழுமை பெற்று விட்டதாக நம்பப்படுகிறது. ஆனால் ஈராக்கிலுள்ள சன்னி முஸ்லிம் பிரிவினர் இன்னமும் திருப்தியடையவில்லையென்று செய்திகள் கூறுகின்றன.

ஈராக்கிற்கான அரசியல் யாப்பு வரைவில் ஏற்பட்டிருந்த முட்டுக்கட்டைகள் யாவும் அநேகமாகத் தீர்க்கப்பட்டுவிட்டதாக ஈராக் பிரதமர் இப்றாகிம் அல்-ஜாபாரி தெரிவித்



துள்ள அதேநேரம், சன்னி அராபியர்கள் அந்த யாப்புப் பாகுபாடு காட்டுவதாகக் கூறி எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறார்கள். மக்கள் தீர்ப்புக்கு வரும்போது அதனைத் தோற்கடிக்கப் போவதாகவும் அவர்கள் சூளுரைத்துள்ளனர்.

யாப்பின் 153 அத்தியாயங்களில் 151 அத்தியாயங்கள் அங்கீகரிக்கப்பட்டுவிட்டன. அரசின் இணைப்புத் தன்மை, பிரதேசங்களின் - மாகாணங்களின் அந்தஸ்து ஆகியவையும் இதில் அடங்கும் என்று பிரதமர் ஜாமாரி கூறியிருக்கிறார். எவ்வெவ் விடயங்களில் இன்னமும் முட்டுக்கட்டை நிலவுகின்றது என்பதை அவர் விளக்கவில்லை.

பெண்களின் உரிமைகள் உட்பட மனித உரிமைகள் விடயமும் தீர்க்கப்பட்டுவிட்டதாக அவர் கூறியுள்ளார்.

இந்த அரசியல் யாப்பு ஏற்றுக்கொள்ளப்படுமானால் சதாம் ஹுசைன் ஆட்சிக்குப் பிறகு ஈராக்கில் ஜனநாய முறையிலான மக்கள் ஆட்சியேற்பட வாய்ப்பு ஏற்படும் என்றும், ஈராக்கிலுள்ள வெளிநாட்டுப் படைகள் வெளியேற வழியேற்படும் என்றும் நம்பப்படுகின்றது.

## ஆன்மீகச் சொற்பொழிவு

வடமராட்சி, ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் கோயிலில் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெற்றுவரும் ஆன்மீகச் சொற்பொழிவு வரிசையில் இன்று ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.30 மணிக்கு 'இழிந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்' எனும் தலைப்பில் ஆசிரியர் எஸ்.பாலமுரளியின் சொற்பொழிவு இடம்பெறும். (எ-173)



## தேவை

பாவித்த நல்ல நிலையில் உள்ள Suntel தொலைபேசி தேவை.

தொடர்பு:- 0777 570284 (39326)(21.14)

## மணமகள் தேவை

1960 மிதுனம் (மிருகசீரிடம்) யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த பிரபல வர்த்தகர் ஒருவருக்கு 40 வயதிற்கு மேற்பட்ட டாக்டர், என்ஜினியர் அல்லது B.Sc. மணமகள் தேவை.

தகுதியானவர்கள் விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல.2685

மே/பா உதயன்

(21.14) (39307)

## மணப்பெண் அலங்கார வகுப்புகள்

வெள்ளவத்தை Nature Way இல் மணப்பெண் அலங்காரம், Facials, Wedding Structures, Rich Cakes, B'day Cakes, தையல் Flower Decorations என்பவற்றிக்கான Orders ஏற்றுக்கொள்ளப்படும். இவற்றுக்கான வகுப்புகள் சான்றிதழுடன் நடைபெறுகின்றன. T.Luxmy 18/B, Station Road, Wellawatte. Tel. 2505325. (39119)(21.14)

## தூரிகையின் மணநாள் சேவைகள்



*மணப்பெண் ஒப்பனை
*ஃபேஷியல்கள்
*ஐபுறோ ஷேப்பிங்
*திருமண கேக் அலங்கரிப்பு
*அழைப்பிதழ்கள் + அச்சிடல்
சுவரலங்காரங்கள்
கைதேர்ந்த கலைஞர்களின்
ஒன்றிணைந்த
சேவையில் பெற்றிட....

**தூரிகை**

ம.ம.வி. வீதி, நெல்லியடி.
T.P.: 077 9143171

(39266)(21.14)


## அறிவித்தல்

### யா/ பன்னாலை சேர் கனகசபை அ.த.க.பாடசாலை-தெல்லிப்பழை

### 150ஆவது ஆண்டு நிறைவு விழாவும், பரிசளிப்பு வைபவமும் மலர் வெளியீடும்

18.09.2005 ஆம் திகதி நடைபெற உள்ள மேற்குறித்த நிகழ்வில் இணைந்துகொள்ளவிரும்பும் பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள், பாடசாலை தொடர்பான ஆரம்பகால ஆவணங்கள், புகைப்படங்கள் போன்றவற்றைப் பேணி வைத்திருக்கும் அன்பர்களும் தாமதமின்றி எம்முடன் தொடர்பை ஏற்படுத்துவதை அன்புடன் எதிர்பார்க்கிறோம்.

சி.சிவராஜன்
அதிபர்

(39310)(21.14)



## பணிநிலை வேண்டுகை

கிளிநொச்சியில் அமைந்துள்ள கே.பி.கே. தனியார் ஒப்பந்த காரர் நிறுவனத்தில் கடமையாற்றுவதற்காகக் கீழ்க் குறிப்பிடும் பணிநிலைக்கான வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

**01. கட்டட பொறியியலாளர்**
**02. தொழில்நுட்ப உத்தியோகத்தர்**

⇨ சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். அடிப்படை வசதிகள் ஏற்படுத்தித் தரப்படும். ஓய்வுபெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம்.

⇨ தகைமையுடையோர் நேரடியாகவோ தபால் மூலமாகவோ கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

பணிப்பாளர்
கே.பி.கே.ஒப்பந்தகாரர் நிறுவனம்(தனியார்)
பசுந்தவு அரைக்கும் ஆலை, இரத்தினபுரம், கிளிநொச்சி. (39358)

## இப்பொழுது BBS மானிப்பாய் ஆலடிச்சந்தியில்....

ஆங்கிலம் முற்றாகத் தெரியாத வளர்ந்தோருக்கான விசேட ஆங்கிலப் பாடநெறி

காலம் 6 மாதம்

ஆங்கில மொழி மூலம் பாலர் பாடசாலை பாட விதானங்கள்

PLAY GROUP [2+ முதல் 3+ வரை]
MONTESSORI SCHOOL [3+ முதல் 4+ வரை]
PRE-SCHOOL [4+ முதல் 5+ வரை]

விசேட அம்சங்கள்
- ஆங்கில மொழி மூலமான சிறந்த கற்பித்தல் முறை
- தமிழ் ஒரு தனிக் கட்டாய பாடமாக கற்பிக்கப்படும்

சிறார்களுக்கான ஆங்கிலப் பாட நெறிகள்

5+ to 14+ சிறார்களுக்கு
- PRE-FOUNDATION
- FOUNDATION
- LOWER INTERMEDIATE
- INTERMEDIATE
- UPPER INTERMEDIATE

**Year 1-5 English Medium**

Week End Classes நடாத்தப்படும்.

மேற்கூறப்பட்டயாவும் எமது யாழ் நகர் வளாகங்களில் நடாத்தப்படுவது போன்று மானிப்பாய் வளாகத்திலும் சிறந்த கொழும்பில் பயிற்றப்பட்ட ஆசிரியர்களினால் நடாத்தப்படும்.

- Diploma in English
- Certificate in English
- IELTS

**PRE - FOUNDATION**

ஆங்கிலம் முற்றாக தெரியாத 5 வயது தொடக்கம் 8வயதுக்கு இடைப்பட்ட சிறுவர்களுக்கான விசேட ஆங்கில பாடநெறி காலம் 6 மாதம்

**BRITISH BUSINESS SCHOOL**

| | | | |
|---|---|---|---|
| இல:140, கோவில் வீதி, யாழ்ப்பாணம். | பருத்தித்துறை சாலை, கிராமக் கோட்டடி, புலோலி. | இல:174,கண்டி வீதி, யாழ்ப்பாணம். | இல:252, யாழ்ப்பாண வீதி, ஆலடிச்சந்தி,மானிப்பாய். |

HOT LINE : 021-222-5796



## தலைமுடியைப் பாதுகாக்கும் உதிர்வதைத் தடுக்கும் பயோட்டினெக்ஸ்-E

**பயோட்டினெக்ஸ்-E** தலைமுடி உதிர்தல், உடைதல், நுனி வெடித்தல் ஆகியவற்றை முற்றாகத் தடுப்பதோடு சருமத்தில் சுருக்கம் விழுவதைக் குறைத்து அதனை மென்மையாகப் பாதுகாக்கும். விட்டமின் E, விட்டமின் H ஆகிய இரண்டுமே மிகச்சரியான அளவில் அடங்கியுள்ளதால் உங்கள் கேசத்திற்கும் சருமத்திற்கும் நிறைவான போஷாக்குத் தரும்.

**பயோட்டினெக்ஸ்-E** ஆரோக்கியமான கேசத்தையும் மென்மையான சருமத்தையும் பெறும் உங்கள் ஆசைக்கனவை நனவாக்க, தினமும் இரண்டு கெப்சூல் **பயோட்டினெக்ஸ்-E** எடுங்கள்.




விட்டமின் E+H அடங்கியது

எச்சரிக்கை!
போலி உற்பத்திகள் உள்ளதால் விட்டமின் E + H அடங்கிய பயோட்டினெக்ஸ்-E என்று கேட்டு வாங்குங்கள்

அருமையான கூந்தல்... அழகான மேனி...

Wizards TMS

இறக்குமதிசெய்து விநியோகிப்போர்:
ஆர்கெம்-கொழும்பு. தொலைபேசி :2470290


## 31ஆம் நாள் நினைவு அஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு 20 - 07 - 1933



உதிர்வு 29 - 07 - 2005

அமரர்

## விநாயகமூர்த்தி திருஞானசம்பந்தர்

தெய்வமே எங்கள் திருமனையின் உயர்தலைவா!
ஐயா ஓ அப்பா, மாமா, எம்அப்பப்பா, சித்தப்பா
பாசக்குரலோ பரவசமாய் ஓசைதரும்
ஆசைக் குரலை அன்போடு பார்க்கின்றோம்
கோவிற் கருவறைகள் எங்கணுமே நீங்கள்தான்
பூவிற்குள் காட்சிதந்து... எங்கள் உடல் சிலிர்க்குதப்பா!
திருஞான சம்பந்தம் ஒன்றியதே சுடர்ஒளியில்
ஒருமித்துப் பிள்ளைகள் உணர்கின்றோம் ஓம் சாந்தி!
ஓம்சாந்தி! ஓம்சாந்தி! ஓம்சாந்தி.

இன்று (28.08.2005) ஞாயிற்றுக்கிழமை மு.ப.11.00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நிகழும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு: இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்.

18,பிரம்படி ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (39304)(21.14)

-குடும்பத்தினர்.




# பிள்ளையார் பிடிக்க குரங்கான கதை.....

இந்தியாவின் நீண்டகாலக் கனவு ஒன்று கடந்த வியாழக்கிழமை நனவாகியுள்ளது. அன்று தான் இந்தியாவில் முதல் தடவையாக மாநிலங்களிடையேயான நதிகளை இணைக்கும் ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்தானது.

இந்திய நாடாளுமன்ற வளாகத்தில் உள்ள பிரதமர் அலுவலகத்தில் உத்தரப் பிரதேச மாநில முதலமைச்சர் முலாயம் சிங்யாதவ் மத்தியப் பிரதேச மாநில முதலமைச்சர் பாபுலால் கவுர், இந்திய நீர்வள அமைச்சர் பிரியரஞ்சன் தாஸ் முன்ஷி ஆகியோர் ஒப்பந்தத்தில் பிரதமர் மன்மோகன் சிங் முன்னிலையில் கையெழுத்திட்டனர்.



இந்த ஒப்பந்தத்தின் மூலமாக உத்தரப் பிரதேசத்தின் கென்நதியும், மத்தியப் பிரதேசத்தின் பெட்வா நதியும் இணைக்கப்படும். கென் நதியில் பாயும் மேலதிக தண்ணீர் 231 கிலோ மீற்றர்கள் நீளமான கால்வாய் மூலம் பெட்வா நதியை வந்தடையும். இந்தியப் பெறுமதியில் 4 ஆயிரம் கோடி ரூபா செலவில் இத்திட்டம் செயற்படுத்தப்படும். இதன் மூலம் இரு மாநிலங்களிலும் சுமார் 8 மாவட்டங்கள் பயன் பெறவுள்ளன.

வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்த ஒப்பந்தம் மூலமாக இரு மாநிலங்களிலும் உள்ள பொது மக்கள் பயன்பெறுவர் என்று பிரதமர் மன்மோகன்சிங்கும் -

நதி நீர் பங்கீடு குறித்து சச்சரவில் ஈடுபட்டு வரும் இதர மாநிலங்களுக்கு இது முன்மாதிரியான திட்டம் என்று உ.பி.முதல்வர் முலாயம் சிங்யாதவும் -

முன்னாள் பிரதமர் வாஜ்பாயின் கனவுத் திட்டத்தை இன்று நனவாக்கி விட்டோம் என்று ம.பி.முதல்வர் பாபுலால்கவுரும் - இந்த ஒப்பந்தத்துக்குப் புகழாரம் சூட்டுகின்றனர்.

ஆனால், நதிகளை இணைப்பதால் மாநிலங்களிடையே பிரச்சினைகள் அதிகமாகும் என்று எதிர்ப்புக் குரல்களும் இந்தியாவில் எழ ஆரம்பித்துவிட்டன. தமிழகம் - கர்நாடக இடையேயான காவிரி நதி நீர்ப்பங்கீட்டுப் பிரச்சினையை உதாரணம் காட்டுகின்றன அந்தக் குரல்கள்.

கர்நாடக மாநிலத்தின் குடகுமலையிலிருந்து ஆரம்பமாகும் காவிரி நதி தமிழகத்தில் பாய்கின்றது. நதியின் குறுக்கே அணைகட்டி கர்நாடக நீரைத் தேக்குவதால் தமிழகக் காவிரி காய்ந்து போகிறது. வெள்ள அபாயம் வரும் மழைக்காலங்களில் மட்டும் மேலதிக நீரை தமிழகத்துக்கு அனுப்புகிறது. இந்தப் பிரச்சினை கர்நாடக மாநிலத்தில் தமிழர்களுக்கு எதிராக இனக்கலவரங்கள் நடக்குமளவிற்கு விஸ்வரூபமெடுத்துள்ளது. இந்திய அரசு நடுவர் மன்றம் அமைத்து பிரச்சினையை ஆராய்ந்து நடவடிக்கை எடுத்தபோதும் கர்நாடகம் - தமிழகம் இடையேயான காவிரி நதி நீர் பங்கீட்டுச்சிக்கல் அனுமார் வாலாகத் தொடர்கிறது.

இதனைச் சுட்டிக் காட்டும் எதிர்ப்பாளர்கள் மாநிலங்களின் அதிகாரத்திலிருந்து நதிகளை விடுவித்து அவற்றைத் தேசிய மயமாக்கினால் மட்டுமே நதிகள் இணைப்புத் திட்டம் வெற்றியடையும் என்று கூறுகின்றார்கள்.

இரு மாநிலங்களில் ஓடும் ஒரு நதியாக இருந்தாலும் சரி, வெவ்வேறு மாநிலங்களில் பாயும் நதிகளை இணைப்பதாக இருந்தாலும் சரி, சம்பந்தப்பட்ட மாநிலங்களில் ஒரே கட்சியோ அல்லது தோழமைக் கட்சிகளோ ஆட்சியில் இருந்தால் மட்டுமே நீர்ப்பங்கீடு ஓரளவு பெரும் பிரச்சினையாகாமல் இருக்கும். எதிரெதிர் அணிகள் ஆட்சியிலிருந்தால் இதனையே அரசியலாக்கி தீராப் பகையை உருவாக்கும் அபாயம் உள்ளது. இப்படி வாதிடுகிறார்கள் எதிர்ப்பாளர்கள் - தற்போதைய ஒப்பந்தத்தின் படி கென் நதியின் மேலதிக தண்ணீரே பெட்வா நதிக்கு விடப்படவுள்ளது. மேலதிக நீர் வரத்து குறையும் போது - அந்த வேளையில் மத்திய பிரதேசப்பகுதிக்கு தண்ணீர் தேவைப்பட்டால் - தண்ணீர் விடும்படி மத்திய பிரதேசம் கோரும். அதற்கு உத்திரப் பிரதேச அரசு மறுத்தால் நிலைமை சிக்கலாகும் என்று சுட்டிக்காட்டப்படுகிறது. ஆக, மொத்தத்தில் நதிகளைத் தேசிய மயமாக்காமல் அவற்றை இணைப்பது பிள்ளையார் பிடிக்கக் குரங்கான கதையாகவே முடியும்.

* * *

# யார் குற்றினாலும் அரிசியானால் சரி

இந்தியாவில் படிப்பறிவு குறைந்த, லஞ்சம் ஊழல் அதிகமுள்ள, சட்டம் ஒழுங்கு படுமோசமாகச் சீர்குலைந்த ..... இப்படி பல 'புகழ்களை' கொண்டது பீஹார் மாநிலம்.



இந்த மாநிலத்தில் அரசியல் அட்டகாசம் புரிந்தவர் லாலுபிரசாத் யாதவ். ஊழல் வழக்கில் சிக்கி முதல்வராகப் பதவியேற்க முடியாத போது கையெழுத்துப் போடக் கூடத் தெரியாத தனது மனைவியை முதல்வராக்கி இந்தியாவையே அதிர்ச்சியடையவைத்தவர் அவர். இவரை எதிர்த்து இங்கு அரசியல் நடத்துபவர் ராம்விலாஸ் பஸ்வான்.

ஆனால், லாலுவின் ராஷ்டிரிய ஜனதா தளமும் பஸ்வானின் லோக் ஜனசக்தியும் மத்தியில் ஆளும் காங்கிரஸ் கூட்டணியில் அங்கம் வகிக்கின்றன.

பீஹார் மாநிலத்தில் சமீபத்தில் தான் சட்டசபை தேர்தல் நடந்தது. அதில் ரயில்வே அமைச்சர் லாலு பிரசாத் யாதவின் ராஷ்டிரிய ஜனதா தளம் தோற்றது. ஆனாலும், பஸ்வானின் லோக் ஜனசக்தியின் 23 சட்டசபை உறுப்பினர்கள் யாருக்கு ஆதரவு தருகின்றனரோ அவர்கள் ஆட்சி அமைக்க முடியும் என்ற நிலை ஏற்பட்டது. லாலுவை மீறி ஆட்சி அமைக்க காங்கிரஸ் தயாரில்லை. அதனால், பஸ்வான் ஆதரவ சுந்தும் அதுமறுத்துவிட்டது. இன்னொரு பக்கம் பா.ஜ.அணியில் இருந்த நிதீஷ்குமார், ஆதரவைப் பெற்று அவரை முதல்வராக்க சில நிபந்தனைகளை விதித்ததால் அதுவும் முறிந்து விட்டது.

இந்நிலையில், பஸ்வான் கட்சி ச.சஉறுப்பினர் சிலர் பா.ஜ.பக்கம் போகத் தயாரானது தெரிந்து, இதுதான் சமயம் என்று காங்.மேலிடமும் சட்டசபையைக் கலைக்க முடிவுசெய்தது. அதன் கட்டளைப்படி மத்திய அரசும் சட்டசபையைக் கலைத்துவிட்டது.

பீகாரில் ஜனாதிபதி ஆட்சி மீண்டும் ஆறு மாதத்துக்கு நீடிக்கப்பட்டு உள்ளது. எதிர் வரும் நவம்பருக்குள் அங்கு சட்டசபைத் தேர்தலை நடத்தத் தேர்தல் ஆணையம் திட்டமிட்டுள்ளது. அப்போது, காங்கிரஸ் ஆதரவுடன் மீண்டும் ஆட்சியைப் பிடிக்க லாலு திட்டமிட்டுள்ளார். இதற்கு சோனியாவும் பச்சைக் கொடி காட்டிவிட்டார்.

ஆனாலும், காங்கிரஸ் அணியில் இருக்கும் பஸ்வானும் சரி, இடதுசாரிகளும் சரி, லாலுவை மீண்டும் ஆட்சியில் அமர்த்தக் கூடாது என்று கங்கணம் கட்டியுள்ளனர்.

அதனால், லாலுவை வீழ்த்தியே ஆகவேண்டும் என்று பகீரதப் பிரயத்தனம் செய்யும் பஸ்வான் இடது சாரிகட்சிகளுடன் மூன்றாவது அணி அமைத்து பீஹாரில் போட்டியிட்டால், வெற்றிநிச்சயம் என்று நம்புகிறார். லாலுவை ஆட்சிக்கு வரவிடாமல் செய்யும் முயற்சி என்பதால், இதற்கு பா.ஜ.வும் ஒரு வகையில் உதவலாம் என்று கணக்கு போடுகிறார் பஸ்வான். உத்தரப் பிரதேசத்தில் கொடிகட்டிப் பறக்கும் மாயாவதியின் பகுஜன் சமாஜக் கட்சிக்கு, பீஹாரில் எல்லையோர 35 தொகுதிகளில், தொகுதிக்கு 10 ஆயிரம் பேர் என்ற அளவில் ஆதரவாளர்கள் உள்ளனர். அந்த ஓட்டுக்களையும் பெறும் வகையில், பகுஜனுடன் உறவு வைக்கவும் பஸ்வான் முயற்சி செய்துவருகிறார். பஸ்பானைப் பொறுத்தவரையில் எவர் குற்றினாலும் அரிசியானால் சரியென்று லாலுவைத் தோற்கடிக்க எவருடனும் கூட்டுச் சேரத் தயாராகவே உள்ளார்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்தி பிரார்த்தனையும்

தலைவனாய் சுமை பல தாங்கி நல் வழி நடந்தாய்
நிழலாய் எம்மை என்றும் காத்து நிற்பாய்
தந்தையாய் மாமனாய் தாயாய் எமையாண்டாய்
கொக்குவில் பதி தனில் தேனாய் இனிக்கின்றாய்
இனி எப்போது உங்களின் இன்முகம் காண்பேம்
எங்கள் அன்புத் தெய்வத்தை தொழுதோம் விளக்கேற்றி
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



அமரர்
**பரராஜசிங்கம் சோமசுந்தரம் (சோமப்பா)**

அன்புத்தாயின் மடியில் 15.08.1945
விண்ணகத்தாயின் மடியில் 29.07.2005

உங்கள்
பிரிவால்துயருறும்:
மகள், மருமகன்,
உறவினர்கள்,
தேவன் குறிச்சி,
சமரபாகு, உடுப்பிட்டி.

(39300)(51-11-17)

## சமய சந்நிதி

பன்னாலை வர்த்தலம் கற்பக விநாயகர் ஆலய வருடாந்த பெருந் திருவிழா கடந்த 23 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்றுவருகின்றது.

எதிர்வரும் 2 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

(3-152-203)

43, Arasady Road,
Thaddatheru Junction,
Jaffna, Sri Lanka.
T.P: 021 2225170,
0777846811
Dip. in AutoCAD
Dip. in Internet E-Mail
தொழில்நுட்பக் கல்லூரி,
பல்கலைக்கழக
மாணவர்களுக்கான
பயிற்சி நெறிகள்
ஆரம்பம்
29.08.2005



## புதிய நதியா வழங்கும் வருடாந்த அன்னதானம்
## நல்லை துர்க்கா மணிமண்டபம் (28.08.2005) 19 ஆம் திருவிழா

நித்தம் நிதம் நல்லூரானை நினைந்து தொழில் செய்துவரும்
புத்தம் புதிய நகை மாடம் புதிய நதியா வழமை போல்
மெத்த பக்தி மிகக் கொண்டு மேன்மையுறு துர்க்கா மணி மண்டபத்தில்
மத்தியானம் திங்கள் மதியத்தில் மனமுவந்து அளிக்கும் அன்னதானமதில்
அத்தனை அடியவரும் ஒருங்கிணைந்து அன்னதானத்தில் பங்கு கொண்டு
சித்தம் மகிழ்ந்து எமது அன்னை சிவத்தமிழ்ச் செல்வியின் ஆசியுடன்
பக்தி பெருக நல்லூரான் தன் பாதம் பணிய வாருங்கள்

(39390) (25-15-18) ஆக்கம் விகடகவி

புதிய நதியா நகை மாடம்
இல.105, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். T.P.: 021 222 5261

## மரண அறிவித்தல்

### K.R.சிவலோகநாதன் விதுர்ஷன்



காங்கேசன்துறை வீதி, கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த K.R. சிவலோகநாதன் விதுர்ஷன் 25.08.2005 அன்று இந்தியாவில் காலமானார்.

அன்னார் K.R. சிவலோகநாதன் (இராசம் அரிசிஆலை, சுன்னாகம்) - இராஜதேவி தம்பதியரின் அன்பு மகனும் யதுர்ஷன், நிதுர்ஷன் ஆகியோரது சகோதரனும் இராசையா, இராசம்மா, செல்வராஜா, விமலாதேவி ஆகியோரது பேரனும் சச்சிதானந்தம், கைலாயபிள்ளை(சிறி - ரசிக்கா புறப்பிட்டி டெவலப்மன்ஸ்), சிவஞானசுந்தரம்(சிவா), விக்னேஸ்வரன், சிவகுமார், கங்காதரன், பாலசுப்ரமணியம், ஹேமலதா, பாமதி, அமுதா, தசிந்தா, கலாநிதி, றாஜினி, சுபாஜினி ஆகியோரது பெறாமகனும் சண்முகேஸ்வரன் (இளைப்பாறிய தொலைபேசி அத்தியட்சகர்), Dr.மகாதேவன்(யாழ்.போதனா வைத்தியசாலை), தேவராஜா (முகாமைத்துவ, வணிக பீடாதிபதி யாழ்.பல்கலைக்கழகம்), வசந்தகுமார், ஜெயக்குமார், விஜயகுமார், பூமணி, இராணி, லக்சுமிதேவி, சோதி, இந்தி, கலா ஆகியோரது மருமகனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (29.08.2005) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் இடம்பெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைக்காக மாலை 4 மணிக்கு கனத்தை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

K.K.S. வீதி,
கோண்டவில் மேற்கு.

(சி-44832) (25-15-18)

தகவல்:
க.இராசையா (பேரன்).

## ஓராண்டு நினைவஞ்சலி

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 04 - 07 - 1915 (யாழில்) | 29 - 08 - 2004 (சிங்கப்பூரில்) |



யாழ்ப்பாணம்,வாலையம்மன் கோயில் வீதி,
திருநெல்வேலி கிழக்கைச் சேர்ந்த
சித்த ஆயுள்வேத வைத்தியர்
**அமரர் சுப்பிரமணியம் கந்தையா**
அன்போடு ஆதரித்து திருவொடு சீரும் தந்து
சிறப்புடன் வாழவைத்த எமது உயிர்த் தந்தையே!
என்றும் அழியாத நினைவுகளுடன் உன் ஆத்மா
சாந்தியடையப் பிரார்த்திக்கும்
மகள், பேரப்பிள்ளைகள், பூட்டப் பிள்ளைகள்
(சிங்கப்பூர்).

(சி-44541) (25-15-18)

## சுகாதார சேவைகள் திணைக்களம் யாழ்ப்பாணம்
### தாதியர் பயிற்சி ஆள் சேர்ப்பு

மேற்படி விடயம் தொடர்பாக எம்மால் 26.08.2005 ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தில் 18.08.2005 ஆம் திகதிய வர்த்தமானி பத்திரிகை என்பதற்கு பதிலாக 08.08.2005 ஆம் திகதி என தவறுதலாக குறிப்பிட்டிருந்தது. இதனை 18.08.2005 ஆம் திகதிய வர்த்தமானி பத்திரிகையில் என திருத்தப்படுகிறது என்பதனை அறியத் தருகின்றோம்.

வைத்திய கலாநிதி.சி.எஸ்.சொலமன்,
தாய் சேய் நல வைத்திய அதிகாரி,
பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளருக்காக,
யாழ்ப்பாணம்.

(சி-44818) (25-15-18)

UNIT

Special Intel P4 package offer

All computers with 3 years complete Replacement warranty

Special offer price + Screen Filter, Dust cover, Mouse Pad & CD Cleaner

Imported special priced Compaq/ IBM PIII Tower Model with 500MHz, 600MHz, 733MHz & 1GHz

Hurry offer upto stock-in-hand only

347, K.K.S. Roacd, Manohara Theatre Junction, Jaffna
T.P: 021- 4590720

## கண்ணீர்க் காணிக்கை

யாழ்.S.V.முருகேசு நிறுவனத்தில் பணிபுரியும் ஊழியரான
தியாகலிங்கம் சிலம்பரசனின் தந்தையாரான
**அமரர் வேலுப்பிள்ளை தியாகலிங்கம்**

அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*158, ஸ்ராலி வீதி, யாழ்ப்பாணம்.* S.V. M. நிறுவனமும் (39404) (25-15-18)
சகநிறுவனமான சிற்றி ஏஜென்ஸி நிறுவனமும் ஊழியர்களும்.

## அளவெட்டி நாகேஸ்வர ஸ்ரீ நாகவரத ஆலய தீர்த்தத் திருவிழா 28.08.2005

*சிறப்பு நிகழ்ச்சி*

எஸ்.கே.உதயநாதன்-நாதஸ்வரம்-இணுவில், கே.கே.பவப்பிரியன்-நாதஸ்வரம்-காரைநகர் இவர்களுடன் தமிழகத்தில் இருந்து வருகைதந்துள்ள கலைமாமணி தவில் சக்கரவர்த்தி கரவேக ஞானபூபதி, தவில்சுடர் திருவாவடுதுறை ஆஸ்தான வித்துவான் மன்னார் குடி எம்.ஆர்.வாசுதேவனின் கச்சேரி இடம்பெறும். ஆர். முருகானந்தன்(நடுவிலான்)-கோண்டாவில், எம்.கணேசலிங்கம்(கண்ணன்)-தாவடி ஆகியோர் உடன் வாசிப்பர்.

(39397) (25-15-18) **உபயகாரர்.**

ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் துணை
*வர்த்தகச் சக்கரவர்த்தி இணுவில்*

## அமரர் சி.சின்னத்துரை

(ஸ்தாபகர் கல்கி ஸ்தாபனம்) அவர்களின் நினைவுப் பிரார்த்தனை வைபவம்



எங்கள் கிராமத்தின் வர்த்தகத்துறை முன்னோடியாக எங்கள் கிராமத்தில் கொடை வள்ளலாக பரராஜ சேகரப்பிள்ளையார் கோயில் திருப்பணி, இணுவில் கந்தசுவாமி கோயில் - உலகப் பெருமஞ்சம் புணர்நிர்மானப்பணி, இணுவில் இந்துக் கல்லூரி, இணுவில் மத்திய கல்லூரி அபிவிருத்திப்பணி இவற்றோடு இணுவில் மக்கள் வைத்திய சேவையை இலவசமாகப்பெற, தன் பென்னம் பெரிய வீடு வளவு - அரச டிஸ்பென்சறிக்கு அன்பளிப்பாக கொடுத்த அரிய பெருமனத்தானை இழந்து தவிக்கின்றோம். எமது கிராமத்துக்கு மட்டுமன்றி இலங்கை முழுவதிலும் பல்வேறு அறப் பணிகளில் பங்குகொண்ட பங்காளியை இழந்துவிட்டோம். அன்னாரது ஆத்மா சாந்திபெறவேண்டிப் பிரார்த்திக்கிறோம்.

பிரார்த்தனை இன்று (28.08.2005) ஞாயிற்றுக்கிழமை அமரரின் இணுவில் இல்லதில் மு.ப. 11 மணிக்கு நடைபெறும். ஆத்ம சாந்திப் பிரார்த்தனை உரைகளைத் தொடர்ந்து மதியபோசனம் நடைபெறும். அனைவரும் இவ்வைபவத்தில் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு வேண்டுகிறோம்.

அமரர் சி.சின்னத்துரை (சி-44833) (25-15-18)
குடும்பத்தவர்கள், இணுவில். *இணுவில் வாழ் மக்கள்.*

## மரண அறிவித்தல்

### *கனகசபை அருமைத்துரை (மகாலிங்கம்)*

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை அருமைத்துரை அவர்கள் நேற்று (27.08.2005) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் நீலாட்சியின் அன்புக் கணவரும் உதயசீலன் (இத்தாலி), காண்டீபன், ராதிகா, குணராஜ் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.08.2005) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*ஞானபண்டிதா வீதி, கொக்குவில் மேற்கு.* (39408) (25-15-18) **காண்டீபன்** (மகன்).

# பிரசாரத்துக்காக சிறிசேன குரே வருகிறார்

கொழும்பு, ஓக.28

ஐ.தே.கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான சிறிசேன குரே ஜனாதிபதித் தேர்தல் பிரசாரப் பணிக்காக இலங்கை வருகின்றார்.

தற்சமயம் ஆஸ்திரேலியாவில் தங்கியுள்ள அவர் அடுத்தவாரம் இலங்கை திரும்பி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாகப் பிரசாரத்தில் ஈடுபடவிருக்கின்றார்.

(ஐ-3)

# கட்சிப் பிரமுகர்களின் ஆதரவு கோருகிறார் ராஜபக்ஷ

கொழும்பு, ஓக.28

சுதந்திரக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரான மஹிந்த ராஜபக்ஷ தமக்கு ஆதரவு தருமாறு கோரி அரசியல் கட்சித் தலைவர்களைச் சந்தித்து வருகின்றார்.

இ.தொ.கட்சித் தலைவர் ஆறுமுகம் தொண்டமான், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் ஆகியோரை நேற்றுச் சந்தித்து அவர்களின் ஆதரவைக் கோரியுள்ளார்.

ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னணித் தலைவருமான ராஜித சேனரத்தினவை நேற்றுச் சந்தித்த ராஜபக்ஷ தமக்கு ஆதரவு வழங்குமாறு அவரிடமும் கோரியுள்ளார்.

ஐ.தே.கட்சிப் பிரமுகரான பந்துல குணவர்த்தனவையும் அவர் சந்தித்து ஆதரவு கோரினார் என்று தெரிவிக்கப்படுகிறது.

(ஐ-3)

## ராஜபக்ஷவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பக்ஷவின் குடும்ப ஜோதிடர் ஒருவரே இவ்வாறு ஆரூடம் வெளியிட்டிருக்கின்றார்.

ராஜபக்ஷவுக்கு கெட்ட காலம் நடக்கின்றது. இவ்வாண்டு அவர் தேர்தலில் போட்டியிட்டால் தோல்வியைத்தான் தழுவுவார். அடுத்த வருடம் தேர்தல் நடந்தால் அவருக்கு வெற்றி வாய்ப்பு பிரகாசமாக இருக்கிறது என்று அந்த ஜோதிடர் குறிப்பிட்டுள்ளார் என தென்னி லங்கை ஊடகச் செய்தி ஒன்று தெரிவித்தது.

(ஐ-3)

## தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

பெரும்பாலும் நவம்பர் 18 ஆம் திகதியன்று தேர்தல் நடத்தப்படும் என்று அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

(ஐ-3)

## தேர்தலைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அத்துடன் உள்ளூர் கண்காணிப்பாளர்களாக 20 ஆயிரம் பேரை பணியில் ஈடுபடுத்த உள்ளூர் கண்காணிப்புக் குழுக்கள் நடவடிக்கை எடுத்துள்ளன.

(ஐ-3)

CATWAS.COM
Computer Academy
No.26, Somasundram Avenue, Chundukuli, Jaffna
TP: 021 -222 3805

Microsoft Office 1750/-
Desk Top Publishing 2000/-
Diploma in Hardware 1800/-

Duration: One Month / Two Months / Three Months

✓ Online

வகுப்புக்கள் யாவும் 04/09/2005 01/09/2005 ஆரம்பமாகும்

# மரண அறிவித்தல்கள்

### *சின்னத்துரை யோகசுந்தரம்*

யாழ்ப்பாணம், கலட்டி இராமநாதன் வீதியைப் பிறப்பிடமாகவும் கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை யோகசுந்தரம் அவர்கள் 26.08.2005 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை - அருளம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சரவணமுத்து - கண்மணி தம்பதியரின் அன்பு மருமகனும் சகுந்தலாதேவியின் (சாந்தி) அன்புக் கணவரும் ஆஷா (கனடா), ருக்ஷா (அனு - கனடா), தனுஷா (டாலி) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் புவனேஸ்வரன், வசந்தகுமார் ஆகியோரின் அன்பு மாமனாரும் சிரோத்தி, கிஷோரி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (28.08.2005) ஞாயிற்றுக்கிழமை இராமநாதன் வீதியில் உள்ள அவரது இல்லத்தில் காலை 7 - 8 மணிவரை வைக்கப்பட்டு பின்னர் இறுதிக்கிரியைகளுக்காக கொழும்புக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

24, இராமநாதன் வீதி,
யாழ்ப்பாணம். (39400) (25-15-18) தகவல்:
T.P.:0776577549 **மனைவி, பிள்ளைகள்.**

### *வேலுப்பிள்ளை தியாகலிங்கம்*



காரைநகர், களபூமி வளுப்போடையைப் பிறப்பிடமாகவும் பொன்னாவளையை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை தியாகலிங்கம் அவர்கள் நேற்று (27.08.2005) சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.08.2005) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தில்லை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(39405) (25-15-18) தகவல்:
*பொன்னாவளை, களபூமி, காரைநகர்.* **குடும்பத்தினர்.**

### *ஞானமுத்து ஜேம்ஸ்*

அல்லைப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஞானமுத்து ஜேம்ஸ் (முன்னாள் இ.போ.ச.சாரதி) அவர்கள் 25.08.2005 வியாழக்கிழமை கர்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை(29.08.2005) திங்கட்கிழமை பி.ப. 3 மணிக்கு இல.4, குருசோல்ட் வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் நல்லடக்கத்திற்காக கானான் சேமக்காலை, ராஜபாதவீதி, கோப்பாய்க்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை, உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கெள்ளவும்.

(39403) (25-15-18) தகவல்
*41, குருசோல்ட் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.* **குடும்பத்தினர்.**

### *திருமதி சற்குணாநந்தம் தங்கம்மா (தங்கம்)*



காளிகோயிலடி, மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி சற்குணாநந்தம் தங்கம்மா அவர்கள் நேற்று (27.08.2005) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.08.2005) ஞாயிற் றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடை பெற்றுப் பூதவுடல் மல்லாகம் இந்து மயானத்தில் தகனஞ்செய் யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*மில் ஒழுங்கை* (39406) (25-15-18) **நா.பாலசிங்கம்**
*காளி கோயிலடி, மல்லாகம்.* (காந்தி - மெக்கானிக்)

### *சின்னத்தம்பி மகாலிங்கம்*

ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் நவாலியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி மகாலிங்கம் அவர்கள் நேற்று (27.08.2005) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.08.2005) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நவாலி தெற்கு,* (39407) (25-15-18) **தகவல்:**
*மனிப்பாய்.* **திருமதி மகேஸ்வரி** (மனைவி).


### *முத்துக்குமாரசுவாமிகுருக்கள் பிரபாகரசர்மா*

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் அரியாலை, சித்திவிநாயகர் கோயிலடியை வசிப்பிடமாகவும்கொண்ட முத்துக்குமாரசுவாமி குருக்கள் பிரபாகரசர்மா அவர்கள் நேற்று 27.08.2005 அன்று காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.08.2005) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

*16, அருளம்பலம் வீதி,* (39409) (25-15-18) தகவல்:
*சித்திவிநாயகர் கோயிலடி, அரியாலை.* **மனைவி, பிள்ளைகள்.**

EXPOAIR எக்ஸ்போ எயார்
your friend in the skies... வானத்தில் உங்கள் நண்பன்...



**தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை**
ஒதுக்கீடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்
கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360 290 / 1
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999
E-Mail : reservations@expoavi.com, jaffna@expoavi.com



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 29.08.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

சூரியகாந்தி

உதயன்

ஞாயிறு சிறப்பம்சம்

28.08.2005

# விதவைகளின் அரசியலில் மற்றொரு புதிய முகம்?



சுகந்தி கதிர்காமர்

**போ**ரில், வன்முறைகளில் துணைவர்களை இழந்த பெண்களின் அரசியல் பிரவேசத்தில் தென்னாசிய நாடுகளே முதலிடத்தில் இருந்து வருகின்றன என்பது சர்வதேசக் கணிப்பு.

ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா முதல் ஸ்ரீமானி அத்துலத்முதலி வரை இலங்கை அரசியலிலும் இது ஒரு நீண்ட பாரம்பரியமாக இருந்து வருகிறது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா கூட வன்முறைக்குத் தனது கணவரைப் பறிகொடுத்தவர்.

இப்போது இந்த வரிசையில் கடைசியில் வைத்துப் பேசப்படுபவர் திருமதி சுகந்தி கதிர்காமர்.

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் இறுதிச் சடங்குகள் முடிந்த கையோடு வெளிவரத் தொடங்கி இருக்கும் தகவல்கள் திருமதி கதிர்காமர் அரசியலில் பிரவேசிக்க ஆயத்தமாகிறார் என்ற பலமான ஊகத்தை ஏற்படுத்தியிருக்கின்றது.

அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் தனிப்பட்ட வாழ்க்கை தொடர்பாக அவரது மரணத்துக்குப் பின் வெளிவந்திருக்கும் தகவல்கள் மற்றும் அவரது குடும்பத்தினரிடையே உருவாகியிருக்கும் முரண்பாடுகள் அறிக்கை விடும் அளவுக்கு விவகாரமாகி இருப்பதும், கதிர்காமரின் குடும்பத்துக்குள் அரசியல் புகுந்து விளையாடுகின்றது என்பதைக் கோடி காட்டியிருக்கின்றன.

அமைச்சர் கதிர்காமரின் இரண்டாவது துணைவியார் தான் சுகந்தி கதிர்காமர். இவருக்குப் பிள்ளைகள் இல்லை. முதல் மனைவியான தமிழ்ப் பெண்ணுக்கு இரண்டு பிள்ளைகள். இவர்கள் வெளிநாடு ஒன்றில் வாழ்கிறார்கள். மிக நீண்ட காலத்துக்குப் பின்னர் தந்தையின் இறுதிச் சடங்கில் கலந்து கொள்வதற்காக பிள்ளைகள் இருவரும் கொழும்பு வந்தபோது, அவர்களது சித்தியாகிய சுகந்தி கதிர்காமருக்கும் அவர்களுக்கும் இடையிலான முரண்பாடுகள் வெளிச்சத்துக்கு வந்தன.

கதிர்காமரின் அஸ்தியைப் பெற்று அவரது அந்திமக் கிரியைகளை நிறைவேற்றுவதற்கு தங்களுக்குள்ள உரிமையை அவர்கள் வெளிப்படுத்தியபோது முரண்பாடு வலுத்தது.

அஸ்தி முறைப்படி தன்னிடமே தரப்படவேண்டும் என்பதில் பிடிவாதமாக இருந்த சுகந்தி கதிர்காமர், அதனைப் பெற்று அந்திமக் கிரியைகளை நிறைவேற்றிவிட்டார். களுத்துறை ஆற்றுமுகத்தில் கதிர்காமரின் அஸ்தி கலக்கப்பட்டது.

தந்தையின் அஸ்தியை தங்களுக்குத் தரமறுத்துவிட்ட சித்தியின் (சுகந்தி கதிர்காமர்) செயல்கண்டு குமுறிப்போன பிள்ளைகள் அஜித்தா கதிர்காமர், ராஹி கதிர்காமர் ஆகியோர் கடந்த காலத்தில் தங்கள் சித்தியுடனான உறவு பற்றிய விடயங்களைக் கொழும்பில் அவிழ்த்துவிட்டனர்.

பௌத்தலோக மாவத்தையில் உள்ள அங்கிலிகன் திருச்சபை தேவாலயத்தில் கடந்த 21ஆம் திகதி இடம்பெற்ற நன்றி செலுத்தும் ஆராதனையைத் தொடர்ந்து பிள்ளைகள் இருவர் சார்பிலும் அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டது. அந்த அறிக்கை குடும்ப முரண்பாடுகளின் உச்சமாக அமைந்தது.

"கதிர்காமரின் அஸ்தியைத் தங்களிடம் தரவேண்டும் அல்லது அதில் ஒரு பகுதியையேனும் குடும்பத்தவரிடம் கையளிக்கவேண்டும் என்று விடுக்கப்பட்ட கோரிக்கையை சுகந்தி முற்றாக நிராகரித்து மனிதாபிமானமற்ற முறையில் நடந்து கொண்டதன் மூலம் கதிர்காமரின் வாரிசுகளான எம்மை அவர் வஞ்சித்து விட்டார்

"எமது தந்தை சிறந்த கௌரவமான பாரம்பரியத்தைக் கொண்ட குடும்பத்தைச் சேர்ந்தவர். மக்கள் மத்தியில் உயர்வாக மதிக்கப்பட்டவர். அவ்வாறான பெருமைக்குரிய தனது மரணத்தின் பின்னர் தனது தந்தை, தாய், சகோதரர்கள் அடக்கம் செய்யப்பட்ட சமாதிக்கு அருகிலேயே தமது உடலும் அடக்கம் செய்யப்பட வேண்டும் என்று விரும்பினார். தந்தையின் அந்தக் கடைசி விருப்பத்தை நிறைவேற்ற முடியாத வகையில் சுகந்தி அனைத்தையும் சிதறடித்து விட்டார்" - என்று கதிர்காமரின் வாரிசுகளான பிள்ளைகள் இருவரும் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

தமது தந்தை கடந்த பத்தாண்டு காலத்துக்கு மேலாக ஒரு சூழ்நிலைக் கைதியாகவே இருந்தார் என்றும் அவரது பிள்ளைகள் கூறினர்.

"அவர் என்றைக்குப் பொதுவாழ்வில் கால் வைத்தாரோ அன்றைக்கே அவரை நாங்கள் இழந்து விட்டோம்" என்றும் அவர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

கதிர்காமரை ஒரு யுக புருஷர் போன்றும் அவரது கொலைக்கு விடுதலைப் புலிகளே காரணம் என்றும் காட்டி பெரும் பிரசாரத்தை முடுக்கி விட்ட ஜே.வி.பி. உட்பட சிங்களப் பேரினவாதிகள் இந்தக் குடும்பப் பிணக்கையும் தக்கவாறு பயன்படுத்த முனைந்துள்ளனர்.



கதிர்காமரின் பிள்ளைகளான அஜித்தா கதிர்காமர், ராஹி கதிர்காமர்.

"கதிர்காமரின் பிள்ளைகள் வெளிநாட்டில் புலிகளுக்கான நிதி சேகரிப்பாளர்களாகச் செயற்படுகின்றனர்" என்பது உட்பட பல்வேறு கட்டுக்கதைகளை ஜே.வி.பியினர் அவிழ்ந்து விட்டனர்.

தமிழ் மக்கள் மத்தியில் துளியும் அனுதாபம் எதுவும் இன்றிப் போய்விட்ட கதிர்காமரின் மரணத்தை தங்கள் அரசியலுக்குப் பயன்படுத்துகின்றனர் அவர்கள்.

கதிர்காமரின் விதவை மனைவியை ஓர் அனுதாபப் பொம்மையாகச் சிங்களவர் மத்தியில் காட்டுவதற்கும் ஜே.வி.பி முயற்சிக்கின்றது.

ஜனாதிபதித் தேர்தல் நெருங்குவதால் ஜே.வி .பியினர் தமது பிரசாரங்களுக்கான மூலங்களில் ஒன்றாக திருமதி கதிர்காமரைப் பயன்படுத்த முயற்சிக்கின்றனர்.

கூலிக்கு ஆள் அமர்த்திக் கொலை செய்யப்பட்டாரா என்பது உட்பட கதிர்காமரின் கொலையில் பல்வேறு பரபரப்புக் தகவல்கள் வெளியாகிக்கொண்டிருக்கும் சமயத்தில் ஜே.வி.பினரும், சிங்களப் பேரினவாதிகளும் மட்டுமே இந்தக் கொலையுடன் புலிகளைத் தொடர்புபடுத்துவதில் தீவிரமாக உள்ளனர்.

## நிழல் யுத்தத்தின் உச்சம்

அரசுப் படைகள் ஆரம்பித்த நிழல் யுத்தத்தின் (Shadow war) உச்சமாக அமைந்ததே கதிர்காமரின் படுகொலை. போர் நிறுத் த உடன்படிக்கையைச் சரிவர அமுல் செய்வதை விடுத்து அரசு இந்த நிழல் யுத்தத்தில் புலிகளைத் தோற்கடிக்கலாம் என்று கருதியது. அதன் விளைவு நாடு முழுவதும் ஆயுத



காலசாரம் ஒன்று முளைத்தது. 'தொப்புத் தொப்பு' என்று கொலைகள் வீழ்ந்தன. மணிக்கு ஒரு சூட்டுச் சம்பவம் என்ற நிலைமை உருவானது.

அரசின் உயர் மட்டப் பிரமுகர் ஒருவரது வீட்டுவாயில வரை - அவரது உல்லாச பொழுதுபோக்கு இடம் வரை - நிழல் யுத்தம் விரிவடைந்தது.

இப்போது அது அலரி மாளிகையின் கதவைத் தட்டுகின்ற நிலைமை வந்த பிறகுதான் அரசு ஓடி முழித்திருக்கிறது.

ஒப்பந்த நடைமுறை பற்றி நேரில் பேசுவதற்கும் இணங்கியிருக்கிறது. ஆக மொத்தத்தில் நிழல் யுத்தமும் புலிகளுக்கே வெற்றியில் முடிந்திருக்கிறது எனலாம்.

நிலைமை - யதார்த்தம் இப்படி இருக்க - கதிர்காமரின் விதவை மனைவியை வைத்து அரசியல் நடத்த திரைமறைவில் முயற்சி மேற்கொள்கின்றன சிங்கள சக்திகள்.

ஜனாதிபதித் தேர்தலில் பிரதான கட்சியின் வேட்பாளராகிய மஹிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவான பிரசாரக்களத்தில் திருமதி கதிர்காமரை இறக்குவதற்கான முயற்சிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டு விட்டன.

கதிர்காமரின் குடும்பம் காலாகாலமாக பண்டார நாயக்கா குடும்பத்துடன் நெருக்கமான உறவினைப் பேணி வந்துள்ளது. திருமதி சுகந்தி கதிர்காமர் சந்திரிகா குமாரதுங்கவுக்கு மிகவும் நெருக்கமானவர் என்றாலும் அண்மைக்காலத்தில் கதிர்காமர் தம்பதியர் ஜே.வி.பியினருக்கும் நெருங்கிய ஆலோசகர்களாகச் செயற்பட்டு வந்துள்ளனர். தேர்தல் வியூகம் கருதி திருமதி கதிர்காமரை கட்சி உயர் மட்டத்துடன் இணைத்துக் கொள்ள ஜே.வி.பியினர் அந்தரப்படுகின்றனர் என்று தகவல் கசிந்துள்ளது.

(VIII பக்கம் பார்க்க)

## புரியுமா உங்களுக்கு?

மனசுக்குள் விறாண்டும்
நட்டுவக் காலிகள்
ஊதிப் பெருத்த
ஊமத்தைகள்
இன்னும்
சொல்லவே தெரியவில்லை
என் மனசுக்குள்
என்னதான் நிகழ்கின்றன?

வெற்றுடல்களுக்குள்
ஊசலாடும்
உயிர் எறும்புகள்
என்னை நோக்கி
என்னத்தை உமிழ்ந்தன?

அன்பு என்றால்
என்னவென்றே தெரியாத
பணப் பிசாசுகளே....
உங்கள்
தேவைகள்தான் என்ன?
எதை இழைத்தீர்கள் எனக்கு?
இரத்த நாளத்துள்ளும்
ஊடுருவும் உங்கள்
ஆந்தைக் கண்கள்
பணக்குவியல்களைத்தானே
எதிர்பார்க்கின்றன?

நடிப்பையும்
நய நளினத்தையும் கொண்டு
என்னத்தை
செய்யவிழைகிறீர்கள்.....?

பாசம் என்ற சொல்லுக்கு
விளக்கம் தெரியுமா
உங்களுக்கு?
செய்யுங்கள்
எதையாவது செய்யுங்கள்
போடுங்கள்
எந்த வேஷத்தையாவது
போடுங்கள்
உங்களுக்கு
பணம்தானே முக்கியம்
கேலிப்பேச்சுகளும்
விதண்டா வாதங்களும் கூட
இதற்காகத்தானே....

ஆத்மாவை வலுச்சேர்க்கும்
புண்ணிய
உறவாடல்களெல்லாம்
உங்களுக்கெங்கே
புரியப்போகிறது?

சூரியவேந்தன்

## விபத்து

வார்ப்பில்
என் வளர்ப்பில்
என்னை விட
உசரமான உன்
கால்களும்
தோள்களும்

கரந்து விட்ட
பாலில்
நனைந்து விட்ட
என் சோட்டியின்
முனைகள்
காயாமலே,

பலவந்தமாக
உன்னை
பற்றியிழுத்த
சக்கரங்கள்
பங்கு போட்ட
உடலை
பார்க்க முடியாமல்
பயணிக்கையில்....

விசிறியடித்த
காற்றில்
விலகிச் செல்லும்
முகிற் கோலங்களுக்கு
அப்பால்......

வார்ப்பில்
என் வளர்ப்பில்
என்னை விட
உசரமான உன்
கால்களும்
தோள்களும்

துன்னையூர்
யாழ்நிலா

# எங்கும் பசுமை திகழும் நேர்த்தி

ஐரோப்பாவில் மிகவும் பழைமைவாய்ந்த நாடாகவும் ஸ்கண்டிநேவிய நாடுகளுள் மிகச்சிறிய நாடாகவும் அமைந்ததுதான் டென்மார்க்.

43.098 சதுர கிலோமீற்றர் பரப்பளவைக் கொண்ட இந்த நாடு யூலன்ட், சேவன்ட், பியூன் என மூன்று நிலப்பரப்புகளைக் கொண்டது. இவற்றுடன் 480 சிறிய தீவுகளும் இந்த நாட்டில் உள்ளன. இவற்றில் 78 தீவுகளிலேயே மக்கள் வாழ்கின்றனர்.



டென்மார்க்கின் தலைநகராக கொப்பனேகன் (Copenhagen) விளங்குகின்றது. இது டெனிஸ் மொழியில் கொப்பன்ஹேகன் (kobenhavn) எனவும் அழைக்கப்படுகின்றது. 5.4 மில்லியன் சனத்தொகையை உடைய இந்நாட்டில், கொப்பனேகனில் மட்டும் 1.09 மில்லியன் மக்கள் வாழ்கின்றனர்.

இந் நாட்டின் தாய்மொழியாக டெனிஸ் மொழி பேசப்படுகின்றது. இங்கு டெனிஸ் குறோனர் எனும் மதிப்பில் பணப்புழக்கம் உள்ளது.

டென்மார்க் நாட்டு மக்கள் அனைவரும் கிறிஸ்தவர்களாகக் காணப்படு வதுடன், உருளைக் கிழங்கு, பாண், இறைச்சி என்பவற்றை அடிப்படை உணவாகக் கொள்கின்றனர்.

இந்த நாட்டில் 62 பெரிய நகரங்கள் உள்ளன. ஒவ்வொரு நகரங்களிற் இடையிலும் வயல்வெளிகள், ஊசியிலைக் காடுகள் காணப்படுகின்றன. எங்கு பார்த்தாலும் பசுமையாகக் காணப்படும் இந்த நாடு ஒரு விவசாய நாடாகத் திகழ்கின்றது. பால் உற்பத்தி, கால்நடை வளர்ப்பு, கைத்தொழில் உற்பத்தி, மீன்பிடி போன்றவற்றிலும் முன்னேற்றமடைந்து சர்வதேச தரத்திற்கேற்றவாறு வாழ்க்கைத்தரத்தில் உயர்ந்து காணப்படு கின்றது. ஜேர்மனி, சுவீடன், நோர்வே,

## வியக்கவைக்கும் டென்மார்க்



பின்லாந்து, ஐஸ்லாந்து போன்ற நாடுகளுடன் டென்மார்க் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டுள்ளதுடன் ஜேர்மனியுடன் 68 கிலோமீற்றர் நீளமுள்ள எல்லையைப் பகிர்ந்துகொண்டுள்ளது.

ஐரோப்பிய யூனியனில் அங்கத்துவம் உடையதாக விளங்கும் இந்த நாடு, வெளிநாட்டு வர்த்தகத்தில் மூன்றில் இரண்டு பங்கை ஐரோப்பிய யூனியன் அங்கத்துவ நாடுகளுடனேயே மேற்கொள்கின்றது.

இந்த நாட்டில் 66 சதவீதமான பகுதியில் விவசாயம் மேற்கொள்ளப்படு கின்றது. சாமை, சோளன் போன்றவை பெருமளவில் பயிரிடப்படும் அதேவேளை, கோவா, தக்காளி, கரட், ஸ்ரோபரி, உருளைக் கிழங்கு போன்றவையும் அநேகமான இடங்களில் பயிரிடப்படுகின்றன.



இன்று வரை குறோன் நாணயமே பயன்படுத்தும் அதேவேளை யூரோ நாணயம் ஏற்றுக்கொள்ளப்படாமலே உள்ளது.

10ஆம் நூற்றாண்டின் இறுதியில் இருந்து டென்மார்க் தனி அரசாக இருந்து வருகின்றது. நாட்டின் தலைவராக அரசி மார்கிறெட் 11 விளங்கும் அதேவேளை நாடாளுமன்ற ஜனநாயக ஆட்சி நிலவுகின்றது. ஐரோப்பாவில் இருந்து டென்மார்க்கில் குடியேறியுள்ளோரின் எண்ணிக்கை 5லட்சம் வரை அடங்கும்.

டென்மார்க்கின் மொத்த சனத்தொகையில் 85சதவீதமான மக்கள் நகர்ப் புறங்களை அண்டியே தமது வாழ்க்கையை நடத்துகின்றனர். காரணம் தொழில் வசதிகள், கல்வித்தரம் மற்றும் இதரவசதிகளைக் கருத்திற்கொண்டே நகர்ப் புறங்களை நாடி வாழ்கின்றனர். அமைதியை விரும்புவர்கள் தமது இறுதிக் காலத்தைக் கையளிப்பவர்கள் கிராமப்புறங்களையும், காட்டுப்பகுதியையும் நாடி வாழ்கின்றனர்.

வருடத்தில் இரண்டு பருவங்களை வகுத்துள்ளனர். அதாவது மாரிகாலம் (Winter), கோடைகாலம் (Summer) என இரண்டு பருவங்கள் உள்ளன.

மாரிகாலத்தில் பகற்பொழுது குறைவாகவும் இரவுப்பொழுது கூடுதலாகவும் காணப்படும். இதன்போது காலை 9மணிக்குப் பின்னரே பொழுதுவிடிகின்றது. பின்னர் மாலை 4 மணியளவில் பொழுது சாய்ந்துவிடுகின்றது . மாரிகாலத்தில் ஒருமணி நேரம் அதிகரிக்கப்படுகிறது. கோடைகாலத்தில் பகல்பொழுது அதிகமாக இருக்கும். அதன்போது அதிகாலை 4மணிக்கு பொழுது விடிந்து இரவு 10.30 மணிக்குப் பின்னரே சூரியன் மறைகின்றது. இது அதிசயமாகவே இருக்கும். இரவு 10 மணிக்கும் சூரியன் காணப்படும்.

கோடைகாலத்தில் பாடசாலை மாணவர்களுக்கு விடுமுறை வழங்கப்படுகின்றது. மூன்று மாத காலத்திற்கு விடுமுறை வழங்கப்படுவதனால் அக்காலத்தை சுற்றுலாவிலேயே களிக்கின்றனர்.

டென்மார்க் சுற்றுலாவிற்குப் பேர்போன நாடாக விளங்குவதால், கோடைகாலத்தில் ஜேர்மன், சுவிஸ், சுவீடன், ஐஸ்லாண்ட், இத்தாலி, இங்கிலாந்து, பிரான்ஸ் போன்ற நாடுகளில் இருந்து பெரும் எண்ணிக்கையான சுற்றுலாப் பயணிகள் டென்மார்க் வருகின்றனர்.

டென்மார்க்கின் தலைநகர் கொப்பனேகனில் உள்ள 'கடற்கன்னி' சிலையைக் காண்பதற்கே பெருமளவானவர்கள் வருகின்றனர். அதைவிட கப்பல்களில் உல்லாசப் பயணிகளை ஏற்றி டென்மார்க்கின் தலைநகரைச் சுற்றிக்காட்டுவர். அதன்போது ஒலிபெருக்கியில் ஆங்கிலத்திலும் டெனிஸிலும் விளக்கம் அளிக்கப்படும்.

இவ்வாறே ஏனைய நகரங்களிலும் தொல்பொருள் காட்சியகங்கள், மிருகக்காட்சி சாலைகள், களியாட்ட நிகழ்வுகள், சாகச நிகழ்வுகள் போன்ற பெரும் எண்ணிக்கையான விடயங்கள் டென்மார்க் எங்கும் காட்சிப்படுத்தப் பட்டுள்ளன. இவை தொடர்பான விவரங்களையும் பின்னர் தொடர்ந்து இக்கட்டுரையில் பார்க்கலாம்.

டென்மார்க்கில் போக்குவரத்து விதிகள் மிகவும் நேர்த்தியாக நடைபெறுவதால் விபத்துகள் பெருமளவில் தவிர்க்கப்படுகின்றன. வீதிகள் மிகவும் அழகாக சீர் செய்யப்பட்டு குறியீடுகள் முறையாகப் போடப்பட்டு உள்ளமையால் போக்குவரத்தில் உள்ள நெருக்கடிகளைத் தவிர்க்க முடிகின்றது. வேகக்கட்டுப்பாட்டு நடைமுறைகள் சீராகப் பேணப்படுகின்றன. இவற்றை மீறுபவர்களுக்கு சொற்ப தொகை தண்டமாக அறவிடப்படுகின்றது.

வீதிகளில் வாகனங்களைக் கண்டபடி நிறுத்தக்கூடாது. வாகனங்களை நிறுத்துவதற்கு பிரதான வீதிக்குப் புறம்பாக இடங்கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. அவ்வாறான இடங்களில் வாகனங்களை நிறுத்தி ஓய்வெடுக்கலாம். சில இடங்களில் வாகனங்களை நிறுத்துவதற்கும் நேரக்கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. இதனை மீறி தொடர்ந்து வாகனங்களை நிறுத்தி வைத்தாலும் தண்டம் அறவிடப்படுகின்றது. அந்த நடைமுறையை இங்கும் பின்பற்றினால்.....? சொல்லவும் வேண்டுமா? இதேவேளை, இன்னொன்றையும் கூறவேண்டும் இங்கு ஒலியெழுப்பியபடி வாகனங்களைச் செலுத்தக்கூடாது. எமது நாட்டில் நீதிமன்றம், பாடசாலை, மருத்துவமனை போன்றவற்றிற்கு முன்பாக மட்டுமே ஒலி எழுப்பக்கூடாது. சரி, அடுத்த தொடரில் டென்மார்க்கில் எமது தமிழர்கள் எவ்வாறு வாழ்கின்றனர், எமது கலாசாரங்களை எந்தளவிற்கு பின்பற்றுகின்றனர் என்பது பற்றிப் பார்ப்போம்.

(தொடரும்....)

டென்மார்க்கிலிருந்து : பகீர்

# பாரபட்சமற்ற பாசம் வைக்கப் பழகுங்கள்

'பற்று, பாசம் என்பவை நம்முடன் ஒட்டியிருப்பவை. எம்மைவிட்டகலா தவை' என்று பெரியோர் கூறுவர். 'என்னுடையது' என்ற பற்றும் 'என் உறவு' என்னும் பாசமும் எம்மை மிகவும் பாதிப்பவை என்பது உண்மையே.

என்னுடைய மகள், எனது சகோதரி என்ற பாசம் அவர்களது நிறைகளை அதிகமாகவும் குறைகளைக் குறைவாகவும் எமக்குக் காட்டுகின்றன. எமது உறவுகள் செய்யும் பிழைகளை இந்தப் பாசம் கண்ணுக்குத் தெரியாமல் செய்து விடுகிறது.

அதிலும் வேடிக்கையென்ன வென்றால் மற்றவர்களுடன் ஒப்புநோக்கநேரிடும் போது, சகோதரர்களின் பிள்ளைகள் சிறப்பாகத் தெரிவார்கள். ஆனால், சகோதரர்களின் பிள்ளைகளுடன் தன் பிள்ளைகளை ஒப்பிட நேரிடின் தன் பிள்ளைகளே விசேடமாகத் தோற்றுவர்.

மனிதனுக்கு இயல்பாகவுள்ள இந்தக் குணத்தினாலே பல பிரச்சினைகள் தோன்றுகின்றன. அவற்றுள் ஒன்று கணவனது உறவினரையும் மனைவியினது உறவினரையும் அவர்கள் நேசிக்கும் முறையினால் ஏற்படும் பிரச்சினையாகும். இதனால் ஒரு பிரச்சினை ஏற்படுகிறது என்பதை விட பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன என்றே கூறவேண்டும்.

தனது தாய், தந்தை, சகோதரர்கள், ஏனைய உறவினர்களில் காட்டும் அதே அன்பை தன் துணையின் தாய், தந்தை, சகோதரர்கள், ஏனைய உறவினர்களில் காட்டுவது கடினம்.

'இல்லை நான் அப்படியல்ல. எல்லோரி லும் அன்பு வைப்பேன்' என்று நீங்கள் கூறலாம். நீங்கள் உங்களைப் பற்றி வைத்திருக்கும் கணிப்பீடு சரியாக இருக்குமெனக் கூற முடியாது. அந்தக் கணிப்பீட்டை மூன்றாமவர் செய்தால் சரியாகவிருக்கக் கூடும்.

நான் இதை எழுதுவது 'நான் தவறு செய்வதில்லை' என நீங்கள் நினைப்பதற் காகவோ வாதிடுவதற்காகவோ அல்ல.

'நானும் தவறு செய்து கொண்டிருக்கி றேனோ?' என்று சிந்திப்பதற்காகவே. எனவே நீங்கள் காட்டும் அன்பைப்பற்றி உங்களுக்குள்ளேயே சிறிது ஆராய்ந்து பாருங்கள்.

மாமி, மருமகள் பிரச்சினை, நாத்தனார் சண்டை எல்லாம்




ஏற்பட இதுவும் ஓர் அடிப்படைக் காரணம்.

மாமி, மருமகளை மகள் போல கருத வேண்டும். இதிலும் உங்களுக்குச் சில சிக்கல்கள் தோன்றலாம். உங்களால் வளர்க்கப்பட்ட மகள் உங்கள் குடும்ப வழக்கப்படி நடப்பார். மருமகள் வேறு வகையாக வளர்ந்திருக்கக்கூடும். அவளுடைய குணநலன்களைப் பார்த்தவுட னேயே ஓரிரு மாதங்கள் அவளுடன் பழகுவதிலிருந்தோ அவளது குணத்தை அறிந்து கொள்ள முடியாது. படிப்படியாகத் தான் அவற்றைப் புரிந்து கொள்ளமுடியும்.

புரிந்து கொண்டபின்பும் நீங்கள் நினைப்பது போலத்தான் அவள் இருக்கவேண்டுமென்று நினைக்கக் கூடாது. நீங்களும் விட்டுக் கொடுத்து நடக்கவேண்டும். புதுமைகளை வரவேற்கும் மனப்பக்குவத்தை ஏற்படுத்தவேண்டும்.

ஒரு பிள்ளை தவறு செய்யும்போது தாய் அடித்தால் அதைப் பெரிய தவறாக பிள்ளையும் எடுப்பதில்லை. மற்றவர் களும் கருதுவதில்லை. சிற்றன்னை அடித் தால் 'என் அம்மாவென்றால் இப்படி அடித் திருக்கமாட்டாள்' என்று அந்தப் பிள்ளை நினைக்கும். மற்றவர்களும் சிற்றன்னை பெருங்குற்றம் செய்ததாகக் கருதுவர். அந்தப் பிழைக்கு, தாயிருந்திருந்தால் அவளும் அவ்வாறுதான் அடித்திருப்பாள். ஆனால், அப்படி எவரும் நினைப்பதில்லை.

இதே போன்றுதான் மாமியார் செய்வதை மருமகளும், மருமகள் செய்வதை மாமியா ரும் பார்க்கின்றனர். நீங்கள் நினைப்பது சரியென்றுதான் உங்களுக்குத் தோன்றும். உங்கள் செயல்களும் உங்கள் கருத்துகளும் நினைவுகளும் சரிதானா என மீண்டும் மீண்டும் சிந்தித்துப் பாருங்கள். தவறு உங்களிலும் இருக்கலாம். இப்படிச் செய்வதன் மூலம் உங்கள் குடும்பத்தில் உருவாகும் பல பிரச்சினைகளையும் தகராறுகளையும் தவிர்க்கலாம்.

மற்றவர்களுடைய சிந்தனைகளிலும் செயல்களிலும் பல நல்ல தன்மைகளிருக் கும். அவற்றைப் பார்த்துப் பழகுங்கள். குறைகளையும் தவறுகளையும் மட்டுமே பார்க்காதீர்கள்.

உங்கள் அம்மாவோ, மகளோ செய்த தவறுகளை நீங்கள் எப்படிப் பொறுத்துக் கொண்டீர்களென்பதை நினைவிற்குக் கொண்டு வாருங்கள்.

மனிதர்கள் எல்லோரும் தவறு செய்பவர் களே. இதே போன்ற தவறை நீங்கள் கூடச் செய்திருக்கலாம். சிறிது சிந்தித்துப் பாருங்கள். ஒருவர் மீது கோபம் ஏற்படும் போதோ அவர் செய்தது தவறு என்று எண்ணும் போதோ உங்களுக்குள்ளேயே ஓர் ஆய்வு செய்யுங்கள். படிப்படியாக உங்களுக்குள்ளே பாரபட்சமற்ற பாசத்தை வளர்த்தெடுங்கள். இவை நீங்களும், உங்கள் குடும்பமும் மகிழ்ச்சியாக இருக்க வழிவகுக்கும்.





## சில நினைவுகள்

ஏதோ நினைவுகள்
எழுத முடியவில்லை
எண்ணித் தவிக்கின்றேன்
ஏனென்று புரியவில்லை....

காலங் கடந்த
கல்லூரி நினைவுகள்.....
எண்ணிப் பார்க்கையில்
ஏதோதோ ஞாபகங்கள்....

அழியாத சித்திரமாய்!
அழகான வரங்களாய்!!
அவரவர் மனங்களில் ....
ஆயிரம் சிதறல்கள்!

சிந்தை விட்டகலா
சில கேள்விகள்?
விடை தேட முயலாமல்
ரசிக்கிறேன்.

விடை தெரிந்த
சில விடயங்களின்
விளக்கந் தேடி!
? ? ? ?

மறக்க முடியா
பல முகங்கள்....
மறக்க நினைக்கும்
சில விடயம்....

கசப்பான விடயங்கள்
அன்று
ஆனாலும்
கண்மூடி ரசிக்கின்றேன்
இன்று....

நேற்றைய நினைவுகள்
இன்று
ரசனையாய்
ரம்மியமாய்....
மனத்திரையில்
நீங்கா நினைவுகளாய்.....
அழகான ஓவியமாய்...
...................?

தேடல்கள்
தேக்கங்கள்
தேர்வுகள்
தெரிவுகள்
தெரியாமல் செய்த
சில தவறுகள்
தென்றெலென சில
உணர்வுகள்.....
தேவையல்லாத சில
பிரச்சினைகள்
தெரிந்தே செய்த சில
சேட்டைகள்
தெரியவில்லை எனக்கினி
எதைக்கூற?

எஸ். ஆஷா
கம்பஹா.

## சாதனை மங்கை

5 கண்டங்களில் நீந்திச் சாதனை படைத்துள்ளார் அபூர்வ மங்கை ஒருவர். அவர்தான் கல்கத்தாவைச் சேர்ந்த பூலா சௌத்திரி.

இவர் தென்னாபிரிக்காவின் தென்கோடிப் பகுதியான நன்னம்பிக்கை முனையில் 30கிலோ மீற்றர் தூரத்தை 3 மணி 26 நிமிடங்களில் நீந்திக் கடந்தார்.

கடந்த ஆண்டு 7தடவை நீந்திய வீராங்கனை என்ற சிறப்பைப் பெற்ற இவர் , இப்பொழுது 5 கண்டங்களிலும் நீந்திச் சாதனை படைத்த அபூர்வ மங்கையாகி விட்டார். கேப்டவுனில் நெல்சன் மண்டேலா 27 ஆண்டுகள் சிறை வைக்கப்பட்ட தன் நினைவாகவே பூலா சௌத்திரி இந்தச் சாதனையை நிகழ்த்தியுள்ளாராம்.

எத்துயர்வரினும் துணிந்த கருமம் முடிக்கும் இந்த மங்கையின் சாதனை பாராட்டுக்குரியதாகும்.

- மதி

## உதட்டின் அழகுக்கு.....

உங்கள் உதடு உலர்ந்து கறுப்பாக மாறுகின்றதா?

இதை நீக்க இரவில் ஒரு கரண்டி வெந்தயத்தை எடுத்து ஊற வையுங்கள். காலையில் ஒரு டம்ளர் மோரில் அந்த வெந்தயத்தைப் போட்டுக் குடியுங்கள்.

இரவில் உதட்டில் வெண்ணெய் தடவிக் கொண்டு படுத்தாலும் உதடு பொலிவாக மாறும்.

### அர்த்தமுள்ள வாழ்விற்கு...

சிலர் ஒவ்வொரு கணத்தையும்
பொன்னாக மாற்றுகிறார்கள்.
சிலர் அதனை வீணாக்குகிறார்கள்.
திட்டமிட்டு அதனைப் பயன்படுத்துவோரும்
இருக்கிறார்கள்



## சந்தியாவின் கடிதங்கள்

*பிரியமுள்ள பிரியாவிற்கு,*

*துன்பங்கள் ஆயிரம் தடை போடினும்*
*வீறு கொண்டெழுந்து நீ வெற்றி நடை போடு.*

வாழ்க்கையில் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விதத்திலும் துன்பங்கள் நம்மை எதிர்கொள் கின்றன. அத்துன்பங்களை எதிர்நீச்சல் போட்டு வெற்றிகொள்வதில்தான் நம் வாழ்க்கை யின் வெற்றியே அடங்கியுள்ளது.

துன்பம் என்பது ஒருவருக்கு மட்டும் ஏற்படுவதல்ல. சகலரும் அதன் ஆதிக்கத்தில் சிக்கித் தவிக்கிறார்கள். துன்பத்தின் வடிவம்தான் மாறுபடுகின்றது. அதை வெற்றி கொள்வது எம் கையில்தான் உள்ளது.

பிச்சைக்காரன் ஒருவன் ஒரு வீட்டிற்குப் பிச்சை எடுக்கச் சென்றான். அந்த வீட்டைப் பார்த்து அவன் பிரமித்துப் போனான். "என்ன ஒரு பிரமாண்டம்! இந்தக் கடவுள் ரொம் பப் பொல்லாதவர். இப்படி ஒரு கோடீஸ்வரனாக என்னையும் படைத்திருக்கலாமே" என்று கண்ணீர் உகுத்தான்.

சில நாள்களின் பின் வீதியில் ஒரு பெரிய மனிதர்(?) குடித்து விட்டு அலங்கோலமாக விழுந்து கிடந்தார். அவரைச் சுற்றி நிறையப் பேர் நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்றார்கள். அதில் நின்ற ஒருவரை விசாரித்தான். "இவரா? பக்கத்துத் தெருவில் இருக் கும் கோடீஸ்வரன். இவரது இரு மகன்களும் தகாத வழி சென்று கொண்டிருக்கிறார்கள். இவரும் அந்த வேதனையை மறப்பதற்கு சிறிது குடிக்க ஆரம்பித்தார். இன்று அவர் நிரந் தரக் குடிகாரனாகி, இவ்வாறு வீதி வழியே விழுந்து கிடக்கின்றார். இவரைக் கவனிப்பார் யாருமில்லை. - என்றார்.

நான் பிச்சைக்காரனாக இருந்தாலும் என் மனைவியுடனும் குழந்தைகளுடனும் சந் தோசமாகக் காலத்தைக் கழிக்கின்றேன். வசதியில் என்னைப் பிச்சைக்காரனாக ஆக்கிய கட வுள் 'அன்பில்' என்னைக் கோடீஸ்வரனாக்கிவிட்டார்.

ஆம் பிரியா, துன்பங்கள் என்பது எனக்கு மட்டும் ஏற்படுவதில்லை. ஒவ்வொரு வடிவத் திலும் ஒவ்வொருவரையும் தாக்குகின்றது. எமக்குத் துன்பம் ஏற்படும் போது எம்மை விடத் துன்பப்படும் ஒருவரைப் பற்றி நினைத்துப் பார்ப்போம். அப்பொழுது எம் துன்பம் ஒன்றுமேயில்லாமல் ஆகிவிடும்.

எனக்கு ஏதாவது ஒரு மனக் கஷ்டம் ஏற்பட்டால் நான் உடன் என் அக்காவின் பிள்ளைக ளுடன் கதைப்பேன். அவர்களின் மழலைக் குரல்கள், சின்னச் சின்னக் கேள்விகள் என் துன்பத்தை எங்கோ கொண்டு சென்றுவிடும். எனவே, என் ஆலோசனையில் ஒன்று மனம் மிக வேதனைப்படும்போது நாம் சிறு மழலைகளுடன் பேச ஆரம்பிப்போம். அதற்கு 2நிமிடங் கள் போதும், துன்பம் சூரியனைக் கண்ட பனிபோல் ஓடிவிடும்.

அடுத்து ஒரு சிறந்து வழி தியானம். முறைப்படி தியானத்தை கற்று ஒழுங்காகச் செய்து வந்தால் கூடிய பலனைப் பெறலாம். ஆயினும் தியானம் கற்க முடியாதவர்கள் யாருமற்ற ஒரு தனிமையான இடத்தில் அமர்ந்து கண்களை மூடி, கைகள் இரண்டையும் தொடை மேல் வைத்து அமைதியாகச் சிறிது நேரம் இருந்தாலே போதும்.

இதை அனுபவத்தில் மிக மிக உணர்ந்தவள் நான்.

*பிரியமுடன் சந்தியா*

# யாழ் பாணம்

## ‘மழைக்காலக் காளான்கள்’

எங்கள் கிராமத்துக் கோயில் பெருந்திருவிழாக் காலம் . ஊரே களை கட்டும் உற்சாகம் பொங்கிடும். மழைக்கு முளைக்கும் காளான்கள் போன்று, கோயிலின் பின் வீதி தற்காலிக் கடலைக் கடைத் தொடரால் ஆக்கிரமிக்கப்படும். இந்த ஆண்டு உற்சவகாலம் கடை விரித்த கடலை வியாபாரிகள் வழமையை விட இரு மடங்கிருக்கும். மொத்தத்தில் சகல கடைகளிலும் ஒரே வித விற்பனைப் பண்டம் - நானாவித கடலை வகைகள் - என்பதால் தரமறிந்து கொள்வனவு செய்வதற்குச் சிரமப்பட நேர்ந்தது. பொதுவாகவே சகலதும் கடலை வகைகளே ஆயினும், இருப்பவற்றுள் சிறந்ததைத் தேர்ந்து வாங்கவிழைவது மனித இயல்பே.

குடாநாட்டு வரலாற்றில் முதன்முதலான பாரிய இடப்பெயர்வு நிகழ்ந்து பத்து ஆண்டுகள் பூர்த்தியாகின்றன. ஆறு மாதங்கள் கழித்து சொந்தஇடத்துக்கு திரும்பமுடிந்ததும் இராணுவத்தின் கண்காணிப்பில் வாழ முடிந்ததையும், அந்த வேளை முதல குடாநாட்டு மக்களுக்கு அதுவரை அருகிப்போயிருந்த வசதி வாய்ப்புக்கள் பலவற்றை ஏற்படுத்திக் கொடுத்து அதன் மூலம் தமிழர்களின் நன்மதிப்பை ஈட்ட அரசு முயன்றதும் ஞாபகத்துக்கு வருகின்றன. ஆயினும் மட்டுப்படுத்தப்பட்ட ஓர் அளவிலேயே கிட்டிய இந்த வாய்ப்பு, போர்நிறுத்த உடன்பாடு மேற்கொள்ளப்பட்டதையடுத்து, ஏ-9 பாதை திறக்கப்பட்டதுடன் பல துறையிலும் பன்மடங்கு துரித முன்னேற்றம் ஏற்பட வழிவகுத்தது.

தொண்ணூறுகளில் நிலவிய போர்ச் சூழலில், வெளிநாடுகளில் வாழ்ந்த உறவுகளுடன் தொடர்பு கொள்வதாயின், பயங்கரச் சூழலில் கொம்படி, ஊரியான் தாண்டி கொழும்பு சென்று லொட்ஜ்ஜூக்களில் வாடகை அறை எடுத்துத் தங்கி பிள்ளைகளுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு கதைப்பது மட்டுமல்லாமல், பிள்ளைகள் அனுப்பிவைக்கும் பணத்தைப் பவுத்திரமாக மடியில் கட்டிக்கொண்டு அதே சிரமமான பயணம் செய்து ஊர் திரும்பிய நினைவுகளை நம்மில் பலர் மறந்திருக்க இயலாது.

‘ஏ - 9’ பாதை திறந்தவுடன் பல தென்பகுதி வர்த்தக நிறுவனங்கள் நான், நீ என போட்டிபோட்டுக்கொண்டு குடா நாட்டில் வர்த்தகஞ்செய்ய வந்துசேர்ந்தன.

விளம்பர உத்திகளால் கவர்ச்சியை ஏற்படுத்தல் பற்பல புதுவித சலுகைகளை அறிமுகப்படுத்தல் என்பன போன்ற நவீன உத்திகளால் வர்த்தக சந்தையில் தத்தமது நிறுவனங்களது வர்த்தக நடவடிக்கைகளை விரிவுபடுத்தவும், இலாப மீட்டவும் இத்தகைய நிறுவனங்கள் ஆர்வங் காட்டின.

எனவே, அபிரிமித - அவசிய தேவை இருக்கும் இடத்தில், தேவையை ஒட்டிய சேவைகளை ஏற்படுத்திவழங்கும் நிறுவனங்கள் கடை பரப்பியதில் தவறேதும் காணவியலாது. அது மட்டுமன்றி அத்தகைய சேவைகளுக்காக ஏங்கியிருந்த குடாநாட்டு மக்களும் அவர்களை ஆவலுடன் வரவேற்கப் பின் நிற்கவில்லை.

அந்த வகையில் குடாநாட்டு மக்களின் அவசிய தேவைகளிலொன்றாக தொலைத் தொடர்பு வசதியும் கருதப்பட வேண்டியதொன்றாயிற்று. எதிர்பார்க்கப்பட்ட இயல்புவாழ்க்கை ஏற்படுத்தப்பட்டதாக அரசியல் தரப்பினர் வீராப்புப் பேசிடவும், பட்டியலிட்டுச் சர்வதேச சமூகத்துக்கு சமர்ப்பிக்கவும் குடாநாட்டுக்கான தொலைத்தொடர்பு வசதிகள் சீர்செய்யப்பட்டதாக பகிரங்கமாகப் பிரகடனப்படுத்தவும் அரசுக்கு இது வாய்ப்பு ஏற்படுத்திக்கொடுத்தது.

மற்றொரு வகையில் குடாநாட்டு வர்த்தகத்துறை, அரச நிர்வாக மையங்கள் என்பவற்றின் சுமுகமான செயற்பாடுகளுக்கும் மேலாக - மிக முக்கியமாக, புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் யாழ்ப்பாணத்தவரின் உறவினர்களுக்கு அது அதிமுக்கிய தேவைகளிலொன்றாக அமைந்தது ஆச்சரியமில்லை. அதைவிட தமது கௌரவத்தை விளம்பரப்படுத்தவும், தமக்கு வசதியிருப்பதாகக் காட்டிக் கொள்ளும் அடையாளமாகவும் நம்மில் ஒரு சிலருக்கு இது வரப்பிரசாதமாக அமைந்ததும் தோற்றத்தின் மற்றொரு முகமாகக் கொள்ளத்தக்கதே.

சரி; விடயம் இதுதான்.

எங்களூர் கோயில் பெருவிழாவில் அத்தனை கடலைக் கடைகளிலும் எந்தக் கடையில் கடலை வாங்குவோம் என எனக்குத் தடுமாற்றம் ஏற்பட்டது போல, குறுகியகாலத்தில் குடாநாட்டில் கடைகட்டிய தொலைத் தொடர்பு வசதிவழங்கும் நிறுவனங்களில் எவரது சேவை சிறப்பாய் அமையுமென்ற திகைப்பு - மயக்கம் - குடா நாட்டு வாசிகளுக்கும் ஏற்பட்டதென்னமோ உண்மைதான்.

யாழ்ப்பாணத்தார் கட்டுமட்டாகச் செலவு செய்யப் பழக்கப்பட்டவர்கள்; இது வரலாற்றுப் பதிவு ‘மணியோடர்’ கலாசாரம் என ஒரு சமயம் விமர்சிக்கப்பட்ட யாழ்ப்பாணத்து பொருளாதார சூட்சுமம், அண்மைக்காலத்தில் வெளிநாட்டுப் பணவரவுக் கலாசாரமாக மாற்றமுற்றதை அரச நிர்வாகம் முதல் இப்பெரும் வர்த்தக சமூகமும் அவதானிக்கத் தவறவில்லை.

இத்தகு வசதிகள் அவசியமற்றதென வாதிடுவது இப்பத்தியின் நோக்கமல்ல. அன்றேல் பொறாமையின் அடிப் படையில் எழும் மனஉணர்வுமல்ல.

தேவையின் அவசியம் - அத் தேவை மூலமான பயன்பாடு இலாபமளிக்கும் - மனோதத்துவ ரீதியிலான திருப்தியளிக்கும் வகையில் அமையுமாயின் அது நியாயப்படுத் தப்படலாம் - ஆதரிக்கப்பட வேண்டியதொன்றே.

ஆனால், அத்தியாவசியமற்ற நிலையில் - வெறும் கௌரவ வெளிப்பாட்டை வெளிச்சம் போட்டுக் காட்டும் வகையில் - தனிப்பட்ட வகையிலும் சமூக, இன ரீதியிலும் அது வீண் விரயத்தை ஏற்படுத்துவதாக அமையுமானால் அது சிறு பிள்ளைத் தனமான தொன்றாகக் கொள்ளப்பட வேண்டிய தொன்றே. இன்று புதிதாக உருப்பெற்றுவரும் கைத்தொலைபேசிக் கலாசாரம் நாளாவட்டத்தில் நன்மைகளுடன் கூட - ஒரு சில குடும்பரீதியிலான, சமூகரீதியிலான குழப்பங்களுக்கும் வழி சமைக்கலாம்.

இவ்வித அபிரிமித வசதி வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம் இன, மத மொழிச் சுதந்திர தாகத்தைத் திசைதிருப்ப - கூர்மையை - மழுங்கடிக்க மேற்கொள்ளப்படும் உளவியல் உத்திகளில் இதுவுமொன்றென ஏன் கொள்ளக்கூடாது?

குடும்பமொன்றின் உறுப்பினர்களுக்கு வெவ்வேறு பொருள்தேவை அவசியமாவது போன்று இளவயது உறுப்பினர்களுக்கு ‘கிற்காட்’ தேவை ஏற்பட ஆரம்பித்திருப்பதை யதார்த்த பூர்வமாகக் காணமுடிகிறதே?

கடைசியாக ஒன்று; இவ்வித வசதியை ஏற்படுத்த உதவும் நிறுவனங்கள் அவசியம், அவசரம் ஏற்படும் வேளை, தடங்கலின்றித் தாமதமின்றி அவ்வசதியை பெறத்தக்க தொழில் நுட்ப வசதியை - வலைப் பின்னல் வசதியை விரிவுபடுத்த முன் வந்தால் மட்டுமே, மிக அவசரமான அவசியமான வேளையொன்றில் இச்சேவையின் பயனை உரிய வகையில் ஈட்டிட இயலும்.

> வாராந்தம் வெளியாகும் இப்பத்தியில் குறிப்பிடப்படும் பாத்திரங்கள் எவையும், தனிப்பட்ட முறையில் எவரையும் குறிப்பிடுவதில்லை. [ஆ-ர்]

— பொன்வேளன்

# நெருங்கி வரும் ஆபத்து

சேது கால்வாய்த்திட்டம் என்ற பெயரில் இந்தியாவையும் இலங்கையையும் பிரிக்கின்ற ஆழமற்ற கடற்பகுதியை - பாக்குநீரிணையை - ஆழமாக்கி, அதன் மூலம் பாரிய கப்பல்களை ஓட்டக்கூடிய போக்குவரத்து வழியொன்றை உருவாக்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுவிட்டது.

இந்தியாவின் இராணுவ, பொருளாதார, அரசியல் நலன்களை முதன்மைப்படுத்தி நடைமுறைப்படுத்தப்படும் இத்திட்டத்தின் மூலமாக இலங்கை என்ற சிறு தீவு அடையப்போகும் தீமைகள், எதிர்கொள்ளப்போகும் பிரச்சினைகள் தொடர்பாக அக்கறையோ, விழிப்புணர்வோ கொண்டவர்கள் பெருமளவில் இல்லை என்பது கவலைக்குரிய விடயம்.

இந்தப் பிரச்சினை தொடர்பில் கொழும்பு அரசு ஆரம்பத்தில் அக்கறைசெலுத்திய போதும், பின்னர் அடக்கிவாசிக்கத் தொடங்கிவிட்டது. தமிழர் தேசம் இந்த விடயத்தில் எத்தகைய நிலைப்பாட்டினையும் வெளிக் காட்டவில்லை. மன்னாரில் தமது ஜீவனோபாயத் தொழில் இழக்கப்படும் என்ற நிலையில் எதிர்ப்பினை வெளிப்படுத்திய மீனவர்களைத் தவிர இங்கே யாழ்ப்பாணத்தில் சமூக, கலாசார, அறிவியல் தளங்களில் கருத்தாடல்களில் ஈடுபடவும், தெளிவுபெறவும் எனச் செயற்படும் சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டம் சேது சமுத்திரத் திட்டம் தொடர்பில் மூன்று கருத்தமர்வுகளை நடத்தியுள்ளது. கடந்த வாரம் அரசறிவியல்துறை விரிவுரையாளர் கே.ரீ.கணேசலிங்கம் தலைமையில் சூழலியலாளர் தி.திருக்குமரன், அரசியற் பிரமுகர் சி.கா.செந்தில்வேல் ஆகியோர் சேது சமுத்திரத் திட்டத்தால் ஏற்படும் பாதிப்புகள் பற்றிக் கருத்துரையாற்றினர்.

நமது மன்னார்க் கடலின் பொருளாதார, சூழ்லியல் முக்கியத்துவத்தையும், இது ஆழமாக்கப்படும் போது ஏற்படக் கூடிய பாதிப்புக்களையும் தி.திருக்குமரன் பட்டியற்படுத்தினார். அத்துடன் திட்டத்தில் உள்ளடங்கியுள்ள விடயங்களையும் வெளிப்படுத்தினார்.

அதேபோல ஏனைய இருவரும் அரசியல், இராணுவ், பொருளாதார மற்றும் சமூக ரீதியாக தமிழ்நாட்டிலும், தமிழர் தாயகப் பிரதேசத்திலும் எதிர்கொள்ளப்படும் பல்வேறு பிரச்சினைகளை எடுத்துக் கூறினார்.

தமிழ்நாட்டில் சேது சமுத்திரத் திட்டத்திற்கு எதிராக அங்குள்ள சுற்றுச் சூழல் அமைப்புக்களும், சமூக சேவை அமைப்புக்களும் இணைந்து ஒரு எதிர்ப்பியக்கத்தை முன்னெடுக்கின்றன. அதே போல,இங்கும் ஒரு எதிர்ப்பியக்கத்தை முன்னெடுப்பது குறித்து கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் வலியுறுத்தினர். மிகக் குறைந்த எண்ணிக்கையானோர் கலந்துகொண்ட அக் கூட்டத்தில் ஓர் எதிர்ப்பியக்கத்தை சாத்தியப்படுத்தும் நிலைமை இருக்கவில்லை.

ஆனால், இப்போது தெற்கில் இலங்கை பசுமை இயக்கம் ஓர் எதிர்ப்பியக்கமாக உருவெடுத்துள்ளது. சேது சமுத்திரத் திட்டத்தின் மூலம் இராணுவ அரசியல் பொருளாதார நலன்களை முதன்மைப்படுத்தியே சம்பந்தப்பட்ட இந்திய தேசம் செயலாற்றுகின்றது என்பதைச் சுட்டிக் காட்டியுள்ள மேற்படி இயக்கம், அதனால் இலங்கைத் தீவுக்கு நேரக்கூடிய பொருளாதார மற்றும் சூழலியல் சார்ந்த ஆபத்துக்களையும் சுட்டிக்காட்டியுள்ளது.

ஏற்கனவே, தென்னிலங்கையின் சூழலியல் வல்லுநர்கள் பலரும் சேது சமுத்திரத் திட்டத்தின் மூலம் இலங்கைக்கு நேரக்கூடிய பாதிப்புக்களை எடுத்துக் கூறியிருந்தனர். உண்மையில் இலங்கை என்பதைவிட தமிழர் தேசம் அதிலும் வடபுறமே பெரும் பாதிப்புக்கு உள்ளாகுமென எதிர்பார்க்கப்படுகிறது.

### யாரோடு நோவோம்...?

ஆனால், இது பற்றி அலட்டிக்கொள்ளும் நிலையில் பெரும்பாலானோர் இல்லையென்பது கவலை தரும் விடயம். புவியியல் சார்ந்த - சூழலியல் சார்ந்த - பிரச்சினைகள் தொடர்பாக நன்கு அறிந்துள்ளபோதும் அதன் நன்மையான பக்கங்களை வெளியிட்டு திட்டத்துக்கு ஒத்தூதும் நிலையிலேயே நமது புவியியலாளர்கள் உள்ளனர் என்பது அதிர்ச்சியான விடயம்.

நன்மையான பக்கங்களைக் கூட சமூக, அரசியல், இராணுவக் கண்ணோட்டத்தில் சீர்தூக்கிப் பார்க்காமல் எதிர்காலத்தில் நிகழலாமெனக் கருதும்வண்ணம் பொருளாதார ரீதியாக அணுக முற்படுவது கள யதார்த்தம் தொடர்பான கரிசனையற்று வெளிப்படுத் தும் கூற்றெனவே கொள்ளலாம்.

திட்டம் தொடங்கப்பட்டுவிட்டது. அதைச் செயற்படுத்துவது ஒரு பிராந்திய வல்லாதிக்க அரசு. திட்டச்செலவு, திட்ட ஏற்பாடுகள் என்பவற்றைப் பார்க்கும் போது திட்டத்தை நிறுத்துவது சாத்தியமல்ல எனப் பலரும் வாதிடலாம். உண்மைதான்!

ஆனால், திட்டம் தொடர்பாக, திட்டத்தின் நன்மை, தீமைகள் தொடர்பாக, அதனால் நீண்டகாலத்தில் நமது தேசம் எதிர் கொள்ளப்போகும் ஆபத்துக்களை - சவால்களை - பிரச்சினைகளை அறியவும், மாற்றுவழிகளைக் காணவும் கூட சேது சமுத்திரத் திட்டம் தொடர்பான ஆழமான பார்வையை மக்கள் மத்தியில் கொண்டு செல்வதும், அது பற்றிப் பிரக்ஞை பூர்வமான ஓர் எதிர்ப்பை வெளியிடுவதும் அவசியமாகும். இதனைச் செய்யவேண்டியது சமூக, அரசியல், பொருளாதார, புவியியல், சூழலியல் சார்ந்த அனைவருக்கும் உரிய பணியாகும்.

— ஏகலைவன்

### முற்றிய பிஞ்சுகள்

அந்த புடலம் பிஞ்சிற்கு
பல நாள்களாகியும்
கல்லுக் கட்டப்படவில்லை!

குழவிகளும்,
பழ ஈக்களும்
மென்மையை அபகரிக்க
திட்டம் தீட்டிக் கொண்டிருந்தன.

பூவிலேயே நுழைந்த
புழுவொன்று
சாவுமணிக்கு
நாக்குப்
போட்டுக்கொண்டிருந்தது.

கல்லுகளிடம் தன்னம்பிக்கை
மருந்துக்கும்
இல்லையே!

ஒரு கல்லு விலைகளுடன்
சரிப்பட்டு வரவில்லை
மறுகல்லு...
முதலொரு பிஞ்சிற்குக்
கட்டி அறுந்தது!

இன்னொரு கல்லு
பின்புலம்பற்றி
ஆராய்ந்து அலைந்தது.
பிறிதொரு கல்லு
பிறப்பியல்பிற்கு
அறிக்கை கேட்டது.

மற்றொரு கல்லு
காலதாமதத்திற்கும்
காரணம் கேட்டது.

பிஞ்சுகள்...
காலத்தின் நிழலில்
குறண்டியபடியே
முற்றிக்கொண்டிருக்கிறது
கல்லுக்கட்டப்படாமல்.

-ந.வினோ-

# "...போராட்டம் பற்றிய விழிப்புணர்வு இன்றைய மாணவர்களிடம் போதாது..."

## மூத்த பெண்புலிகளின் அனுபவப் பகிர்வுகள் 02

சந்திரமதனா

ஈழவிடுதலைப் போராட்டம் ஆரம்பமாகிய ஆரம்ப கால கட்டங்களில் விடுதலைப் புலிகள் அமைப்பில் பெண்கள் இணைந்து கொண்டிருக்கவில்லை.

பின்னர் பெண்களை போராட்டத்துக்குள் உந்தித் தள்ளிய சில புறக் காரணங்கள் இருக்கின்றன. ஸ்ரீலங்கா அரசில் திட்டமிட்ட இன அழிப்பை - ஒடுக்கு முறைகளை - நாளாந்தம் கண்டு, கேட்டு அதனால் ஏற்பட்ட விரக்தியின் உச்சத்தில் தான் பெண்கள் போராடப் புறப்பட்டார்கள்.

அவர்களின் போராட்ட தாகத்துக்கு களம் தந்தவர் தலைவர் பிரபாகரன். அவரது சிறந்த வழிகாட்டலில் ஈழப் பெண்கள் இன்று அரச படைகளுக்கு சிம்ம சொப்பனமாக விளங்குகின்றனர்.

ஆரம்பத்தில் தன்னைப் போராடத் தூண்டிய காரணங்களை பகிர்ந்து கொள்கிறார் மூத்தபோராளி திருமதி தாரணி.

### சிங்களம் தான் எங்களை போருக்குள் தள்ளியது!

எங்களை இந்தப் போராட்டத்துக்குள் உந்தித் தள்ளியவர்கள் சிங்களவர்கள் தான். சிறுவயதில் இருந்தே சிங்களத் தரப்பினரின் கொடுமைகளைக் கண்டும் கேட்டும் வளர்ந்தனாங்கள்.



1981ஆம் அண்டு நாங்கள் மாணவர்களாக இருக்கும்போது போய் படிக்கின்ற யாழ். நூலகத்தை எரித்தார்கள். அதைக் கேள்விப்பட்டு பார்ப்பதற்காக அடுத்த நாள் போனோம். ஒரே சாம்பல் மேடாக இருந்தது. இதையெல்லாம் பார்த்தபோது எங்களுக்குள் பிரச்சினை ஏற்படத் தொடங்கியது. பாடசாலையில் எங்களுடைய கதையெல்லாம் அதைப்பற்றியதாகவே இருக்கும்.

போராட்டம், கிரனேட்வீச்சு, குண்டு வெடிப்பு, கைது, இராணுவ அடக்குமுறை இதுகளைப் பற்றித்தான் எங்களுடைய கதைகள், விவாதங்கள் இருக்கும்.

அப்படியிருக்கும் போதுதான் 83ஆம் ஆண்டுக் கலவரம் வந்தது. அதுவும் எங்களைப் பாதித்திருந்தது. அப்போது இருந்த இளைஞர் , யுவதிகளை சினிமா பற்றிய கதைகளை விட்டு விட்டார்கள். போராட்டம், சண்டை பற்றிய ரஷ்ய நாவல்களைத் தான் விரும்பிப்படிக்கவும் தொடங்கினோம்.

"... அப்ப குழந்தை சண்முகலிங்கம் சேர், சிதம்பரநாதன் சேர் ஆக்கள் 'மண் சுமந்த மேனியர்' எண்டொரு நாடகம் போட்டார்கள். அது மாணவர்கள் தொடக்கம் வயது போனவர்கள் வரை அனைவரையுமே போராட்டம் முக்கியமானதென்று கதைக்க வைத்தது..."

பிறகு ஹாட்லிக் கல்லூரி நூலகம் எரிக்கப்பட்டது. அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஒருநாள் உண்ணாவிரதம் இருந்தனாங்கள். அப்போது கூட ஆமியும் பொலீஸும் வந்து நிண்டு கண்ணீர்ப்புகை அடிக்கப்போறம் ஓடுங்கோ எண்டாங்கள் ஒருதரும் ஓடேல்ல. நிண்டனாங்கள்.

அப்ப எல்லோரிடமும் ஒரு வேகம் இருந்தது. சினிமாகப் பாட்டு எண்டாலும் 'அதோ அந்தப் பறவை போல வாழவேண்டும்....' எண்ட மாதிரியான உரிமையையும் சுதந்திரத்தையும் வலியுறுத்துகின்ற பாட்டுகளைத் தான் எல்லோரும் விரும்பிப் படிக்கத் தொடங்கினார்கள்.

### விடுதலைப் புலிகளின் மாணவர் அமைப்பில்.....!

இதற்கு பிறகு 1985 ஆம் ஆண்டு காலப்பகுதியில் விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பில் (Sholt ) இணைந்து செயற்பட்டோம் அந்தக் காலத்திலே மாணவர் அமைப்பு இல்லாத பாடசாலைகளே இல்லை. அதில் சேராத உயர்தர மாணவர்கள் யாருமே இல்லை. வெடிபொருள் தயாரிக்கிறதுக்கு சைக்கிள் கடைகளில் போய் 'போள்ஸ்' சேர்க்கிறது. ஊர் ஊராக பழைய அலுமினியப் பாத்திரங்கள் சேர்த்துக் கொடுப்பது போன்ற வேலைகளைச் செய்வோம்.

அதற்கெல்லாம் நாங்கள் வெட்கப்பட்டவில்லை. எல்லாவற்றுக்கும் மேலாக போராட்டத்தின் முக்கியத்துவத்தில் ஒரு மோன நிலையில் நாங்கள் இருந்தோம்.

மிகப் பிரமாண்டமான ஊர்வலங்கள் எழுச்சிக்கூட்டங்கள் நடத்தப்பட்டன. கல்வி விழிப் புணர்வை ஏற்படுத்துவதற்காக 'பள்ளி எழுந்திடுவீர்' எண்டொரு நாடகம் போட்டனாங்கள்.

மாணவர் அமைப்பின்ர பணிகள் அப்பவே நிறைய இருந்தது. கைலாசபதி அரங்கில்ல கூட்டம் வைச்சா அந்த அரங்கமே மாணவர்களால் நிரம்பி வழியும்.

அப்ப இருந்த மாதிரியான எழுச்சி இப்ப இல்லை. மாணவர்கள் மத்தியில் போராட்டம் பற்றிய சிந்தனையே இல்லாமல் போய்க் கொண்டிருக்கு.

### முதல் சண்டை!

"...நீங்கள் பங்குபற்றிய முதலாவது சண்டையை மறந்திருக்கமாட்டீர்களே..." நான் கேட்டேன்.

"...முதல் முதலில் நான் சந்தித்த சண்டைக்களம் பலாலிதான். 1990 ஆம் ஆண்டு பலாலி முகாமின்ர முன்னணிக் காவல் அரண்களில் ஒரு பகுதியை அண்ணை எங்களிட்டையே பொறுப்பாகத் தந்திருந்தார்.

பலாலி தளத்திலிருந்து இரண்டு பக்கமாகப் பிரிந்து ஒருபக்கம் அண்ணாக்களும் ஒருபக்கம் நாங்களுமாக நின்றோம். எங்களில் ஒரு முப்பதுபேர் இருக்கும்.

இராணுவம் நாங்கள் நிக்கிற பகுதிக்குத்தான் அடிக்கடி ஷெல் அடிப்பான். 'சினைப்' பண்ணுறது திடீர்த்தாக்குதல் தொடுக்கிறது. எல்லாம் எங்கட பக்கம் தான்.

அப்ப எங்களிட்ட ஆயுத பலமும் குறைவு. அவங்கள் நிறைய ஆயுதங்களைக் கொண்டு வந்து திடீரெண்டு தாக்கிப் போட்டு போய் விடுவாங்கள்.

### பெரிய ஆமிக்காரன்....!

அப்படியிருக்கும்போதுதான் 1990 டிசெம்பர் மாதம்.....

இந்த மாதம் எப்பிடியும் வருவாங்கள் என்று தெரியும். நாங்கள் ஒரு முடிவெடுத்தம். எப்படியாவது இந்தமுறை நல்ல பாடம் படிப்பிக்க வேணும்..... ஒரு நாள் திடீரெண்டு வந்திட்டாங்கள். கட்டுவன் பகுதியில் சண்டை தொடங்கியது. நாலு மணித்தியாலமாகத் தொடர்ந்து சண்டை. அவங்கள் ட்ரக், ஜீப்பில் வந்தாங்கள். நடந்தும் வந்தாங்கள். ஹெலியும் பிளேனும் வந்து மேலால அடிச்சாங்கள். அண்டைக்கு நல்ல அடிதான் குடுத்தனாங்கள்.

'சாதாரண பெண்கள்தானே..' எண்டுதான் ஆமி அதுவரைக்கும் எங்களை நினைச்சிருந்தவன். அண்டைக்குத்தான் அவனுக்கு எங்களைப் பற்றி விளங்கியிருக்கும். அதில எங்களை வழி நடத்தின கப்டன் அஜித்தா அக்கா வீரச்சாவடைந்துவிட்டார். சண்டை ஓய்ந்தவுடன் அங்கே போய்ப் பார்த்தபோது ஒரு ஆமிக்காரனின் சடலம் கிடந்தது. 'டொங்கான்' ஒண்டையும் கண்டெடுத்தோம்.

அந்த ஆமிக்காரன்ர உயரம் 6அடிக்கு மேல இருக்கும். அவன்ர உயரத்தைப் பார்த்திட்டு சில பிள்ளையள் பயந்து விட்டார்கள்.

"... இவ்வளவு பெரிய ஆமிக்கார னோடை நாங்கள் என்னெண்டு சண்டை பிடிக்கிறது..."

இப்படித்தான் சில பிள்ளையள் கேட்டிச்சினம்.

அன்றுடன் பலாலியில் இருந்து எங்களை (பெண்கள்) நோக்கிய தாக்குதல் நிறுத்தப்பட்டது.

இதுதான் என்ர முதலாவது தாக்குதல். பெண்கள் படையணி தனியாக சண்டை செய்த முதலாவது சம்பவமும் இதுதான்.

அதற்குப் பிறகு நடந்த பெரும்பாலான சண்டைகளில நான் பங்கு பற்றியிருக்கிறேன்.

### அம்மா சண்டைக்குப் போட்டா....!

".... திருமணமான பின்னர் சண்டைக் களங்களுக்குச் சென்றதுண்டா....?

திருமணத்துக்குப் பிறகும் களங்களுக்குப் போயிருக்கிறேன். பின் தள வேலைகள், விநியோகம் உட்பட வேறுபல வேலைப் பிரிவுகளில் நான் திருமணத்துக்கு முன்னரே ஈடுபட்டிருந்தேன்.

திருமணத்துக்குப் பின்பும் அந்த வேலைகளையே செய்யவேண்டியிருந்தது.

ஓயாத அலைகள் சண்டை நடந்த காலத்தில நான் களத்துக்குப் போய்விட்டேன். வீட்டில என்ர மகளிடம் யாராவது அம்மா எங்கே? என்று கேட்டால் "அம்மா சண்டைக்குப் போட்டா...." எண்டு பிள்ளை சொல்லும் ..... (சிரிக்கிறார்....)

சண்டைக் காலத்தில் பிள்ளைகளைக் கொண்டு போய் விடுவதற்கு சிறுவர் பராமரிப்பு இல்லம் இருக்கிறது. அங்கு கொண்டுபோய்விட்டால் அவர்கள் பிள்ளைகளை நன்றாகப் பராமரிப்பார்கள்.

### அண்ணா எங்களுக்கு அம்மா.....!

"...தலைவரிடம் நேரடிப் பயிற்சி பெற்ற போராளிகளில் நீங்களும் ஒருவராமே.... ? தலைவரைப் பற்றி....."

கேள்விகேட்டு முடிப்பதற்கு முன்னரே பதில் சொல்லத் தொடங்கிவிட்டார்.

"... அண்ணையின்ர காலத்தில அவரோட இணைந்து நாட்டுக்காகப் போராடுகின்ற சந்தர்ப்பம் கிடத்ததை நான் பாக்கியமாகத்தான் கருதுறன்....

நாங்கள் இயக்கத்தில் சேர்ந்த காலத்தில் ஒவ்வொரு போராளிகளினதும் தனிப்பட்ட விவரங்களை தலைவர் மட்டும்தான் எடுப்பார். எங்களுக்கு பொறுப்பாளராக சோதிகா அக்கா இருந்தவா. ஆனால், அவவுக்குக் கூட எங்கட சொந்த விவரங்கள் தெரியாது.

எங்களுக்கு மிகுந்த நம்பிக்கையை ஊட்டியவர் அண்ணைதான்.

எங்களோடை கதைக்கேக்க அவர் எங்களுக்கு இருக்கிற சகல சந்தேகங்களுக்கும் விளக்கம் தருவார்; தீர்த்து வைப்பார். அண்ணா எங்களுக்கு அம்மா மாதிரித்தான். ஆரம்பத்தில் எங்களுக்குள்யேயும் பல பிற்போக்குத் தனங்கள் இருந்தது. அதுக்கெல்லாம் அண்ணா தந்த விளக்கங்கள் அதுகளையெல்லாம் இல்லாமல் செய்தது. எந்தவிடயங்களையும் இயல்பாக, இலகுவாகக் கதைத்து தெளிவுபடுத்துவார்.

ஒரு தடவை எங்களிடம் விவரம் எடுத்தால் பிறகு மறக்கவேமாட்டார். எங்கட பிறந்த திகதியைக் கூட ஞாபகம் வைச்சிருப்பார். குடும்பத்தவர்களைக் கூட சுகம் விசாரிப்பார். அவ்வளவுக்கு அவரிடம் தெளிவான சிந்தனையும் ஞாபகசக்தியும் இருக்கு.

ஒருவருடன் கதைக்கும்போது மேலோட்டமாக அல்லாமல், ஆழமாக எங்களுடைய கதைகளை உள்வாங்குவார்.

இந்த உலகத்தில் எல்லா விடயங்களையும் மனம் விட்டு நாங்கள் கதைக்கக்கூடிய ஒரே ஒருவர் அண்ணை மட்டும்தான்.

(அனுபவங்கள் இன்னும் வரும்)



---

### "... பிரபாகரன் வளர்ப்பவர்கள் பெண்கள் அல்லர்; பேய்கள்...!"

*ஆட்லறி தகர்க்கப்பட்ட பின் இராணுவ அதிகாரி கூறியது.*

1995 ஆம் ஆண்டு மணலாற்றுப் பகுதியில் இருந்த 5 மினி முகாம்கள் மீது ஒரு ஒருங்கமைந்த தாக்குதல் பெண்கள் படையணியால் நடத்தப் பட்டது. அந்தத் தாக்குதலில் அதுவரை காலமும் அப்படி ஒரு படைப்பிரிவு இருக்கிறது என்றே எவருக்கும் தெரியாத ஒரு சிறப்பு படையணி பங்கேற்றது.

அந்தச் சிறப்புப் படையணி காடுகளுக்குள்ளும் நகரத்திலும் எங்கேயும் எப்பவும் போரிடக்கூடிய வல்லமையுடன் வளர்க்கப்பட்ட மகளிர் அணி.

ஐந்து மினி முகாம்களுக்குள்ளும் இருந்த ஆட்லறி நிலைகளைத் தகர்ப்பது தான் அந்தப் படையணியின் நோக்கம். சிறப்புப் படையணியைச் சேர்ந்த பத்துக்கும் குறைவான போராளிகள்தான் அதில் பங்கேற்றனர். அந்த அணி உள் நுழையும் போதே இராணுவம் சுதாகரித்துக் கொண்டதால் மிக மோசமான தாக்குதல்களை முன்னரங்கக் காவலரண்களிலேயே எதிர்நோக்க வேண்டியிருந்தது.

சண்டை உக்கிரமடைந்தது. இராணுவத்தை விலக்கிக் கொண்டு ஆட்லறி மையத்தை போராளிகள் நெருங்கினர். அதற்கிடையில் நடந்த சண்டைகளில் போராளிகளிடம் இருந்த ரவைகள் தீர்ந்துவிட்டன. இப்போது ஆட்லறித் தளம் கண்ணுக்குத் தெரியும் தூரத்தில் வந்துவிட்டது. தொடர்ந்து அதனை நெருங்குவதற்கு அவர்களிடம் ஆயுதபலம் இல்லை.

அந்த நேரத்தில் அந்த சிறப்பு மகளிர் அணி அதுவரை காலமும் பெற்ற விசேட பயிற்சிகளைக் கொண்டு இராணுவத்தினருக்கு அருகில் சென்று அவர் களைக் கைகளாலும் கால்களாலும் துப்பாக்கிப் பிடிகளாலும் அடித்து தூக்கி வீசிக் கொன்று விட்டு ஆட்லறியைத் தகர்த்தது.

அந்தச் சண்டை இராணுவத்தினரின் மனதைப் பெரிதும் பாதித்தது; அச்சமடைய வைத்தது. இந்தச் சண்டையில் நின்ற இராணுவ அதிகாரி ஒருவர் பின்னர் அது பற்றிக்கூறியபோது " பிரபாகரன் வளர்ப்பவர்கள் பெண்கள் அல்லர். அவர்கள் பேய்கள்" என்று வெளிப்படையாகவே கூறியிருந்தார்.

# தகவற் பெட்டி

## மைனா



சாதாரணமாக வீட்டுத் தோட்டங்களில் காணப்படும் மைனாவைப் பற்றிச் சில சுவையான தகவல்கள் இதோ!

'நாகணவாய்ப் புள்' என இலக்கியங்களில் வர்ணிக்கப்படும் இந்த மைனாக்கள் இணையாகவும், கூட்டங்கூட்டமாகவும், வசிக்கின்றன.

இந்தியா, இலங்கை, மலேசியா தென்மேற்குப் பசிபிக்தீவுகளில் இப்பறவைகள் அதிகமாகக் காணப்படுகின்றன.

புழு, பூச்சி, வெட்டுக்கிளி என்பவற்றை உணவாகக் கொள்ளும் இப்பறவை அத்திப்பழங்களை விரும்பி உண்ணும். செல்லப் பறவையாக இதனைப் பலர் வீடுகளில் வளர்க்கிறார்கள்.

## வியாழன்



ஒன்பது கோள்களில் ஒன்றாக விளங்கும் வியாழன் பூமியை விட 318 மடங்கு அதிக நிறை உள்ளது.

இக்கோளின் குறுக்களவு ஒரு லட்சத்து 42ஆயிரம் கிலோ மீற்றர். இதற்குப்16 துணைக் கோள்கள் உள்ளன.

இக் கிரகத்திற்கு மனிதன் சென்றால் அவனுடைய நிறையிலும் பார்க்க 5மடங்கு அதிகமாக இருக்கும். இங்கு ஒரு நாள் என்பது 10 மணித்தியாலங்கள் கொண்டது.

## முயல்



முயலைப் பற்றிப் பல கதைகளைக் கேட்டிருக்கிறோம். இது தந்திரமுள்ள சிறு விலங்கு. பார்வைத்திறனும், மோப்ப சக்தியும் அதிகம் கொண்ட இம் முயல்களின் பின்னங்கால்கள் முன்னங்கால்களை விட நீளமானவை.

புல் பூண்டுகள், தானியங்கள், மரப்பட்டைகளை உணவாக்கிக்கொள்ளும். இந்த முயல்களில் குழி முயல், காட்டுமுயல் என இரு வகைகள் உள்ளன.

இவற்றுள் அங்கோரா என்ற இனமும் உண்டு. இதன் நீண்ட உரோமங்களை கத்தரித்து இழையாகச் செய்து ஆடை நெய்கிறார்கள். இது மட்டுமன்றி தொப்பிகள், மென்மயிர் ஆடைகள் என்பனவும் தயாரிக்கிறார்களாம்.

## முள்ளம் பன்றி



மிக விந்தையான ஒரு விலங்கு முள்ளம் பன்றி, கறுப்பும் பழுப்பும் கலந்த இதன் உரோ மங்கள் நீண்ட முட்களாக உள்ளன.

மற்ற விலங்குகளிற்குத் தீங்கு செய்யாத இந்த விலங்கு, தன் உடலிலுள்ள முட்களை சிலிர்த்து, நிமிர்த்திப் பிற விலங்குகளிடமிருந்து தம்மைப் பாதுகாத் துக் கொள்ளும்.

கொறிக்கும் பிராணி இனத்தை சேர்ந்த இந்த விலங்கு பகல் முழுவதும் வளையில் பதுங்கி இருந்துவிட்டு இரவில் தான் இரை தேடும். இளம் மரங்களின் வேர், பட்டை, கிழங்கு, இலை, தளிர், காய் என்பவற்றை உணவாகக் கொள்ளும்.

## வால்ரஸ்



வால்ரஸ் கடலில் வாழும் பாலூட்டி விலங்காகும். இதன் மேல்தாடையில் இரண்டு கோரப் பற்கள் நீண்டு தந்தங்கள் போல் வளர்ந்திருக்கும்.

வடதுருவத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் இந்த விலங்குகள் கூட்டங் கூட்டமாக வாழ்கின்றன. 4மீற்றர் வரை வளரக்கூடிய இவ்விலங்கின் உடல் மிகப் பருமானானது. கால் விரல்கள் சவ்வு போன்ற தோலினால் இணைக்கப்பட்டுள்ளன. கால்களைத் துடுப்புகளாகப் பயன்படுத்திக் கடலில் நீந்தும்.

நண்டு, நத்தை, கடற்கரையில் உள்ள கிளிஞ்சல்கள் என்ப வற்றை உணவாகக் கொள்ளும். நீரில் வாழ்ந்தாலும் நிலத்தில் தான் குட்டிகள் ஈன்று இனப் பெருக்கம் செய்கின்றன.

எக்சிமோ மக்கள் பிரதான உணவாக இதன் இறைச்சியை உண்பார்கள். தோலை ஆடையாகப் பயன்படுத்துவார்கள்.

# சிந்தனைக்கு.....


- பெற்றோரின் நடத்தையே பிள்ளைகளின் கல்வி என்பதை மறந்து விடாதீர்கள் - *பாரோ*
- எங்கு ஒரு நூலகம் திறக்கப்படுகிறதோ, அங்கு ஒரு சிறைச்சாலை மூடப்படுகிறது. - *சுவாமி விவேகானந்தர்.*
- ஓய்வை விவேகத்துடன் பயன்படுத்துவதே கல்வியின் குறிக்கோள். - *அரிஸ்டோட்டில்*
- தந்தை, தாய், குரு, தெய்வம் உன் வாழ்க்கையை மேம்படுத்தும் உயர்ந்த சொத்துக்கள். - *ஓர் அறிஞர்*
- போர்க்களத்தில் பெறக்கூடிய சில வெற்றிகளை இழக்கக் கூட நான் சம்மதிப்பேன். ஆனால், காலம் வீணாக்கப்படுவதை, இழக்கப்படுவதை மட்டும் நான் எப்போதும் விரும்பமாட்டேன். - **நெப்போலியன்**
- கடினமான வேலையைச் செய்வதில் மகிழ்ச்சியைக் காணும் மனநிலை கொண்ட மனிதர்களே எப்பொழுதும் வெற்றி வீரர்கள் ஆவார்கள். - **மில்ரன்**

**கணபதிப்பிள்ளை கஜசுமனி**
**தரம் 6D,**
**யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி.**



சி.குகரஜீவன்
தரம் 8D, யாழ்.இந்துக் கல்லூரி.

# சீனத்துப் பெருஞ்சுவர்



சீன தேசத்துப் பிரம்மாண்டமான மதிற்சுவரைப் (The Great wall of China) பற்றி நீங்கள் கேள்விப்பட்டிப்பீர்கள். உலகத்து விந்தைகளில் ஒன்றான இந்தப்பெருஞ்சுவர் 2694.4 கிலோ மீற்றர் (1684மைல்) நீளமானது. இதன் உயரம் 4.57 மீற்றர் முதல் 9.2 மீற்றர் வரை (15இலிருந்து 30 அடி வரை) இடத்துக்கு இடம் வேறுபடும். சுவரின் மீது ஆங்காங்கே காவல் மாடங்கள் கட்டப்பட்டுள்ளன. கல், மண் என்பவற்றால் அமைக்கப்பட்ட இந்த நீண்ட சுவரை கி.மு.221இல் கட்ட ஆரம்பித்து 15 ஆண்டுகள் தொடர்ந்து கட்டப்பட்டது. இதனை யார், எதற்காகக் கட்டினார்கள் என்று தெரியுமா?

அந்நியர்களின் படையெடுப்பிலிருந்து சீன நாட்டைக் காக்கவே இம் மதிற் சுவர் கட்டப்பட்டது. கி.மு. 3 ஆம் நூற்றாண்டில் சீன நாடு சிறு சிறு பகுதிகளாகப் பிரிந்திருந்தது. ஷீஹ ௌவாங் என்ற அரசன் இதன் பல பகுதிகளை தனது வல்லரசின் கீழ் கொண்டு வந்தான். வடக்குப் பகுதியிலிருந்து மங்கோலியர் அடிக்கடி படையெடுத்தனர். வட சீனப் பகுதியை இந்த ஆபத்திலிருந்து காப்பதற்காக ஷீஹ ௌ வாங் நீண்ட மதிற் சுவரை கட்டப் பணித்தான். போஹாய் விரிகுடாவிலுள்ள ஷான் ஹிகுவானில் இருந்து கன்ஸ ௌவிலுள்ள சிங்க்குமன் வரையிலும் சுவர் கட்டப்பட்டது.

எனினும் இந்த பெருஞ்சுவர் முழுமை பெறவில்லை. இதனைக் கட்டியதன் நோக்கமும் நிறைவேறவில்லை. மண், கல், செங்கல் இவற்றால் கட்டிய சுவர் எங்கிருந்து வேண்டுமானாலும் உடைந்து எதிரிகள் நுழையலாம். இன்று இந்தச் சுவர் பல இடங்களில் உடைந்திருந்தாலும் இதன் பெரும் பகுதி பத்திரமாக பாதுகாக்கப்பட்டு உலக அதிசயங்களில் ஒன்றாக விளங்குகின்றது.

- கவிதா




# வண்ணத்துப்பூச்சியும் காகமும்



**தேன்** நிறையக் குடித்த வண்ணத்துப்பூச்சி ஒன்று மயக்க மிகுதியால் பாடிக் கொண்டு வந்தது. இதனைக் கண்ட காகம் " என்ன வண்ணத்துப்பூச்சியரே! மிக்க சந் தோசத்தில் பாடிக் கொண்டு வருகிறீர். எங்கு போனீர்" எனக் கேட்டது.

வண்ணத்துப்பூச்சி 'நீர் சொன்னது சரி. நான் மிகவும் சந்தோசமாய் இருக்கிறேன். அருகிலுள்ள பூங்காவிற்கு சென்றேன். அங்கு பூக்கள் ஒளித்துவைத்திருந்த தேனை எல்லாம் குடித்துவிட்டு வருகிறேன்' என்றது.

'தேன் குடித்தீரா? அது எப்படி இருக்கும்' என்றது காகம்.

'தேன் மிகவும் இனிமையானது குடிக்க குடிக்கத் திகட்டும். உடலை நலம் பெறச் செய்யும் சத்துக்கள் எல்லாம் நிறைந்தது. உடலுக்கு மட்டுமல்ல உள்ளத்திற்கும் உவகை தரும்' என்றது வண்ணத்துப்பூச்சி.

இதனைக் கேட்ட காகம் 'இதுவா...? அந்தத் தேனில் இருப்பது. இதைவிட நீ வேப்பம் பழம் சாப்பிட்டிருக்கிறீரா? அதன் இனிமை, சுவை இது எல்லாம் உமக்கு எங்கே தெரியப்போகிறது. சும்மா தேனைப் பற்றி புளுகாதையும் என்று இகழ்ச்சியாகக் கூறிவிட்டுப் பறந்துவிட்டது.

*'நல்லவர்கள் என்றும் நல்லதைப் பற்றிக் கதைப்பார்கள். தீயவர்கள் தீயதைப் பற்றியே சிந்திப்பார்கள்.'*

– அப்பம்மா

# வர்ணந் தீட்டி மகிழுங்கள்....!



**தம்பி, தங்கைகளே.....!**

மேலே காணும் படத்துக்கு வர்ணம் தீட்டிக் கத்தரித்து அனுப்பி வையுங்கள். அழகுற வர்ணம் தீட்டி அனுப்புவோரில் மூவர் தெரிவு செய்யப்பட்டு அவர்களது பெயர்கள் 'சிறுவர் பொழில்' பகுதியில் பிரசுரிக்கப்படும்.

*எங்கே முயன்று பாருங்கள்! கைவண்ணத்தைக் காட்டுங்கள்!!*

அனுப்பவேண்டிய முகவரி:-
**'வர்ணம் தீட்டுவோம்' - 01**
சூரியகாந்தி 'சிறுவர் பொழில்'
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# பாட்டொன்று கேட்டேன் பரவசம் ஆனேன்...

நேரமிது நேரமிது நெஞ்சில் ஒரு பாட்டெழுத, இன்பம் இன்பம் என்ற சொல் எழுத நீ எழுத, நான் எழுத பிறந்தது பேரெழுத.

பாட்டு வரும் பாட்டுவரும் உன்னைப் பார்த்துக் கொண்டிருந்தால் பாட்டுவரும்.

நான் பாடிய முதல் பாட்டு இவள் பேசிய தமிழ் கேட்டு, நான் கவிஞன் என்றாகியதெல்லாம் அந்த அழகியின் முகம் பார்த்து.

நான் கேட்டதிலே அவள் வார்த்தையைத்தான் ஒரு கவிதை என்பேன் நல்ல கவிதை என்பேன்.

கண்போல் வளர்ப்பதில் அன்னை கவிஞனாக்கினாள் என்னை - என்ற கவிஞர்
"கொஞ்சும் சதங்கை ஒலி
கேட்டு நெஞ்சில்
பொங்குதம்மா புதியபாட்டு"
என்றார்.

கவிதைகள் எப்படியெல்லாம் உருவாகின்றன என்பதை இந்தத் திரைக் கவிஞர்கள் நமக்கு இவ் வாறு தெரிவிக்கின்றார்கள்.

'கவிஞன் கண்டாலே கவிதை' என்று கவிஞன் சொல்லும் போது "நீ என்னென்ன சொன்னாலும் கவிதை எங்கெங்குதொட்டாலும் இனிமை" என்று சொல்லத் தோன்றுகிறதல்லவா?

"நான் புலவனென்றால் பாடிடுவேன் கவிதை ஒரு கோடி"

இதுவும் இந்த திரைப்படக் கவிஞர்களுள் ஒருவர் பாடியது தான்.

"வண்ண வண்ண சொல்
எடுத்து
வந்து செந்தமிழ்ப்
பாட்டு
வாசமுள்ள மல்லிகைப்
பூ மணம்
தந்தது செந்தமிழ்ப்
பாட்டு"

"செந்தமிழ் பாடும்
சந்தனக் காற்று
தேரினில் வந்தது
கண்ணா..."

"தேனிலாவினில் வீசிடும்
காற்றில்
செந்தமிழ் மகள்
பாடு தாலாட்டு..."
(- மின்னூர் சீனிவாசன்.)

"இதயம் என்றொரு
ஏடெடுத்தே - அதில்
எத்தனையோ நான் எழுதி
வந்தேன்"

இப்படி எத்தனையோ கவிதைகளை இந்தத் திரைப்படக் கவிஞர்கள் ரசிகர்களை மகிழ்விக்கத் தந்துள்ளார்கள். அவற்றைக் கேட்கும் போது -
"ஏதோ ஒரு பாட்டு
என் காதில் கேட்கும்
கேட்கும் போதெல்லாம்
உன் ஞாபகம் சிறகடிக்கும்..."
என்றே சொல்லத் தோன்றும்.
" துன்பக் கடலைத்
தாண்டும்போது
தோணியாவது கீதம்
அன்புக் கடலில்
அமுதம் கலந்தே
அருந்தத்தருவது கீதம்
எங்கும் சிதறும்
எண்ணங்களையும்
இழுத்து வருவது கீதம்
துயர் இருளை
மறைப்பது கீதம்..."

இவ்விதம் காற்றினில் கலந்து தினமும் வரும் கீதங்கள் மனதுக்கு இதமளிக்கிறன்றன. சுகமளிக்கவே செய்கின்றது.

(Poetry is the record of the happiest and best moments of the happiest and best minds)

கவிஞன் கண்டாலே கவிதையாகிப் பதிவாகிவிடுகிறது.

"அனுபவங்களைக் கலந்து கொடுப்பவன் எழுத்தாளன். அனுபவங்களுக்குள் கரைந்து போகிறவன் கவிஞன்" என்கிறார் கவிஞர் மு.மேத்தா.

"அள்ளித் தரும் சர்க்கரை
கற்கண்டும்
அன்புத் தமிழாமோ?"

"முத்தமிழே முழுநிலவே
மோக வண்ணமே
முப்பொழுதும் எப்பொழுதும்
நமது சொந்தமே"

"கல்லெல்லாம் மாணிக்கக்
கல்லாகுமா?
கலையெல்லாம் கண்கள்
சொல்லும்
கலையாகுமா?
சொல்லெல்லாம்
தூய தமிழ்
சொல்லாகுமா?"

"வண்ணத் தமிழ்
பெண்ணொருத்தி
என்னெதிரில் வந்தாள்
கண்ணசைவில்
கோடி கோடி
கற்பனைகள் தந்தாள்.
அன்னம் கூட
அவளிடத்தில்
வந்து நடை பயிலும்
ஆடற்கலை இலக்கணத்தை
அறியவரும் மயிலும்
இன்னிசையைப் பாடம்
கேட்க
எண்ணி வரும்
குயிலும்
இயற்கையெல்லாம்
அவள் குரலின்
இனிமையிலே துயிலும்"

"தமிழுக்கு அமுதென்று பேர்" என்பதை இப்பாடல்களும் உறுதிப்படுத்தவே செய்கின்றன.

"நான் பேச நினைப்பதெல்லாம்
நீ பேச வேண்டும்
நாளோடும் பொழுதோடும்
உறவாட வேண்டும்..." என
தனது விருப்பத்தை வெளிப்படுத்தும் கவிஞன் -
"தென்றல் வந்து வீசாதோ
தெம்மாங்கு பாடாதோ?"
என்று கேட்டு-
"தென்றல் பாடும் தாலாட்டில்
நீ
இன்பம் பெறவில்லையா?"
என்ற கேள்வியையும் எழுப்புகிறான்.
தென்றல் மட்டுமல்ல, பூங்குயிலும் இந்தத் தென்றலோடு பாடுவதாக தனது கவிதையில் சொல்கிறான் கவிஞன்.

"செந்தமிழ் நாட்டுச்
சோலையிலே
சிந்து பாடித்திரியும்
பூங்குயிலே
தென்றலடிக்குது
என்னை மயக்குது
தேனமுதே இந்த
வேளையிலே"

"மாலை நிலா வரவேண்டும்
மந்த மாருதம் வீசிட
வேண்டும்..." - இது ஒரு
கவிஞனின் விருப்பம்.

"பாடுநிலாவே தேன் கவிதை
உன் பாடலை நான் கேட்கிறேன்
பாமாலையாய்
நான் கோர்க்கிறேன்..."
- இப்படி ஒருவர் நிலாவிடம் பாட்டைக் கேட்க-
"மலர்கள் நனைஞ்தன
பனியாலே
என் மனமும் குளிர்ந்தது
நிலவாலே
பொழுதும் விடிந்தது
கதிராலே சுகம்
பொங்கி எழுந்தது
நினைவாலே"
என்று தனது அனுபவத்தைச் சொல்கிறார் மற்றவர்.

"கொட்டி வைத்த
மல்லிகை மொட்டு
பூத்திருக்கு வெட்கத்தை
விட்டு..." என்று ஒருவர் மகிழ்ச்சியில் மனம் பூரிக்க -

"ஆயிரம் மலர்களே
மலருங்கள்
அமுத கீதம் பாடுங்கள்
பாடுங்கள்..." - என
அடுத்தவர் ஆனந்தம் பாடுகிறார்.

"நிலவும் மலரும் பாடுது
என் நினைவில்
தென்றல் வீசுது...."-
நிலவு, மலர், தென்றல் எல்லாவற்றையும் இணைத்து கானம் பாடுகின்றார்கள் இந்தக் கவிஞர்கள்.

"இன்பம் எங்கும் இங்கே
ஆட்சி புரியுது
இயற்கையிலே யாவும்
இணைந்தாடுது
ஜீவ சுகம் தேடுது...."
கவிஞனது பார்வை இது.

"சொல் தேனாக பாலாக
பண்பாடவோ?" என்று
கேட்கும் கவிஞன் நவரசத்தை இவ்வாறு கலந்து கவிதையால் தந்து நம்மைப் பரவசப்படுத்துகிறான்.

"வைரமோ என் வசம்
வாழ்விலே பரவசம்
வீதியில் ஊர் வலம்
விழியெலாம் நவரசம்
மனதிலே நிம்மதி
மலர்வதோ புன்னகை"

இந்தப் பாட்டைக் கேட்கும் போது "பாட்டொன்று கேட்டேன் பரவசமானேன்...." என்றே சொல்லத் தோன்றுகிறதல்லவா!

"சொட்டு சொட்டென்று
சொட்டுது பாரு அங்கே
மழை கொட்டு கொட்டென்று
கொட்டுது பாரு
அங்கோ..."

"அந்தி மழை
பொழிகிறது
ஒவ்வொரு துளியிலும்
உன் முகம் தெரிகிறது..."

"தேன் சிந்துதே வானம்
உனை எனை
தாலாட்டுதே
மேகங்களே தரும்
ராகங்களே
எந்நாளும் வாழ்க!
இவ்விதம் மழை பற்றிக் கவிதை மழை பொழியும் இந்தக் கவிஞர்கள்.

"எல்லாரும் எல்லாமும் பெற
வேண்டும், இங்கு இல்லாமை
இல்லாத நிலைவேண்டும்"
என்ற சமுதாய நலநோக்கில் -
"கொடுத்ததெல்லாம்
கொடுத்தார் அவர்
யாருக்காகக் கொடுத்தார்
ஒருத்தருக்கா கொடுத்தார்
இல்லை
ஊருக்காகக் கொடுத்தார்...."

"கொடுப்பதற்கும்
சிரிப்பதற்கும்
படிப்பு வேண்டுமா"

"உள்ளம் உள்ளவர் யாவரும்
உள்ளவரே...." என்று
எல்லோரும் நலம் வாழப் பாடுகின்றார்கள்.

கவிஞர்கள் பாடிய இப்பாடல்களுக்கு ஏற்ற இசையை, ராகத்தைச் சேர்த்து காதும் மனமும் குளிர வைத்துள்ளார்கள் இந்த இசைக் கலைஞர்கள்.

"ஒரு ராகம் பாடலோடு
காதில் கேட்குதோ
மனதோடு
ஊஞ்சலாடுதே....." என்று
மனதோடு ஊஞ்சலாட வைக்கும் விதத்தில் அவர்கள் சேர்த்த ராகங்களுள் சில -

"சுகமான ராகங்களே சபை ஏறி
வாருங்களே..."

"பூபாளம், தோடி, மோகனம், கல்யாணி, சங்கராபரணம், ஹிந்தோளம், சரசாங்கி, ஸ்ரீரஞ்சனி, தேவமனோஹரி, மலையமாருதம், நீலாம்பரி, சரஸ்வதி, ஹம்சத்வனி, காம்போதி, ஹரிகாம்போதி, பைரவி, ஆனந்தபைரவி, சிந்துபைரவி, சாருகேசி, பந்துவராளி, சஹானா, நாட்டை, நாட்டைக்குறிஞ்சி, அடானா, ஆபோகி, கானடா, ஆரபி, காபி, தன்யாசி, வசந்தா, லதாங்கி, பிலஹரி, தர்பார், சாருமதி, சண்முகப்பிரியா.

"பாலிலே பழம் விழுந்து
தேனிலே நனைந்த தம்மா...." -
என்றும் -

"கரும்போ கனியோ கவிதைச்
சுவையோ விருந்தோ...?"
என்றும் சொல்ல வைக்கும் விதத்தில் இவை சுவை கலந்து நிற்கின்றன.

"வேணுகானம் தென்றலோடு
சேர்ந்த பின்னாலே கானம்
வேறு காற்று வேறாய்
கேட்பதேயில்லை"

"புத்தம் புதிய புத்தகமே
உன்னைப்
புரட்டிப் பார்க்கும்
புலவன் நான்..." என்றார் ஒரு
திரைக் கவிஞர். நாமும் இவற்றை அவர்களது கவிதைகளை ஒரு முறை புரட்டிப் பார்ப்போமா?

இனிய எழிற் சொற்களால் துயர் போக்கவல்ல கவிதைகளைத் தருபவர்கள் கவிஞருள் அரசரெனத் திகழ்வர் - என்றார். ஜோன் கீற்ஸ் என்ற கவிஞர்.
They Shall be accounted poet - kings who simply tell the most heart - easing things - John keats.

"சந்திரன் வருவது ஒளிதர அது
தமிழுக்கு ஆயிரம் கவிதர" ★

க.கணேசலிங்கம்

## மௌன விரதம்

இன்றைக்கும்
நான் மௌனவிரதம்
என்றைக்கும் தான்
என்னைச் சுற்றி
அக்கிரமங்கள்
தலைவிரித்து
ஆடிக் கொண்டன.

அதற்குள்ளும்
அன்றைக்கும் நான்
மௌனவிரதம்
என் சுற்றி
நிகழ்ந்தவை
ஒரு நாள்
என் வீட்டிற்குள்
அரங்கேறின.

அன்றைக்கும் கூட
நான் மௌனவிரதம்
உரிமைகளுக்காய்
எம்மவர்கள்
உழைக்க நான் மட்டும்
ஊமையாய் -
மௌனவிரதம்
இருந்தேன்.

சண்டைகளும்
சத்தங்களும்
கேட்கையில்கூட
நான் மட்டும்
சலனமின்றி -
அப்போதும் -
மௌனவிரதம்
இருந்தேன்.

இப்படி மூடிமூடி
முடங்கியதாய்
நித்தமும் 'மௌன விரதம்'
அனுஷ்டித்த
என் வாய்
தண்டனையாக-தான்
அடைந்த பிரதிபலனாக
உண்மையிலே
ஊமையானது.

அதனால்
இனி என்றைக்கும்
மௌனவிரதம் தான்.

பா. தீபச்செல்வன்

## நேரமில்லை !

புல்லின் நுனிமீது
பூத்திருக்கும் பனித்துளியை
நெல்லின் மணிபட்டு
நிலஞ்சிதறும் கதிரொளியை
சொல்லின் இனிமையினால்
சுடர் வீசும் தமிழொலியை
செல்லும் தனிவழியில்
சேர்ந்துவரும் தென்றலினை...
மெல்லப் பாடியெப்போ(து)
மெய்யின்பம் உய்வேனோ?!

தாயின் உதட்டைத்தன்
தளிர்க்கரத்தால் வருடுமந்த
சேயின் சிறுகுறும்பை -
அதனால்
சிலிர்க்கும் தாய்மனதை
பாயும் நதிகளை நான் - நேரில்
பார்த்திராத போதுமவை
ஓயாதென் கற்பனையில்
உரசுகின்ற சலசலப்பை...
காயாமல் கவியாக்கி
களியின்பம் துய்க்கேனோ?!

நட்டநடு ராத்திரியில்
நான் மட்டும் விழித்திருந்து
எட்டத்தில் எழும்புகின்ற
ஏகாந்த ஒலிகளையென் - கவி
தட்டத்தில் ஏந்தேனோ?!
தண்மதியின் முகந்தடவி
விட்டுவிட்டுப் போகின்ற
வெண்மேகம் தனையெந்தன்
வெண்பாவில் சமைக்கேனோ?!

இங்கேயென்
கவிதையெனும்.....
கருவுண்டு; சுமப்பதற்கோ
கருப்பைக்குள் இடமில்லை!
மொட்டுண்டு; முகங்காட்ட
மலரிற்கு இஷ்டமில்லை!
தேனுண்டு; சுவைப்பதற்கு
சிட்டுக்கு இன்பமில்லை!
ஆதலினால் தானிந்த -
நினைவுகளின் நிழலொதுங்க
நேரமில்லை என்பேனோ?!

- அனலையூர் சேந்தன்

# பேரினவாதம் அகலும்வரை சமாதானம் வெறும் ஊகமே!

தமிழீழ விடுதலை புலிகளினதும் ஸ்ரீலங்கா அரசினதும் உயர்மட்டக் குழுக்கள் நேரில் சந்தித்துப் பேச்சுகளை நடத்தவுள்ளன என்பது தற்போதைக்கு நல்லதொரு சமிக்ஞையாக தென்பட்டபோதும் அரசின் உயர் மட்ட தலைவர்களினதும் மற்றும் தென்னிலங்கை பேரினவாத சக்திகளினதும் கருத்துகள் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளன.



அமைச்சரவை பேச்சாளரும் அமைச்சருமான நிமால் ஸ்ரீபால டி சில்வா அண்மையில் ''புலிகளுடன் நிபந்தனைகள் ஏதுமற்று பேச்சு நடத்தி இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண முடியும் என்ற நம்பிக்கை அரசுக்கு உண்டு. எனினும் புலிகளின் சொல்லும் செயலும் நேர்மையுடனும் இருக்கும் என்றாலே அவர்களிடம் பேச அரசு தயாராக இருக்கிறது'' என்று கூறினார். புலிகள் என்ன சொன்னார்கள் பின்னர் செய்யாமல் விட்டார்கள் என்பதை அவர் கூறவில்லை.

தனியே கதிர்காமரின் கொலைக்கு பின்னணி புலிகள்தான் என்ற செய்தியை மட்டும் வலியுறுத்தியுள்ளாரே தவிர புலிகளின் வேண்டுகோளின் படி நீதியான விசாரணைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. விடுதலைப் புலிகள் முன்பு போர் நிறுத்த உடன்படிக்கை சரத்து 8.1 இன் படி உடன்படிக்கை கைச்சாத்தாகி 30 நாள்களுக்குள் அரசின் துணைப்படைகளின் ஆயுதங்கள் களையப்பட வேண்டும். வடக்கு - கிழக்கிலிருந்து அவர்கள் அகற்றப்பட வேண்டும். ஆனால் அரசோ துணைப் படைகளை மேலும் வலுப்படுத்தும் வகையிலேயே தனது செயற்பாடுகளை முன்னெடுத்தது.

புலிகள் இது தொடர்பில் தமது கடும் அதிருப்தியை தொடர்ச்சியாக போர் நிறுத்தக் கண்காணிப்பு குழுவிற்கு தெரிவித்து வருகின்றனர்.

ஸ்ரீலங்கா அரசாங்கமோ, தமிழீழ விடுதலைப் புலிகள் சிறுவர்களை தமது படையில் சேர்கின்றனர் என்ற கவலையை மட்டும் வெளியிட்டுள்ளது. தற்போது இரு தரப்பும் முன்வைக்கும் பிரச்சினைகள் இவை. இந்தவிடயங்கள் பற்றித்தான் அதிக அக்கறையுடன் பேசப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அவசரகாலச் சட்டத்தை அமுலில் வைத்துக் கொண்டு கதிர்காமரின் கொலை மட்டுமன்றி அனைத்துப் படுகொலைகள் குறித்தும் விசாரணைகளை மேற்கொள்ளப் போவதாகவும் - மீண்டும் படுகொலைகளை ஆரம்பித்துள்ள புலிகள் அரசாங்கம் என்ற ரீதியில் தமது பொறுமையை சோதிக்கிறார்கள் என்று அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்திருக்கின்றார்.

இந்த நிலையில் போர் நிறுத்த ஒப்பந்தத்தை முழு அளவில் நடைமுறைப்படுத்துவது குறித்து புலிகளுக்கும் - அரசுக்கும் இடையில் பேச்சுக்கள் நடைபெறவுள்ளன.

அவசரகாலச் சட்டத்தை அமுலாக்கி கதிர்காமரினதும் ஏனையவர்களினதும் கொலைகளினை விசாரிக்கப் போவதாக மைத்திரிபாலசிறிசேன கூறுகிறார். உடன்படிக்கை கைச்சாத்தான பின் தமிழர்கள் பலர் படுகொலை செய்யப்பட்டிருக் கின்றனர். (இங்கே கதிர்காமரை குறிப்பிடவில்லை) பத்திரிக்கையாளர் நடேசன், சிவராம் மற்றும் பொதுமக்கள் ஏன் புலிகளின் அரசியல் துறை போராளி கௌசல்யன் போன்றோரும் படுகொலை செய்யப்பட்டிருக்கின்றனர். சிறிசேன கூறிய படுகொலையின் பட்டியலில் இவர்களும் உள்ளடக்கப்பட்டிருக்கின்றனரா என்று தமிழர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.



நடேசனின் படுகொலை விசாரணை கிடப்பில் போடப்பட்டுவிட்டது. சிவராமின் படுகொலை தொடர்பில் இனம் காணப்பட்ட குற்றவாளிகளை விசாரணைக்கு உட்படுத்தவோ, நீதியின் முன் கொண்டுவரவோ ஏன் பொலீஸார் பின்னடிக்கின்றனர்.

இராணுவ புலனாய்வுத்துறை அதிகாரி மேஜர் முத்தலிப்பின் படுகொலை பற்றிய விசாரணையில் நாளுக்கு நாள் காட்டப்படுகின்ற வேகம் தமிழர்களின் கொலை விசாரணைகளிலோ புலிகளின் படுகொலைகளிலோ ஏன் காட்டப்படவில்லை?

இன்றும் ஒரு பேச்சுக்கு அரசாங்கம் அழைப்பு விடுத்துள்ளது. நாட்டில் ஸ்திரமற்ற ஒரு நிலை. தமிழர்களுக்கு அரச கட்டுப்பாட்டில் பாதுகாப்பில்லை. எந்தநேரமும் தமிழர்கள் கைது செய்யப்படலாம் என்ற நிலை. நாட்டில் அவசரகால நிலையினை அமுல்படுத்திக் கொண்டு பேச்சு நடத்துவதும் அதில் வெற்றி கிடைக்கும் என்றும் தமிழ் மக்கள் கனவு காணவில்லை.

அவசர கால சட்டம் 103 மேலதிக வாக்குகளால் தற்போது நிறைவேற்றப்பட்டுள்ளது. தென்னிலங்கையில் ஐ.தே.க. உட்பட பல கட்சிகள் இதற்கு ஆதரவு தெரிவித்து வாக்களித்துள்ளன. அண்மையில் ரணில் இந்தியா சென்றவேளை பத்திரிக்கையாளர்கள் கேட்ட கேள்விக்கு கதிர்காமரை புலிகள் கொலை செய்ய வில்லை என்று நேரடியாகக் கூறவில்லையே தவிர மற்றும்படி அவரும் சிங்கள பேரினவாதிகளின் கருத்துக்களை ஏற்கிறார் என்பது வெளிப்படையாகத் தெரிகிறது.

''விடுதலைப் புலிகள் இலங்கை ஜனநாயக வாழ்வை அழித்து சிதைக்க முயன்றுள்ளனர். எனவே சர்வதேச சமூகம் விடுதலைப் புலிகளின் பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராட ஒத்துழைப்பு வழங்கவேண்டும்'' என்று கேட்டுள்ளார் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ. இதேவேளை,'பிஸ்னஸ் டுடே' என்கின்ற மாதாந்த சஞ்சிகைக்கு வழங்கிய செவ்வியில் ''தமிழர்களின் நியாயமான போராட்டத்தை யாரும் பிழை என வாதிடமுடியாது. பேச்சு மூலமே இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண முடியும்'' என்று கூறியுள்ளார்.


மஹிந்த வெளியிடும் இது போன்ற கருத்துக்களில் முரண்பாடுகள் உள்ளன. இதனால் தானோ என்னவோ ஜே.வி.பி., மஹிந்தவின் நிலைப்பாட்டை வெளியிடுமாறு கேட்டிருந்தது.

முன்பு கூறியது போன்று துணைப் படைகளின் ஆயுதங்கள் களையப்படவேண்டும் என்ற புலிகளின் கோரிக்கையை அரசு செவி சாய்க்காத நிலையில் இது தொடர்பில் பேச்சுகள் எவ்வாறு வெற்றியளிக்கும். கருணா குழு போன்ற ஆயுதக் குழுக்களின் ஆயுதங்களை களைய அரசு ஒருபோதும் நடவடிக்கை எடுக்காது என அரச சமாதான செயலகப் பணிப்பாளர் ஜயந்ததனபால திட்டவட்டமாக கூறியிருக்கிறார். அதற்கு அவர் கூறும் காரணங்கள் சமாதானத்தை விரும்பும் யாரும் ஏற்க மாட்டார்கள். இதேவேளை, உதவி வழங்கும் நாடுகள் துணைப்படையின் ஆயுதங்கள் களையப்பட வேண்டும் எனக் கோரியுள்ளன.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் விரைவில் பேச்சு நடைபெறும் என்ற செய்தி வெறும் ஊகம் தவிர வேறு ஒன்றும் இல்லை என்று அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

இதே நேரம் கடந்த திங்கட்கிழமை 22 ஆம் திகதி நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான்பீற்றர்சன் சந்திரிகாவுடன் தொலைபேசி மூலம் உரையாடியவேளை பேச்சுக்கான நிகழ்ச்சி நிரலைத் தயாரிப்பது தொடர்பாகப்பேசப்பட்டதாகத் தெரிய வருகின்ற அதேவேளை ஜனாதிபதி என்ன பதில் கூறினார் என்று தெரியவரவில்லை.

போர்நிறுத்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை முழு அளவில் நடைமுறைப்படுத்துவது குறித்த பேச்சுகளை நாட்டுக்கு வெளியே - வெளிநாடொன்றில் நடத்துவதற்கு இணங்க அரசுத் தரப்பு மறுத்துள்ளதாக இப்பத்தி



எழுதப்பட்டுவிட்ட சமயம் இப்போது தகவல்கள் வெளியாகியுள்ளன.

அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் கொலையினை அடுத்து சர்வதேச மட்டத்தில் எழுந்திருக்கும் அவப்பெயரை சரி செய்வதற்காகவே பேச்சினை வெளிநாட்டில் நடத்த புலிகள் விரும்புகின்றனர் என்றும் - அதனாலேயே அரசு இந்தத் தீர்மானத்தை மேற்கொண்டுள்ளது என்றும் - கூறப்பட்டது.

பேச்சுகளை உள்நாட்டில் நடத்தினால் தமது உயர் மட்ட உறுப்பினர்களுக்குப் பாதுகாப்பில்லை என்று புலிகள் கருதுகின்றனர். இதனாலேயே ஐக்கிய தேசிய முன்னணி அரசுடன் நடத்தப்பட்ட ஆறு சுற்றுப் பேச்சுகள் கூட வெளிநாட்டில் நடத்தப்பட்டிருந்தன.

சமாதானத்துக்கு எதிராக தென்னிலங்கையில் அனைத்துக் கட்சிகளும் கைகோர்த்துள்ளன. ஐக்கிய தேசிய கட்சி கூட டோக்கியோ, ஒஸ்லோ பிரகடனங்களின் படி புலிகளுடன் (அதனை பிரகடனம் என கூறமுடியாது) அரசு பேசினால் மட்டுமே தாம் ஆதரவு தெரிவிப்போம் என்று உறுதியாக கூறிவிட்டது. இந்த நிலையில் சமாதான பேச்சு எந்தளவுக்கு இந்த அரசுடனோ, ஐ.தே. கவுடனோ சரிவரும் என்று கூறமுடியும்? தேர்தல் நோக்கி நகரும் சிங்கள தேசத்தின் உளுத்துப்போன பேரினவாத சித்தாந்தம் என்று இல்லாமல் போகுமோ அன்றுதான் உண்மையான சமாதானம் உருவாகும். தற்போதைய நடவடிக்கைகள் எல்லாம் காலத்தை இழுத்தடிக்கும் செயல் அன்றி வேறில்லை.

இது மங்கள சமரவீர கூறியதுபோன்று வெறும் ஊகம் மட்டுமே தவிர வேறில்லை. பேசினாலும் பேச்சின் மூலம் எதுவும் ஆகப்போவதில்லை.

சி.கேசவன்

# விதலைவகளின் அரசியலில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் கதிர்காமர் தனது அறிவையும், அரசியலையும், திறமைகளையும் சிங்களவர்களின் - சிங்களப் பேரினவாதிகளின் மேன்மைக்குப் பயன்படுத்தியவர் - என்று கணிக்கப்படுவர். அவ்வாறான அவப்பெயருடனேயே தமிழர் நெஞ்சங்களில் நினைவுகூரப்படுகிறார். இந்த யதார்த்தம் பெரும்பான்மை இனத்தவரான சுகந்தி கதிர்காமருக்கும் புரியவே செய்யும். தெரிந்துகொண்டும் தவறிழைப்பாரா? சிங்களப் பேரினவாதிகளின் அரசியல் வலையில் வீழ்வாரா? பொறுத்திருந்து பார்க்கவேண்டும்.

**புதிய கோணத்திலும் விசாரணை?**

அமைச்சர் கதிர்காமர் கொலை தொடர்பில் விசாரணை நடத்தி வரும் குற்றப் புலனாய்வுப் பொலீஸாருக்குப் பல புதிய தகவல்கள் கிடைத்திருக்கின்றன என்று கூறப்படுகிறது.

கூலிக்கு ஆள் அமர்த்தி நடத்தப்பட்ட கொலை என்பதற்கான முதல் ஆதாரங்கள் கிடைத்திருப்பதாக பொலீஸ் வட்டாரங்கள் கடந்த சில நாள்களுக்கு முன் தகவல் வெளியிட்டிருந்தன. இது தொடர்பில் ஒருவர் கைது செய்யப்பட்டும் உள்ளார்.

மற்றொரு கோணத்திலும் விசாரணைகள் தொடர்வதாக தகவலறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

அமைச்சர் கதிர்காமரின் பாதுகாப்புப் பிரிவில் பொறுப்பான பதவி ஒன்றை வகிப்பவர் திருமதி சுகந்தி கதிர்காமரின் மைத்துனர் சரத் ஜெயவர்தன. இராணுவத்தில் கேணல் தரத்தில் உள்ளவர். பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மேஜர் ஜெனரல் அசோகா ஜெயவர்த்தனாவின் சகோதரர்.

சம்பவம் நடந்த சமயம் கதிர்காமரின் இல்லத்தில் மற்றொரு பெண் தங்கியிருந்தார் என்றும் திருமதி சுகந்தி கதிர்காமர் அங்கு இருக்கவில்லை என்றும் சில இணையத்தளங்களில் வெளியான தகவலையும் விசாரணையாளர்கள் கவனத்தில் எடுத்திருப்பதாகத் தெரிகிறது.

சம்பவம் நடந்த நாளில் கதிர்காமரின் பாதுகாப்பு ஏற்பாடுகளில் பெரும் தொய்வு காணப்பட்டது என்று தெரிவிக்கப்படும் குற்றசாட்டுக்கள் அப்படியே நிராகரிக்கப்பட முடியாதவை என்று விசாரணையாளர்கள் கருதுகின்றனர்.

பாதுகாப்பு ஏற்பாடுகளுக்குப் பொறுப்பான கேணல் ஜெயவர்தன இது தொடர்பாக விசாரிக்கப்படுவார் என்று கூறப்படுகிறது.

எது எவ்வாறாயினும் இந்தக் கொலையுடன் விடுதலைப் புலிகளைத் தொடர்புபடுத்திப் போடப்பட்ட முடிச்சை இறுக்குவதற்கே அரசு முயற்சிக்கின்றது.

நோர்வேயின் முயற்சியுடன் இரண்டு தரப்புகளுக்கும் இடையே நடைபெறுவதற்கு ஏற்பாடாகி வரும் நேரடிச் சந்திப்பின்போது கதிர்காமர் கொலை விவகாரமும் பிரதான விடயமாக அரசுத் தரப்பால் முன்வைக்கப்பட உள்ளது. எனவே, இந்தப் படுகொலையில் விடுதலைப் புலிகள் தவிர்ந்த வேறு சக்திகள் சம்பந்தப்பட்டிருப்பது பற்றிய தகவல்கள் கிடைத்தாலும் நேரடிப் பேச்சுக்கள் முடிவடையும் வரை அவை பகிரங்கப்படுத்தப்படமாட்டா என்று கருதலாம்.

- குமரன்